66

APPROVED BY THE T. B. C., MADRAS,
*(Vide Page 687 (Prrt II) of the Gazette D/10—11—1942)*

# METHODS OF TEACHING TAMIL

[For Elementary & Secondary Grades of Training Schools as per the New Syllabus]

8 JAN 1946
MADRAS

S. BALAMBAL, B.A., L.T.

SCANNED

V. S. VENKATARAMAN & CO.
...RS : : KUMBAKONAM

T1:3 (P31)
N45
110701

Reprinted : October 1945

# முகவுரை

நம் தமிழ்மொழி மறுமலர்ச்சி பெற்றுப் புது மணம் கமழும் இந்நாளில் தமிழாசிரியர்கள், காலத்துக்கேற்ற புதிய முறைகளைக் கையாளுதல் இன்றியமையாததாகும். கல்வியில் முற்போக்கு அடைந்துள்ள மேனாடுகளில் தாய்மொழிப் போதனைபற்றி சாஸ்திரீய முறையில் நுட்பமான பற்பல ஆராய்ச்சிகள் செய்து வருகின்றனர். அவற்றின் பயனாகக் கண்டறியப்பட்டுள்ள புதிய முறைகளை நமது நாட்டிலும் கையாளுவதால் தமிழ்மொழியில் தேர்ச்சியும் ஆர்வமும் விரைவில் வளருமென்பது திண்ணம்.

தமிழ்ப் போதனைபற்றி ஆரம்ப பாடசாலைகளுக்கும், போதனாமுறைப் பாடசாலைகளுக்கும் துரைத்தனத்தார் புதிதாக நிர்ணயித்துள்ள பாடதிட்டங்கள் மேற்கூறிய நூதன முறைகளை வற்புறுத்துவனவாகும். இத்திட்டங்களிற் காணும் சீரிய முறைகளையும் விஷயங்களையும் இந்நூல் தெளிவாக விவரிக்கிறது; பண்டைத் தமிழ் முறைகளிலுள்ள சிறப்புக்களையும் ஆதாரமாகக் கொண்டுள்ளது.

புதிய முறைகளைத் தமது பாடசாலையில் அநுபவ முறையில் பரிசீலனை செய்து, அதன் பயனாகத் திரு. S. பாலராம்பான் அவர்கள் B.A., L.T., இப்புத்தகத்தை திறம்பட எழுதி அளித்துள்ளார்கள். போதனாமுறைப் பயிற்சிபெறுவோரும், தமிழ்ப்பாடம் போதிக்க நேரிடும் இதர ஆசிரியரும் இந்நூலைப் பெருந்துணையாகக் காண்பரென்பது எனது துணிபு.

S. சிவராமகிருஷ்ணன்,
[Formerly Headmaster,
Govt. Training School, Trichy.]
பதிப்பாசிரியர்.

கும்பகோணம்,
8—7—1944.

# தமிழ்மொழிப்

# போதனை முறைகள்

(போதனாப்பயிற்சிசாலை எலிமெண்டரி கிரேடுக்கும்
செகண்டரி கிரேடுக்கும் உரியது.)

8 JAN 1946

S. BALAMBAL, B.A., L.T.,
Headmistress,
Govt. Secondary & Training School for Women,
ERODE

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் :: கும்பகோணம்

பதிப்புரிமை] 1945 [விலை அணா 15½

## போதனாமுறைப் பாடசாலைக்காகத் துரைத்தனத்தார் வெளியிட்டுள்ள புதிய பாட திட்டம்

### தமிழ் மொழிப் போதனா முறைகள்

குறிப்பு:—செகண்டரி கிரேடு பயிற்சி பெறுவோர்க்கும், எலிமெண்டரி கிரேடு பயிற்சி பெறுவோர்க்கும் பொதுவாக ஒரே பாட திட்டமே. ஆனால் செகண்டரி கிரேடுக்கு மட்டும் அதிகப்படியாகச் சிற்சில பகுதிகள் உள்ளன. அவைகளை இவ்வடையாளம்* வேறுபடுத்திக் காட்டும்.

*I. கல்வியில் தாய்மொழிப் பயிற்சியின் இடம்.

II. சிறப்பான சில போதனா முறைகள்—விளையாட்டு முறை, பிராஜெக்டு அல்லது செயல்திட்ட முறை, நாடக முறை, தனித் தனிப் போதிப்பு முறை.

III. மொழிப் பயிற்சியில் கிரகித்தலும் வெளியிடலும் என்ற இரு அம்சங்கள்.

IV. பிழையின்றிப் பேசப் பழக்குதல்: வாய்மொழிப் பயிற்சி:—(1) I, II வகுப்புக்களில் வீடு, உறவினர், தோழர், திருவிழாக்கள் முதலான உற்சாகமளிக்கவல்ல விஷயங்களைப்பற்றிச் சுலபமான சம்பாஷணைகள் நடத்துதல்.

(2) மேல் வகுப்புகளில் நடைமுறை விஷயங்களைப்பற்றித் திருத்தமான பாஷையில் பேசுதல்.

கதைகள்:—குழந்தைகளின் வளர்ச்சி நிலைக்குப் பொருத்தமான கதைகளைத் தேர்ந்தெடுத்தல். கதை சொல்லும் முறை. குழந்தைகள் கதைகள் சொல்லுதலும், அவற்றை நடித்துக் காட்டலும். சம்பாஷணைகள்.

வாய்மொழியாக வெளித் திறமை விளைவிப்பதில் படங்கள், கதைகள், கதைப் பாடல்கள், பாலர் பாட்டுகள் முதலியவற்றின் உபயோகம்.

பேசுவதிலுள்ள குறைகளை நீக்குதல், தெளிவில்லாமல் உச்சரிப்பதும் தவறாக உச்சரிப்பதும்; சொற்களின் பிற்பகுதிகளை உச்சரிக்காமல் விடுதலும், அவசரமாகப் பேசுதலும்.

V. வாசிப்பு—(1) படிக்கும் பழக்கம் ஏற்படுத்தல்:—பல முறைகள்,—எழுத்து முறை, பார்த்தவுடன் சொல்லும் முறை, வார்த்தை முறையும் வாக்கிய முறையும்; இவற்றின் அநுகூலங்களும் பிரதி கூலங்களும். (a) வாசிப்புத் தாள்கள், படப் புத்தகங்கள், (b) தனித்தனிப் பயிற்சிக்கான உபகரணங்கள், (c) அடிக்கடி வழங்கும் வார்த்தைகளின் ஜாபிதா,—ஆகியவற்றைத் தயாரித்தல்.

படிக்கும் திறமை :—உரக்கப் படித்தல். வாசித்தலில் கருத்துணர்தல், தெளிவு, தடங்கலின்மை.

மௌனமாக வாசித்தல் :—அதன் அவசியம். கிராகிய சக்தியும் வேகமும் அதிகரித்தல். மௌன வாசிப்புக்கு வேண்டிய உபகரணங்கள் தயாரித்தல். தனித்தனிப் பயிற்சித் தாள்கள், சிறு கதைப் புத்தகங்கள், விளம்பரங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவரும் பாலர் பகுதிகள் முதலியவற்றைச் சேகரித்தல்.

*புதிய சொற்கள், கருத்தின் மூல அளவு, கால வரையறை இவற்றைக் கவனித்தல். படிப்புச் சாலை அதிகப்படுத்தும் உபாயங்கள். ஒரு மாணுக்கன் எதை வாசிக்க வேண்டுமென்ற அறிவை வளர்த்தல். குரல்போட்டுப் படிப்பதைக் குறைப்பதற்கான வழிகள். அதற்கான லட்சியத்தை உண்டுபண்ணுதல். மௌன வாசிப்பில் திறமைகளைப் பரிசோதித்தல்.

(2) வாசித்தலின் நோக்கம் :—விஷயம் தெரிந்துகொள்ளல்; இரஸித்து இன்புறுதல், புதிய எண்ணங்களை உதிக்கச் செய்தல், பாஷா ஞானத்தை விருத்திசெய்தல்.

(3) செய்யுள் :—(i) குழந்தைப் பாட்டுகள், தாலாட்டுகள், அபிநயப் பாட்டுகள், சிறிய கதைப் பாட்டுகள், விடுகதைகள்.

(ii) வரலாறு, வருணனை இவைபற்றிய சுலபமான செய்யுள்கள்.

(iii) செய்யுள் வாசித்தல்—பாடல்களை இரசகத்துடன் வாசித்தல் ஒரு முக்கிய அம்சம்.

(iv) செய்யுளைப் போதிக்கும் முறை. முழுப்பாட்டையும் படிக்கச் செய்தல். பாட்டை நேர்முகமாக உணரச் செய்தல். அதிக விளக்கமும் இலக்கணமும் கூறுவதனால் செய்யுளின் உருக்குலைத்தலைத் தவிர்த்தல், சந்தத்தை அனுபவித்து மகிழ்ச்சியுறுவதில் பயிற்சியளித்தல், மனப்பாடஞ் செய்வதற்கான பகுதிகளைத் தேர்ந்தெடுத்தல்.

(4) வசனம் :—தகுந்த விஷயங்களைத் தெரிந்தெடுத்தல். வசீகரமான சிறந்த நடை. பொருத்தமான விளக்கப் படங்கள். நல்ல கட்டமைப்பும் அச்சிடும். * ஹாஸ்ய ரஸத்தின் அவசியம்.

(5) வாசிப்புக்கான விஷயங்கள் :—(i) அநுபவத்தில் பழகியுள்ள சுலபமான விஷயங்கள், சம்பாஷணைகள், சிறு நாடகங்கள்.

(ii) வரலாறு, கற்பனை, ஜீவிய சரித்திரம், வருணனை இவையடங்கிய இலக்கியப் பகுதிகள்.

(iii) பொழுதுபோக்குக்காக வாசிக்கக்கூடிய புத்தகங்கள்; சஞ்சிகைகளும் பத்திரிகைகளும்.

VI. இலக்கணம் :—அநுபவமுறை இலக்கணம். பாட புத்தகங்கள் மூலம் அநுமான முறையில் (ஆகமந முறையில் = Inductive). போதித்தலும், அதன் பின்னர் ஊகிக்கப்படும் (நிகமந முறை = Deductive) பிரயோகங்களும். *தமிழ் இலக்கணத்தை ஆங்கில இலக்கணத்துடன் ஒப்பிட்டுப்போதித்தல்.

VII. எழுதுதல் : பொதுவாக ஆலோசிக்குந்தக்கன :—
(1) எழுதுவதற்கு ஆவல் எழுப்புதல். வாசிப்புக்குப் பிறகே எழுத்து.

(i) எழுத்துப் பரிமாணமும் அழகும்.
(ii) எழுதுவதில் வேகமும் தெளிவும்.
(iii) பார்த்தெழுதுதல்.

(2) கட்டுரை எழுதுதல் : வாய்மொழிக் கட்டுரைக்குப் பிறகே கட்டுரை எழுதுதல் வரவேண்டும். தானாகவே வெளியிடுவதின் அவசியம்—சாதாரணமாகப் பேசுதல், சம்பாஷணை. மாணவர்களுக்குப் பழக்கமுள்ளனவும், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனவுமான விஷயங்களைப்பற்றிச் சிற்றுரை நிகழ்த்தல். [உ-ம்:] மழை நாள் அநுபவத்தைப்பற்றி, பொருட்காட்சிசாலை அல்லது மிருகக்காட்சி (circus) போன்றவைகளைப் போய்ப் பார்த்ததைப்பற்றி.

எழுத்துப் பிழையின்மை (Spelling), நிறுத்துக் குறிகள், கையெழுத்து இவைகளைக் கவனித்தல். தமிழிலுள்ள மரபுத் தொடர்களும் அவற்றின் உபயோகமும்.

* சுயேச்சையாகப் பலவித வியாசம் எழுதுவதைப் படிப்படியாக அபிவிருத்தி செய்தல், வரலாறு அல்லது விருத்தாந்தக் கட்டுரைகள், மனோதர்மக் கட்டுரைகள், வருணனைக் கட்டுரைகள், விவாதக் கட்டுரைகள். வாக்கிய அமைப்பு, பத்தி (பாரா) பிரித்தல்.

(3) கடிதமெழுதுதல் : விஷயத்துக்கும் விலாசதாரருக்கும் ஏற்ப, கடிதத்தின் அமைப்பும் நடையும் மாறுதல்.

(4) சிருஷ்டித்து வெளியிடுதல் : கதை எழுதுதல் ; கற்பனையான அநுபவங்களைப்பற்றி எழுதுதல்; ஒன்று அல்லது இரண்டு அங்கமுள்ள சிறு நாடகங்கள் எழுதுதல்.

(5) வியாசங்களைத் திருத்துதல்: சாதாரணப் பிழைகளும், அவற்றைத் தவிர்த்தலும்.

குறிப்பு:—இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டு, குறிக்கப்பட்டுள்ள நாலுவித விஷயங்களின் விவரங்களுக்குப் பாஷையின் தனிச் சிறப்பு இடங் கொடுப்பதற்கு ஏற்றவாறு நடத்தப்படல் வேண்டும். பாஷா போதனையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள திட்டத்தின் ஏதேனு மொரு நோக்கத்துக்கிசைந்த தொடர்புடைய விஷயங்களை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். போதனைமுறை பயிலுங் காலத்தில் முதல் வருஷத்திலும் இரண்டாவது வருஷத்திலும் A (விதிக்கப்பட்ட பாடப் பகுதிகள்), B (தமிழ்மொழிப் போதனைமுறைகள்) என்ற பிரிவுகளிலிருந்து பாடங்கள் ஒழுங்காகத் தேர்ந்து நடத்தப்படவேண்டும்.

## BOOKS RECOMMENDED BY THE DEPARTMENT

---

*Methods of Teaching the Mother Tongue*

Sarabone Bryant: How to tell Stories to Children: G. Harrap.

W. M. Ryburn: Suggestions for the Teaching of the Mother Tongue in India: Oxford University Press.

P. B. Ballard: The Teaching of Mother Tongue (New Edition) published as Teaching and Testing English: University of London Press.

---

## OTHER BOOKS CONSULTED:—

Handbook of Suggestions for Teachers issued by the Board of Education in England.

BHARATHI TAMIL VACHAGAM, Books I to VIII by V. Natarajan, B.A., L.T., District Educational Officer.

---

# பொருளடக்கம்


| அத்தியாயம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| | தமிழ்ப் போதனைமுறை பற்றிய செகண்டரி கிரேடு, எலிமெண்டரி கிரேடு பாட திட்டம் .... | ii |
| 1. | கல்வியில் தாய்மொழிப் பயிற்சியின் இடம் .... | 1 |
| 2. | சிறப்பான சில போதனை முறைகள் .... | 8 |
| 3. | கிரகித்தலும் வெளியிடலும் .... | 22 |
| 4. | வாய்மொழிப் பயிற்சி .... | 23 |
| 5. | வாசிப்பு .... | 40 |
| 6. | வாசித்தலின் நோக்கம் .... | 74 |
| 7. | செய்யுட் பாடம் .... | 76 |
| 8. | வசன பாடம் .... | 81 |
| 9. | இலக்கண பாடம் .... | 85 |
| 10. | எழுத்துப் பயிற்சி .... | 93 |
| 11. | கட்டுரை எழுதுதல் .... | 103 |
| 12. | அநுபந்தங்கள் | |
| | (i) ஆரம்ப வகுப்புக்களில் வாசிப்புக் கற்பிக்க உதவும் சில விளையாட்டுக்கள் .... | 117 |
| | (ii) பாடக்குறிப்பு எழுதுதல் .... | 119 |
| | (iii) மாதிரிப் பாடகுறிப்புக்கள் .... | 120 |
| | T. S. L. C. பரீட்சை வினாக்கள் .... | 126 |

# தமிழ்மொழிப் போதனை

## 1. கல்வியில் தாய்மொழிப் பயிற்சியின் இடம்

**மொழியின் இன்றியமையாமை:** நாம் மனத்தில் தோன்றும் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கவும், பிறர் நினைக்கும் கருத்துகளை நாம் அறியவும் பாஷை அல்லது மொழியே ஏதுவாயிருக்கிறது.

உலகத்தில் மனிதன் தோன்றிய காலந்தொட்டே பாஷை ஏற்பட்டது என்று சொல்லமுடியாது. ஆதிகால மனிதன் ஏனைய பிராணிகளைப் போலவே சத்தஞ் செய்து ஒலிக்குறியால் சிறிதளவு தன் உள்ளக்கருத்தைப் பிறருக்கு தெரிவித்து வந்தான். பின்னர் கை ஜாடை, முகக் குறி இவற்றாலும் தன் எண்ணத்தைப் பிறருக்கு வெளியிடலானான். தனிப்பட்டு அலைந்து திரிந்த மனிதர் காலக்கிரமத்தில் ஒன்றுகூடி வாழத் தலைப்பட்ட பொழுதே மொழி ஏற்படலாயிற்று. நம் யூகத்தினாலும், நீண்டகால முயற்சியினாலும், மனிதர் கண்டுபிடித்துள்ள வாழ்க்கைச் சாதனங்களுள் மொழி ஒன்றாகும்.

மனிதருக்குப் பேசுந் திறமையுண்டு; ஏனைய பிராணிகளுக்கு இத் திறமையில்லை. ஆதலால், மனிதரை விலங்குகளினின்று வேறு படுத்தும் அறிகுறிகளில் மொழி ஒன்றாகும்.

ஒருவர் நினைவுகளை மற்றொருவர் அறிய மொழியே காரணமாக இருப்பதால், அது சமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத கருவியாக இருக்கிறது. மேலும் நமது முன்னோர்கள் தம் கருத்துக்களை மொழியின் மூலமாகவே எழுதி வைத்திருப்பதால் அவைகளையறிந்து நம் எண்ணங்களைப் பெருக்கிக்கொள்ளவும் பாஷை சாதகமாகிறது.

சொற்கள், நம்மனத்தில் தோன்றும் கருத்துக்களின் பிரதி ரூபங்கள் எனலாம். உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களை உருவாக்கித் தெளிவுபடுத்தவும், அவைகளை மனத்தில் பதிய வைக்கவும் பாஷை உதவுகிறது. பாஷையும் எண்ணங்களும் பிரிக்க முடியாதவாறு தொடர்ந்தே நிற்கின்றன. மேலும், பாஷை உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியதாகவும் இருக்கின்றது. ஆதலால்

பாஷைக்கு ஜீவனும் சக்தியும் உண்டு என்பது மிகை யாகாது.

"வில்லம்பு சொல்லம்பு மேதினியில் இரண்டுண்டு
வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம் — வில்லம்பு
பட்டதடா வென் மார்பிற் பாண்டியா! நின் குலத்தைச்
சுட்டதடா வென் வாயிற் சொல்"

என, கவிச் சக்கரவர்த்தி கம்பர் பாடியுள்ள செய்யுள் இக்கருத்தை விளக்குகிறதல்லவா?

சுருங்கக் கூறின், மனிதனை விலங்குகளினின்றும் வேறுபடுத்தும் ஓர் அறிகுறியாகவும், அவர்களது சமூக வாழ்க்கைக்கும், நாகரிக மேன்மைக்கும், அறிவு வளர்ச்சிக்கும், கல்விக்கும் மொழி இன்றியமையாத சாதனமாகவும் இருக்கிறது. மேலும், அறநெறியைப் பின் பற்றவும், இறைவனை வழுத்தவும் மொழி பெரிதும் துணை புரிகிறது.

மொழியின் உறுப்புக்கள்: கேட்போருக்குப் பொருள் விளங்கத்தக்க ஒலிகளே மொழிக்கு முதற் காரணமாக இருப்பவை. இவ்வொலிகள் எழுத்துக்கள் எனப்படும். எழுத்துக்களுக்கு ஒலி வடிவு, வரி வடிவு என இரண்டு உருவங்கள் உண்டு. பேசுவதில் ஒலி வடிவான எழுத்துக்களை உபயோகிக்கிறோம்; எழுதுவதில் வரிவடிவான எழுத்துக்களை உபயோகிக்கிறோம்; எழுத்துக்கள் தனித்து அல்லது சேர்ந்து நின்று சொல் ஆகும். சொற்கள் தொடர்ந்து நின்று வாக்கியம் ஆகும். நமது பேச்சும், எழுதும் கடிதம் முதலியனவும், செய்யுள் வசன நூல்களும் சாதாரணமாக வாக்கியங்களால் ஆனவைகளே. ஆதலால் ஒலிகள், எழுத்துக்கள், சொற்கள், வாக்கியங்கள் இவை கூடியே மொழி ஆகிறது.

ஒருவருக்கொருவர் நேரில் இருக்கும்பொழுது நம் கருத்தை வாய் மொழி அல்லது பேச்சு மூலமாக வெளியிடுகிறோம்; ஆனால் நேரில் இல்லாத ஒருவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கிறோம். ஆதலால், பேச்சு மொழி (வாய் மொழி) எழுத்து மொழி என பாஷை இருவிதப்படும்.

தாய் மொழி: தமிழ், தெலுங்கு, மலையாளம், உருது, ஆங்கிலம் முதலிய நூற்றுக் கணக்கான மொழிகள் உலகில் பேசப்படுகின்றன. பிறந்தது முதல் ஒரு குழந்தை தாய் தந்தையரிடமும், சுற்றுப்புறத்தாரிடமும் கேட்டுப் பழகும் மொழியே அதன் தாய் மொழி எனப்படும். தமிழ் நாட்டில் வசிக்கும் நாம் பிறந்தது முதல் பேசி வருவது

தமிழ்மொழியே. ஆகையால், தமிழ் நமக்குத் தாய்மொழியாகும்.

**தாய்மொழி கற்பதின் அவசியம்:** நமது எண்ணங்களைப் பேச்சு மூலமாகவும், எழுத்து மூலமாகவும் சுற்றுப்புறத்தாரிடம் சாதாரணமாகத் தாய்மொழியிலேயே வெளியிடுகிறோம். திருத்தமாகப் பேசவும், வாசிக்கவும், எழுதவும் திறமை பெற்றால் தான் பிறருடன் நெருங்கிப் பழகி நமது வாழ்க்கையைச் சரிவர நடத்த இயலும். ஆதலால் நாம் தாய் மொழியில் தனித் தேர்ச்சி பெறுதல் சமூக வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிறது.

பிள்ளைகள் தாய்பாஷையிலேயே யோசிக்கிறார்கள்; பேசுகிறார்கள். அவர்களது மனோபாவங்களையும், கவிதா ரஸிப்பு உணர்ச்சிகளையும், அறிவையும் வளர்ப்பது தாய்மொழியே. நம்மில் ஆங்கிலம் முதலிய பிற பாஷை பயின்றவர்கள் கூடத் தமிழிலேயே சிந்தித்துப் பிறகு இதர பாஷைகளில் மொழி பெயர்த்துக்கொள்கிறார்கள். தாய் பாஷையில் தேர்ச்சி பெற்றால்தான் வேறு மொழிகளைக் கற்பது இலகுவாகும்.

இதர பாடங்களைப் படித்தறியத் தாய் மொழியே ஒப்பற்ற கருவியாகிறது. பிராணி நூல், தாவர நூல், கணித நூல், பூகோளம், சுகாதாரம் முதலிய பாடங்களைப் பிற மொழிகளில் படித்தறிவதை விட தாய் பாஷை மூலம் கற்பதே எளிது.

சுருங்கச் சொல்லுமிடத்து, 1. கல்விக்கே தாய் மொழிப் பயிற்சி அஸ்திவாரமாக இருக்கிறது. எண்ணங்களை உருவாக்கித் தெளிவுபடுத்தவும், நிலை நிறுத்தவும் தாய்மொழியறிவு உதவுகிறது. 3. இதர பாடங்களைப் படித்தறிய அது ஒப்பற்ற கருவியாகிறது. 4. தாய் மொழியில் திருத்தமாகப் பேசவும், வாசிக்கவும், எழுதவும் திறமை பெறுவது, சமூக வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். மேற்கண்ட பயன்கள் காரணமாகத் தமிழ் ஒரு தனிப் பாடமாகப் பாடதிட்டத்தில் சேர்க்கப்பட்டு அதைக் கற்றல் பிரதானம் பெற்றிருக்கிறது.

**தாய்மொழிப் போதனையின் நோக்கங்கள்:** ஒவ்வொரு குழந்தைக்கும் தாய் மொழியே இயற்கையாக ஏற்பட்ட மொழியென்றும், முதன்முதல் கற்கவேண்டியது தாய் மொழியே என்றும் அறிந்தோம். தாய் மொழியறிவால் ஏற்படும் பயன்களையும் விவரித்தோம். இனி தமிழ்ப் பாடப் போதனையின் நோக்கங்களை ஆராய்வோம். அந்

நோக்கங்களை ஆசிரியர் தெளிவாகத் தெரிந்துகொண்டால் தான் அந்தந்த வகுப்புக்கான தமிழ்ப்பாட விஷயங்களையும் முறைகளையும் திட்டஞ் செய்துகொள்ள முடியும்.

தமிழ்ப் போதனையின் நோக்கங்கள் பலவாகும். அவற்றை i பொது நோக்கங்கள், ii அந்தந்த வகுப்புக்களுக்கான சிறப்பு நோக்கங்கள் என இருவகைப்படுத்தி ஆராயலாம்.

## தாய்மொழிப் போதனையின் பொது நோக்கங்கள்:—

1. **பேச, படிக்க, எழுதத் திறமையளித்தல்:** திருத்தமாகப் பேசவும், படிக்கவும், எழுதவுமான பாஷா ஞானம் விளைவிப்பதே தாய்மொழிப் போதனையின் அடிப்படையான பொது நோக்கம் ஆகும்.

2. **பிள்ளைகளுடைய சொல்தொகுதியைப்(Vocabulary) பெருக்குதல்:** பிள்ளைகளுக்கு பொருள் விளங்கும் சொற்களின் எண்ணிக்கையை அதிகமாக்கவேண்டும். ஆரம்ப வகுப்புகளில் முக்கியமாகத் தினசரி வாழ்க்கையிலும் பத்திரிகைகளிலும் விரவி வரும் சொற்களையறிவதும் மேல் வகுப்புகளில் இலக்கியங்களைப் படித்து இன்புறுவதற்கான அரும் பதங்களின் பொருள்களையறிவதும் நோக்கங்களாகக்கொள்ளலாம்.

3. **தாமாகவே படித்து ஆசை உண்டுபண்ணுதலும் பழக்கம் அளித்தலும்:** எழுதப் படிக்கத் தெரிவது கல்வியின் முடிவல்ல; அவ்வறிவு மேலும் பல தமிழ் நூல்களைக் கற்றறிய உதவும் கருவியாகும். ஆதலால் பிள்ளைகளைத் தாமாகவே படித்து இன்புறப் பழக்குதல் தாய்மொழிப் போதனையின் மற்றுமொரு நோக்கமாகும். தினசரி வாழ்க்கைக்குத் தேவையான உலக அறிவைப் பெறும் பொருட்டு, பத்திரிகை படிக்கும் பழக்கத்தை உண்டுபண்ணுவது அவசியமாகும். அறிவை வளர்க்கும் பொருட்டும், ஓய்வு நேரங்களை நல் வழியில் பயன்படுத்தும்பொருட்டும் நூல் நிலையங்களில் கிடைக்கும் புத்தகங்களைப் படிக்க அவா எழுப்பவேண்டும். அகராதி, அட்டவணை பார்த்தறிதல், தகவல் நூல்களில் (Reference books) விஷயங்களைத் தேடியறிதல இவற்றிலும் பயிற்சியளிக்கலாம்.

4. **தாய் மொழிப் பற்றும் தேசாபிமானமும் விளைவித்தல்:** முன்னோர் எழுதி வைத்துள்ள பண்டைத் தமிழ் நூல்களைப் படிப்பதன்மூலம் தமிழ் மொழிப் பற்றும் தேசாபிமானமும் விளைவிப்பது தாய்மொழிப் போதனை

யின் ஒரு முக்கிய நோக்கமாகும். தமிழ் இலக்கியங்களிற் காணும் சொல் நயம், பொருள் நயங்களையுணர்ந்து மகிழ்ச்சியுறவும், அவைகளின் அருமை பெருமைகளை உணரவும் ஆசையுண்டு பண்ணவேண்டும். பிற்காலத்தில் தாய் மொழி வளர்ச்சிக்காக உழைக்கவும், நூல்கள் எழுதவும் தூண்டலாம்.

5. **நல்லொழுக்கமும் தெய்வ பக்தியும்:** தமிழில் நீதி நூல்களும், உருக்கமான துதிப்பாக்களும் ஏராளமாக உள்ளன. அவைகளைப் படிப்பதால் நல்லொழுக்கமும் தெய்வ பக்தியும் அமையும்.

### ஆரம்பக் கல்வியில் தாய்மொழிப் போதனையின் சிறப்பான நோக்கம்:—

கையெழுத்துப் போடக்கூடத் தெரியாமல் கீறல்* மட்டும் போடும் தற்குறித்தனத்தை நீக்குவதை ஆரம்ப பள்ளிக்கூடங்களின் முக்கிய நோக்கமாக முன்னோர் எண்ணி வந்தனர். கையெழுத்துப் போடுவதற்கான படிப்பறிவும் எழுத்தறிவும் போதாவென்றும், கடிதங்கள் எழுதுவதும், வந்த கடிதங்களை வாசிக்கவும் போதிய திறமையளிப்பதே ஆரம்பக்கல்வியின் பிரதான நோக்கமாகுமென்றும் பின்னர் கருதலாயினர். சென்ற சென்ஸஸ் கணக்கு எடுத்ததில் இந்தக் 'கடிதம் எழுதும் படிப்பறிவு' பெற்றவர்களையே எழுதப்படிக்கத் தெரிந்தவர் என்று மதித்தனர். ஆனால் இப்பொழுதோ அந்த அறிவும் தற்கால வாழ்க்கைத் தேவைக்குப் போதாதென்று உணர்ந்திருக்கிறார்கள். தாய் மொழியில் வெளி வரும் தினசரிப் பத்திரிகையைப் படித்து உலக சமாசாரங்களைப் பின்பற்றுவதற்குத் தேவையான பாஷா ஞானம் விளைவிப்பதையே ஆரம்ப பாடசாலைகளில் தாய் மொழிப் போதனையின் நோக்கமென்று யாரும் ஒப்புக் கொண்டுள்ளனர். மேலும் இந்தப் படிப்பறிவு (Permanent literacy) நிரந்தரமாகவும் அமையவேண்டும். 'ஆரம்ப பாடசாலைகளில் சேரும்பிள்ளைகள் முதல் ஐந்து வகுப்புகளாவது தொடர்ந்து படித்தால்தான் இவ்வித நிரந்தரப் படிப்பறிவு ஏற்படக்கூடும்.

1939-ல் துரைத்தனத்தார் வெளியிட்ட தாய்மொழிப் பாட திட்டம் இந் நோக்கங்கொண்டே அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி முதல் வகுப்பில் 300 தமிழ்ச் சொற்களையும், பெரும்பான்மையான தமிழ் எழுத்துக்களையும் அறியவும், II, III வகுப்புக்களில் முறையே 400, 500 சொற்களையறியவும் வற்புறுத்தப்படுகிறது.

சரியான உச்சரிப்புடன் பேசவும், தடுமாற்றமின்றி வாசிக்கவும், திருத்தமாக எழுதவுமான திறமையை முதல் மூன்று வகுப்புக்களில், உண்டுபண்ணிவிடலா மென்று கல்வி நிபுணர்கள் கருதுகிறார்கள்.

IV, V வகுப்புக்களில் கருத்தறிந்து, மௌனமாகப் பத்திரிகை விஷயங்கள், கதைகள், சிறு இலக்கியங்கள், கைப்பிரதிகள் முதலியன படித்தறிதல் முக்கியமாகும். அன்றாட வாழ்க்கைக்குச் சம்பந்தமுள்ள விஷயங்களைப் பற்றியும், சம்பவங்களைப்பற்றியும் கோர்வையாகவும் தெளிவாகவும் பேசும் வாக்குவன்மை யுண்டுபண்ண வேண்டும். கடிதங்கள் வரையவும், சிறு கட்டுரைகள் எழுதவும் பயிற்சி யளிக்கவேண்டும்.

முதல் மூன்று வகுப்புக்களில் பிள்ளைகளுக்கு ஏற்கனவே பழக்கத்திலுள்ள சொற்களைக்கொண்டே பாடங்கள் அமைக்கப்படும். ஆனால் IV, (700 சொற்கள்), V (800 சொற்கள்) வகுப்புக்களில் உலக சம்பந்தமானவும், பல கலைகள் சம்பந்தமானவும் புதிய சொற்களும் போதிக்கப்படவேண்டும். இவ்விதம் முதல் ஐந்து வகுப்புக்கள் படித்து 3,700 சொற்கள் அறிந்து வெளியேறுகிற பிள்ளைகள் கடிதமெழுதும் திறமையையும், பத்திரிகை படிக்கும் திறமையையும், நிரந்தரப் படிப்பறிவையும் பெறுவார்கள். இந்த அடிப்படையான பாஷா ஞானம் தற்காலத்தில் வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

மேலும், இந்தியக் கல்வித் திட்டத்தைப் பரிசீலனை செய்த ஹார்டாக் கமிட்டியார் வெளியிட்டுள்ள யாதாஸ்தில் குறிப்பிட்டபடி இவ்விதத் திறமை பெறுதலே ஜன நாயக ஆட்சியில் வாக்குரிமையின் பொறுப்பை யுணர்ந்து அதைச் சரிவர உபயோகிக்கப் பெரிதும் உதவியாகும்.

நடுத்தரக் கல்வியில் தாய்மொழிப் போதனையின்
சிறப்பான நோக்கங்கள் :—

நடுத்தர வகுப்புகளில் (அதாவது VI, VII, VIII, வகுப்புக்கள் அல்லது I, II, III பாரங்கள்) மேற்கூறிய நோக்கங்கள் மேன்மேலும் கவனம் பெறுவதுடன், பேராசிரியர் இயற்றியுள்ள காவியங்களையும், அவைகளிலிருந்து தொகுக்கப்பட்ட பகுதிகளையும் படிக்கச்செய்து, அந் நூல்களில் பரிச்சயமும், உருசியும் உண்டுபண்ணுதல் முக்கிய நோக்கமாகும். அறிவு வளர்ச்சிக்கும், மனமகிழ்ச்சிக்கும் ஓய்வு நேரங்களில் நூல் நிலயங்களிலுள்ள

மூல புத்தகங்கள், கதைகள், நாடகங்கள், பிரயாண வரலாறுகள், இதர நூல்கள் முதலியவற்றைப் படிக்கப் பழக்குதலும் புதிய திட்டத்தில் வற்புறுத்தப்படுகிறது. விரிவான கட்டுரைகளும், பலதிறப்பட்ட கடிதங்களும் எழுதப் பழக்குவதும், அடிப்படையான தமிழிலக்கண விஷயங்களை அறிதலும் இத் திட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன. தகவல் நூல்களில் விஷயங்களைத்தேடி யறிதலும், அட்டவணை, அகராதி இவைகளை உபயோகிக்கப் பழகுதலும் இவ் வகுப்புக்களில் கவனம் பெற வேண்டும்.

**தமிழ் போதிக்கும் ஆசிரியரின் குணங்கள்:** தாய் மொழி போதிக்கும் ஆசிரியர் திருத்தமான உச்சரிப்பும் வாக்கு வன்மையும் பெற்றிருத்தல் அவசியம். பிறாது மாதிரியைக் கொண்டே பிள்ளைகள் தங்கள் பேசும் முறையையும், வாசிக்கும் முறையையும் அமைத்துக் கொள்கிறார்கள். ஆதலால் எப்பொழுதும் ஆசிரியர் அவற்றில் முன்மாதிரியாக விளங்கவேண்டும்.

தாய்மொழியில் ஆசிரியருக்குப் பற்றும் தேர்ச்சியும் இருக்கவேண்டும். ஒருசெய்யுளையோ, வசன பாகத்தையோ ஆசிரியர் உணர்ச்சி ததும்ப வாசிக்கும் திறமை பெற்றிருப்பது நலம். அவ்வித்த் திறமை வாய்ந்திருந்தால்தான் பிள்ளைகளின் மனத்தில் பாஷாபிமான உணர்ச்சி உதிக்கும்.

அவ்வப்போது மாறிவரும் பாடத்திட்டத்தைப்பற்றிய நுண்ணறிவு தமிழாசிரியருக்கு இருக்கவேண்டியது அவசியம். அத்துடன், முறைகளைப்பற்றிய ஞானமும் இருக்க வேண்டும். நூதன முறைகளைக் கற்றுக்கொண்டு குழந்தைகளுக்கு அறிவூட்ட வேண்டும்.

தமிழாசிரியருக்குத் தம் பாட சம்பந்தமான உபகரணங்கள் தயாரிப்பதில் குன்றா ஊக்கம் அவசியம். மேலும், பாடபுத்தகங்கள், கதைப் புத்தகங்கள், படங்கள் முதலியவைகளைப் பிள்ளைகளின் மனப்பான்மை, வயது, வகுப்பு இவற்றிற்குத் தக்கபடி தெரிந்தெடுக்கத் தேர்ச்சிவேண்டும்.

பாடசாலையில் மொழியறிவு இருவிதத்தில் ஏற்படுதல் கூடும். (i) தமிழ் வாசகம், செய்யுள் முதலிய பாடங்களில் தமிழ் நேர்முகமாகப் போதிக்கப்படுகிறது. (ii) கணிதம், பொது அறிவு முதலிய இதர பாடங்களும் தமிழிலேயே போதிக்கப்படுவதால், அப் பாடங்களும்

தமிழறிவை விருத்திசெய்கின்றன. அவற்றைப் போதிக்கும்போதும் தமிழ்மொழியைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் வற்புறுத்தல் வேண்டும். ஆதலால், இதர பாடங்களைப் போதிப்பதிலும் ஆசிரியருக்குப் பிள்ளைகளிடத்துப் பாஷா ஞானம் உண்டு பண்ணுவதில் பொறுப்பு உண்டு.

### பயிற்சி வினாக்கள்

1. குழந்தைக்கு மொழி எவ்விதங்களில் இன்றியமையாதது?

2. மொழியின் உறுப்புகள் எவை?

3. தாய்மொழி என்றால் என்ன? அதைக் கற்பதின் அவசியம் யாது?

4. பண்டைத் தமிழ் நூல்களைப் படிப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

5. தாய் மொழிப் போதனையின் பொது நோக்கங்கள் நான்கு கூறுக.

6 சிறந்த படிப்பறிவு என்றால் என்ன? அது சித்திக்க யாது செய்யவேண்டும்?

7 தமிழ்ப் போதனையில் முதல் மூன்று வகுப்புகளில் சிறப்பான நோக்கங்கள் யாவை? 4, 5 வகுப்புகளில் யாவை? கடைத்தர வகுப்புகளில் யாவை?

8. தாய் மொழிப்பயிற்சியும், இதர பாடங்களும் எவ்விதம் ஒன்றுக்கொன்று உதவும்?

9 தமிழ் போதிக்கும் ஆசிரியருக்கு வாக்கு வன்மையும், தாய் மொழிப்பற்றும் தேவையாகும் ஏன்?

---

## 2. சிறப்பான சில போதனா முறைகள்

எந்தப் பாடம் கற்பிப்பதானாலும் குழந்தைகளின் சுபாவ குணங்களையும் அறிவு நிலையையும் அறிந்து, அவற்றிற்குத் தகுந்தபடி பொருத்தமான முறைகளைக் கையாண்டால்தான் முழுப்பயன் கிட்டும். ஆதலால் சிறுவர்களின் கல்வியில் யுக்தி வாத முறையை விட (Logical method) மனோதத்வ முறையே (Psychological method) சாலச் சிறந்தது.

இவ்வுண்மை காரணமாகத் தற்காலத்தில் புதிய புதிய போதனா முறைகள் மேல் நாடுகளில் ஆராய்ச்சி செய்யப்பட்டு அனுஷ்டிக்கப்படுவதால், அங்கே கல்வி ஓங்கி வளர்ந்து, ஜனங்கள் சுக வாழ்வையும் செல்வத்தையும் பெற்று விளங்குகிறார்கள். நமது நாட்டிலோ ஆரம்ப ஆசிரியர்கள் இன்னும் பண்டைமுறைகளையே

அனுசரிப்பதால் பொதுஜனக் கல்வி அபிவிருத்தியாகவில்லை. ஆதலால், மேல நாடுகளில் நிலவும் சில சிறப்பான போதனை முறைகளை நாமும் அறிந்து அநுசரித்தால்தான் கல்வி தீவிரமாகப் பரவி வளர்தல் கூடும். அப்புதிய கொள்கைகளிலும் முறைகளிலும் முக்கியமானவை பின்வருவனவாகும்:

1. **பரம்பரை முறை அல்லது திண்ணைப்பள்ளிக்கூட முறை:** இம்முறையில் 'சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கி' என்றபடி பிள்ளைகள் உட்கார்ந்த இடத்தை விட்டு நகராமலும், வாய்திறந்து பேசாமலும், உபாத்தியாயர் சொல்லிக்கொடுப்பதைக் கேட்டுக்கொண்டு இருப்பதே வற்புறுத்தப்பட்டு வந்தது. பாட விஷயத்தில் கருத்துச் செலுத்தாமல், பிள்ளைகள் யாவரும் ஏகோபித்துக் கூச்சலிட்டுப் படிப்பதும், மணலில் எழுதுவதும், ஓலை ஏடுகளில் எழுதுவதும் வழக்கத்தில் இருந்து வந்தன. பயமுறுத்தல், நிர்ப்பந்தம், கடுந்தண்டனை முதலியன சகஜமாக இருந்தன. பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வதென்றால் சிறைச்சாலைக்குச் செல்வது போல் நினைத்து, அதில் வெறுப்பு அடைந்து அழுதுகொண்டே போவது வழக்கம்.

குழந்தையின் தேவை, ஆவல், உற்சாகம் இவை கவனிக்கப்படவில்லை. பாடந்தான் முக்கியம். குழந்தைகளுக்கு விருப்பம் இருப்பினும் இராவிடினும், குறிப்பிட்ட பாடம் யுக்திவாத முறைப்படி போதிக்கப்பட்டு வந்தது. பொருள் விளங்காத சொற்களையும் கருத்துக்களையும் உபயோகித்து வந்தனர். பாடம் முழுவதையும் உருப்போட்டு மனப்பாடம் செய்தல், பாராமல் படித்து ஒப்புவித்தல் இவைகளே பெரிதும் வற்புறுத்தப்பட்டன.

2. **புதிய முறைகளில் சில அம்சங்கள்:** தற்காலப் போதனை முறை, குழந்தையின் மன இயல்பை அடிப்படையாகக் கொண்டது. இப்புதிய கொள்கையின் பயனாக, 'குழந்தைகள் பிறக்கும் பொழுதே சுத்த சூனியமாக இராமல் சில இயற்கைக் குணங்களையும் அறிவையும் பெற்றிருக்கிறார்கள். அச்சக்திகளை இயற்கை முறையில் வெளிப்படுத்தி நல்வழியில் வளரச்செய்வதே கல்வியாகும்' என்று இக்காலத்தில் கருதப்படுகிறது.

**பாலர்களின் சுயேச்சை:** பாலர்களுக்கு ஓடியாடவும், இஷ்டப்படி பேசவும், சுய முயற்சியால் அறிவை விருத்தி செய்துகொள்ளவும் தாராளமான சுயேச்சை அளிக்கவேண்டும். அவ்வித சுயேச்சை

(Freedom) பாலர்களது உரிமையாகும். அவர்களை அசையாமல் உட்கார வைத்தபடியே வற்புறுத்தியும், கஷ்டப்படுத்தியும் போதிப்பது அறவே தகாது. பய முறுத்தல், சிர்ப்பந்தம், கடுந்தண்டனை முதலியன கூடா. தற்காலத்தில் பையன்களும் பெண்களும் விருப்பத்துட னும் உற்சாகத்துடனும் பள்ளிக்குச் செல்வதைக் காண் கிறோமல்லவா?

ஐம்புலப் பயிற்சி: சுமார் 150 வருஷங்களுக்கு முன்பு பிரான்ஸ் தேசத்திலிருந்த ரூஸோ (Rousseau) என்பவர் பழைய போதனைமுறைகளைக் கண்டித்து, இயற்கை முறைகளையே பின்பற்ற வேண்டுமென்று எமிலி என்னும் ஒரு நூலை எழுதினார். அதில் புத்தகக் கல்வி அதிக நன்மை பயக்காதென்றும், இயற்கை முறையில் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம் புலன்களைப் பயிற்சிப்பதே கல்விக்கு அடிப்படையென் றும் முதன் முதல் விளக்கினார். அவரது காலமுதல்தான் நவீன காலக் கல்வி தலைப்பட்டது என்னலாம்.

உற்று நோக்குதலும் நிதரிசன முறையும்:— வித்தில் அடங்கியிருக்கும் கருச் செடி மரமாவது போல், பாலர் களின் உள்ளத்தில் ஆழ்ந்து கிடக்கும் சக்திகளை மலரச் செய்வதே கல்வியின் நோக்கம் என்று ஸ்விட்ஸர்லாந்தி லிருந்த பெஸ்டலாஸி என்பவர் கூறினார். அவர் தமது பாடசாலையில் புத்தகங்கள் இல்லாமலே இயற்கைப் பொருள்களை உற்றுநோக்கச் செய்வதால் கல்வி பயிற்று வித்தார். அவரது முறையில் உற்றுநோக்கச் செய்தல், பொருள்களை நேரில் காட்டி நிதரிசன முறையில் போதித்தல் இவ்விரண்டும் பிரதானமானவை. உதா ரணமாக, 'சிரிக்கிருள்' என்ற பதம் கற்பிக்கையில், பதத்தைப் பலமுறை சொல்வது யாதொரு பயனையும் கொடாது. சிரிக்கும் ஒரு பெண்ணைக் காட்டி, 'இவள் சிரிக்கிருள்' என்று சொன்னல், அந்தச் சொல்லும் செய்கையும் உடனே குழந்தையின் மனத்தில் பதிந்து விடுமல்லவா?

3. கிண்டர்கார்டன் (Kindergarten) முறை: சுமார் 100 வருஷங்களுக்கு முன்பு ஜெர்மனியில் பிரீபெல் (Froebel) என்னும் ஒரு பேராசிரியர் இருந்தார். குழந் தைகளை வளரும் செடிக்கும், உபாத்தியாயரைத் தோட் டக்காரனுக்கும் ஒப்பிட்டுத் தாம் நடத்திய பாடசாலை யைக் குழந்தைகளின் தோட்டம் என்று பொருள்படும் கிண்டர்கார்டன் என்று அழைத்தார். குழந்தைத் தன்

மையில் விளையாட்டே பிரதானமாதலால், புத்தகங்களில் லாமல் விளையாட்டுக்கள் மூலமாகவும், கண் கைப் பயிற்சி மூலமாகவும், இயற்கைக் காட்சிகள் மூலமாகவும் பாலர் களுக்குக் கல்வி போதித்தார். அவர் உபயோகித்த உபகரணங்களாகிய அட்டைகள், உருண்டைகள் முத லியவற்றிற்குக் கொடைகள் (Gifts) என்று பெயர். அவர் விளக்கிய இம் முறையே கிண்டர்கார்டன் முறை எனப்படும்.

இம் முறையின் உண்மை நோக்கமாவது சிறுவர்க ளுடைய உடல், உள்ளம் இவற்றை வளரச் செய்வதாம். பாடங்களில் அதிகத் தேர்ச்சி யடையாவிடினும் உடல் வளர்ச்சி, மனோவளர்ச்சிகளில் விருத்தியடைந்திருந்தால் அதுவே போதுமெனக் கருதப்படுகிறது.

இம் முறையில் அனுசரிக்கப்படும் சில செயல்களா வன :—

1. பொருள்களை ஆராய்ந்தறிதலினாலும் பலவிதப் பயிற்சிகளாலும் ஐம்பொறிகளையும் வளர்ச்சி யடையு மாறு செய்தல். 2. பலவித உடற் பயிற்சிகளினால் மாணக்கர்களுடைய உடலைப் பிற்கால வாழ்க்கைக்குத் தகுதியுடையதாகச் செய்தல். 3. தனித்தனியாகவோ, சிறு கூட்டங்களாகவோ சேர்ந்து விளையாடச்செய்தல். 4. சங்கீதத்திற்கு இசைய ஆடுதல், நடித்தல் போன்ற அப்பியாசங்கள் கொடுத்தல். 5. சித்திர வேலை, களி மண் வேலை, காகிதவேலைகளில் பல விதமான பயிற்சி யளித்தல். 6. வீடுகளில் வளர்க்கும் மிருகங்கள், பிரா ணிகளிடத்தில் அன்பு பாராட்டும்படி தூண்டுதல். 7. தோட்டவேலையில் கவனம் செலுத்தல். 8. கதை, சங்கீதம் இவைகளைக் கேட்டு ஆனந்திக்கச்செய்தல். 9. கதைகளை நடிக்கச்செய்தல். 10. நாடக சங்கம் ஏற்படுத்தி, மாணவர்கள் சிறு கதைகள் எழுதவும், பாட்டுக்கள் இயற்றவும், நடிக்கவும் செய்தல்.

கதை கேட்பது, பாட்டுகளும் செய்யுட்களும் பாடு வது, படித்த கதையை நடிப்பது முதலான வழிகளில் தமிழ்ப்போதனை சம்பந்தமாக மேலே விவரித்த முறை மையைக் கையாளலாம்.

4. விளையாட்டு வழியாகப் போதிக்கும் முறை: விளையாடுவது, குழந்தைகளின் இயற்கைக் குணமாகும். அதுவே குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் மன வளர்ச்சிக்கும் ஏற்பட்ட இயற்கைக்கருவி யெனலாம். விளையாடும்பொழுது குழந்தைகள் அதில் முழுதும் ஈடு

பட்டு, மனமகிழ்ச்சியடைகிறார்கள். ஆதலால் விளையாட்டு முறையாகக் கற்பிக்கப்படும் பாடங்கள் மனதில் நன்றாகப் பதிந்து நிலைத்து நிற்கும். இக்காரணம்பற்றி, தாய்மொழிப் போதனையிலும் விளையாட்டு முறை (Play way) பெரிதும் வற்புறுத்தப்படுகிறது.

அட்டை எழுத்துக்களால் சொற்கள் கட்டுதல், சொற்களில் விட்ட எழுத்துக்களைப் பூர்த்திசெய்தல், படத்திலுள்ள பொருள்களின் பெயர்களைக் கூறுதல், கொடுத்த சொற்களைக் குறிக்கும் படங்களைக் காட்டுதல் முதலான பலவித விளையாட்டுக்கள் மூலம் பாலர்களுக்கு உற்சாகமும், படிப்பில் ஆசையும் விளையுமாறு தமிழ்ப் போதனை செய்யலாம்.

தமிழ்ப் போதனையில் பின்வரும் விளையாட்டு முறைப் பயிற்சிகளை யளிக்கலாம் :—

1. படங்களின் பெயர்களைச் சொல்லுக.



2. பின்வரும் சொற்களைக் குறிக்கும் படங்களைக் காட்டுக :—

| | | |
|---|---|---|
| ரூபாய் | தொட்டி | குருவிக்கூடு |
| ஊதல் | தீபம் | மாட்டுவண்டி |
| பூட்டு | விசிறி | பாக்குவெட்டி |
| குடம் | | |

3. விட்ட எழுத்துக்களையும் சொற்களையும் எழுதுக
i. ஊ — சல், ஊ — ல், கா — ம்,
மா — பழம், வி — வதி
ii. இந்த —— ஈய ஊதல்.
அந்த உரல் மர ——.

4. கடு எழுத்தோடு சேர்த்து வாசிக்க :
(சொல் ஏணி)

| | | | |
|---|---|---|---|
| கா | ல் | கா | ய் |
| பா | | கா | |
| வா | | தா | |
| ப | | பா | |
| க | | வா | |

5. இந்த எழுத்துக்களை வார்த்தைகளாக அமைக்க :
(உ-ம்.) வடிண் = வண்டி.
ரைதிகு, மைழவா, பூப்ஓ, ண்ணீதர்.

6. பின்வரும் சொற்களைத் தக்கபடி மாற்றி வாக்கியமாக எழுதுக :
(உ-ம்.) என்று ஓர் இருக்கிறது ஊர் செஞ்சி.
செஞ்சி என்று ஓர் ஊர் இருக்கிறது.
1. இட்டலி குடித்தான் நீர் மோர் தின்று.
2. பேசுவது மொழி நாம் தமிழ்.
3. புல் பசித்தால் புலி தின்னுமா?

7. பொருந்தும்படி சேர்த்து வாசிக்க :

(உ-ம்.) தென்னை | குஞ்சு
குருவி | பிள்ளை

தென்னம் பிள்ளை : குருவிக்குஞ்சு

வாழை | குட்டி
குதிரை | குஞ்சு
கோழி | கன்று

8. i. எழுத்துக் கூட்டல் விளையாட்டு :
பேருக்கு ஒரு எழுத்தாகச் சொல்லி வார்த்தை அமைக்க.
ii. எழுத்து அட்டைகளைக் கொண்டு சொற்கள் கட்டுதல்.

9. அபிநயப் பாட்டுக்களும் பாப்பா பாட்டுக்களும் பாடுவது.

10. பொருத்தமான பெயர் எழுதிய அட்டைகளை உரிய பொருள்களின்மேல் தொங்கவிடச் செய்தல்.

(உ-ம்.) | மேஜை | ரோஜாச் செடி | கிணறு |

11. தபால் விளையாட்டு:

பல பிள்ளைகளின் பெயர்களைத் தனித்தனியாகச் சீட்டுக்களில் எழுதி, அப் பெயருள்ள பிள்ளைகளிடம் கொண்டுபோய்க் கொடுக்கச் செய்தல்.

12. படித்துச் செய்க:

| | |
|---|---|
| இடுப்பில் கை வை. | நிமிர்ந்து நில். |
| இரண்டு தடவை குதி. | வலதுபுறம் திரும்பு. |
| கையைத் தொங்கவிடு. | இடதுபுறம் திரும்பு. |

13. இந்த விளம்பரங்களைப் படிக்க:







5. தனித்தனிப் போதிப்புமுறை (Individual method): ஒவ்வொரு பாலனுக்கும் பிரத்தியேக கவனஞ் செலுத்திப் போதிப்பதே இம்முறையின் கருத்து. இம்முறையில் பாடம் முக்கியமல்ல; வகுப்பு முக்கியமல்ல; தனித்தனியாகப் பிள்ளைகளின் மனதைச் சோதித்து, அவர்களின் மனநிலைக்கேற்ற விஷயங்களைக் கற்பிப்பதே பிரதானமாகும். (The teaching should not be subject-centred, but child-centred.) ஆனால் சாதாரணமாக நமது பாடசாலைகளில் இப்பொழுது பொது வகுப்பு முறையே (class or mass teaching) வழக்கத்தில் இருந்து வருகிறது. அதாவது, ஒரு வகுப்பிலுள்ள 40 பிள்ளைகளுக்கும் ஒரே வகையான பாடம் கற்பிக்கப்படுகிறது. முயலையும் ஆமையையும் ஒரே நுகத்தடியில் கட்டி ஓட்டுவதுபோல, ஒரு வகுப்பிலுள்ள புத்திக்கூர்மையுள்ளவர்களுக்கும் மந்த புத்தியுள்ளவர்களுக்கும் ஒரேவிதப் போதனை யளிப்பதால் இருவகையினருக்கும் தேர்ச்சி தடைப்படும். மந்தமானவர்கள் மற்றவர்களைப்போல்

தேர்ச்சி ஏற்படாததைக் கண்டு, அதைரியமடைந்து, முயற்சி செய்வதில்லை. சூடிகையான பிள்ளைகள் பிறருக்காகக் காத்திருக்கவேண்டியிருப்பதால், திறமைக்கேற்ற தேர்ச்சி அவர்களுக்குப ஏற்படுவதில்லை.

தனித்தனிப் போதிப்பு முறையில் பிள்ளைகள் அவரவர் திறமைக்கேற்ற வகையில் சுயமாக முயற்சிசெய்து படிக்கத் தூண்டப்படுகிறார்கள். ஆதலால், இம்முறைக்கு சுயமுயற்சி முறை (self-activity method) என்றும் பெயருண்டு.

**சுயமுயற்சி முறைப் பயிற்சிகள்:** கீழ் வகுப்புக்களில் வாசிப்புத் தாள்கள் (Reading sheets) தயாரித்து அச்சிட்டுப் பிரதி பாலனுக்கும் வழங்கிக் கற்கச் செய்யலாம். மேல் வகுப்புக்களில் மொழிப் பயிற்சி அட்டைகளைத் (Individual language cards) தயாரித்துப் பிரதி மாணவனுக்கும் கொடுத்து விடை எழுதச் செய்யலாம். ஒவ்வொரு வகைப் பயிற்சிக்கும் வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்குத் தக்கவாறு 6 அல்லது 8 பிரதிகள் தயாரித்து வைக்கலாம். ஒரு பயிற்சியை ஒரே காலத்தில் எல்லோரும் செய்யவேண்டும் என்பதில்லை. அட்டைகளை மாறி மாறிக் கொடுத்து விடையெழுதச் செய்யலாம். வாசிப்புத் தாள்களும் மொழிப் பயிற்சி அட்டைகளும் விலைக்குக் கிடைக்கும்.

மேற்கூறிய முறையில் ஒவ்வொரு மாணவனும் தனது சக்திக்குத் தக்கவாறு துரிதமாகவோ தாமதமாகவோ கற்கலாம். ஒவ்வொருவரும் சுயமுயற்சி எடுக்கிறார்கள். பிள்ளைகளின் விசேஷித்த சக்தியை வெளிப்படுத்த முடியும். விருப்பத்துடனும் உற்சாகத்துடனும் வேலை செய்யப்படுவதால் காலம் வீண்போவதில்லை. பிள்ளைகளுக்குச் சுய நம்பிக்கையும், யோசிக்குந்திறமையும் ஏற்படுகின்றன. படித்த விஷயங்கள் மனத்தில் நன்கு பதியும்.

ஆனால் உபாத்தியாயருக்கு வேலை கடினம். வகுப்பில் பிள்ளைகள் அதிகமிருந்தால் ஆசிரியருக்கு வேலை அதிகம். சில சமயங்களில் ஒரு பிள்ளையின் வேலையை மற்றொரு பிள்ளை பார்த்தெழுதவும் (காப்பி யடிக்கவும்) நேரிடலாம். அதை எச்சரிக்கையாக இருந்து தடுக்க வேண்டும். தனித்தனி அட்டைகள் கொடுக்கவேண்டியிருப்பதால் செலவு அதிகம் ஏற்படலாம்.

6. **மாண்டிஸரி முறை:** சுயமுயற்சி முறையைப் பின்பற்றி இத்தாலிய நாட்டைச் சார்ந்த டாக்டர் மாண்டிஸரி

அம்மையார் பாலர்களின் மனோபாவங்களுக்கேற்ப அமைத்துள்ளது மாண்டிஸரி முறை எனப்படும். இவர் நடத்திவரும் பாடசாலையில் கையாளப்படும் முறையில் மூன்று அம்சங்கள் முக்கியமானவை. a. தசைகளை வளர்க்கக்கூடிய விளையாட்டுக்களும் தேகப் பயிற்சிகளும்; b. ஐம்புல வளர்ச்சிக்கான புது மாதிரி உபகரணங்கள்; c. குழந்தைகள் சுயமுயற்சியாலும் சுயேச்சையாயும் கல்வி பயிலுதல். பாலர்கள் தங்களுடைய சிறு காரியங்களைத் தாமே செய்துகொள்வார்கள். உபாத்தியாயர் பாடம் போதிக்காமல், பாலர்களுடன் கூட இருந்து, தேவையானபொழுது உதவிசெய்வார்கள். வகுப்பாக வகுத்துப் போதிப்பதில்லை. ஒவ்வொரு குழந்தையும் மற்ற பிள்ளைகளுடன் கலந்து தானாகவே பாடங்களைப் படிக்கும்.

டாக்டர் மாண்டிஸரி அம்மையார் சமீப காலத்தில் இந்தியாவுக்கு வந்து, சென்னைக்கு அருகிலுள்ள அடையாறு (Adyar) என்னுமிடத்தில் தமது கொள்கைகளை விளக்கும் ஒரு பாடசாலையை நிறுவியுள்ளார்கள். அதில் வகுப்புக்கள் நடத்திக் காட்டி, ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

7. டால்டன் முறை அல்லது ஒப்பந்த முறை: இம்முறையும் தனித்தனிப் போதிப்பு முறையைப் பின்பற்றியதே. அமெரிக்காவில் டால்டன் என்னும் ஊரில் முதன் முதல் கையாளப்பட்டதால் இப்பெயர் வந்தது. இதைப் பிரபலப்படுத்தியவர் பார்க்ஹர்ஸ்டு அம்மையார். மாண்டிஸரி முறை இளம் பிள்ளைகளுக்கு ஏற்றது; டால்டன் முறை உயர்தர வகுப்புக்களுக்கு ஏற்றது.

டால்டன் நகரிலுள்ள பாடசாலையில் வகுப்பு வகுப்பாக அறைகள் (class-rooms) இல்லாமல், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம் முதலிய பாட அறைகளே (Subject rooms) உண்டு. ஒவ்வொரு பாட அறையும் அந்தப் பாட உபாத்தியாயரின் பொறுப்பில் இருக்கும். ஒவ்வொரு அறையிலும் அந்தப் பாட சம்பந்தமான பல புத்தகங்களும் உபகரணங்களும் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பாட அறையிலும் பலதரத் தேர்ச்சியுள்ள மாணவர்கள் தாமாகவே படிப்பார்கள். அவர்கள் ஒவ்வொரு வாரமும், மாதமும், வருஷமும் தாமாகவே படித்தறிய வேண்டிய விஷயங்களுக்குக் கேள்விகள் முன்னதாகத் தயாரித்து அச்சிட்டுக் கொடுக்கப்படும். இவற்றிற்கு ஒப்பந்தங்கள் (Cont-

racts or Assignments) என்று பெயர். ஒவ்வொருவரது தேர்ச்சியைக் காட்டும் அறிக்கைக் கார்டுகளும் அளிக்கப்படும். ஒரு வருஷத்திற்கான வினைக்களைப் புத்தி நுட்பமுள்ள பிள்ளைகள் குறைந்த காலத்தில் முடித்துவிடலாம். ஒருவனுக்கே ஒரு பாடத்தில் 6 மாதத் தேர்ச்சியும், மற்றொரு பாடத்தில் 3 மாதத் தேர்ச்சியும் இருக்கலாம். எப்படி இருந்தாலும், 3 வருஷத்திற்குள் எல்லாப் பாடங்களும் பூர்த்திபெற வேண்டும்.

நமது பாடசாலைகளில், தாய்மொழிப் போதனையில் மேலே விளக்கிய டால்டன் முறையைப் பின்வருமாறு பின்பற்றலாம்: ஒவ்வொரு பாடம் ஆரம்பிப்பதற்குமுன் அப்பாட சம்பந்தமான சில கேள்விகளை ஆசிரியர் தயாரித்து, அவைகளைக் கரும்பலகையில் எழுதியோ அல்லது தனி அட்டையில் அச்சிட்டோ கொடுத்து, அவைகளின் விடைகளைப் பாடத்தைப் படித்துக் கண்டறியுமாறு செய்யலாம். இது பாடமுன் ஒப்பந்தம் (Pre-lesson assignment) எனப்படும். இதே விதம் பாடம் முடிந்த பிறகு சில பயிற்சிக் கேள்விகளை எழுதி, பிள்ளைகளைத் தனித்தனியாக விடை யெழுதச் செய்யலாம். இது பாடப் பின் ஒப்பந்தம் (Post-lesson assignment) எனப்படும். பாரதி தமிழ் வாசகம் முதலிய புதுமுறை வாசகங்களில் இவ்விதப் பயிற்சிகளைக் காணலாம். இப்பயிற்சிகளால் பிள்ளைகளின் சுயமுயற்சி தூண்டப்படும்; மௌன வாசிப்புப் பழக்கம் ஏற்படும்.

8. செயல் திட்ட முறை (Project method): இதைச் சுயநோக்க முயற்சி முறை என்றுங் கூறுவர். இம் முறையும் முதன் முதல் அமெரிக்காவில்தான் அனுஷ்டிக்கப்பட்டது. நமது நாட்டில் ஈரோடு என்னும் ஊரிலுள்ள லண்டன் மிஷன் கம்யூனிட்டி போதனுமுறைப் பாடசாலையில் இம் முறை கையாளப்பட்டு வருகிறது. கல்வியின் நோக்கம் சிறுவர்களை உலக வாழ்க்கைக்குத் தயாரிப்பதே யல்லவா? ஆதலால் வாழ்க்கைச் சம்பவங்களைப் பற்றிப் பாடசாலையில் படிப்பது மட்டும் போதாது; அவைகளை நடத்திப் பழகுவதே சாலச் சிறந்ததாகும். பிள்ளைகள் தாமாகவே ஒரு காரியத்தை ஆலோசித்து இயற்கை முறையில் செய்து முடித்தலே செயல் திட்ட முறை எனப்படும்.

இம் முறையில் நான்கு படிகள் உண்டு. (1) பிள்ளைகள் தமது நிலைமைக்கும் சக்திக்கும் ஏற்ற ஒரு காரி

பத்தை அல்லது பிரச்னையைத் தாமாக (சுய நோக்கமாக)த் தேர்ந்தெடுத்தல் (Purposing stage). (2) முற்றுப்பெறுமாறு அவ்வேலையை நடத்தவேண்டிய வழிகளை எல்லோரும் ஒன்றுகூடி யோசித்துத் திட்டம் போடுதல் (Planning stage). (3) செவ்வையாகச் செய்துமுடித்தல் (Executing stage). (4) முடித்த வேலையைச் சீர்தூக்கி, அது சரிவர முடிந்ததாவென்று மதிப்பிடுதல் (Judging stage). ஒவ்வொரு நிலையிலும் அந்த முயற்சி சம்பந்தமாகத் தாய்மொழி, கணக்கு, பூகோளம், இயற்கைப் பாடம், தொழிற் பழக்கம் முதலிய பல பாடங்களைக் கற்கச் சந்தர்ப்பம் வாய்க்கும்.

உதாரணமாக, வேர்க்கடலை சாகுபடி செய்தல் என்னும் செயல் பிரச்னையை ஒரு வகுப்பில் நடத்துவதாக வைத்துக் கொள்வோம். அதை யொட்டிப் பின் வரும் பாடங்களை நடத்தலாம்.

தமிழ்: வேர்க்கடலை விளைவித்தலைப்பற்றி ஒருவர்க்கொருவர் சம்பாஷித்தலும், அதை விளைவிக்கும் முறைகளைப் புத்தகங்களில் படிப்பதும், தாங்கள் செய்தவற்றை அவ்வப்போது நோட்டில் குறித்துவைப்பதும், வேர்க்கடலை வியாபார சம்பந்தமாகக் கடிதங்கள் எழுதுவதும் தாய்மொழிப் பயிற்சியாகும்.

கணக்கு: வேர்க்கடலை சாகுபடிக்கான நிலத்தின் நீள அகலத்தை அளத்தல், விதையை அளந்தெடுத்தல், கண்டுமுதலைக் கணக்கிடுதல், வாங்கி விற்கும் லாப நஷ்டம் இவை போன்றவைகளை ஆராய்தல் கணக்குப் பாடமாகும்.

**பூகோளம்:** வேர்க்கடலை விளையுமிடங்கள், ஏற்றுமதி செய்யப்படும் துறைமுகங்கள், அது அனுப்பப்படும் தேசங்கள் இவைகளைப்பற்றிய பூகோள விஷயங்களைப் படித்தல் பூகோள பாடமாகும்.

**இயற்கைப் பாடம்:** வேர்க்கடலை விளையும் நிலத்தின் தன்மை, வேர், தண்டு, இலை, பூ இவைகள் வளரும் விதம், அவற்றின் வேலை முதலியவற்றைக் கவனித்து அறிதல் இயற்கைப் பாடமாகும்.

**தொழிற் பழக்கம்:** தரையைக் கொத்திப் பண்படுத்தல், எருவிடுதல், விதை விதைத்தல், தண்ணீர் பாய்ச்சுதல், களை பிடுங்குதல், கடலையை வெட்டி யெடுத்தல் முதலிய வேலைகளைப் பிள்ளைகள் தாமே செய்வதால் தொழிற் பழக்கம் உண்டாகும்.

இதே விதம், பற்பொடி செய்தல், காகிதக் கவர் செய்தல், கோழி வளர்த்து லாபம் எடுத்தல், கடை வைத்தல், துணி தைத்தல், கூட்டுறவுச் சங்கம் நடத்துதல், தபாலாபீசு நடத்தல் முதலிய ஒவ்வொரு காரியத்தையும் பாடசாலையில் பிள்ளைகள் தாமாகவே பிராஜெக்டாக நடத்தலாம்.

தொழில்களைத் தாமே செய்வதால் சிறந்த அநுபவ அறிவு உண்டாகிறது; குழந்தைகள் விருப்பத்தோடு செய்வதால் விஷயங்களை ஐயந்திரிபற அறிகிறார்கள்; தாமாகவே செய்து முடிப்பதால் இன்பம் அடைகிறார்கள். பிள்ளைகளின் உடல், உள்ளம், நடத்தை இம் மூன்றும் பூரண வளர்ச்சி யடைவதற்கு இம்முறை ஏற்றதெனக் கூறப்படுகிறது. ஆனால், இவ்விதக் கிரியா முறைப் பாடங்களை நடத்த நீண்ட காலம் ஆகும்.

**வர்தா திட்டம் (Wardha Scheme) அல்லது தொழில் முறைக் கல்வி:** இத்திட்டத்தை முதன் முதலில் மகாத்மா காந்தி மத்திய மாகாணத்திலுள்ள வர்தா என்னும் ஊரில் ஆரம்பித்ததால் இதற்கு அப்பெயர் கொடுக்கப்பட்டது. கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு (Craft-centred) போதனை நடத்துவதே வர்தா திட்டத்தின் முக்கிய அம்சம். நூல் நூற்றல், நெசவு, விவசாயம் முதலிய தொழில்கள் இத்திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளன. ஏதாவதொரு தொழில் சாஸ்திர முறையில் ஒவ்வொரு பாடசாலையிலும் கற்பிக்கப்படும். அதற்கு வேண்டிய உபகரணங்களும் இருக்கும். அத்தொழிலையொட்டியே தாய்மொழி, கணிதம் முதலிய எல்லாப் பாடங்களும் நடத்தப்படவேண்டும். பிள்ளைகள் செய்யும் சாமான்களை விற்றுப் பொருள் சேர்த்து உபாத்தியாயர் சம்பளம் முதலிய செலவுகளைச் செய்யலாம். கைத்தொழில் புரிந்து, அதன் மூலம் பிள்ளைகளின் மனோபாவங்களை வளர்த்து, அவர்களை நல்ல குடிமக்களாகச் செய்வது இம்முறையின் முக்கிய இலட்சியம். தவிரவும், செய்முறைக்கல்வியில் (Project method) போல் செய்து கற்றல் என்ற தத்துவத்தை வர்தா திட்டம் அடிப்படையாகக் கொண்டுளது. ஆனல் கைத்தொழில் மூலமாகச் சிற்சில ஆரம்ப பாடங்கள் கற்பிக்கலாமே ஒழிய, தமிழிலக்கியம், கணக்கு, விஞ்ஞான சாஸ்திரம் இவைகளின் உயர்ந்த பகுதிகள் கற்பிப்பது இத் திட்டத்தில் அசாத்தியமாகும்.

நாடக முறை: இம் முறையும் விளையாட்டுமுறைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதே. இக்காலத்தில் நாடகமும் ஆடல்பாடல்களும் பாட போதனையில் அதிக இடம் பெற்றுவருவது விரும்பத்தக்க ஒரு மாறுதலாகும். இவை அறிவு வளரவும், சில திறமைகள் பெறவும், மனமகிழ்ச்சி யடையவும் பெரிதும் உதவுவதை யாவரும் உணர்ந்துவருகிறார்கள். தாய்மொழிப் போதனையில் நாடக முறையைப் பின்பற்றுவதால் திருத்தமான உச்சரிப்பு, கருத்துக்களைத் தெளிவுபடுத்துதல், எண்ணங்களைக் கோர்வையாக வரிசைப்படுத்துதல், உணர்ச்சிகளை மொழி மூலம் உருவப்படுத்துதல், அபிநயப் பயிற்சி முதலியவைகளில் பழக்கம் பெறுகிறார்கள். ஒரு கதையை நடிக்கச் செய்வதால் குழந்தை மனோபாவம், ஞாபக சக்தி, சம்பாஷிக்கும் திறன், உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சக்தி, பாடுந் திறமை ஆகிய குணங்கள் விருத்தியாகின்றன.

பிள்ளைகளின் நடிப்புக்கள் அவரது வயதுக்கும் மனவளர்ச்சிக்கும் தக்கவாறு மாறுபடும். 6 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் பாவனை யுலகத்திலேயே வசிக்கின்றனர். உண்மை உலகத்திற்கும் பாவனையுலகத்திற்கும் அதிக வித்தியாசத்தை அவர்கள் உணருவதில்லை. இப் பருவத்தில் பாலர்கள் பலவித பாவனை விளையாட்டுக்கள்(make-believe) நடிப்பதைப் பார்க்கிறோம். நாற்காலி கப்பலாகவும், செங்கற்பொடி மருந்தாகவும், பொம்மை உண்மைக் குழந்தையாகவும், மரக் கட்டை குதிரையாகவும் பாலர்களுக்கு மாறிவிடுகின்றன; மிருகங்கள் பேசுகின்றன. அம்மா, பாப்பா, அப்பா, வண்டிக்காரன், தபால்காரன் முதலியவர்களாகக் குழந்தைகள் நடிப்பதைப் பார்த்து பிரமிக்காதவர்களும் உண்டோ? இந்தப் பருவத்தில் இவ்வித நடிப்புக்களை ஊக்குவது நலம்.

இப் பருவத்தில் ஒவ்வொரு நாளும் சிறிது நேரம் சமையல் செய்தல், தரையைப் பெருக்குதல், பாத்திரங்களைத் தேய்த்தல், ரயில் வண்டி ஓட்டல், கடை வைத்தல், தோட்டக்காரன், தபால்காரன், போலீஸ்காரன் முதலியவர்களைப்போல் நடித்தல், பட்சிகளையும் மிருகங்களையும் போல் கத்துதல் முதலிய விளையாட்டுகளை நடிக்கச் செய்யலாம். இவைகளில் பேச்சுக் குறைவு; ஊமையான நடிப்பே அதிகம். இப்பொழுது மழலைச் சொற்களையும் குழந்தைப் பேச்சையும் திருத்தவேண்டிய அவசியமில்லை.

7 முதல் 9 வயதுள்ள பாலர்களுக்குக் கதைகள் நடித்தலில் ஆவல் அதிகம். இப்பொழுது பாஷா ஞானமும் தீவிரமாக வளர்ச்சியடைகிறது. மிருகங்கள், வீரர்கள், வனதேவதைகள் இவை வரும் கதைகளைச் சொல்லி, அவைகளை நடிக்கச் செய்யலாம். ஆரம்பத்தில் பிள்ளைகள், உபாத்தியாயர் உபயோகித்த சொற்களையே திரும்பச் சொல்லுவார்கள். நாளடைவில் அப் பழக்கத்தை மாற்றி, அவர்களைச் சுயமாகவே பேசப்பழக்கவேண்டும்.

பாலர்களுக்குச் சந்தத்திலும் மோனையிலும் விருப்பமுண்டு. கதைகளில் பல்லவி மாதிரி திரும்பத் திரும்ப வரும் சொற்றொடர்களை மீண்டும் சொல்ல விரும்புவார்கள். இதைப் போற்றவேண்டும். அபிநயமும், பாட்டும், கதையும் பாலரின் மனத்தைக் கவருகின்றன.

10 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களை இலக்கியச் சுவையுள்ள சிறு நாடகங்களையும் காட்சிகளையும் படித்து, அவைகளை இசையுடனும் அபிநயத்துடனும் நடிக்கப் பழக்கலாம். கதாபாத்திரங்களின் மனோபாவங்களையும் உணர்ச்சிகளையும் மாணவர்கள் முதலில் அறிந்து, சந்தர்ப்பத்திற் கேற்றவாறு அவைகளை வெளிப்படுத்தும் முறையில் நடிக்கவேண்டும். மேல் வகுப்புக்களில் சம்பாஷணைகளையும் சிறு நாடகங்களையும் மாணவர்கள் சுயமாக எழுதுமாறு தூண்டப்படலாம்.

ஆசிரியர்கள், நாடகத்திலும் சங்கீதத்திலும் சிற வித்திறமை பெற்ற பிள்ளைகளுக்கே சாதாரணமாக நடிக்கப் பயிற்சியளிக்கின்றனர். மொழிப் போதனைக்கு இது அதிகப் பயன்படாது. வகுப்பிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் நடிப்புப் பழக்கம் அளிக்க ஆசிரியர் முயற்சிக்கவேண்டும். நாடக முறையைப் பின்பற்றுவதில் நடிகர்களுக்குச் சிறப்பான உடைகளும் அணிகளும் வற்புறுத்தவேண்டுவதில்லை; தனியான அரங்க மேடையும் தேவையில்லை. பாட காலங்களில் வகுப்புமுன் வந்து பிள்ளைகளை நடிக்கச் செய்தல் போதுமானது.

ஆனால், நாடகங்களை நேர்த்தியாகவும் அழகாகவும் அடிக்கடி பாடசாலையில் நடத்துவது பாடசாலைக்கே ஒளியையும் உயிரையும் தரும். நாடகமும் நாட்டியமும் அழகுக் கலைகளாகும். இன்பமளிக்கக்கூடியவை யாதலால், பிற்கால வாழ்க்கைக்கு அவை இன்றியமையாதன. சிறு வயதிலிருந்தே பாலர்களுக்கு அவைகளில் உருசியுண்டாக்குதல் ஆரம்ப பாடசாலையின் வேலைகளில் ஒன்றாகும்.

### பயிற்சி வினாக்கள்

1. போதனையில் யுக்தி வாத முறை, மனோதத்துவ முறை இவைகளை விளக்குக. 2. திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வியில் காணப்பட்ட குறைகள் 6 கூறுக். 3. ரூஸோ, பெஸ்டலாஸி, பிரீபெல், மாண்டிஸொரீ இவர்கள் தனித்தனி வற்புறுத்திய நவீனக் கல்வி முறைகள் யாவை? 4. பொது வகுப்புப் போதிப்பு, தனித்தனிப் போதிப்பு இவ்விரு முறைகளின் நன்மை தீமைகள் யாவை? 5. விளக்கக் குறிப்புக்கள் எழுதுக: டால்டன் முறை, செயல் திட்டமுறை, வர்தா திட்டம். 6. நாடக முறையின் நன்மைகள் யாவை? 6—7. வயதுள்ள பாலர்களுக்கு எவ்வித நடிப்புக்கள் ஏற்றனவாகும்?

---

## 3. கிரகித்தலும் வெளியிடலும்

நம் மனத்தில் தோன்றும் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கவும், பிறர் நினைக்கும் கருத்துக்களை நாம் அறியவும் பாஷை அல்லது மொழியே ஏதுவாகிறது என்று முதற் பக்கத்திலேயே படித்திருக்கிறோம். ஆதலால், மொழிப் பயிற்சியில் கிரகித்தல், வெளியிடல் என இரண்டு முக்கிய அம்சங்கள் உள.

கிரகித்தல்: செவியால் கேட்டறிவதாலும், நூல்களைப் படித்தறிவதாலும் (Listening and Reading) பிறரது கருத்துக்களைக் கிரகிக்கிறோம் அல்லவா? எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் கேள்வி மூலமாகவே கிரகிக்கிறார்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களோ, செவிப்புலன் மூலமாகக் கிரகிப்பதோடு நூல்களைப் படித்துக் கண்புலன் மூலமாகவும் கிரகிக்கிறார்கள். கிரகித்தல் மூலமாகவே அறிவு விசாலிக்கிறது; கருத்துக்கள் அதிகரிக்கின்றன; சொல்வளம் பெருகுகிறது.

வெளியிடல்: நம் மனக் கருத்துக்களைப் பேச்சு மூலமாகவும், எழுத்து மூலமாகவும் (Speech and writing) பிறருக்கு அறிவிக்கிறோம்.

நாம் கிரகித்தவைகளையும், கற்பனை மூலமாக ஆக்கும் (தாமாக உள்ளத்தில் உதிக்கும்) கருத்துக்களையும் (Creative aspect) பெரும்பாலும் தாய்மொழி மூலமாகவே வெளியிடுகிறோம்; எழுதத் தெரிந்தவர்கள் கடிதங்கள் மூலமாகவும் நூல்கள் மூலமாகவுங்கூட வெளியிடுகிறார்கள். செய்து காட்டல், நடித்துக் காட்டல், விளையாடல் இவைகளும் வெளியிடல் அம்சத்தைச் சேர்ந்தனவே. இவ்விதம் கிரஹித்த விஷயங்களைப் பிள்ளைகள் வெளியிடுவதால் அவை மனத்தில் நன்றாகத் தெளிவு பெற்று நிலைத்திருக்கும்.

**கிரகித்தல், வெளியிடல் ஆகிய இவ் விருவிதத் திறமைகளை யுண்டாக்கும்பொருட்டே பேசப் பயிற்சி, படிக்கப் பயிற்சி, எழுதப் பயிற்சி என்ற முப்பயிற்சிகளும் இளமையிலிருந்தே எல்லா வகுப்புக்களிலும் மொழிப் போதனையில் வற்புறுத்தப்படுகின்றன.**

பயிற்சி வினாக்கள்

1. மொழிப் பயிற்சியில் கிரகித்தல், வெளியிடல் என்றால் என்ன ? இவைகள் முறையே எவ்விதங்களில் வெளிப்படுகின்றன ?
2. கிரகித்தல், வெளியிடல் இவைகளில் கல்லாதாரைவிடக் கற்றோர் எவ்விதங்களில் மேன்மையுள்ளவர்கள் ?
3. பிறரிடம் கிரகித்தவற்றைத் தவிர வேறு எவ்விதக் கருத்துக்களை பிள்ளைகள் வெளியிடுகிறார்கள் ?
4. மொழிப் போதனையில் முப்பயிற்சிகள் எவை ?

## 4. வாய்மொழிப் பயிற்சி

**தாய்மொழிப் பாடத்தில் வாய்மொழிப் பயிற்சியின் நிலை:** பேசுவதற்குத்தான் நாம் தாய்மொழியை அதிகமாக உபயோகிக்கிறோம். படிக்காதவர்கள் வாய்மொழியாகவே தங்கள் கருத்துக்களை வெளியிடுகிறார்கள். படித்தவர்கள் கூடப் பெரும்பான்மை பேச்சையே உபயோகிக்கிறார்கள்; எப்பொழுதாவது தான் கடிதங்கள் அல்லது நூல்கள் எழுதுவதில் எழுத்தை உபயோகிக்கிறார்கள். தினசரி வாழ்க்கையில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு வாய்மொழியே பயன்படுகிறது. ஆதலால் வாழ்க்கைக்குப் பிள்ளைகளைத் தயாரிப்பது கல்வியின் நோக்கமாதலால் வாய்மொழிப் பயிற்சியே கல்வித் திட்டத்தில் முக்கிய இடம்பெற வேண்டுமல்லவா ?

எழுதப் படிக்கக் கற்பிப்பதே மொழிப்பயிற்சியில் பழையகால பரம்பரை நோக்கம். வாய்மொழிப் பயிற்சியை ஒரு பாடமாக முற்கால ஆசிரியர்கள் நினைக்கவில்லை. ஆனால், 'கல்விக்கழகு கசடற மொழிதல்' என்றபடி இக்காலத்தில் திருத்தமாகப் பேசப் பயிற்றுவதே மொழிப் பயிற்சியின் பிரதான நோக்கமாகக் கருதப்படுகிறது. ஆதலால், முதல் வகுப்பிலிருந்தே பாலர்களை இலக்கணப் பிழையின்றி, சரியான உச்சரிப்புடன் திருத்தமாகவும், தெளிவாகவும் தாய்மொழியில் பேசப் பழக்குவது அவசியமாகும்.

**வாய்மொழிப் பயிற்சியினால் விளையும் நன்மைகள்:** தினசரி வாழ்க்கைக்குப் பேச்சுப் பயிற்சி பெரிதும் பயன்படுகிறது. வாய்மொழிப் பயிற்சியால் பல சொற்

களைக் கற்றபின் பிள்ளைகள் வாசிப்பார்களாயின், பொருள்பட வாசிப்பது சுலபமாகும். மேலும், அவர்கள் சரிவர எழுதப் பழகுவதற்குக் கூட வாய்மொழிப் பயிற்சி அடிப்படையான வழியாக இருக்கிறது. திருத்தமாகப் பேசும் குழந்தை தான் திருத்தமாக எழுதும். அடிக்கடி வாய்விட்டுப் பேசினல் உச்சரிப்புத் திருந்திப் பேச்சு தெளிவடையும்; பயமும் கூச்சமும் நீங்கித் தன்னம் பிக்கை யுண்டாகும். நாவன்மையுடன் சொற்பொழிவு கள் நிகழ்த்துவது பொதுமக்களுக்கு அறிவு புகட்டவும், அரசியல் வாழ்க்கை நடத்தவும் உதவுகிறது. ஆகையால் முதல் வகுப்பு முதல் இறுதி வகுப்புவரையில் மாணவர் கள் பேசுவதற்குச் சந்தர்ப்பங்கள் ஏராளமாகக் கொடுக்கவேண்டும்.

திருத்தப் பேச்சின் முக்கிய அம்சங்கள்: திருத்தமான பேச்சில் சரியான உச்சரிப்பு, இலக்கணப்பிழை யில்லா மை, கருத்துக்களின் தொடர்பும் தெளிவும், உணர்ச்சி, வன்மை அல்லது ஜீவன், இனிய குரல், இயற்கைத் தன்மை இவை முக்கிய அம்சங்களாகும்.

தனி எழுத்துக்களின் சரியான உச்சரிப்பையும், அவ்வெழுத்துக்கள் உடலின் எந்த உறுப்புக்களின் சல னத்தால் உண்டாகின்றன என்பதையும் அவ்வப்போது எடுத்துரைக்கவேண்டும். ஒரு வார்த்தை அல்லது வாக் கியத்தின் கடைசி பாகத்தை விழுங்குதல், வழவழ வென்று புரியாமற் பேசுதல் இவை விலக்கத்தக்கன. ல, ள, ழ, ர, ற இவ்வெழுத்துக்களின் உச்சரிப்பு வித்தி யாசத்தை அவைகள் வரும் சொற்களை உச்சரிக்கப் பழகு வதால் தெளிவுபடுத்தலாம்.

இலக்கணப் பிழையில்லாமல் உபாத்தியாயரும் ஏனையோரும் பேசுவார்களாகில், அவர்களது பேச்சைப் பிள்ளைகளும் பின்பற்றி, இலக்கணப் பிழையின்றிப் பேசப் பழகுவார்கள். நல்ல இலக்கியங்களையும், பிழை யற்ற வாசக புத்தகங்களையும் படிக்கச் செய்வதால் திருத் தப் பேச்சு உணர்ச்சியை இளமையிலேயே உண்டாக் கலாம். அதனல், பிழைபட்ட தமிழ்ப் பேச்சுக்கள் பின் னர்க் காதில் விழும்போது இயற்கையாகவே அருவருப் புத் தோன்றும்.

ஒரு விஷயத்தைப் பற்றிய கருத்துக்களைக் கோர் வைப் படுத்தி, வரிசைக் கிரமமாகத் தங்கு தடையின்றிப் பேசப் பழக்குவது அவசியமாகும். சரியான இடங்களில்

சரியான சொற்களை உபயோகிப்பது தெளிவும் அழகும் தரும். இக் குணங்கள் நீண்ட கால முயற்சியினாலும் பழக்கத்தினாலுமே ஏற்படுதல் கூடும்.

காதில் விழாதபடி தாழ்ந்த குரலாகவும் அல்லது உரக்கக் கூச்சலிட்டும் பேசுவது தகாது. சங்கீதத்தில் போல் இனிய குரலுடன் பேசுவதே சாலச் சிறந்தது. கூச்சமின்றியும், படபடப்பில்லாமலும், நன்னம்பிக்கையுடனும் உரையாடப் பழகவேண்டும். வீண் ஆடம்பரமின்றிச் சாதாரணமாகவும் சுபாவமாகவும் (Natural manner) பேசுவதே நலம்.

நல்ல பேச்சு கருத்தை விளக்குவதாகவும், உணர்ச்சியை வெளிப்படுத்துவதாகவும் அமையவேண்டும். சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி குரலை உயர்த்துவதாலும் தாழ்த்துவதாலும், பேச்சுக்கு வன்மையும் உயிரும் அளிக்கலாம். (உ-ம்.) 'இங்கே வா.' என்பதற்கும், 'வா இங்கே.' என்பதற்கும் வேற்றுமை இருக்கிறதல்லவா?

## வாய்மொழிப் பயிற்சிக்கான வழிகள்

**வீட்டில் பேச்சுப் பழக்கம்:** ஏற்கனவே கூறியவாறு பாடசாலையில் சேருவதற்கு முன்பே குழந்தைகள் சாதாரணமாகப் பேசவும், பிறர் பேசுவதைத் தெரிந்துகொள்ளவும் வீட்டில் பழகியிருக்கிறார்கள். ஆனால் அப்பேச்சு பெரும்பாலும் மழலைச் சொற்களால் அமைந்து, கொச்சையாகவும் பிழையுள்ளதாகவும் இருக்கும். ஆசிரியர் குழந்தைப் பேச்சு (Baby language)க்கு முதலில் ஆதரவு கொடுத்து, காலக்கிரமத்தில் அதைத் திருத்த வேண்டும். குழந்தைப் பேச்சில் ஓர் இனிமையும், கொச்சைப் (colloquial) பேச்சில் ஓர் உயிரும் காணப்படுவதால் அவைகளைப் புறக்கணிப்பது பிள்ளைகளின் பேச்சுப் பயிற்சியைத் தடைப்படுத்துவதாகும். பிள்ளைகள் பாடசாலைக்கு வருமுன்னர் அவர்களுக்குக் கருத்துக்களும் குறைவு, சொல்வளமும் குறைவு என்பதை ஆசிரியர் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

**ஆசிரியர் பேச்சை மாதிரியாகக் கொண்டு பழகுதல்:** ஆசிரியர்களின் பேச்சுப் பழக்கம் பிள்ளைகளுக்குப் படியும். ஆதலால் உபாத்தியாயர் பிழையில்லாமல் திருத்தமாகவும் தெளிவாகவும் பேசுவதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கெட்ட வார்த்தைகளை ஒருகாலும் பிள்ளைகளின் முன்னிலையில் அவர் உபயோகிக்கக்கூடாது. உபாத்தியாயர் வழவழ என்று அவசர

மாகப் பேசாமல் எழுத்துக்களையும் சொற்களையும் சரிவர உச்சரித்துக் கணீரென்று தெளிவாகவும் நிதானமாகவும் பேசப் பழகவேண்டும்.

**இச்சையாகப் பேசுதல் (Free speech):** வகுப்பில் பிள்ளைகள் வாயைத் திறக்காமலும் பேசாமலும் இருக்க வேண்டும் என்னும் வாய்ப்பூட்டுச் சட்டம் பழைய ஏற்பாட்டிலுள்ளது. பிள்ளைகள் மௌனமாக இராமல், தாராளமாக ஒருவரோடொருவர் பேசிப் பழகவேண்டுமென்று தற்காலத்தில் வற்புறுத்தப்படுகிறது. வகுப்பின் அமைதிக்குப் பாதகமில்லாமல் பாலர்கள் உபாத்தியாயருடனும், மற்ற பிள்ளைகளுடனும் கலந்து பேசுமாறு அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். அவர்கள் ஒருவரோடொருவர் இயற்கையாகப் பேசும்பொழுது அதை உபாத்தியாயர் தடுக்கக்கூடாது. கூச்சத்தினால் பின்வாங்கும் குழந்தைகளைத் தைரியமாகப் பேசத்தூண்ட வேண்டும்.

**எல்லாப் பாடங்களிலும் வாய்மொழிப் பயிற்சி:** ஆரம்ப வகுப்புக்களில் சரித்திரம், பூகோளம், அரசியல் முதலிய எல்லாப் பாடங்களையுமே கூடிய வரையில் வாய்மொழியாகக் கற்பிக்கவேண்டும். அப்பொழுது பாட விஷயத்தைப்பற்றிக் கேள்விகள் கேட்டும், விடையளிக்கச் செய்தும் பிள்ளைகளைப் பேசப் பழக்கலாம். அவர்கள் பேசும்பொழுது ஏற்படும் பிழைகளை உடனுக்குடனே திருத்தக்கூடாது; பேச்சின் முடிவில் அவைகளை எடுத்துரைப்பது நலம். உடனுக்குடனேயே பிழைகளைச் சுட்டிக்காட்டுவதால், பாலர்களது பேச்சுத் தொடர்ச்சி தடைப்படும்; கூச்சம் அதிகரிக்கும்.

**வாய்மொழிப் பாடத்தில் வாய்மொழிப் பயிற்சிகள்:** பேச்சுப் பயிற்சி பொதுவாக எல்லா வாய்மொழிப் பாடங்களிலும் ஏற்படுதல் கூடுமென்றாலும், பிரதானமாகக் கதை சொல்லல், பாடம் படித்தல், சம்பாஷணை, கதை நடித்தல், அபிநயப் பாட்டு முதலிய பாடங்கள் வாய்மொழிப் பயிற்சிக்கு ஏற்றனவாகும்.

இப் பாடங்கள் பிள்ளைகளின் மன நிலைமைக்கும், வகுப்புக்கும், வயதுக்கும் தக்கவாறு வேறுபடவேண்டும். சாதாரணமாகப் பாடசாலைக்கு வரும் பிள்ளைகளை மூன்று தரமாகப் பிரிக்கலாம்: $5\frac{1}{2}$ முதல் $7\frac{1}{2}$ வயதுள்ளவர்கள், அதாவது I, II வகுப்புக்களில் படிப்பவர்கள்; $7\frac{1}{2}$ முதல் $10\frac{1}{2}$ வயதுள்ளவர்கள், அதாவது III, IV, V வகுப்புக்களில் படிப்பவர்கள்; $10\frac{1}{2}$ முதல் $13\frac{1}{2}$ வயதுள்ள

வர்கள், அதாவது VI, VII, VIII (நடுத்தர) வகுப்புக்களில் படிப்பவர்கள்.

**சம்பாஷணை:** தாய்மொழியில் சம்பாஷணைகள் நடத்துதல் வாய்மொழிப் பயிற்சிக்கு இன்றியமையாதது. இச் சம்பாஷணைகள் பிள்ளைகளது மனப்பான்மைக்குத் தக்கவாறும், அவர்கள் விரும்பும் விஷயங்களைப்பற்றியனவாகவும் இருக்கவேண்டும். அவர்கள் அநுபவத்தில் இல்லாததும், மன நிலைக்கு எட்டாததுமான விஷயங்களைச் சம்பாஷித்தல் பயனளிக்காது. சாதாரணமாகச் சம்பாஷணைகள் நடத்துவதன் நோக்கம் பின்வருமாறு ஆகும்:

1. பேசப் பயிற்சி யளித்தல், 2. பிள்ளைகளின் கருத்துக்களையும் சொல்லறிவையும் விருத்திசெய்தல், 3. யோசனை சக்தியைத் தூண்டுதல், 4. சம்பவங்களைத் தொடர்ந்து நினைக்கச் செய்தல், 5. உற்றுநோக்கும் தன்மை, கவன சக்தி இவற்றைத் தூண்டுதல், 6. கேள்விகளுக்கு நேரான விடையளிக்கச் செய்தல், 7. முழு வாக்கியங்களாகப் பேசப் பழக்குதல், 8. பிள்ளைகளின் கூச்சத்தை நீக்கி, பாடசாலையில் விருப்பமுறச் செய்தல், 9. குழந்தைகளும் ஆசிரியர்களும் ஒருவரோடொருவர் அளவளாவி பரஸ்பர நேசஞ் செய்துகொள்ளுதல்.

**சம்பாஷணைக்குரிய விஷயங்கள்:** சம்பாஷணைக்குரிய விஷயங்களைப் புதிய பாடதிட்டத்தில் வகுப்பு வாரியாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளின் விரிவு பின்வருமாறாகும்:

முதல் இரண்டு வகுப்புக்களில்:

1. பிள்ளைகள்: பெயர், வயது—பெற்றோர், சகோதர சகோதரிகள் — உறவினர் — ஆகாரம் — உடை— விளையாட்டுப் பொருள்கள்.

2. வீடு: தெரு—பெரியது, சிறியது—கூரை ஓடு, திண்ணை—காற்று—ஜன்னல்—கிணறு—சாமான்கள்.

3. குடும்பம்: உறவினர்களும் பெயர்களும்—தோழர்கள்—விளையாட்டுக்கள்—பொம்மைகள்— சமைத்தல் —பெருக்குதல்—தண்ணீர் எடுத்தல்—தொட்டிலாட்டல்.

4. பள்ளிக்கூடம்: கட்டடம் — வகுப்புக்கள் — தோட்டம்—உபாத்தியாயர்கள் — சாமான்கள் — புத்தகங்கள்.

5. பிராணிகள்: ஆடு, மாடு, நாய், பூனை முதலான மிருகங்கள் — கோழி, காகம், குருவி, கிளி முதலான

பறவைகள்—இவற்றின் உருவம், உணவு, வசிக்குமிடம், பழக்கம், உபயோகம் ஆகியவற்றைக் குறித்துச் சம்பாஷிக்கலாம்.

6. நற்பழக்கங்கள் : தினசரிக் கடமைகள்—பெரியோரிடம் நடந்துகொள்ளும் முறை—வந்தனம் கூறுதல்—குறுக்கே பேசாமை—அமைதியாய்ப் பேசுதல்—உடல் சுத்தம்.

7. தொழில்கள்: கொல்லன்—தச்சன்—வண்ணான், குயவன்; இவர்களுடைய வேலை — உபகரணங்கள் — ஆகாரம் — ஜீவனம்.

8. விடுமுறை நாட்கள் : வாரவிடுமுறை, விசேஷ விடுமுறை—அந்நாட்களில் விளையாட்டுக்கள்.

9. பண்டிகைகள் : தீபாவளி, பொங்கல், ஸரஸ்வதி பூஜை—இந் நாட்களில் என்ன செய்கிறோம்.

10. உற்சவங்கள் : கோயில், சுவாமி, தேர்த் திருவிழா, மாரியம்மன் பண்டிகை முதலியன.

11. சிறு சிறு பாட்டுக்கள் மூலமாகவும் வாய்மொழிப்பயிற்சி கொடுக்கலாம். மாணவர்கள் பாடல்களைப் பாராமல் படிக்கவேண்டியிருப்பதால், பதங்களை அடிக்கடி உச்சரிப்பார்கள். இதன் மூலமாகப் பேச்சு திருந்தும்.

12. பெரியவர்களைப்போல நடிக்கச் செய்தல், வீடு வைத்து விளையாடல், பள்ளிக்கூட விளையாட்டு, பொம்மைக் கலியாண விளையாட்டு, இராஜா மந்திரி விளையாட்டு முதலான விளையாட்டுக்களில் குழந்தைகள் தங்களது பேசுந் திறமையையும், நடிப்புத் திறமையையும் வெளிப்படுத்துவார்கள். ஆகவே, வாய்மொழிப் பயிற்சிக்கு நடித்தல் மிகவும் அவசியம். மேல் வகுப்புக்களில் நாடக மேடையையும், காட்சித் திரைகளையும் உபயோகிக்கலாம்.

13. படங்களைப்பற்றிச் சம்பாஷணை நடத்தல் : ஆரம்ப வகுப்புக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் படங்கள் மிக்க வனப்புடையனவாகவும், சில பொருட்களே அடங்கியுள்ளனவாகவும் இருத்தல் நன்று. படத்தில் வர்ணம் தீட்டப்பட்ட பெரிய பொருட்கள் இருக்கவேண்டும். படத்தைப் பார்த்தவுடன், அதிலுள்ள விஷயங்கள் பிள்ளைகளால் சுலபமாக அறிந்துகொள்ளக் கூடியனவாய் இருக்கவேண்டும். படம் பார்த்துப் படிக்கும்போது முதலில் வார்த்தைகளாகவும், பிறகு வாக்கியங்களாகவும், கடைசியில் படத்திலுள்ள விஷயங்களை ஒரு கதையாகவும் சொல்லப் பழக்கலாம். கதை கேட்பதுபோல்

படம் பார்ப்பதிலும் பிள்ளைகளுக்கு அதிக விருப்பம் உண்டு; ஆகையால், வெட்கம், பயம், கூச்சம் இவற்றை நீக்கிப் பேசப் பழக்குவதற்குப் படங்கள் சிறந்த சாதனம் ஆகும்.

III, IV, V வகுப்புக்களில் (முதல் இரண்டு வகுப்புக்களுக்குரிய பயிற்சிகளோடு):

1. ஒரு சிறு நிகழ்ச்சியை முதலும் முடிவும் தெளிவாய்த் தோன்றுமாறும், பொருத்தமற்ற விவரம் பல புகுத்தாமலும் எடுத்துக் கூறுதல்.

2. சம்பாஷணை, நாடகப்பகுதி இவற்றை நடித்தல்.

3. எளிய செய்யுட்களைப் பார்த்துப் படிப்பதும், பாராமல் ஒப்பிப்பதும்.

4. கட்டுரை வேலைக்குப் பூர்வாங்கமாக ஒரு கதை அல்லது நிகழ்ச்சியைப்பற்றிய குறிப்புக்களை நிரல்பட அமைத்தல்.

5. ஒரு கதையின் ஆரம்ப வாக்கியத்தை ஆசிரியர் சொல்ல, பிள்ளைகள் சேர்ந்து ஒவ்வொரு வாக்கியமாகச் சொல்லிக் கதையை முடிக்கலாம். தலைப்புக்கள் கொடுத்து, மாணாக்கர்களின் மனோபாவனைப்படி கதையை விரிவாகச் சொல்லச் செய்யலாம்.

6. செய்தி சொல்லல்: ஒருவர் சொல்லிய செய்தி அல்லது சமாசாரத்தைப் பிறரிடம் போய்த் தெரிவித்தல்.

மாதிரி: இந்தச் செய்தியைப் படித்து, தகப்பனரிடம் சொல்வது போலச் சொல்:

ஊரிலிருந்து மாமா வந்திருக்கிறார். அடுத்த தெருவுக்குப் போயிருந்த தகப்பனரிடம் சொல்லிவிட்டுவர, தாயார் கந்தனை யனுப்பினுள். திரும்பி வரும்பொழுது கடையில் ஒரு படி ரவையும், ஒரு சேர் சர்க்கரையும் வாங்கிவரச் சொன்னுள்.

7. பார்த்ததை விவரித்தலும், செய்ததை விவரித்தலும்.

VI, VII, VIII வகுப்புக்களில்:

1. தனிப் படங்கள், தொடர்ப் படங்கள், பிளான்கள், வரி வடிவங்கள் (Diagrams) இவற்றின் பொருளை உணர்ந்து வாய்மொழியாக விளக்குதல்.

2. ஒரு கதை, சரித்திர வரலாறு, இலக்கியப் பகுதி இவற்றிலிருந்து எடுக்கப்பட்ட தக்கதொரு விஷயத்தை நாடக முறையில் சம்பாஷித்தல்.

3. ஒரு கதை அல்லது நிகழ்ச்சியைச் சந்தர்ப்ப வேறுபாட்டிற்கேற்ப வெவ்வேறு விதமாகச் சொல்லுதல்.

(உ-ம்.) ஒரு மோட்டார் விபத்தை (i) மோட்டார் ஓட்டி சொல்வது போலவும், (ii) போலீஸ்காரன் நீதி ஸ்தலத்தில் தெரிவிப்பதுபோலவும், (iii) மோட்டார் ஓட்டியும் அவன் நண்பனும் உரையாடுவதுபோலவும், (iv) அந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற ஒருவன் தன் நண்பனுக்குக் கடிதம் மூலம் அதனைத் தெரிவிப்பது போலவும் பெயர்த்தமைத்தல்.

படித்த அல்லது கேட்ட கதையைத் திருப்பிச் சொல்லுதல், அல்லது கொடுத்த கதைக்குறிப்புக்களைக் கொண்டு முழுக் கதையைச் சொல்லுதல்.

### கதைகள்

**கதை சொல்லுதல்:** கதை சொல்லுதல், வாய்மொழிப் பயிற்சிக்கு ஓர் அரிய சாதனமாகும். குழந்தைகளுக்குக் கதையிலிருக்கும் விருப்பம் அளவிட முடியாதது. ஆதலால் எந்தப் பாடத்தையும் கதைகள் மூலமாகக் கற்பிப்பது சிறந்த முறையாகும்.

**கதை சொல்லுவதன் நோக்கங்கள்:** 1. பிள்ளைகளுக்கு உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்குவதே கதைப் பாடத்தின் முக்கிய நோக்கமாகும். இதனால் பிள்ளைகளுக்குப் பாடசாலையிலும் படிப்பிலும் ஆசையுண்டாகும்.

2. கதை சொல்லுதல் குழந்தைகளுக்கும் ஆசிரியருக்கும் இடையே நேசப்பான்மை விளைவிக்கும்.

3. கதைகள் குழந்தைகளின் அறிவை வளர்த்து, ஒழுக்கத்தைச் சீர்படுத்தும்; தெய்வ பக்தி உண்டுபண்ணும்; அவர்களது அழகு உணர்ச்சிகளையும் விருப்பங்களையும் (sense of beauty and personal tastes) சீர் செய்யும்.

4. குழந்தைகள் கோர்வையாகப் பேசவும் எழுதவும் பழகுவதற்குக் கதைகள் சிறந்த சாதனங்களாகும்.

5. மாணவர்களின் எண்ணங்களையும், கற்பனை சக்தியையும், ஞாபக சக்தியையும் பெருக்கி வளர்ப்பதற்குக் கதைகள் மிகவும் பயன்படும்.

6. பிள்ளைகளின் ஆச்சரிய அவாவைப் பூர்த்திசெய்யும்; வாழ்க்கையில் ருசியுண்டாக்கும்; நல்ல பொழுது போக்காகும்.

7. புதிய பதங்களைக் கற்பதற்கும், சொல்லறிவை விருத்தி செய்வதற்கும் கதைகள் அனுகூலமாகும்.

8. மனிதர்களிடத்தும், இதர பிராணிகளிடத்தும் அன்பும் அனுதாபமும் கதைகள் மூலம் ஏற்படும்.

9. தாய்பாஷையின்மேல் அபிமானமும், நல்ல பாஷா நடையில் விருப்பமும் உண்டாக்கக் கதைகள் உதவி செய்யும்.

எத்தகைய கதைகள் தெரிந்தெடுக்கவேண்டும்? பாலரது வயதுக்கும், மனோவளர்ச்சிக்கும், வகுப்புக்கும் பொருத்தமான கதைகளைத்தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு வகுப்பிலும் பிரதி வருஷத்திலும்போதிக்கக்கூடியகதைகளின் பெயர்களை எழுதிய ஒரு ஜாபிதா தயாரித்து, வகுப்பறையில் தொங்கவிடுவது நலம். பலவிதக் கதைகளாவன :

(a) குழந்தைகளின் சொந்த அனுபவத்தை ஒட்டிய கதைகள்: [மாதிரி: ஓர் ஆடு வந்தது. குழந்தை கோபு அதைப் பிடித்தான். தங்கை சரசு ஒரு பாத்திரம் எடுத்து வந்தாள். 'சொய் சொய்' என்று பால் கறந்தாள். கோபுவும் சரசுவும் அம்மாவிடம் கொடுத்தார்கள். அம்மா காப்பி போட்டுக் கொடுத்தாள். இருவரும் சந்தோஷமாகச் சாப்பிட்டார்கள்.] ஆரம்பத்தில் இம்மாதிரிக் கதைகள் தான் பிள்ளைகளுக்கு விளங்கும்; உற்சாகமளிக்கும்.

(b) கட்டுக் கதைகள்: பட்சிகள், மிருகங்கள், மரஞ் செடிகள் பேசுவதுபோல் இக் கதைகள் அமைந்திருக்கும். 'ஈசாப் கதைகள்'. 'பஞ்சதந்திரக் கதைகள்' முதலியன இவ்வினத்தைச் சேர்ந்தன. (உ-ம்.) காகமும் நரியும்; ஓநாயும் கொக்கும்.

(c) சொற்கள் திரும்பத் திரும்ப வரும் குழந்தைக் கதைகள் அல்லது சங்கிலித் தொடர் கதைகள்: (உ-ம்.) வால் அறுந்தகுரங்கு. (வாலு போச்சு கத்தி வந்தது டம் டம்); தன்பெயரை மறந்த ஈ (கொழு கொழு கன்றே கன்றின் தாயே).

(d) மாயா விநோதக் கதைகள் (Fairy tales): தேவதைகள் தோன்றிப் பேசுவது போலும், வரங்கள் கொடுப்பது போலும், பூதங்கள் வருவது போலும் இக் கதைகளில் விவரிக்கப்படும். பிள்ளைகள் மனோ ராஜ்ஜியம் செய்வதில் ஆசையுள்ளவர்கள். இந்த ஆசையை இக் கதைகள் பூர்த்தி செய்யும். (உ-ம்.) வனதேவதையும் சின்னப் பெண்ணும்; அலாவுதீனும் அதிசய விளக்கும்.

(e) புராணக் கதைகள்: இராமாயணம், பாரதம், பாகவதம், விவிலியநூல் (பைபிள்), பெரிய புராணம் முதலியவற்றிலுள்ள கதைகள் இவ்வினத்தைச் சாரும்.

(f) நாட்டுக் கதைகள் (Folk tales), சரித்திரக் கதைகள் (Historical tales), வாழ்க்கை வரலாறுகள் (Biographical tales), சுய சரிதைக் கதைகள் (Autobiogra-

phies) : பிள்ளைகள் வீர உணர்ச்சியும், தேசாபிமான மும், வாழ்க்கைக் குறிக்கோள்களும் பெற இக்கதைகள் பெரிதும் உதவும். (உ-ம்.) தேசிங்குராஜன் கதை.

(g) பிறநாட்டுக் கதைகளும் பிரயாணக் கதைகளும்: இக் கதைகள் பூகோள பாடத்துடன் இணைக்கப்படும்.

(h) இயற்கைப் பாடக் கதைகள்.

(i) சாகசக் கதைகள் (Adventure stories) : (உ-ம்.) கலிவர் யாத்திரை ; ராபின்ஸன் குரூஸோ.

(j) ஹாஸ்யக் கதைகள் (Humorous stories) : (உ-ம்.) தெனலிராமன் கதைகள்.

மேலே கூறிய பலவகைக் கதைகளுக்குள் முதல் ஐந்து வகைகளும் ஐந்து வயது முதல் 7 வயது வரையி லான பிள்ளைகளுக்கு (அதாவது முதல் மூன்று வகுப் புக்களுக்கு) ஏற்றவை. மற்றவை பெரும்பாலும் மேல் வகுப்புப் பிள்ளைகளுக்குப் பொருத்தமாகும். கீழ் வகுப் புக்கான கதைகள் பொதுவாக ஆடல் பாடல்கள் நிறைந்து, நடிக்கக்கூடியனவாக இருக்கவேண்டும். நீண்ட கதைகளும், அச்ச மூண்டாக்கும் திருடர் கதை கள், பூதக் கதைகள், காட்டு மிருகக் கதைகள் முதலிய வற்றையும் இவ்வகுப்புக்களில் அறவே விலக்கவேண்டும்.

கதை சொல்லுவதெப்படி? : 1. ஒரு கதையைப் படிப் பதை விடச் சொல்லுவதுதான் நல்லது. புத்தகத்தி னின்று கதையைப் படிப்பது கவனக்குறைவையும் ஆர்வ மின்மையும் உண்டாக்கும். குழந்தைகளின் முகத்தைப் பார்த்து ஜீவனுடனும் உற்சாகத்துடனும் வாய் மொழியாகக் கதைகளைச் சொல்வதுதான் தக்க பயனை யளிக்கும்.

2. கதையைப் புத்தகத்திலுள்ளபடி ஒப்பிப்பது போல் படித்துச் சொல்லுவது தகுதியன்று; கூடியவரை யில் ஆசிரியர் சொந்த பாஷையிலேயே சொன்னால்தான் இயற்கையாகப் பேசுவது போலச் சொல்லமுடியும். பிள்ளைகளுக்கு ஏற்கனவே தெரிந்துள்ள சொற்களைக் கொண்டே கீழ் வகுப்புக்களில் கதை சொல்வது நல்லது.

3. சாதாரண விஷயங்களைச் சொல்லும்போது நிதானமாகவும், அருமையான செயல்கள், நூதன விஷ யங்கள் அடங்கிய பகுதியைச் சொல்லும்போது மிகுந்த உற்சாகத்துடனும், அபிநயத்துடனும், துரிதமாகவோ நிதானமாகவோ சந்தர்ப்பத்திற்கேற்றவாறு குரலைத் தாழ்த்தியும் உயர்த்தியும் வருணிக்கவேண்டும். அதா

வது, விஷயத்திற்குத் தகுந்தபடி தொனியை மாற்றிக் கொள்ளவேண்டும்.

4. கதை சொல்லும்பொழுதே, அதிலுள்ள நீதியையோ, முக்கிய கருத்தையோ குழந்தைகளை அறிந்து கொள்ளும்படி செய்யலாம். நீதியை வெளிப்படையாகக் கதை முடிவில் எடுத்துக் கூறுவது கூடாது.

5. கதையிலுள்ள சம்பவங்கள் ஒரு நாடகம்போல் குழந்தைகளின் மனக்கண்முன் தோன்றும்படி வர்ணிக்கவேண்டும்.

**கதை சொல்லும் ஆசிரியரின் இலட்சணங்கள் :—**

1. கதை சொல்லும் ஆசிரியர் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் இருப்பது அவசியம். ஆசிரியர் பிள்ளைகளோடு பிள்ளையாயிருந்து தம்மை மறந்து கதை சொன்னால் தான் உற்சாகம் ஏற்படும்.

2. சொல்லப்போகும் கதை ஆசிரியருக்கு நன்றாகத் தெரிந்திருக்கவேண்டும். அதன் உட்கருத்துக்களையும் அமைப்பையும் ரஸித்து உணர்ந்திருக்கவேண்டும். விஷயம் தெரிந்திருந்தால் இயல்பாகப் பேசமுடியும். அதாவது, ஆசிரியர் பாடம் தொடங்குமுன் கதையை நன்றாகப் படித்து, அதனைச் சொல்லும் முறையைப் பற்றியும் நன்கு ஆலோசிக்கவேண்டும்.

3. சிறந்த கற்பனை சக்தியும், வர்ணிக்கும் திறமையும் பொருந்திய ஆசிரியர்தான் கதை சொல்ல முன்வரலாம். வர்ணிக்கப்படும் காட்சி பிள்ளைகள் மனத்தில் உண்மையானதுபோலத் தோன்றி, ஆசையையும் உற்சாகத்தையும், வியப்பையும் கொடுத்து, அவர்களுடைய மனோ பாவனையை விருத்தி செய்யக் கூடியதாயிருக்க வேண்டும். இவ்விதத் திறமை பழக்கத்தால்தான் ஏற்படும்.

4. ஆசிரியர் எல்லாப் பிள்ளைகளையும் பார்த்து, இனிய தெளிவான குரலில் சொல்லவேண்டும். சில பிள்ளைகளிடம்மாத்திரம் கவனம் செலுத்திச் சொல்வதால், மற்ற பிள்ளைகளுக்கு உற்சாகம் குன்றிவிடும். ஆசிரியர்கூறுவது குழந்தைகளுக்கு விளங்கினால், அவர்கள் கண்களும் முகமும் ஒளிபெற்று விளங்கும். உபாத்தியாயரின் திறமையும் அப்போது நன்கு புலனாகும்.

5. கதைப் பாடம் வெற்றி பெறுவதற்கு ஆசிரியர் நடிப்புத்திறன் பொருந்தியவராயிருத்தல் அவசியம். கதையின் பல அம்சங்களையும் முகக் குறிகளாலும், சைகைகளாலும், விளக்கிக் காட்டல் வேண்டும்.

6. அவசியமான பாகங்களை விளக்கக்கூடிய படங்கள் வரையும் திறமையும் ஆசிரியருக்கு இருக்க வேண்டும்.

**மாணவர் கதை சொல்வதும் நடிப்பதும்:** பிறர் சொல்லக்கேட்ட கதைகளையும் அல்லது புத்தகங்களில் படித்த கதைகளையும் பிள்ளைகள் தங்கள் சொந்தப் பேச்சில் திரும்பச் சொல்வதால் சிறந்த வாய்மொழிப் பயிற்சி ஏற்படும். அவர்கள் அவ்வாறு செய்ய ஏராளமான சந்தர்ப்பங்கள் அளிக்கவேண்டும். பிரதி வாரமும் கதை சொல்வதற்கென்று மூன்று பீரியடுகள் (periods) கால அட்டவணையில் ஒதுக்கிவைக்கலாம்.

ஒவ்வொரு பிள்ளையும் வகுப்புமுன் வந்து தனித் தனியாகக் கதையைத் திரும்பச் சொல்லலாம்; அல்லது கதையை ஒவ்வொரு பகுதியாகப் பலர் தொடர்ந்து சொல்லலாம். ஆரம்பத்தில் உபாத்தியாயர் சொல்லிய சொற்களை உபயோகித்து பிள்ளைகள் கதை சொல்லலாம்; ஆனால், நாளடைவில் தங்கள் சுயப் பேச்சில் சொல்லத் திறமை பெறவேண்டும். சைகைகளை உபயோகித்து நடித்தும் காட்டவேண்டும்.

வகுப்பிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் காதில் விழும்படி உரக்கப் பேசவேண்டும். உரக்கச் சத்தமிட்டுச் சொல்வது மட்டும் போதாது; உச்சரிப்புகள் தெளிவாகவும் திருத்தமாகவும் இருக்கவேண்டும். அவர்கள் கதையை நன்றாய் அறிந்து, அதன் சாரத்தை அநுபவித்து, கேட்போர் ரஸிக்கும்படி சொல்லவேண்டும். ஏற்படும் பிழைகளைப் பிற பிள்ளைகளைக் கண்டுபிடிக்கச் செய்து அவர்கள் மூலம் கதை சொல்லி முடிந்த பின்னரே திருத்தவேண்டும். இடையிடையே குற்றங் கண்டு பிடிப்பது பிள்ளைகள் தொடர்ந்து யோசிப்பதைக் கத்தரித்துவிடும்.

**கதை சொல்லுதலும், கண்-கைப்பயிற்சிப் பாடங்களும், கைத்தொழிற் பாடங்களும்:** படித்த கதையைச் திரும்பச் சொல்வதோடு அதன் கருத்துக்களை அவை சம்பந்தமான சித்திரங்கள் வரைவதாலும், கைத்தொழிற் பாடங்களில் உருவங்கள் தயாரிப்பதாலும் வெளியிடப் பயிற்சிக்கவேண்டும். இவ்விதஞ் செய்வதால் கதைகள் அவர்கள் மனத்தில் நன்கு பதியும்; குழந்தைகளின் மனோபாவனையும் விருத்தியடையும்.

**கதை நடித்தல்:** வாய்மொழிப் பயிற்சியில் கதைகளை நாடகமாக நடித்தல் ஒரு சிறந்த முறையாகும். தாங்கள் கேட்ட கதைகளைத் தொடர்ச்சியாகத் திரும்பச் சொல்வதைவிட அக் கதைகளை நாடகமாக நடிப்பதுதான் பிள்ளைகளுக்கு அதிக ஆனந்தத்தைக் கொடுக்கும். கதைகளை நடிக்குமாறு விடும்பொழுதுதான் பிள்ளைகளின் உணர்ச்சிகள் வெளித்தோன்றும்; அவர்கள் புதிய சொற்களையும் வாக்கியங்களையும் தாமாகவே அமைத்துப் பேசத் தூண்டப்படுவார்கள். நடிக்குங் காலத்தில் மாணவர்கள் பூரண மனோ சக்தியை உபயோகித்துக் குரல் மாற்றம், உரிய சைகை இவற்றைக் கைக்கொள்வார்கள். அவ்வாறு செய்வதில் ஆசிரியர் அவ்வப்போது அவர்களுக்கு உதவி செய்யலாம்.

எல்லாக் கதைகளும் நடிக்கத்தக்கனவாக இருக்க மாட்டா. நடித்தற்குரிய சம்பவங்கள் நிறைந்த கதைகளை இரண்டு மூன்று காட்சிகளாக வகுத்து, நாடகமாக உபாத்தியாயர் அமைத்துக் கொடுக்கவேண்டும். சமயோசிதப்படி இடையிடையே பாடல்களையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆசிரியர் பிள்ளைகளை நோக்கி கதைகளை நடிப்பதில் எவரெவர் எந்தெந்த பாத்திரங்களாக நடிக்க விரும்புகிறார் என்று கேட்டு, அவர்கள் விருப்பப்படி தெரிந்தெடுக்கவேண்டும். இந் நடிப்புக்களில், அதிக அழகையும் ஆடம்பரங்களையும், பகட்டான உடைகளையும் உபாத்தியாயர் எதிர்பார்க்கலாகாது. பிள்ளைகளின் மனப்போக்கை ஒட்டி நடிக்கச்செய்வதே கீழ் வகுப்புக்களில் முக்கியமாகும்.

பாடசாலையின் வருஷாந்தரக் கொண்டாட்டம், பெற்றோர் தினம் முதலிய விசேஷ நாட்களில் சிறந்த நாடகப் பகுதிகளை உரிய உடைகளுடன் சிறுவர்கள் நடிக்கலாம். இந் நாடகங்கள் அவர்களுக்கு உற்சாக மூட்டும்; பெற்றோருக்கும் பாடசாலையில் ஊக்கம் உண்டாக்கும்.

**பாலர் பாட்டுக்களும் விளையாட்டுக்களும்:** வாய்மொழிப் பயிற்சிக்குப் பாலர் பாட்டுக்களும் விளையாடல்களுங் கூடப் பெரிதும் உதவி புரிகின்றன. இப்பாடல்களிலுள்ள சொற்களின் ஓசை, பாடலின் இனிமை, வசீகரமான மனப்படங்கள் முதலியன பிள்ளைகளுக்கு ஆனந்தத்தையும் உல்லாசத்தையும் அளிக்கும். இவற்றின்மூலம் புதிய சொற்களையும் புதிய கருத்துக்களையும்

அறிவார்கள். மேல் வகுப்புக்களில் ராக உணர்ச்சியும், சங்கீத உணர்ச்சியும் பெறுவார்கள்.

பாலர் பாடல்களையும் அபிநயப் பாட்டுக்களையும் உரிய ஜ்சைகளுடனும் குரல் மாறுதலுடனும் பாராமல் சொல்லப் பழக்கவேண்டும். பிள்ளைகள் ஒருமிக்கச் சேர்ந்தும் சில பாடல்களைப் பாடலாம். வீடுகளில் தாய்மார்கள் பாடும் குழந்தைப் பாட்டுக்கள், தாலாட்டுகள், விடுகதைகள், கிராமங்களில் வழங்கும் நொண்டிச்சிந்து, கும்மி, கோலாட்டம், அம்மானை, குறத்திப்பாட்டு, பள்ளுப் பாட்டு முதலிய நாட்டுப் பாடல்களையும் வகுப்புக்குத் தக்கவாறு பொறுக்கி ஆசிரியர் எழுதி வைக்க வேண்டும்.

**தமிழ் கற்பிப்பதில் படங்களின் உபயோகம்:** படங்கள் வாய்மொழிப் பயிற்சிக்குத் துணையாயிருக்கின்றன என்று முன்னமே (28-ம் பக்கத்தில்) சொல்லப்பட்டிருக்கிறது. படங்களைப் பார்த்து மகிழ்வதில்பாலர்க்கு அவா அதிகம். போதனை சுவை பெறவும் படங்கள் பெரிதும் உதவுகின்றன. மேலும் படங்களின் உபயோகங்கள் பின்வருவனவாகும்.

1. படங்கள் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியளித்து, வாசிப்பிலும் பள்ளிக்கூடத்திலும் ஆசை எழுப்புகின்றன.

2. (a) படங்களைப்பற்றிச் சம்பாஷித்தல், (b) படங்கள்மூலம் கதைகளை விளக்குதல், (c) படங்கள் மூலம் வாசிப்புக் கற்பித்தல், (d) சொல்லகராதியை அதிகப்படுத்தல், (e படங்களை வருணித்துக் கட்டுரை எழுதுதல், (f) படங்களைக் கொண்டு கடின பதங்களையும், பாட விஷயங்களையும் விளக்குதல் எனப் பலவகைகளில் தமிழ்ப் போதனையில் படங்கள் சாதகமாயிருக்கின்றன.

3. படங்கள் மூலம் உற்று நோக்குந் திறமை, கற்பனை சக்தி ஓவியக் கலையில் ஊக்கம், அழகு உணர்ச்சி இவை ஏற்படும்.

4. படங்கள், விஷயங்களை மனத்தில் நன்கு பதியச் செய்யும்.

**பலவகைப் படங்கள்:** இக் காலத்தில் வர்ணமிட்ட படங்களும், வர்ணமிடாத படங்களும் ஏராளமாக அச்சிடப்பட்டு மலிவாகக் கிடைக்கின்றன,

**1. பாடப் புத்தகங்கள்:** பாடப் புத்தகங்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், சிறு குழந்தைகளுக்கென்றே தயாரித்துப் பிரசுரிக்கப்பட்டுள்ள படப் புத்த

கங்களை (Picture books) வாங்கிக் கொடுத்து அவைகளைப்பார்த்து மகிழச்செய்வதால் பாலர்க்கு வாசிப்பில் ருசியுண்டாக்கலாம். இப் படப் புத்தகங்கள் பாட புத்தகங்களுக்கு பூர்வ பீடிகையாகும்.

2. **படங்களும் சொற்களும் அச்சிட்ட அட்டைகள்:** (Flash cards, Picture cards) புது முறைப்படி வாசிக்கக் கற்பிப்பதில் இவை பெரிதும் பயன்படுகின்றன.

3. **பாட புத்தகப் படங்கள்:** பாட புத்தகங்களில் பல நேர்த்தியான படங்கள் இக்காலத்தில் சேர்க்கப்படுகின்றன. அப்படங்களைப் பிள்ளைகள் பார்த்துக்கொண்டிருப்பது வீண் பொழுது போக்கு என்று ஆசிரியர் சிலர் கருதுகின்றனர். அது தவறான எண்ணம். அப்படங்களைப்பற்றிச் சம்பாஷித்து, பாடத்துக்குப் பூர்வ பீடிகையாக அவைகளை உபயோகிக்கலாம். பாடத்தில் வரும் விஷயங்களையும், கடின பதங்களையும் விளக்க அவை உதவும். மேலும், இப்படங்கள் படித்த விஷயங்களை மனத்தில் நன்கு பதியச்செய்யும்.

4. **பெரிய இயற்கைப் பொருட் படங்கள், கதைப் படங்கள், தொழில் முறை விளக்கப் படங்கள்:** இவைகள் தனியாக அச்சிடப்பட்டுக் கிடைக்கின்றன. இவைகளை வாய்மொழிக் கட்டுரைப் பாடங்களில் உபயோகிக்கலாம்.

5. **பிரசுரப் படங்கள்:** இவ்விதப் படங்கள் ரயில்வே ஸ்டேஷன், ஸினிமாக் கொட்டகை, கடைவீதி முதலிய இடங்களில் ஒட்டப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அவைகளைக் கவனிக்கவும், அச்சிட்டுள்ள விஷயங்களைப் படித்துவரவும் பிள்ளைகளைத் தூண்ட வேண்டும்.

6. **பத்திரிகைப் படங்கள்:** பத்திரிகைகளில் வரும் படங்களைக் கத்தரித்துப் படநோட்டுப் (Album) புத்தகங்களின் ஒட்டிச் சேகரித்து வைக்கலாம்.

7. **ஓவியச் சிறப்பு வாய்ந்த படங்கள்:** இவைகளில் ரவிவர்மா படங்கள் முதன்மைபெற்றன. இவைகள் புராணக் கதைகளை விளக்கவும், தெய்வபக்தி யூட்டவும், அழகுணர்ச்சி எழுப்பவும் பெரிதும் பயன்படும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் மேற்கூறிய பலவகைப் படங்களும் இருப்பது நலம். இவைகளைத் தொங்கவிடுவது பாடசாலைக்கு அலங்காரமுமாகும். அதிக உயரத்தில் இராமல், வகுப்பறையில் தொங்கவிடும் படங்களைப் பிள்ளைகள் பார்த்துப் படிக்கக்கூடிய உயரத்தில்

தொங்கவிடவேண்டும். வாரத்துக்கு வாரம் படங்களை இடமாற்றித் தொங்கவிடுவது நலம். அப்பொழுதுதான் அவைகளைப் பிள்ளைகள் கூர்ந்து கவனிப்பார்கள்.

**பிள்ளைகள் பேச்சில் சாதாரணமாகக் காணப்படும் குறைகள்:** தெளிவின்றி ஒலிகளை இசைத்தல், பிழையான உச்சரிப்பு, திக்கித் திக்கிப் பேசுதல், ஒரு வார்த்தை அல்லது வாக்கியத்தின் கடைசி பாகத்தை விழுங்குதல், அவசரமாய்ப் பேசுதல், தாமதமான பேச்சு, சொற் பிழைகள், கொச்சைப் பேச்சு, சிற்சில இடங்களில் மட்டும் வழங்கும் சொற்களை உபயோகித்தல் ஆகிய இவை சாதாரணமாகப் பேசுவதில் காணப்படும் சில குறைகளாம்.

தங்களுடன் பேசுகிறவர்கள் எப்படிப் பேசுகிறார்களோ அவ்வண்ணமே குழந்தைகள் பேசுவதால் மேற்கூறப்பட்ட குறைகள் ஏற்படுகின்றன. மேலும் குழந்தையின் தேக சௌக்கியக் குறைவும் இக் குறைகளுக்குக் காரணமாவதுண்டு. பலவீனமான குழந்தைகளுக்கும், மூக்கில் சதை வளர்ந்துள்ள பிள்ளைகளுக்கும் சரிவரப் பேசுவது கஷ்டமாயிருக்கும். சரியானபடி மூக்கினல் சுவாசிக்காவிடினும், பேச்சுத் தடை ஏற்படலாம். பிள்ளைகள் பயந்த சுபாவமுடையவர்களா யிருந்தாலும் அவர்கள் தெற்றியும், திருத்தமில்லாமலும் பேசக்கூடும். நரம்புப் பிசகினாலும் திருத்தமற்ற பேச்சு ஏற்படலாம்.

**மேற் சொல்லப்பட்ட குறைகளை நீக்கும் வழிகள்:**

1. ஆசிரியர் தம் பேச்சு பிழையில்லாமலும் தெளிவாகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

2. தேக அசௌக்கியம் காரணமாகச் சரியாகப் பேசாத சிறுவர்களுக்கு, பெற்றோர்களின் ஒத்துழைப்பைப் பெற்று வைத்திய சிகிச்சை செய்யலாம். மூக்கின் சதை வளர்ச்சியை டாக்டரைக்கொண்டு எடுத்துவிடலாம். நரம்புத் தளர்ச்சிக்கு 'டானிக்' மருந்துகள் வாங்கிக் கொடுக்கலாம்.

3. பேச்சுக் குறைகளுக்குப் பரிகார அப்பியாசங்கள் அளித்து, அவைகளைத் திருத்த முயற்சி செய்யலாம். பேச்சுத் திருத்தமில்லாத குழந்தைகளுக்குக் கை வேலை போன்ற வேறு வேலைகள் கொடுத்து, தம் திறமையை வெளிப்படுத்தும்படி தூண்டலாம். அப்போது அவர்கள், தங்களுக்குச் சரியாகப் பேச முடியவில்லையென்று மனத்தளர்ச்சி யடையமாட்டார்கள். தவிர,

இவ்விதக் குழந்தைகளுக்குப் பேசும் பழக்கம் தனிமையில் கொடுக்கவேண்டும்.

4. திக்கித் திக்கிப் பேசுதலைச் சுவாச அப்பியாசம் கொடுப்பதால் நிவர்த்திக்கலாம். திக்கிப் பேசுகிறவர்களுக்குத் தனி ஆதரவு அளித்து, தைரிய மூட்டவேண்டும். அவர்கள் விடையை நன்ருக யோசித்த பிறகே பதிலளிக்கச் செய்யவேண்டும்.

5. பிழை செய்யும் பிள்ளையைச் சுட்டிக் காட்டி ஏளனஞ் செய்து திருத்துவது கூடாது. பொதுவாக எல்லாக் குழந்தைகளையும் பார்த்துத் திருத்தல் வேண்டும். அப்படிச் செய்தும் சில பிழைகள் நீங்காமல் தோன்றினுல், ஆசிரியர் அந்தக் குழந்தையைத் தனியான நேரத்தில் தனியாக அழைத்துத் திருத்தலாம்.

6. அடிக்கடி சிறு சிறு பாட்டுக்கள் பாடச் செய்வதனுலும் உச்சரிப்புத் திருந்தும். உதாரணமாக, குழந்தைகளுக்கு "க", "ங" என்னும் எழுத்துக்கள் உச்சரிப்பதற்கு வருவதில்லை. அதனுல்,

"சங்குச் சக்கர சாமி வந்து
சிங்கு சிங்கென ஆடிற்றும்
சிங்கு சிங்கென ஆடிற்றும்—அது
சிங்கு சிங்கென ஆடிற்றும்."

இதுபோன்ற சிறு பாட்டுக்கள் கற்பித்துப் பாடச்செய்தால் அவ்வெழுத்துக்களை உச்சரிப்பதற்குக் கற்றுக் கொள்வார்கள்.

7. சுவாசப் பயிற்சி அப்பியாசங்கள் சில நிமிஷ நேரம் தினந்தோறும் ஒன்றிரண்டு தடவைகள் கொடுக்கலாம்.

8. உச்சரிக்கக் கடினமான ல, ழ, ள, ர, ற முதலான எழுத்துக்களில் அடிக்கடி அப்பியாசம் கொடுக்கலாம். நாக்குத் திருந்துவதற்கான பயிற்சி வாக்கியங்களைப் (Tongue twisters) பன்முறை வாசித்து ஒப்பிக்கச்செய்யலாம். (உ-ம்.) 1. பரிசல் ஏறி ஆற்றைக் கடந்தோம். 2. ஆற்றில் வெள்ளம் அதிகம். 3. ஆழமான கிணற்றில் தண்ணீர் எடுத்தார்கள். 4. மலைமேல் மழை பெய்தது. 5. விளாம்பழம் பள்ளத்தில் விழுந்தது. 6. தாழை வாழை ஓலை நிழல். 7. கண்ணன் தின்னும் பண்டம் வெண்ணெய். 8. ஆண்டி ஒருவன் தோண்டி வாங்கினுன் 9. அவள் அவல் தின்ருள்.

இவை போன்ற வாக்கியங்களை ஆசிரியர் தேர்ந்தெடுத்து அப்பியாசமாகக் கொடுக்கலாம்.

### பயிற்சி வினாக்கள்

1. திருத்தப் பேச்சின் முக்கிய அம்சங்கள் 6 கூறவும்.

2. (i) "ஆரம்ப வகுப்புக்களில் ஆடல் பாடல்கள் ஒரு பாடமாகும்." இது சரியா? காரணத்துடன் விளக்குக.

(ii) "எழுதப்படிக்கக் கற்பிப்பதே மொழிப் பயிற்சியின் நோக்கம்" இதில் குறை யாது?

(iii) தாய்மொழிப் போதனையில் பிரதானமாக ——, ——, ——, ——, —— முதலிய பாடங்கள் பேச்சுப் பயிற்சிக்கு ஏற்றனவாகும். கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.

3. 7 வயது வரையிலான பிள்ளைகள் எவ்விதக் கதைகளை விரும்புவார்கள்?

4. இரண்டாவது வகுப்புக்கு ஒரு வருஷத்தில் கற்பிக்கக்கூடிய 12 கதைகளின் பெயர்களை எழுதுக.

5. படப் புத்தகங்களையும், வாசக புத்தகத்திலுள்ள படங்களையும் எவ்வாறு தமிழ்ப்போதனையில் பயன்படுத்துவீர்?

6. பின்வரும் விஷயங்களைப்பற்றிப் பிள்ளைகளுடன் சம்பாஷிக்க தனித்தனி 10 கேள்விகள் குறிக்கவும்.

i. பெற்றோர், சகோதர சகோதரிகள், ii. ஒரு வீடு கட்டுமிடத்தில் பார்த்தவை, iii. தேர்த்திருவிழா, iv. தீபாவளிப் பண்டிகை, v. மோட்டார் வண்டி கன்றுக்குட்டிமேல் ஏறியது.

7. ல, ழ, ள, ர, ற இவைகளின் உச்சரிப்பு வித்தியாசத்தை எவ்வாறு விளக்குவீர்?

7. பேச்சில் பிள்ளைகளிடம் காணப்படும் A. திக்கல், B. கூச்சம், C. கொச்சைச் சொற்கள்—இவைகளை நிவர்த்திக்க என்ன செய்வீர்?

---

## 5. வாசிப்பு

தாய்மொழிப் போதனையில் பேசப் பயிற்சி, படிக்கப்பயிற்சி, எழுதப் பயிற்சி என்ற மூப் பயிற்சிகள் அவசியமென்று படித்தோம். அவற்றுள் இதுகாறும் பேசப் பயிற்சியைப்பற்றி விரிவாக ஆராய்ந்தோம். இப்பொழுது இரண்டாவது திறமையாகிய வாசிப்பு அல்லது படித்தலைப்பற்றிக் கவனிப்போம்.

கல்விக்கெல்லாம் மூலகாரணம் வாசிப்பே. மற்ற பாடங்களைச் சரியாக கற்கவேண்டின், அதற்கு வாசிப்பு இன்றியமையாத சாதனமாக இருக்கிறது. வாசிப்பில் சரியானபடி தேர்ச்சி ஏற்படாவிடில், மற்ற பாடங்களைக் கற்பது இயலாது. ஆதலால், மொழிப்பயிற்சியில் முக்கியமான பகுதி வாசிப்பு. அதுபற்றி, கல்வித் திட்டத்தில் வாசிப்பு முக்கியஸ்தானம் பெற்று, கால அட்டவணையில் அதிக நேரம் இதற்கு ஒதுக்கிவைக்கப்படுகிறது.

கையெழுத்து அல்லது அச்சிலிருக்கும் கருத்தை உணர்வது வாசிப்பு எனப்படும். படித்தலில் (1) சொற்

களின் உச்சரிப்பு, (2) சொற்களின் பொருள் அறிதல் என இரு பகுதிகள் உண்டு.

வாசிப்பு என்பது பல உடலுறுப்புக்கள் செய்யும் தொழில்களின் சேர்க்கை. கண்கள் எழுத்துக்களைப் பார்க்கின்றன. மனம் அவைகளை அறிகிறது; கருத்தை உணர்கிறது. உதடு, நாவு, தொண்டையிலுள்ள குரல் உறுப்புக்கள் வேலைசெய்வதால் அவ் எழுத்துக்களின் உச்சரிப்பு ஏற்படுகிறது. ஆதலால் கண்கள், உச்சரிப்பு (குரல்) உறுப்புக்கள், மனது இம்மூன்றும் ஒரே சமயத்தில் ஒத்துழைப்பதால் வாசிப்பு ஏற்படுகிறது.

**படிக்கும் பழக்கம் ஏற்படுத்தல்:** படிக்கும் திறமையையும் பழக்கத்தையும் முதல் வகுப்பு முதல் எல்லா வகுப்புக்களிலும் பிள்ளைகளிடம் உண்டுபண்ணுவது முக்கியமாகும். ஆதலால், இவற்றை யளிப்பதற்கான போதனு முறைகள் பிள்ளைகளின் வாழ்க்கை அநுபவங்கள், வயது, மனநிலைமை, படிக்கும் வகுப்பு இவற்றிற்குத் தக்கவாறு மாறுபடும்.

பாலர்களுக்கு வாசிப்புப் பயிற்சி எந்த வயது முதல் ஆரம்பிக்கலாமென்பது ஒரு பிரச்னையாகும். படிப்பதை அறிவதற்கும், படிப்பில் ருசி உண்டாவதற்கும் வாசிப்புப் பயிற்சி ஆரம்பிக்குமுன்னர் ஓரளவு அநுபவங்களும், அவைகளைப்பற்றிய சொற்களும் பாலர்களுக்குத் தெரிந்திருப்பது அவசியமாகும். பிறந்தது முதல் வீட்டிலேயே பல அநுபவங்களும், பேச்சுப் பழக்கமும், சுமார் 300 சொற்களின் அறிவும் சாதாரணமாக 5 வயதுக்குள் பாலர்கள் பெற்றிருப்பார்கள். ஆதலால் 5 முதல் 6 வயதுப் பருவமே படிப்பு ஆரம்பிக்கக்கூடிய காலம் என்று கல்வி ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள். மேலும் பாடசாலையில் சேர்ந்த முதல் இரண்டொரு மாதங்கள்வரை பிள்ளைகளுக்குப் பேச்சுப் பயிற்சி அளித்த பிறகே வாசிப்புத் தொடங்குவது வழக்கம்.

**வாசிப்பில் ஆசை ஊட்டக்கூடிய சாதனங்கள்:** குழந்தைகளுக்கு வாசிக்கக் கற்பிப்பதற்குமுன், வாசிக்க வேண்டுமென்ற ஆவல் அவர்கள் மனத்தில உதிக்கும்படி செய்யவேண்டும். பிள்ளைகள் வாசிக்கப்போகும் விஷயம் அவர்களுடைய அனுபவத்தை யொட்டியதாயிருக்க வேண்டும். புத்தகங்களிலிருந்து அடிக்கடி கதைகள் வாசித்துக் கேட்ட குழந்தைகளுக்கு அக் கதைகளைத் தாமே வாசிக்கவேண்டுமென்ற அவா ஏற்படுவது இயல்பு. ஆகவே,

(1) அடிக்கடி கதைகள் புத்தகத்தினின்று படிப்பதால் இவ் விருப்பம் ஏற்படும்.

(2) படங்களைப் பார்ப்பதில் எல்லாப் பிள்ளைகளுக்கும் விருப்பம் உண்டு. அப் படங்களின் கீழ் அவற்றை விளக்கும் பதங்களேனும் வாக்கியங்களேனும் எழுதிவைத்திருந்தால், அவைகளைப் படிக்க ஆசை கொள்வார்கள். வாசிப்பு ஆரம்பிப்பதற்குப் பூர்வ பீடிகையாக, குழந்தைகளுக்கென்று தயாரித்து அச்சிட்டுள்ள படப் புத்தகங்களை வாங்கிக் கொடுத்து, அவற்றிலுள்ள படங்களைப்பற்றிப் பேசச் செய்யலாம்.

(3) வகுப்பறையில் பிள்ளைகள் செய்யவேண்டிய செயல்களுக்குக் கட்டளைகள் எழுதித் தொங்கவிடலாம். (உ-ம்.) கதவை மூடு. காலைத் துடைத்தபின் உள்ளேவா. ஜன்னல் கதவைத் திற. இடத்தில் போய்உட்கார்.

கட்டளைப்படி பிள்ளைகள் செய்யத் தவறினால், அவற்றை உரக்க வாசிக்கச் செய்து, கட்டளைப்படி நடக்கத் தூண்டலாம்.

(4) பாடசாலையிலுள்ள பொருள்களின் பெயர்களைப் பெரிய எழுத்தில் அட்டைகளில் எழுதி, அப்பொருள்களின் மீது தொங்கவிடலாம். பொருள்களைப் பார்க்கும் பொழுது அவற்றின் பிரதிநிதியாகிய சொற்களையும் அறிவார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | சன்னல் | கதவு | தென்னைமரம் | வாழைமரம் |

(5) பாப்பா பாட்டுக்களின் முதலடியையேனும், முழுப் பாட்டையேனும், அவரவர்கள் திறமைக்கேற்றபடி வாசிக்கத் தூண்டலாம்.

(6) பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், விலைப் பட்டியிலுள்ள (Price list) பெயர்கள் முதலியவற்றை வாசிக்கத் தூண்டலாம். அவற்றில் கூறப்படும் விஷயங்களை ஆசிரியர் விளக்கிக் காட்டினால், அவ்விஷயங்களைத் தாமாகவே வாசிக்கவேண்டுமென்ற அவா ஏற்படும். மேலும், நகரங்களில் தெருக்களின் பெயர் எழுதியிருப்பதைப் படித்து வரச் செய்யலாம்.

(7) ஒரு கதையின் பாதி பாகத்தைச் சொல்லி, மற்ற பாதியை வாசிக்கும்படி தூண்டவேண்டும்.

(8) பள்ளிக்கூட விளம்பரப் பலகையில் சில விஷயங்கள் எழுதி வாசிக்கச் செய்யலாம். (உ-ம்.) நாளை தீபாவளிப் பண்டிகை பள்ளிக்கூடம் இல்லை.

ஒரு வாரத்திற்கு ஒரு பழமொழியாக விளம்பரப் பலகையில் எழுதிப்போட்டால், பிள்ளைகள் மாறிமாறி வரும் வாக்கியங்களுக்காக ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள்.

முதல் வகுப்புக்கான வாசிப்புத்திட்டம்: துரைத்தனத்தார் புதிதாக வெளியிட்டுள்ள பாட திட்டத்தில் இத் திட்டம் பின்வருமாறு ஆகும்:—

"இப் பருவத்தில் வாசிப்பு எல்லாம் பெரும்பாலும் வாய்விட்டுப் படிப்பதாகவே இருக்கும். அன்றியும், குழந்தைகள் முன்னமே அறிந்துள்ளவையும், தம் பேச்சில் ஆண்டுவருவனவுமான சொற்களை வரிவடிவிலும் தெரிந்துகொண்டு, வாய்விட்டு உரக்கப்படிக்க மட்டும் கற்பிக்கவேண்டும். முதல் வகுப்பின் முடிவில், சாதாரண சக்தியுள்ள பிள்ளையும் அப்படிப்பட்ட சொற்களில் சுமார் 300-ஐயும், அவற்றாலாகும் சிறுசிறு வாக்கியங்களையும், படங்கள், மின்னட்டைகளைப் (Flash cards) பார்த்துப் படிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்."

முதல் வகுப்பில் வாசிப்புக் கற்பிக்கும் முறைகள்

எழுத்து முறை (Alphabetic Method) : இதுவே புராதன முறை. இதன்படி எழுத்துக்கள் முழுவதையும் ஒருசேரக் கற்பித்த பின்னரே, பதங்களை எழுத்துக் கூட்டி உச்சரிக்கச் செய்துவந்தனர். முதன் முதலில் ஈரெழுத்துச் சொற்களையும், மூவெழுத்துச் சொற்களையும், பிறகு கடினமான பதங்களையும், வாக்கியங்களையும் வாசிக்கப் பழக்குவதே இம்முறையின் மற்றும் ஓர் இலட்சணம்.

எழுத்து முறையின் அநுகூலங்கள் :

1. தமிழில் ஒவ்வோர் எழுத்துக்கு ஒரே ஒலியும், ஒவ்வோர் ஒலிக்கு ஒரே எழுத்தும் இருப்பதால் இம்முறை சுலபமானது. எந்த ஆசிரியரும் இதைச் சுலபமாகக் கையாளலாம்.

2. எழுத்தின் சரியான உச்சரிப்பைப் பிள்ளைகள் தெரிந்துகொள்வதால், எழுத்துப் பிழையில்லாமல் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வார்கள்.

எழுத்து முறையின் பிரதிகூலங்கள் :

1. தமிழில் 247 எழுத்துக்கள் இருப்பதால், முதல் இரண்டு வருஷங்களை எழுத்துக்கள் படிப்பதிலேயே செலவிட நேரிடும். ஆகையால், படிக்கப் பழகுவதற்கு அதிகக் காலம் பிடிக்கும்.

2. வெறும் எழுத்துக்களைக் குருட்டுப் பாடமாகக் கற்பதால், குழந்தைகளுக்குப் படிப்பில் அலுப்பும் அருவருப்பும் உண்டாகும்; கற்க அவா இராது.

3. 'தெரிந்ததைக்கொண்டு தெரியாததைக் கற்பித்தல்' என்ற முறைக்கு இந்த முறை முற்றும் மாறாக இருக்கிறது.

4. வார்த்தை, எழுத்து, உச்சரிப்பு இம்மூன்றையும் ஒரே சமயத்தில் கற்கவேண்டியிருப்பதால், குழந்தைகளுக்குக் கடினமாயிருக்கும்.

5. குழந்தைகளின் பார்வை உணர்ச்சியைக் கவனிக்கும்பொழுது, பொதுவாக வார்த்தைகளையாவது, பொருள்களையாவது முதலில் கவனிக்கிறார்கள். பிறகுதான் வார்த்தைகளின் பாகங்களாகிய எழுத்துக்களைக் கவனிக்கிறார்கள். ஆகையால் பதங்களைக் கற்பிக்காமல் எழுத்துக்களைக் கற்பித்தல், அனுபவ முறைக்கும் பாலர்களின் இயற்கைக் குணங்களுக்கும் விரோதமாகும்.

6. எழுத்துக் கூட்டி வாசிப்பதிலேயே தங்கள் கவனத்தைச் செலவிடுவதால், கருத்தை உணராமல் வாசிக்கக்கூடும். இதனால் வாசிப்பின் நோக்கமும் கைகூடாமற் போகிறது.

முழுச் சொற்களாகப் படிக்கும் முறை: பேசுவதில் எழுத்து எழுத்தாகப் பேசுவதில்லை; சொற்களாகவே பேசுகிறோம். மேலும், ஆதியின் மனிதன் மொழியைக் கற்றதும் முழுச் சொற்கள் மூலமாகவேதான். பொருள்களின் பெயர்களை முழுச் சொற்களாகவே வெளியிட்டான். வளரும் குழந்தையும் அதே வழியைப் பின்பற்றுவது இயற்கையாகும். ஆதலால் பொருள்கள் அல்லது படங்கள் மூலமாக வார்த்தைகளை அறிமுகஞ் செய்து எழுத்துக் கூட்டாமல் முழுச் சொற்களாக முதலில் படிக்கச் செய்து பின்பு அச்சொற்களிலுள்ள எழுத்துக்களைக் கற்பிப்பது ஒரு சிறந்த முறையாகும். பிள்ளைகள் முழுப் பதத்தின் வடிவத்தையும், உச்சரிப்பையும், கருத்தையும் தெரிந்துகொள்ள இம் முறை சாதகமாகிறது. இப்புதிய முறையில் (குருட்டுத் தனமாக இல்லாமல்) சொற்களின் பொருளை யறிந்து படிக்கப் பழகுவதால், பிள்ளைகளுக்குப் படிப்பில் உற்சாகம் ஏற்படும்; வாசிப்பும் சீக்கிரத்தில் வரும். இம் முறையில் பிள்ளைகளுக்கு ஏற்கனவே தெரிந்து தினசரிப் பழக்கத்திலுள்ள வார்த்தைகளையே ஆரம்பத்தில் போதிக்கவேண்டும். எழுத்

துக் கூட்டாமல் முழுச் சொற்களைப் பார்த்ததுமே படிப்பதால் இம்முறைக்குப் பார்த்துச் சொல்லும் முறை (Look and Say Method) என்றும் பெயருண்டு.

ஒரு பொருளின் சித்திரத்தைப் போல, ஒரு பதம் அல்லது சொல் என்பது ஒலித் திரளின் படமாகும். உதாரணமாக, பசு என்பதைப் போதிப்பதாக வைத்துக் கொள்வோம். பசுவைக் காட்டியும், படத்தைக் காட்டியும், படத்தின் அடியில் எழுதியுள்ள 'பசு' என்னும் சொல்லை வாசிக்கச் செய்யவேண்டும். பின்பு படமில்லாமலே பசு என்னும் சொல்லைக் கண்டறிந்து படிக்கப் பழக்கவேண்டும். பின்னர் பசு என்ற சொல்லை ப, சு முதலிய எழுத்துக்களாகப் பிரித்து, அவ் எழுத்துக்களை உச்சரிக்கவும், எழுதவும், கொட்டைகள், குச்சிகள் மூலமாக அமைக்கவும் போதிக்கவேண்டும். பிறகு இதே பதங்கள் வேறு இடங்களில் வரும்பொழுது எழுத்துக் கூட்டாமல், அச் சொற்களை உருவத்தால் அறிந்து பாலர்கள் கூறவேண்டும். இம் முறையை அனுசரித்தே நவீன பால சிட்சைகள் பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளன.

இம்முறையின் பிரதிகூலங்களும் அவற்றை நீக்கும் முறைகளும்: 1. குருட்டுப்பாடமாக வாசிக்க நேரிடும். அதாவது, பாடத்திலுள்ள பதங்களின் வரிசைக் கிரமத்தை அறிந்துகொண்டு, பதங்களைப்பாராமலேயே பாராமல் படிக்கும் தன்மை ஏற்பட்டுவிடும். ஆனால் ஆசிரியர் அடிக்கடி பதங்களின் வரிசைக்கிரமத்தை மாற்றி கரும்பலகையில் எழுதிப்படிக்கச் செய்வதால் இந்தக் குறை நிவர்த்தியாகும்.

2. ஒரேவிதமான வார்த்தைகள் வரும்பொழுது ஒன்றுக்கொன்று மாற்றி வாசிக்கநேரிடும். (உ - ம்.) கட்டம், பட்டம், கட்டடம், தட்டம் முதலியன. இவ்விதம் ஒரே சந்தத்துடன் கூடிய பதங்கள் கற்பிப்பதை விட்டு, வீடு, பசு, கட்டம், காற்றாடி—என வார்த்தைகள் கொடுத்தால் பிள்ளைகள் சுலபமாகத் தெரிந்துகொள்வார்கள்.

3. இம் முறையில் வாசிப்புக் கற்பிப்பதால் எழுதுவதில் எழுத்துப் பிழைகள் ஏற்படுமென்று சிலர் ஆட்சேபனை சொல்லலாம். ஆனால் பிள்ளைகள் சொற்களைச் சரிவர உச்சரிக்கப் பழகுவதாலும், பன்முறை எழுதுவதாலும், உற்று நோக்குவதாலும் இக் குறை நீங்கிவிடும்.

4. வாசிப்பு விருத்தியாகுமேயன்றி எழுதக் கற்றுக் கொள்வது அசாத்தியமென்று இம் முறையைக்

முறை கூறலாம். ஆனால், பிள்ளைகள் வாசிக்கக் கற்ற பின்னரே எழுத்து அப்பியாசம் கொடுப்பது நலம். புதிய பாட திட்டத்தின்படி பிள்ளைகள் முதல் வகுப்பிலிருந்து இரண்டாவது வகுப்புக்கு மாற்றப்படும்போது அவர்களுக்கு 300 பதங்கள் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் எல்லாப் பதங்களையும் எழுதவேண்டுமென்ற அவசியமில்லை. மேலும், எழுத்துக்களை அகராதி வரிசையில் கற்கவேண்டுமென்றோ, தமிழ் மொழியிலுள்ள எல்லா எழுத்துக்களையும் கற்க வேண்டுமென்றோ இத் திட்டத்தில் நிபந்தனையில்லை.

**வாக்கிய முறை:** வாசிப்பில் மிகப் புதிய முறை வாக்கிய முறை (Sentence method) ஆகும். சிறு வாக்கியங்களை முதலில் வாசிக்கப் பழக்கி, பிறகு அவ் வாக்கியங்களிலுள்ள சொற்களையும் எழுத்துக்களையும் கற்பிப்பது இம் முறையாகும். நாம் பேசும்பொழுது பல சொற்கள் சேர்ந்த வாக்கியங்களாகவே பேசுகிறோம். வாக்கியம் ஒரு முழுக் கருத்தைத் தெரிவிப்பதால் அதுவே பாஷையின் முக்கிய உறுப்பாகும். குழந்தைகளும் அவ்வாறே வாக்கியங்களாகக் கருத்தைத் தெரிவிக்கிறார்கள். ஆதலால், இம் முறை குழந்தைகளின் இயற்கைக்கு ஏற்ற முறையாகும்; பொருள் விளங்கும் வாக்கியங்களாகப் படிப்பதால் பிள்ளைகளுக்குப் படிப்பில் உற்சாகமும் ஆசையும் உண்டாகும்.



(உ-ம்.)

**பையன் ஊஞ்சல் ஆடுகிறான்**

| ஊஞ்சல் |
|---|

ஊ | ஞ் | ச | ல்

இம் முறைப்படி வாசிப்புக்கற்பிக்கும் விதம்: பிள்ளைகளின் அநுபவத்திலுள்ள ஒரு நிகழ்ச்சியைப்பற்றிய வாக்கியங்கள், நேரில் பார்க்கும் பொருள் அல்லது படத்தைப்பற்றிய வாக்கியங்கள், செவியுற்ற கதையில் ருசிகரமான வாக்கியங்கள் இவைகளில் ஏதாவதொன்றை வருவித்து, கற்பலகையில் அல்லது அட்டைகளில் பெரிய எழுத்துக்களில் எழுதி வைக்கவேண்டும். அவைகளை முழு வாக்கியங்களாகப் படிக்கச்செய்யவேண்டும். பிறகு அவ் வாக்கியங்களிலுள்ள சொற்களை அறியவும், சொற்களிலுள்ள தனித்தனி எழுத்துக்களை உச்சரிக்கவும், அறியவும், எழுதவும் கற்பிக்கலாம்.

இம் முறையில் முழு வாக்கியங்கள் பார்த்ததுமே படிக்கப்படுவதால், இதுவும் பார்த்துப் படிக்கும் முறையைச் சேர்ந்ததே. இம் முறை ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றும். பல சொற்களைத் தொடர்ந்து பிள்ளைகள் உச்சரிப்பதும், ஏககாலத்தில் ஒரு வாக்கியத்திலுள்ள பல சொற்களை வித்தியாசப்படுத்தி அறிவதும் குழந்தைகளுக்குச் சிரமமான காரியம். ஆதலால், எழுத்து முறைக்கும் வாக்கிய முறைக்கும் இடையிலுள்ள முழுச் சொற்களாகப் படிக்கும் முறையே பெரும்பாலும் இப்பொழுது கையாளப்படுகிறது.

மேற்கூறிய மூன்று முறைகளைத் தவிர, சுய முயற்சி முறை, கதா வாசக முறை, விளையாட்டு முறை, வர்தா முறை இவைகளைப்பற்றி ஏற்கனவே முன்னொரு பகுதியில் படித்திருக்கிறோம்.

தனிப்பட்ட ஒரு முறையையே முற்றிலும்பின்பற்றுவது அதிகப் பயன் தராது. ஆசிரியர் எல்லா முறைகளின் சாராம்சங்களையும் அறிந்து அவைகளைச் சமயோசிதமாகக் கலந்து பின்பற்றுவதே அதிக நன்மை பயக்கும்.

சரியான பாலசிட்சைப் புத்தகங்கள் தேர்ந்தெடுப்பதில் கவனிக்க வேண்டியன: 1. 'படங்கள் மூலம் முழுச் சொற்களாகப் பார்த்துப்படிக்கும் முறை' என்ற நவீன முறையில் எழுதப்பட்டுப் பாலர்களின் சுயமுயற்சிக்கான பயிற்சிகள் அடங்கிய பாலசிட்சையே சிறந்ததாகும். 2. 'அகர முதல் எழுத்தெல்லாம்' என்று திருவள்ளுவர் கூறியபடி, அ, ஆ........முதலிய அரிச்சுவடி வரிசையில் எழுத்துக்களும் சொற்களும் அடங்கிய பாலசிட்சை ஒரு வகையாகும். உச்சரிப்பதற்குச் சுலபமாகிய ஒலி முறையைப் பின்பற்றியவை இவ்வகைப் பாலசிட்சைகள்.

ஆனல் தற்காலத்தில், எழுதுவதற்குச் சுலபமான ட, ப, ம முதலிய எழுத்துக்கள் முதலில் ஆரம்பிக்கப்பட்டு, எழுதுவதற்குக்கடினமான அ, இமுதலியஎழுத்துக்களைப் பின்பு கூறும் பாலசிட்சைகள் மற்றொரு வகையாகும். இம்முறைப் பிரகாரம் குழந்தைகள் எழுதவும் படிக்கவும் சீக்கிரத்தில் கற்றுக்கொள்கிறார்களென்பது பலரது அபிப்பிராயம். 3. பாலரது அனுபவத்தில் வந்தனவும், அவர்களது சுற்றுப்புறத்தைப்பற்றியவுமான விஷயங்களை புத்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கவேண்டும். 4. பாலரது பேச்சுப் பழக்கத்திலுள்ளவும், அவர்களுக்கு இலகுவில் புரியக்கூடியவுமான சொற்களைத் தவிர, கடின பதங்கள் பாலசிட்சையில் இருக்கக்கூடாது. 5. ஒவ்வொரு பாடத்திலும இரண்டொரு புதிய சொற்களும், எழுத்துக்களுமே இருக்கவேண்டும். அப்புதிய சொற்களும், எழுத்துக்களும் சிவப்பு மையினல் அச்சிடப்பட்டிருப்பது நலம். 6. குழந்தைகளின் மனத்தைக் கவரக்கூடிய படங்கள் பல இருக்கவேண்டும். 7. தடித்த காகிதத்தில் பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்கவேண்டும். 8. எளிதில கிழியாத அட்டையுடன் உறுதியான கட்டுள்ளதாக இருக்கவேண்டும்.

## 1939-ல் துரைத்தனத்தார் வெளியிட்டுள்ள பாடதிட்டப் படி இரண்டாம் வகுப்புக்கான வாசிப்புத் திட்டம்.

வாசிப்பு :—(1) பாட புத்தகத்தையும், சொல்லட்டை வாக்கிய அட்டைகளையும் பார்த்துப் படித்தல், 400 புதிய சொற்களைக் கற்றல்.

(2) மௌன வாசிப்பு :—மௌன வாசிப்புக்கும் உரக்க வாசிப்புக்கும் சதவீதம் 40-60 ஆக இருக்கவேண்டும்.

இதில் அடங்குபவை :—(i) மின்னட்டைகளில் எழுதியுள்ள கட்டளைகளும் கற்பனைகளும். பிற பாடங்கள், கைவேலைகள் பள்ளியிற் செய்து முடிக்க மாணவர் தாமே குறித்து மேற்கொண்ட காரியங்கள் (projects) என்பனவற்றைப் பற்றிய உத்தரவுகளைப் படித்து அவற்றிற்கேற்ப நடத்தல், (ii) சிறு நாடகங்களையும் சம்பாஷணைகளையும் நடிக்கப் பழகுமுன் மௌனமாய் வாசித்தல்

## மூன்றும் வகுப்புக்கான வாசிப்புத் திட்டம்.

வாசித்தல் :—(i) பிள்ளைகள் சொற்களஞ்சியத்தில் சுமார் 500 புதுச் சொற்களைச் சேர்த்தற்பொருட்டுப் பாட புத்தகங்களை அல்லது தேர்ந்தெடுத்த பிற பகுதிகளைப் படித்தல்.

(ii) மௌன வாசிப்பு :—இதன் தகவுப் பொருத்தம் 40-லிருந்து 60 ஆக உயரவேண்டும். மௌன வாசிப்பின் விரைவை அதி

கப் படுத்துவதிலும், உச்சரிப்புக்கான அசைவைக் குறைத்த லிலும் சிறப்பாகக் கவனஞ் செலுத்தவேண்டும். அவ்வாறே வாக்கியத் தொடர்களின் முக்கியக் கருத்தை எடுத்துக்காட்டு வதிலும், படித்த கதைகளின் சாரத்தைச் சுருக்கிக் கூறுவதி லும் மாணவர்க்குப் போதிய பழக்கந் தந்து, பொருளறியும் திறமையை வளர்க்கவேண்டும்.

**II, III வகுப்புகளுக்கான புத்தகங்கள்:—** இவ் வகுப்புகளில் பாலர்களைத் தடுமாற்றமின்றி வாசிக்கப் பழக்குவதே முக்கிய நோக்கமாகும். ஆதலால் பொருள் விளங்காத அரும் பதங்களை முற்றிலும் விலக்கி, அவர்க ளது தினசரிப் பேச்சிலும் அனுபவத்திலும் விரவி வரும் சொற்களையும் விஷயங்களையும் கொண்ட பாடங் களே இவ்வகுப்புப் புத்தகங்களில் இருக்கவேண்டும். மாணவர்களின் மனப்பான்மைக் கேற்றனவாய் உற்சா கத்தைத் தரவல்ல குழந்தைப் பாட்டுகள், கதைகள், சம் பாஷணைகள், படங்கள்—இவைகள் அமைந்த புத்தகங் களே இவ் வகுப்புக்களுக்கு ஏற்றனவாகும்.

## நான்காம் வகுப்புக்கான வாசிப்புத் திட்டம்

**வாசித்தல்:—**(i) தினசரிப் பழக்கத்தில் இல்லாவிடினும் பொருள் தெரிவதற்கான கலைச் சொற்களின் தொகையையும், புதிய கருத்துக் களையும் அதிகப்படுத்துதல்.

(ii) நூல் நிலையப் புத்தகப் படிப்பு வாயிலாக, மௌன வாசிப் பின் விரிவையும் பொருளுணர் திறமையையும் அதிகப்படுத்துவதற் காக, குறிப்பிட்ட பயிற்சியும் பழக்கமும் தரல். படிப்பில் உதட்டசை வை மிகவும் குறைத்தலும், வாய்விட்டு வாசித்தலை அறவே நீக்கலும் மௌன வாசிப்பை இவ் வகுப்பில் நடத்துதலின் குறிக்கோளாகும்.

வசனப் பகுதிகளையும், நன்கு தேர்ந்தெடுத்த எளிய செய்யுள் களையும் ஊன்றிப் படித்து, அதனால் பொதுவாகவும், பிற பாடங்க ளின் சார்பாகவும் பிள்ளைகள் உபயோகிக்கும் சொற்களின் தொகை யை அதிகப்படுத்துதல். சுமார் 700 புதிய வார்த்தைகள் கற்பிக்க வேண்டும்.

## ஐந்தாம் வகுப்புக்கான வாசிப்புத் திட்டம்

வாசிப்பு :— மௌன வாசிப்பு—(i) இதில் சற்றேறத்தாழப் பெரிய வர்களைப்போலவே சிறிதும் சத்தம் செய்யாமலும், உதட்டை அசைக் காமலும் படிக்கும் பழக்கம் ஏற்படவேண்டும்.

(ii) இதற்குள் புத்தகங்களைப் படிப்பதில் ருசியும் உற்சாக மும் உண்டாகும்படி அவ்வளவு படிக்கவேண்டும்.

(2) (i) மாணவர் சொற்களஞ்சியத்தில் இன்னும் சுமார் 800 சொற்களைச் சேர்க்கவும்.

(ii) தக்க உயர்தர வசனத்தையும் செய்யுளையும் அவர்கள் அறியுமாறு வேண்டி, நல்ல வசனப் பகுதிகளையும் செய்யுள்களையும் விவரமாய்க் கற்பித்தல்.

**IV, V வகுப்புகளுக்கான புத்தகங்கள் :—** இவ் வகுப்புப் பிள்ளைகள், உள்ளமும் உலக அறிவும் ஓரளவு வளர்ந்து வலுமை பெற்றிருப்பார்கள். மேலும், தட்டின்றி வேகமாய்ப் படிக்கவும் கீழ் வகுப்பில் பழகியிருப்பார்கள். ஆதலால், அவர்களது சுற்றுப்புற அநுபவத்திற்கு அதிகப்பட்ட பிறநாட்டு விஷயங்களையும், தினசரிப் பேச்சில் வந்திராத புதிய பதங்களையும் இவ் வகுப்புப் புத்தகங்கள் உணர்த்தவேண்டும். சுவையறிந்து உரக்கப் படிப்பதுடன் மௌன வாசிப்பின்மூலம், தொடர்ச்சியான கதைகள் அடங்கிய கதைப் புத்தகங்கள், கையெழுத்துப் பிரதிகள், பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள்,—இவைகளை வாசித்தல் முதலான பயிற்சிகள் அளிக்கவேண்டும்.

## ஆறும் வகுப்புக்கான வாசிப்புத் திட்டம்

[குறிப்பு :—VI, VII, VIII வகுப்புக்களுக்கான திட்டம் செகண்டரி கிரேடு போதனாப் பயிற்சி பெறுவோர்க்கு மட்டுமே]

**வாசக பாடம் (ஆழ்ந்த படிப்பு) :** கீழ்க் குறித்தவற்றிலிருந்து தேர்ந்தெடுத்தவை—(1) (i) நூலின் பெருமையை ஓரளவும், படிப்போர் உள்ளத்தில் உயர்ந்த உணர்ச்சிகளை எழுப்பும் வன்மையை முக்கியமாகவும் கவனித்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட கற்பனை மலிந்த இலக்கியங்கள்.

(ii) உண்மையாய் நேர்ந்த அநுபவக் குறிப்புகள்; மக்கள் செய்து முடித்த அரிய காரியங்கள்; அவர்கள் வாழ்க்கை முறை, உள்ள பொருள்கள், பல மக்கள் இவற்றை உண்மையில் உள்ளபடியே எடுத்துரைக்கும் நூல்கள்.

(iii) இயற்கை நூல்கள் (பஞ்ச தந்திரத்திற் காணும் பிராணிக் கதைகள் முதலியவை)

(2) (i) கதைப் பாடல்கள் [உ-ம். தேசிங்கு ராஜன் கதை, அல்லி யரசாணி மாலை.]

(ii) இலகுவான இன்னிசைப் பாடல்கள்.

(iii) சிறு நாடகங்கள் அல்லது நாடக ரூபத்தில் அமைக்கப்பட்ட கதைகள் என்னும் இவற்றின் தொகுதிகள்.

**மௌன வாசிப்புக்குரியவை :—**வீரம், துணிகரம், ஆச்சரியம் இவைபற்றிய கதைகள், கற்பனைக் கதை, கர்ண பரம்பரைக் கதை இவைகளடங்கிய நூல்கள்.

## ஏழாம் வகுப்புக்கான வாசிப்புத் திட்டம்

**வாசிப்பு** (ஆழ்ந்த படிப்பு) : I (i) ஆறும் வகுப்பிற் போலக் கற்பனை இலக்கியங்களிலிருந்து எடுக்கும் திரட்டுகள்.

(ii) வாழ்க்கை வரலாறு, யாத்திரை, இயற்கை வளம் காண்பதற்குச் செய்யும் பிரயாணம், இயற்கை வரலாறு (Natural history) இவற்றிலிருந்து எடுக்கும் திரட்டுகள்.

**II** (i) கதைப் பாட்டும் இன்னிசைப் பாட்டும் (**lyrical verse**) கலந்த தொகை நூல் திரட்டுகள்.

(ii) உரை நடையிலுள்ள சிறு நாடகங்கள், பண்டைப்பெரு நாடகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற களங்கள் (Scenes)

மௌன வாசிப்பு :—வீரக் கதைகள் துணிகரச் செய்கைகளும் அற்புதங்களும் விவரிக்கப்படும் கற்பனைக் கதைகள், கர்ண பரம்பரைக் கதைகள், நீண்ட கதைச் செய்யுட்கள்.

## எட்டாம் வகுப்புக்கான வாசிப்புத் திட்டம்

வாசித்தல் (ஆழ்ந்த படிப்பு) : அடியிற்கண்டவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவை :—

(i) கற்பனை இலக்கியம்

(ii) நாட்டு வரலாறு, வாழ்க்கை வரலாறு, யாத்திரை, அறிவியலாராய்ச்சியில் கண்டுபிடிக்கும் புதுமைகள் (Scientific discoveries).

(iii) கட்டுரைகளும் விஷயச் சுருக்கங்களும் இவற்றோடு சமாசாரப் பத்திரிகைகளினின்றும், மாதாந்தரப் பத்திரிகைகளினின்றும் ஆசிரியர்கள் தேர்ந்தெடுத்த சிறிய கட்டுரைகளையும் பயன் படுத்தலாம்.

(2) (i) கதைப் பாட்டும், இன்னிசைப் பாட்டும்.

(ii) முதல்தர (அல்லது பண்டைய) நாடகங்களும், சிறிய வசன நடை நாடகங்களும்.

மௌன வாசிப்பு :— நவீனங்களும் சாகசக் கதைகளும் (Novels and stories of adventure) ; சிறு கதைகள் ; வியாசங்கள்; ஆழ்ந்த கருத்துடையனவும் நகைச்சுவை பொருந்தியனவுமான சுருக்க வருணனைகள் ; பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் படிக்கப் பழகுதல்.

**VI, VII, VIII வகுப்புகளில் வாசிப்பின் நோக்கம்:** இவ் வகுப்புகளில் வாசிக்கக் கற்பித்தல் பிரதான நோக்கமன்று. மூந்திய வகுப்புகளில் இப் பழக்கம் ஒருவாறு ஏற்பட்டுவிட்டது. மென்மேலும் வாசிக்க அவா எழுப்புவதும், எந்த முறையில் படித்தறியவேண்டுமென்று உணர்த்துவதும் இவ் வகுப்புக்களில் வாசிப்புப் போதனையின் முக்கிய நோக்கம் ஆகும். நூல் நிலையப் புத்தகங்களைப் படிக்கப் பழக்கவும் வேண்டும்.

ஓய்வு நேரங்களில் வாசித்து இன்புறவும், பல விஷயங்களையும் படித்து அறிவை விருத்தி செய்துகொள்ளவும், மொழிப் பயிற்சியினால் பாஷாஞானத்தைப் பெருக்கவும், புத்தகங்கள் ஏற்ற கருவிகளாக உபயோகிக்கப் படவேண்டும். தமிழ் மொழியிலுள்ள இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் சம்பந்தமான முக்கிய நூல்களின் சொற்சுவை, பொருட் சுவை முதலிய இலக்கியங்களை ரஸித்துப் படிக்கச் செய்வதுடன், தமிழகப் பற்றையும் தாய்மொழிப் பற்றையும் வளர்க்கவேண்டும்.

## வாசிப்புப் பயிற்சிக்கான உபகரணங்கள் தயாரித்தல்

1. **படங்களும் சொற்களும் உள்ள அட்டைகள்:**— வீட்டு உறவினர், வீட்டுப் பிராணிகள், பட்சிகள், விளையாட்டுச் சாமான்கள், உடலுறுப்புக்கள், மரஞ்செடிகள், வீட்டுப் பொருள்கள், பள்ளிக்கூடப் பொருள்கள், வண்டி வகைகள் இவைகளைப்பற்றி பாலர்களுக்குத் தெரிந்துள்ள 50 சொற்களைத் தேர்ந்தெடுத்து, அவை ஒவ்வொன்றையும் விளக்குவதற்கான படங்களைத் தனித்தனி வரைந்து வைக்கவும். ஒவ்வொரு படத்தின் கீழும் அதன் பெயரைப் பெரிய எழுத்துக்களில் எழுதி, ஒரு செட்டு (Set) தயாரித்து வைக்கலாம். மேலும், படங்கள் இல்லாமல் சொற்கள் மட்டும் எழுதிய அட்டைகளும் தயாரித்து வைத்துக்கொள்ளவேண்டும். பாலசிட்சைப் புத்தகம் ஆரம்பிப்பதற்குமுன் ஒரு மாத காலம் இவ் அட்டைகளைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து, படத்தையும் வார்த்தையையும் சம்பந்தப்படுத்தி, முதலில் வார்த்தையைப் படிக்கச் செய்தும், பின்பு வார்த்தையை மாத்திரம் ஞாபகப்படுத்திப் படிக்குமாறும் பழக்கவேண்டும்.

மாதிரி :



அணில்

(படமும் சொல்லும் எழுதிய அட்டை)

**அணில்**

(சொல் மட்டும் எழுதிய அட்டை)

2. **படங்களையும் பெயர்களையும் இணைத்தல்:** படங்களும் பெயர்களும் தனித்தனியாக எழுதிய அட்டைகளைத் தயாரித்துப் பிள்ளைகளுக்குக் கொடுத்து, ஒரு படத்துக்குப் பொருத்தமான பெயரைப் பொறுக்கி, படத்தையும் சொல்லையும் சேர்ந்தாற்போல் இணைத்து வைக்கச் சொல்லலாம்.

3. விலாசச் சீட்டுகள் : பிள்ளைகளின் பெயர்களைத் துண்டுக் காகிதங்களில் தனித் தனியாக எழுதி, அவர்களைக் கொண்டே அந்தத் துண்டுகளை உரியவரிடம் கொடுக்கச் செய்தல். இது தபால்காரன் விளையாட்டு ஆகும்.

4. வாக்கிய அட்டைகள்: வாக்கிய முறைப்படி படிக்கப் படங்களும் வாக்கியங்களும் அட்டைகளில் எழுதி வைத்தல்.

மாதிரி :



இவள் சமைக்கிறாள்.

இவள் ராட்டை சுற்றுகிறாள்.

இவன் கூடை முடைகிறான்.

5. கட்டளைக் கார்டுகள்: பிள்ளைகள் செய்யக்கூடிய சிறிய காரியங்களைக் கரும்பலகையில் அல்லது தனி அட்டைகளில் பெரிய எழுத்துக்களில் எழுதி, அக்காரியங்களைச் செய்யச் சொல்லலாம்.

மாதிரி :

| எழுந்திரு | உட்கார் |
|---|---|

| வலது புறம் திரும்பு |
|---|

| நேரே திரும்பு |
|---|

இக் கட்டளைகளைத் தனி அட்டைகளில் எழுதி, மின்னட்டைகளைப் (Flash cards) போல் ஒவ்வொன்றாகக் காட்டும்பொழுது, அதில் எழுதியபடி பிள்ளைகள் செய்ய வேண்டும்.

6. வகுப்பறையிலுள்ள பொருள்கள், பாடசாலையிலுள்ள மரஞ் செடிகள் முதலியவற்றின் பெயர்களைப் பெரிய எழுத்தில் அட்டைகளில் எழுதி, அவற்றில் தொங்கவிட்டு வைக்கலாம்; பொருள்களைப் பார்க்கும்பொழுது, அவற்றின் பிரதிநிதியாகிய சொற்களையும் படிக்கப் பழகுவார்கள்.

மாதிரி :

| சன்னல் | மேசை | வாழைமரம் |
|---|---|---|

7. விளம்பரப் பலகை (Notice Board) : அடிக்கடி விளம்பரப் பலகையில் சிலவற்றை எழுதி, அவற்றைப் படிக்கச் செய்யலாம்.

மாதிரி :

| நாளை ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடம் இல்லை |
|---|

8. கதைப் படங்கள் : ஒரு வருஷத்தில் வகுப்பில் கற்பிக்கக் கூடிய கதைப் படங்கள் 15 தயாரித்து வைக்கலாம். ஒவ்வொரு கதைக்கும் 3 அல்லது 4 பகுதிகளான விளக்கப் படங்கள் இருக்கவேண்டும்.

9. **வாசிப்புத் தாள்கள் (Reading Sheets):** ஒரு படத்தை அல்லது கதையைப்பற்றிய பல சொற்கள் அல்லது வாக்கியங்களைப் பெரிய காகிதங்களில் கொட்டை எழுத்துக்களில் எழுதித் தொங்கவிட்டு வைக்கலாம். அவைகளைப் பாலசிட்சைப் புத்தகங்களுக்குப் பதிலாக வாசிக்க உபயோகிக்கலாம்.

10. **தேதிப் பெட்டி:** சொற்களும் படங்களும் எழுதிய காகிதச்சுருளைத் தேதிப் பெட்டிபோல அமைத்து வைக்கலாம். கைப்பிடியைத் திருப்புவதால் ஒவ்வொரு படமும் சொல்லும் பிள்ளைகளுக்குத் தோன்றுமாறு செய்து படிக்கச்செய்யலாம்.

## படிக்கும் திறமை

படித்தல் வெறும் வாய் உச்சரிப்பு மட்டுமன்று; மனம் சிந்தித்தலும் அதோடு கூடவே சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆதலால், படித்தலில் உரக்கப் படித்தல், மௌனமாகப் படித்தல் என இருவகை யுண்டு. இவ்விரண்டுவித வாசிப்பும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளனவே. என்றாலும், இவைகளுக்குத் தனித்தனி நோக்கங்கள் உண்டு; தனித் தனிப் பயிற்சிகள் தேவை; கையாளவேண்டிய முறைகளும் தனித்தனியாகும்.

உரக்கப் படித்தல்: முன்னமேயே விளக்கியவாறு படித்தலில் 1. எழுத்துக்களையும் சொற்களையும் அறிதல், 2. அவைகளை உச்சரித்தல், 3. அவைகளில் அடங்கிய கருத்தை உணர்தல் என்ற மூன்று அம்சங்கள் அடங்கியுள்ளன.

உரக்கப் படித்தலினால் ஏற்படும் நன்மைகள்: 1. உரக்கப் படிக்கும்பொழுதுதான் தடுமாற்றமின்றி வேகமாகப் படிப்பதைச் சோதிக்க முடியும்; உச்சரிப்புப் பிழைகளைத் திருத்துதல் கூடும். 2. புதிய சொற்களும் கடினபதங்களும் கண்ணால் பார்ப்பதுடன், உரக்கப் படிக்கும் பொழுது காதினாலும் கேட்கப்படுவதால் மனத்தில் நன்றாகப் பதியும். 3. தான் படிப்பதின் அனுபவத்தைப் இலக்கியப் பகுதிகளைப் பிறரும் ரசித்துணர உரக்கப் படித்தல் அவசியமாகிறது. 4. விளம்பரங்கள், சமாசாரங்கள் முதலியவற்றைப் பலருக்கும் அறிவிக்க உரக்கப் படித்தலே தேவையாகிறது. 5. பேசுவதில் நல்ல குரல் அமைப்பு வாழ்க்கைக்கு மூலதனம் போலாகும்; தெளிவான உச்சரிப்பும், இனிமையான குரல் அமைப்பும் அடிக்கடி உரக்க வாசிப்பதால்தான் ஏற்படுதல் கூடும்.

இக்காரணங்கள்பற்றி ஆரம்ப வகுப்புக்களில் வாய் விட்டு வாசித்தலே பெரும்பாலும் நடைபெறவேண்டும். மேல் வகுப்புக்களில்கூட உரக்கப் படித்தல் ஓரளவு கவனம் பெறுவது அவசியமாகும்.

நல்ல வாசிப்பின் இலட்சணங்கள் : வார்த்தை வார்த்தையாக வாசிக்காமல், சொற்றொடர்களும் வாக்கியங்களுமாகவே வாசிக்கப் பழக்கவேண்டும். ஆரம்ப வகுப்புக்களில் எழுத்துக்களின் திருத்தமான உச்சரிப்பைப் பற்றிக் கவனஞ்செலுத்துதல் அவசியமாகும். குழந்தைகள் சிற்சில எழுத்துக்களை உச்சரிக்க இடர் படும்பொழுது, ஒவ்வொன்றையும் உச்சரித்தற்கு நா, உதடு, வாய், பல் ஆகிய இவை நிற்கும் நிலையை ஆசிரியர் காட்டிச் சொல்லலாம். பிரதானமாக ந, ன, ண; ர, ற; ழ, ள, ல, வடமொழி எழுத்துக்களாகிய ஜ, ஷ, ஸ, ஹ; இவைகளின் சரியான உச்சரிப்பைப்பற்றித் தனியான பயிற்சியளித்து நாக்கைத் திருத்தவேண்டும். உரக்க வாசிப்பதில் இயற்கைக் குரலுடன் கணீரென்றும், பிறருக்கு நன்றாகக் கேட்கும்படியும், தடுமாற்றமின்றி வாக்கு வேகத்துடனும் படிப்பதே சரியான முறையாகும். அனாவசியமாகச் சத்தம்போட்டும், இராகம் போட்டும் வாசிப்பது கூடாது. இயற்கையாக நிறுத்தவேண்டிய இடங்களில் நிறுத்தியும், சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி குரலை உயர்த்தியும் தாழ்த்தியும், கேட்போருக்குப் பொருள் விளங்குமாறும், இன்பம் விளைவிக்குமாறும் உற்சாகத்துடன் வாசிப்பதே நல்ல வாசிப்பின் லக்ஷணமாம். ஒவ்வொரு பையனும் ஒரு பக்கம் அல்லது ஒரு பாரா படிப்பதற்கு எத்தனை நிமிஷங்கள் ஆகின்றனவென்று ஒரு கடிகாரத்தின் உதவியால் கணக்கிட்டு வேகமாக வாசிப்பதைப் (Speed test) பரீட்சிக்கலாம்.

கருத்துணர்தல் : மேலே நல்ல வாசிப்பின் லட்சணங்கள் என்ற பத்தியில் வேகம், தெளிவு இவற்றைப்பற்றி அறிந்தோம். இப்பொழுது வாசிப்பில் கருத்துணர்தல் எவ்வாறென்று கவனிப்போம். உரக்கப் படித்தலில் பிள்ளைகளின் கவனம் சொற்களின் உச்சரிப்பில் செல்லுகிறதே தவிர, கருத்தை யறிவதில் போதிய அளவு செல்லுவதில்லை. ஆனால் வாசிப்பின் ஒரு பிரதான அம்சம் சொற்களின் பொருளை யறிந்து விஷயத்தைக் கிரகித்தலாகும். ஆதலால், உரக்க வாசித்தலில் கருத்தறியும் திறமையும் பயிற்றுவிக்கவேண்டும். இதைப்பற்றி மௌனவாசிப்பின்கீழ் விவரமாகப் படிப்போம்.

## உரக்க வாசித்தலில் கவனிக்கவேண்டிய விஷயங்கள் :

1. வாசிப்பு இயற்கையாக இருக்கவேண்டும். அதாவது நாம் பேசும்பொழுது வார்த்தைகளை உச்சரிப்பது போலவே, தொனி மாற்றமும், உச்சரிப்பும் படிக்கும் போதும் இருக்கவேண்டும்.

2. புதிய பாடத்தை முதலில் மௌனமாக வாசித்த பிறகே உரக்க வாசிப்பது நலம். அப்பொழுதுதான் கருத்தை யறிந்து தடுமாற்றமின்றி உணர்ச்சியுடன் வாசிக்கமுடியும்.

3. ஒரு பையன் வாசிப்பதில் ஏற்படும் பிழைகளை உபாத்தியாயர் எடுத்துக்கூறாமல், பிற பிள்ளைகளைக் கொண்டு திருத்தச் செய்வதே நலம்.

4. கருத்தை யறியும் நோக்கத்துடன் வாசிக்கும் பழக்கம் ஆரம்பத்திலேயே ஏற்படுத்தவேண்டும். அவ்விதம் செய்தால் பிற்காலத்தில் நன்றாக வாசிக்கும் திறமை ஏற்படும்.

5. எழுத்துக்கூட்டாமல் பார்த்தவுடன் வார்த்தைகளையறியப் பழக்குதல் நலம்.

6. சரியான கண்ணோட்டங்களிருக்கவேண்டும்.

7. சிறுவர்களின் சொல்லகராதியைப் பெருக்கக் கூடிய பாடங்கள் படிப்படியாக அதிகம் இருக்கவேண்டும்.

8. பின்னால் வரக்கூடிய எழுத்து வேலைக்கு வாசிப்பு துணையாயிருத்தல் அவசியம்.

### மௌன வாசிப்பு

மௌன வாசிப்பு: உரக்க வாசித்தலைவிட மனிதனுக்கு வாழ்க்கையில் அதிகப் பயனைக் கொடுப்பது மௌன வாசிப்பேயாகும். கைப்பிரதிகள் அல்லது அச்சுப் புத்தகங்களை வாய்விட்டு வாசிக்காமல் கண்களை மாத்திரம் ஓட்டிக் கருத்தைக் கிரகிப்பதே மௌன வாசிப்பு எனப்படும். மௌன வாசிப்பில் உதடு அசைவது கூடாது. முணுமுணுத்து வாசிப்பது மௌன வாசிப்பு ஆகாது. துவக்கத்தில் வாசிப்பு முழுவதும் வாய்விட்டு வாசிப்பதாகவே இருக்கும். ஆனால் காலக்கிரமத்தில் உரக்க வாசிப்பதை முற்றிலும் குறைத்து, மௌன வாசிப்பையே பயிற்சிக்கவேண்டும். முதல் வகுப்பில் முற்றிலும் உரக்கப் படித்தலும், 2-ம் வகுப்

பில் 100க்கு 40 பங்கு மௌன வாசிப்பும், மூன்றும் வகுப்பில் 100க்கு 60 பங்கு மௌன வாசிப்பும், நான்காவது, ஐந்தாவது வகுப்புக்களில் உதடுகூட அசையாமல் பெரும்பகுதியும் மௌன வாசிப்பாகவும் இருக்கவேண்டுமென்று ஆரம்ப பாடசாலைக்கான புதிய பாடதிட்டம் வற்புறுத்துகிறது.

மௌன வாசிப்பினுல் ஏற்படும் நன்மைகள் :—1. பேச்சுக் கருவிகளுக்கு மௌன வாசிப்பில் வேலையில்லை. ஆதலால் சிரமம் குறைவு. 2. கண்ணும் மனமும் மட்டுமே வேலைசெய்வதால் படிக்கும் விஷயத்தில் கவனம் அதிகம் செலுத்தப்பட்டுக் கருத்துணர்தலாகிய கிரகிக்கும் சக்தி (Comprehension) அதிகம் அமையும். 3. மௌன வாசிப்பு, அருகிலிருப்பவர்களுக்குத் தொந்தரவு கொடுக்காமல் நாமே பல நூல்களையும் கற்றறியச் சாதகமாகிறது. 4. குறைந்த நேரத்தில் அதிகம் படிக்கலாம்; படிப்பின் வேகம் அதிகரிக்கும். உரக்கப் படிப்பதில் விட அதிகப் பாகத்தை மௌனமாகக் குறித்த நேரத்தில் படிக்க முடியும். 5. உரக்கப் படிப்பதில் ஒருவன் படிக்கும்பொழுது மற்றவர் கவனக்குறைவாக இருப்பார்கள்; ஆனல் மௌனப் படிப்பில் ஏக காலத்தில் எல்லாப் பிள்ளைகளும் பாடத்தில் கவனஞ் செலுத்திப் படிக்க நேரிடும். 6. இதனல் சுயமுயற்சி அதிகம் தூண்டப்படும். முற்போக்கான பிள்ளைகள் அதிகமாகவும், பிற்போக்கான பிள்ளைகள் குறைவாகவும் தங்கள் திறமைக்குத் தக்கவாறு படித்தறியலாம். 7. பெரியோர்கள் பெரும்பாலும் மௌனமாகவே படிக்கிறார்கள். ஆதலால் இளம்பருவத்திலிருந்தே மௌன வாசிப்பு பழகுவது பிற்கால வாழ்க்கைக்கு உதவியாகும். 8. இலக்கியச் சுவைகளை ரஸித்து அனுபவிக்க மௌன வாசிப்பே சிறந்த சாதனமாகும்.

மேற்கண்ட பல காரணங்கள்பற்றி ஆரம்பத்திலிருந்தே மௌன வாசிப்புப் பயிற்சி அளிக்கப்படவேண்டுமென்று கல்வி ஆராய்ச்சியாளர் தெரிவிக்கின்றனர்.

மௌன வாசிப்பின் பிரதிகூலங்கள் : மௌன வாசிப்பில் குரல் பயிற்சி பெறவும், உச்சரிப்புக்கள் திருத்தமடையவும் சந்தர்ப்பம் குறைவு. உச்சரிப்புப் பிழைகளைக் கேட்டறிந்து திருத்த உபாத்தியாயருக்குச் சந்தர்ப்பம்

ஏற்படாது. இது பற்றி உரக்கப் படித்தல் ஆரம்ப வகுப்புக்களில் ஓரளவு இருக்கவேண்டியது அவசியம்.

**மௌனப் படிப்பில் பலவிதப் பயிற்சிகள் :** படிப்பின் முக்கிய அம்சம் பொருளறிதல் அல்லது கருத்தைக் கிரகித்தல். இதற்கு ஆசிரியர் அதிகக் கவனஞ் செலுத்த வேண்டும். பலவிதப் பயிற்சிகளும் அளிக்கவேண்டும். மௌன வாசிப்பில் கிரகிக்கும் சக்தி அதிகம் என்றாலும், வாய்விட்டுப் படிக்காததால் ஒரு குறிப்பிட்ட பகுதியை மாணாக்கர்கள் உண்மையில் படித்தார்களா என்று அறியவும், படித்ததைக் கிரகித்தார்களா என்று சோதிக்கவும் ஆசிரியர் பின்வருமாறு பலவிதப் பயிற்சிகளை அளிக்கவேண்டும் :

I. ஏற்கனவே மேலே விவரித்தவாறு கீழ் வகுப்புக்களில் கட்டளை அட்டைகளை மௌனமாகப் படித்துச் செய்தல், படங்களையும் சொற்களையும் இணைத்தல், பெயர்கள் எழுதிய சீட்டுக்களை உரியவரிடம் கொண்டுபோய்க் கொடுத்தல், விளம்பரப் பலகையில் எழுதப்படும் சமாசாரத்தை வாசித்தல்,—இப் பயிற்சிகளை மௌனப் படிப்பாக நடத்தலாம். மேல் வகுப்புக்களில் கைவேலை, பிராஜெக்ட் இவற்றைக் குறித்து கட்டளைகளைக் கரும்பலகையில் எழுதி, அவைகளைப் பிள்ளைகள் மௌனமாகப் படித்துச் செய்யலாம்.

II. அடியிற் காண்பவைபோன்ற பயிற்சிகளைத் தடித்த காகிதத் துண்டுகளில்(Individual exercise cards) உபாத்தியாயர் முன்கூட்டியே எழுதிவைத்து, பாட காலங்களில் ஒவ்வொரு பையனுக்கும் கொடுத்து, விடையெழுதச் செய்யலாம். எழுதிய விடைத்தாள்களைப் பிறரிடம் மாற்றிக்கொடுப்பதால் அவைகளைத் திருத்தவும் செய்யலாம். ஒவ்வொரு பயிற்சிக்கும் 5 அல்லது 6 பிரதிகள் எடுத்து, அவைகளை உறைக்குள் போட்டுப் பலவிதப் பயிற்சிக்கும் 'செட்டு'கள் தயாரித்து வைக்கலாம். வகுப்பிலுள்ள எல்லாப் பிள்ளைகளும் ஒரேவித அப்பியாசத்தை ஒரு காலத்தில் செய்யவேண்டுமென்கிற நிர்பந்தமில்லை. ஒரு செட்டில் 5 பிரதிகள் வீதம் 6 செட்டுகள் இருக்குமானால் 30 பிள்ளைகளுக்கு 6 விதப் பயிற்சிகள் அளிக்கலாம். இவைகளைப் பின்னர் மாற்றிக் கொடுப்பதால் ஒவ்வொருவருக்கும் அவர்கள் முறையில் பிற பயிற்சிகளும் கிடைக்கும்.

# தனிப் பயிற்சி அட்டைகள்

**I.** பின் வரும் சொற்களைத் தக்கபடி மாற்றி வாக்கியமாக எழுது.

(உ-ம்.) என்று ஓர் இருக்கிறது ஊர் செஞ்சி.
= செஞ்சி என்று ஓர் ஊர் இருக்கிறது.

1. இட்டலி குடித்தான் நீர் மோர் தின்று.
2. வந்தது அவ்விடம் ஒரு கனைத்தது குதிரை கனைப்பு பெரிய.
3. வசிப்பது நாடு நாம் தமிழ்.
4. புல் பசித்தால் புலி தின்னுமா?
5. நயம் தேசிக்கு என்பது தெரியாது ராஜனுக்கு.

---

**II.** நான் யார்?

(i) கை உண்டு; விரல் இல்லை.
கழுத்து உண்டு; தலை இல்லை.
பை உண்டு; பணம் இல்லை.
மார்பு உண்டு; மூச்சு இல்லை. [illegible]

(ii) நீ ஓடினால் நானும் ஓடுவேன்;
நீ நின்றால் நானும் நிற்பேன்;
காலை நீளம், பகலில் குறைவேன்;
மாலையில் மறுபடியும் நீளுவேன். [illegible]

(iii) என்னைப் பார்த்தால் உன்னைப் பார்ப்பாய் [illegible]

(iv) என்னை அடிப்பார்கள்.
வீசி எறிவார்கள்,
உருண்டையாய் இருப்பேன். [illegible]

---

**III.** விடைக்கேற்ற கேள்வியைக் கண்டுபிடி:

இவை அடியிலுள்ள வினாக்களுக்கு விடையாகும். கேள்வியின் இலக்கத்தை விடைக்கு அருகில் எழுது.

அமாவாசை தினத்தில்; நனையாமல் இருக்க; சூரிய வெளிச்சம் இல்லாததால்; இரவில் காணலாம்; தயிர் ஆகும்; நேரம் கண்டுபிடிக்கலாம்.

1. மழையில் போகும்போது ஏன் குடை பிடித்துக்கொள்ளுகிறோம்?
2. நட்சத்திரங்களை எப்பொழுது காணலாம்?
3. சந்திரனை எந்தத் தினத்தில் பார்க்க முடியாது?
4. கடிகாரத்தின் உபயோகம் என்ன?
5. இரவில் ஏன் விளக்கு ஏற்றுகிறோம்?
6. காய்ச்சிய பாலில் கொஞ்சம் மோர் விட்டால் என்ன ஆகும்?

**IV.** இங்கே சில கேள்விகளும், அடியில சில சொற்களும் இருக்கின்றன. கேள்விக்குப் பொருத்தமான விடையைக் கண்டுபிடி: [நேரம் : 5 நிமி]

1. எது எரியும்? 2. எது பள்ளத்துக்கு ஓடும்? 3. எது உருகும்? 4. எது பறக்கும்? 5. எது இரவில் வெளிச்சம் தரும்? 6. எது சுடும்? 7. எது குளிர்ச்சியாக இருக்கும்? 8. எது மிதக்கும்? 9. எது வேகமாக ஓடும்? 10. எது மெதுவாக நகரும்? 11. எது நீலமாக இருக்கும்? 12. எது கர்ஜிக்கும்?

| | | |
|---|---|---|
| சிங்கம் | முயல் | பனிக்கட்டி |
| வானம் | நெருப்பு | ஆமை |
| சந்திரன் | விமானம் | மண்ணெண்ணெய் |
| தண்ணீர் | படகு | வெண்ணெய் |

**V.** ஒவ்வொரு வரிசைச் சொற்களிலும் அந்த வரிசைக்குப் பொருத்தமில்லாத சொல் ஒன்று இருக்கிறது. அதைக் கண்டுபிடித்து அடித்துவிடு. [நேரம் : 15 நிமிஷம்]

(i) இலை, பூ, காய், வேர், காகிதம்.
(ii) வருஷம், தேதி, வீணை, மாதம், நாள்.
(iii) நிலக்கரி, மா, பலா, தென்னை, கமுகு.
(iv) நெல், சோளம், கம்பு, கருணைக் கிழங்கு.

பின் வருவனவற்றை மிருகம், பட்சி, பூச்சி, மரஞ்செடி என்ற நான்கு பிரிவுகளாக வரிசைப்படுத்தி எழுது:

| | | | |
|---|---|---|---|
| பனை | பன்றி | தும்பி | குரங்கு |
| கருடன் | ரோஜா | ஆந்தை | பேன் |
| முருங்கை | வாத்து | யானை | மண்புழு |
| கரப்பு | ஒட்டகம் | கரும்பு | நரி |

பின் வரும் சொற்களை ஜோடி ஜோடியாகப் பொறுக்கி எழுது:
(உ-ம்.) நியாயம் × அநியாயம்.

| | | | |
|---|---|---|---|
| நல்ல | அசௌக்கியம் | சுகம் | உண்மை |
| கஷ்டம் | பகல் | தீமை | பெரியவர் |
| ஏழை | பொய் | சிறியவர் | பணக்காரன் |
| கெட்ட | சௌக்கியம் | இரவு | நன்மை |

**VI.** சரியா? தவறு?

இவைகளைப் படித்து, தவறானவற்றிற்கு எதிராக இந்த × அடையாளமும், சரியானவற்றிற்கு எதிரில் இந்த ✓ அடையாளமும் செய். [நேரம் : 6 நிமிஷம்].

1. உப்பு தண்ணீரில் கரையும்.
2. குதிரையின் குளம்புகள் பிளவுபட்டிருக்கும்.
3. தண்ணீர் மேட்டிலிருந்து பள்ளத்துக்கு ஓடும்.
4. இருவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது குறுக்கே பேசுவது மரியாதை இல்லை.
5. ரஸ்தாக்களில் வாழைப் பழத் தோல்களை விட்டெறிதல்.
6. பிறர் துணியைக் கட்டிக்கொள்வது.
7. காகத்திற்குச் சோறு போடுதல்.
8. கூட்டத்தில் பிறரை இடித்துத் தள்ளுதல்.

III. மௌன வாசிப்பை ஆழ்ந்து படிக்க அவசியமில்லாத கதைப் புத்தகங்கள், உப வாசக புத்தகங்கள் இவைகளைப் படிக்கச் செய்வதில்தான் மௌனமாக வாசிப்பது சாத்தியம் என்றும், பின்பற்றப்படவேண்டுமென்றும் ஆசிரியர்களிடம் ஒரு தவறான எண்ணம் நிலவுகிறது. ஆழ்ந்து படிக்கவேண்டிய வாசகங்களில்கூட மௌன வாசிப்பைப் பெரும்பாலும் அனுசரிக்க முடியும்; அனுசரிக்கவும் வேண்டும்.

வாசக பாடத்தில் பின்வரும் பயிற்சிகள் அளிக்கலாம்:—1. வாசகத்திலுள்ள ஒவ்வொரு பாடத்தையும் தொடங்கு முன் அப்பாட சம்பந்தமாகச் சில கேள்விகளை உபாத்தியாயர் போர்டில் எழுதிவைத்து, அவைகளையும் பாடத்தையும் பிள்ளைகள் மௌனமாகப் படித்து விடை கண்டுபிடிக்கச் செய்யலாம். 2. படிக்கும் பாராக்களின் மத்திய கருத்தைக் கண்டறியச் செய்யலாம். 3. பாடத்தில் வந்துள்ள நீதிகளையும் மேற்கோள்களையும் பொறுக்கி எடுத்து எழுதச் செய்யலாம். 4. பாடத்திலுள்ள அரும்பதங்களைப் பொறுக்கி எடுத்து எழுதலாம். 5. பாராவுக்குத் தலைப்புப் பெயர் அமைத்தல், ஒரு பாராவிலுள்ள சொற்களையும் வாக்கியங்களையும் எண்ணச் செய்தல், கதையைப் படிக்கும்பொழுது கதா பாத்திரங்களின் பெயர்களை எழுதுதல், அவர்களின் குணங்களைப்பற்றிய சொற்களை எடுத்தெழுதல் முதலிய பயிற்சிகள் அளிக்கலாம்.

## புதிய சொற்களின் அறிவு

**சொற்களின் அறிவு:** படித்தலின் ஒரு நோக்கம், பொருள் விளங்கும் சொற்களின் எண்ணிக்கையை அல்லது சொல் தொகுதியை (Vocabulary) அதிகப்படுத்தலாகும். புரியும் சொற்களின் அளவு அதிகமாக இருந்தால்தான் வாசிப்பில் கருத்தறிதல் இலகுவாகும். ஆதலால், மொழிப் பயிற்சியில் சொற்களின் அர்த்தம் தெரிந்துகொள்ளுதல் ஒரு முக்கிய அம்சமாகும். புதிய திட்டத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் எத்தனை எத்தனை சொற்கள் தெரியவேண்டுமென்று ஏற்கனவே கூறப்பட்டுளது.

**வழக்கத்திலுள்ள சொற்கள், அரும்பதங்கள் :** சொற்களில் பல தினசரி வாழ்க்கைக்கு வேண்டியவை. இவை வழக்கிலுள்ள சொற்கள் (Active words) எனப்படும். மற்றும் சில சொற்கள் சிறந்த கருத்துக்கள் பொதிந்து

சில சந்தர்ப்பங்களுக்கே வேண்டியவை. இவைகளைத் தினசரி வழக்கிலில்லாத சொற்கள் (Passive words) அல்லது அரும்பதங்கள் எனலாம். இவை இலக்கியம், கணிதம் பூகோளம், சரித்திரம் முதலிய பாடங்களில் அதிகம் காணப்படும்.

மேலும், தினசரிச் சொற்களிலுமே சில சொற்களை அடிக்கடி (Word frequency) உபயோகிக்கிறோம்; மற்றுஞ் சிலவற்றை வெகு அரிதாக உபயோகிக்கிறோம். தினசரி உபயோகிக்கும் சொற்களின் தொகுதியையும், அவைகளில் அடிக்கடி உபயோகிக்கும் சொற்களின் ஜாபிதா ஒன்றும் ஆசிரியர் தயாரிப்பது நலம். இவ்வித ஜாபிதா இதுகாறும் நமது நாட்டில் ஆராய்ந்து தொகுக்கப்படாதது விசனிக்கத்தக்கது.

முதல் மூன்று வகுப்புக்களில் பிள்ளைகளுக்கு ஏற்கனவே தெரிந்து பழக்கத்திலுள்ள சொற்களைக்கொண்டே பாடங்கள் அமைந்திருக்கவேண்டும். ஆனல், அரும் பதங்கள் அமைந்த பாடங்கள் IV, V முதலிய மேல் வகுப்புக்களில் விரவி வரவேண்டுவது அவசியமாகும்.

பிள்ளைகளின் சொல் தொகுதியை (Vocabulary) விருத்தி செய்யப் பின்வரும் முறைகளைக் கையாளலாம்:

1. புதிய சொற்கள் குறிக்கும் பொருள்களை அல்லது படங்களை நேரில் காட்டி, அச்சொற்களை விளக்க வேண்டும். இவ்விதஞ் செய்தால் அச்சொற்கள் பிள்ளைகளின் மனத்தில் ஊன்றிப் பதியும். 2. புதிய சொற்களைப் பிள்ளைகளின் மனத்தில் இருத்துவதற்கு அவைகளைப் பன்முறையும் பல சந்தர்ப்பங்களிலும் படிக்குமாறு டிரில் பயிற்சி கொடுக்கலாம். 3. புதிய சொற்களைத் தமது சொந்த வாக்கியங்களில் உபயோகிக்கப் பயிற்சி யளிக்கலாம். 4. பல பொருளுள்ள ஒரு சொல், ஒருபொருட் பல சொல், எதிர்ப்பதங்கள், ஒத்த ஓசையுள்ள பதங்கள்,—இவைகளைக் கண்டறியச் செய்யலாம். 5. சொற்களில் விட்ட எழுத்துக்களைப் பூர்த்திசெய்தல், வாக்கியங்களில் விட்ட சொற்களை நிரப்புதல், எழுத்துக்களால் சொற்கள் கட்டுதல் முதலிய எழுத்து விளையாட்டுக்கள் நடத்தலாம். 6. பிள்ளைகள் தனிப்பட்ட ஒரு நோட்டுப் புத்தகத்தில் அரும்பதங்களை அகாரதி வரிசையில் அர்த்தத்துடன் எழுதி வைக்கும் பழக்கத்தை மேற்கொள்ளலாம். 7. பிள்ளைகளின் சொல் வளத்தை விருத்திசெய்வதில் தமிழ்ப் பாடம் மட்டுமன்றி கணிதம்,

விஞ்ஞானம் முதலிய இதர பாடங்களும் சந்தர்ப்பங்கள் அளிக்கும். 8. பிரசுரங்கள், பத்திரிகைகள் படிப்பதும் இந் நோக்கத்தை நிறைவேற்றும். 9. நடுத்தர வகுப்புக்களில் ஒவ்வொரு பிள்ளையும் ஒரு தமிழ் அகராதியைச் சொந்தமாக வாங்கி வைத்து, அதை உபயோகிக்கப் பழகுவது சொல்வளத்தை விருத்திசெய்யும்.

**படிப்பின் வேகம்:** வாசிப்புப் பயிற்சியின் மற்றொரு நோக்கம் படிப்பின் வேகத்தை அதிகப்படுத்தலாகும். உரக்கப் படித்தலில் விட மௌனப் படிப்பில் வேகம் அதிகம் என்பதை முன்னரே உணர்ந்தோம்.

**படிப்பின் வேகத்தை நிர்ணயிக்கும் முறை:** ஏற்கனவே படித்திராத ஒரு புதிய பாடத்தை ஆசிரியர் 'படி' என்றதும், பிள்ளைகள் மௌனமாகப் படிக்க ஆரம்பிக்க வேண்டும். கடிகாரத்தில் நான்கு நிமிஷம் ஆனவுடன், ஆசிரியர் 'நிறுத்து' என்றதும், விட்ட இடத்தைக் குறித்துக்கொண்டு நிறுத்திவிட வேண்டும். இவ்வாறு நான்கு நிமிஷத்தில் படித்த சொற்களை எண்ணி, ஒரு நிமிஷத்தில் படித்துள்ள சராசரி வார்த்தைகள் எத்தனையென்று கணக்கிடலாம். இவ்விதம், வகுப்பிலுள்ள பல மாணவருடைய படிப்பு வேகத்தை ஒப்பிடலாம். இவ்விதப் பயிற்சி மாதாமாதம் அளிப்பதால் படிப்பின் வேகத்தை அதிகப்படுத்தலாம். நம் நாட்டில் இத்தகைய ஆராய்ச்சிகள் ஒன்றும் இதுகாறும் செய்யப்படவில்லை. ஆனால் மேனாடுகளில் ஆராய்ச்சி செய்ததில், சாதாரணமாக ஒரு நிமிஷத்தில் சுமார் 80 முதல் 120 வார்த்தை வரை படிக்க முடியுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

படிப்பின் வேகம், 1. பாடத்தின் கடினத்தன்மை அல்லது இலகுத்தன்மை. 2. படிப்பவர்களின் தேர்ச்சி. 3. கண் நகர்ச்சி. 4. படிப்பதில் கவனம். 5. மாணாக்கரின் சொல் அறிவு இவற்றைப் பொருத்ததாகும்.

சாதாரணமாகப் பிள்ளைகளுக்குப் புரியக்கூடிய சொற்களும் விஷயங்களும் பாட புத்தகங்களில் அடங்கியிருந்தால் வேகமாகப் படிக்க முடியும். திறமையுள்ளவர்கள் வேகமாகப் படிப்பார்கள்: பிற்போக்கானவர்கள் மெதுவாகப் படிப்பார்கள். பிற்போக்கானவர்களுக்கு அதிகக் கவனஞ் செலுத்தியும், பிரத்தியேகப் பயிற்சியளித்தும் முன்னேறச் செய்யலாம். புதிய வார்த்தைகளை முன்னர்க்கூடியே விளக்கியும், பாட விஷயத்தைப் பற்றிப் பீடிகையாகப் பேசி அவர்களது ஆவல்

களை எழுப்பியும் அவர்களது படிப்பின் வேகத்தை அதிகரிக்கச்செய்யலாம். கிரகிக்கும் சக்திக்குக் குறைவில்லாமல் படிப்பின் வேகம் அடிக்கடி பரீக்ஷிக்கப்பட்டு, மற்ற பிள்ளைகளின் வேகத்தோடு ஒப்பிடுவது அவர்களுள் போட்டியுண்டாக்குவதால், படிப்பின் துரிதம் முன்னேற்றமடையும்.

* கண் நகர்ச்சி: மேலும், படிப்பதில் கண்ணோட்டம் அதிக அளவுள்ளதாகில் படிப்பின் வேகமும் அதிகமாகும். ஒரு வரியிலுள்ள வார்த்தைகளைப் பார்த்துக்கொண்டே போகும்பொழுது பல வரிகளைப் பார்த்துப் படிப்பதில் கண் நகர்ச்சி நான்கு விதங்களில் ஏற்படும்.

ஒரு வரியில் எத்தனை சொற்கள் ஒரே பார்வையில் அல்லது கண்ணோட்டத்தில் காணமுடிகின்றனவென்று எண்ணிப் பார்க்கலாம். இவ்விதம் ஒரே கண்ணோட்டத்தில் அடங்கியிருக்கும் சொற்களைப் 'படிப்புச் சாண்' (eye-span) என்பர். ஒவ்வொரு பையனுடையவும் படிப்புச் சாண் எவ்வளவு அகன்று இருக்கிறதென்றும், அதை எவ்வாறு அதிகரிக்கச்செய்யலாமென்றும் ஆசிரியர் ஆராயவேண்டும். உரக்க வாசிப்பதில் விட மௌன வாசிப்பில் படிப்புச் சாண் அதிகமாயிருக்கும். அவசியமான சொற்களை ஊன்றிப் படித்து, அவசியமில்லாத சொற்களை நீக்கிப் படிப்பதின் மூலம் கண்ணோட்டத்தின் விகிதத்தை அதிகப்படுத்தலாம்.

ஒரு வரியைப் படிக்கும்பொழுது கண் அடிக்கடி நிற்கிறது. ஆதலால், ஒரு வரியில் கண் எத்தனை முறை நிற்கிறதென்பதைக் கவனித்தல் அவசியம். இதனைக் கண் நிறுத்தல் (Eye fixations) என்பர். ஒரு நிறுத்தலுக்குச் சாதாரணமாக 1/23 செகண்டு ஆகும். இதை நிறுத்தலின் (Time unit) கால அளவு என்பர். இதற்கு அதிகமாக நிறுத்துகிறவர்கள் வேகக் குறைவுள்ளவர்கள் என்றும், இதற்குக் குறைந்த நேரம் நிறுத்துகிறவர்கள் வேகம் அதிகமுள்ளவர்கள் என்றும் கொள்ளலாம்.

படித்துக்கொண்டு போகும்பொழுது சில விடங்களில் படிப்பு தடைப்பட்டு, முன் படித்ததைக் கண் திரும்பப் பார்ப்பதும் உண்டு. இதனைப் பிற்போக்குகள் (Regressions) எனலாம். கண்ணோட்டத்தின் பிற்போக்குகள் குறையக் குறையப் படிப்பின் வேகம் அதிகமாகும். ஒரு வரி முடிந்தவுடன் அடுத்த வரியின் முதலுக்குக் கண் பாய்கிறது. இதனைக் கண்பாய்ச்சல்

(Sweep) என்பர். பார்வைப் பாய்ச்சலில் தவறுதல் நேரிடக்கூடாது.

படிப்பின் வேகத்தை அதிகரிக்கச் செய்வதில் மேலே விளக்கிய கண் நகர்ச்சிகள் நேர்மைப் படுவது அவசியமாகும்.

**கண் பார்வை:** நேராக நிமிர்ந்து அல்லது உட்கார்ந்துகொண்டு, புத்தகத்தைச் சரியாகக் கண்ணிலிருந்து 12 அங்குல தூரத்தில், மார்புக்கு நேராகப் பிடித்துப் படிக்கப் பழக்கவேண்டும். புத்தகத்தைக் கண்ணுக்கு வெகு சமீபத்தில் சில பிள்ளைகள் வைத்துக் கொண்டு படிப்பார்கள். அவர்கள் குறுகிய பார்வை (Short sight) யுள்ளவர்கள். வயது வந்தவர்கள் புத்தகத்தை ஓர் அடி தூரத்துக்கு அப்பால் பிடித்துக் கொண்டு படிப்பார்கள் (வெள்ளெழுத்து = Long sight). கண்ணில் இவ்வித தோஷங்கள் எவருக்காவது இருக்குமானல், கண் டாக்டரைக் கலந்துகொண்டு சிகிச்சை செய்யவேண்டும்; அல்லது மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்ளச் செய்யலாம்.

படிக்கும்பொழுது வெளிச்சம் இடதுபுறத்திலிருந்து வருவதே சாலச் சிறந்தது. எதிரிலிருந்தாவது, பின்புறத்திலிருந்தாவது வெளிச்சம் வருதல் கூடாது; இவ்விதம் விழுந்தால் பார்வை கெடும். கண்ணைப் பறிக்கும்படியான அதிக வெளிச்சமும் கூடாது; மங்கிய வெளிச்சமும் கூடாது.

பேச்சிலும் நூல்களிலும் எண்ணங்கள் சாதாரணமாகத் தொடர்ந்தே நிற்கும். ஒரு முழுக் கருத்தை வெளியிடும் சொற்றொடர் வாக்கியமாகும் என்று முன்னமே அறிந்தோம். ஆதலால் எண்ணத்தின் (கருத்தின்) மூல அளவு வாக்கியமாகும்.

எண்ணங்களை ஒருமைப்படுத்தியே நாம் வெளியிடவேண்டும்; முன் பின் விரோதமாகவும் அல்லது பல விஷயங்களை இடையில் புகுத்தியும் கூறுவது தகாது. பல்வேறு எண்ணங்களைப் பிரித்தறிவதிலும் வகைப்படுத்துவதிலும் பயிற்சிகள் அளிக்கலாம். குறித்த விஷயத்தைப்பற்றிய எண்ணங்களைத் தெரிந்தெடுத்துக் கோர்வைப் படுத்துவதும் ஒரு பயிற்சியாகும்.

கருத்துணர்தலில் (comprehension) பயிற்சியளிக்கும்பொழுது அப்பயிற்சிகளைக் காலவரைப்படி (Time limit) செய்யுமாறு பழக்கவேண்டும். உபாத்தியாயர் முன்னர்க்கூடியே இவ்வொரு பயிற்சிக்கும் எவ்வளவு

நேரமாகிறதென்று கடிகாரத்தின் உதவியால் கணக்கிட்டுப் பார்த்துக் கால அளவை நிர்ணயிக்கவேண்டும். அந்தக் கால அளவுக்குள் பிள்ளைகளும் விஷயங்களைப் படித்தறிதல் வேண்டும். கருத்தறிதலிலும் வேகம் சோதித்தல் உண்டு என்பதைப் பிள்ளைகளை உணரச் செய்யவேண்டும்.

குரல்போட்டுப் படிப்பதைக் குறைப்பதற்கான வழிகள் (to overcome vocalization): மௌன வாசிப்பின் முக்கிய நோக்கம் உச்சரிப்பை உரக்கச் சொல்லாமையும், உதடு அசையாமையுமாகும். இளம் பிள்ளைகள் ஆரம்பத்தில் உரக்கவே படிப்பர். ஆனால் வகுப்பு ஏற ஏறக் குரல் குறையவேண்டும். உரக்கப் படித்தலைக் குறைக்கப் பின்வரும் முறைகளைக் கையாளலாம்:

(1) ஒவ்வொருபாடத்திலும் சிறிதளவேனும் மௌனமாகப் படிக்கச் செய்தல்.

(2) உதடு அசைத்தலுக்கும் படிப்பு வேகத்துக்கும் உள்ள சம்பந்தத்தைப் பிள்ளைகள் தாமே அறியுமாறு செய்து, மௌனமாகப் படிப்பதின் இலாபத்தை உணரச்செய்தல்.

(3) படிக்கும்பொழுது உதடுகளில் விரலை வைத்துப் பார்த்து அவைகளின் அசையாமையையும், தொண்டைக்குழியில் கையை வைத்துப் பார்த்துக் குரல் கருவிகளின் அசையாமையையும் சோதிக்கலாம்.

(4) இலகுவானவும் இன்பகரமானவுமான கதைகளை மௌனமாகப் படிக்கக் கொடுத்தல்.

மௌன வாசிப்பைத் தூண்டுவதற்கான வழிகள்: பிள்ளைகட்கு மௌன வாசிப்பில் ஊக்கம் உண்டு பண்ண, அவர்கட்குச் சில லட்சியங்களையும் உத்தேசங்களையும் எடுத்துரைக்கவேண்டும். மௌன வாசிப்பின் நல்ல பலன்களைப் [(1) படிப்பின் வேகம் அதிகப்படுவதால் படிக்கும் நேரம் குறையும். (2) உச்சரிப்புக் கருவிகளுக்கு வேலையில்லாததால் களைப்புத் தோன்றாது. (3) மனம் கருத்தில் நாடிக் கவனம் அதிகரிப்பதால் கருத்துணர்தல் சீக்கிரம் ஏற்படும்.] பிள்ளைகள் உணருமாறு செய்யவேண்டும். சில கேள்விகள் அளித்து விடை கண்டுபிடிக்கச் செய்வதும், குறிப்பிட்ட தகவல்களைத் தேடிக் கண்டுபிடிக்கச் செய்வதும், இன்பம் விளைவிக்கக் கூடிய ருசிகரமான பகுதிகளைப் படிக்கச் செய்வதும், செயல்முறைப் (Projects) பாடங்களுக்கு வேண்டிய விஷயக் குறிப்புகளைச் சேகரிக்கச் செய்வதும், அரும்ப

தங்களைப் பொறுக்கி எழுதச் செய்வதும் மௌன வாசிப்பைத் தூண்டக்கூடிய வழிகளாகும்.

**மௌனப் படிப்பிற்குரிய பகுதிகளைத் தேர்ந்தெடுத்தல்:** மௌனப் படிப்புக்கான பாடங்களும் புத்தகங்களும் பிள்ளைகளுக்கு இலகுவில் புரியக்கூடியனவாய் இருக்கவேண்டும். அவைகள் பிள்ளைகளின் அனுபவத்துக்கும், விருப்பத்துக்கும் ஒத்தனவாயிருப்பது நலம். அவைகள் சுற்றுப்புற அறிவை விளக்கக்கூடியனவாகவும் இருக்கலாம். பத்திரிகைகளில் காணப்படும் பல செய்திப் பகுதிகள், நாடகங்கள், தொடர் கதைகள், நவீனங்கள் இவைகளும் மௌனப் படிப்புக்குரியன. இவை பொழுதுபோக்காகவும், இன்ப மளிக்கவும் பெரிதும் பயன்படும்; மௌனப் படிப்புக்கான பாடங்களும் புத்தகங்களும், பல படங்களைப் பெற்றிருக்கவேண்டும். அப்படங்கள் கதையின் பல படிகளையும் காட்டக்கூடியவையாக இருக்கவேண்டும்.

பிள்ளைகள் தனித்துச் செய்வதற்கான பயிற்சிகளடங்கிய அட்டைகளை ஏற்கனவே விவரித்தவாறு தயாரித்து வைக்கலாம். மேலும், விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகளிலுள்ள பாலர் பகுதிகள் இவைகளை வெட்டியெடுத்துச் சேகரித்து, ஒரு தனி நோட்டுப் புத்தகத்தில் ஒட்டிவைத்து மௌனப் படிப்புக்கு உபயோகிக்கலாம்.

**வாசக பாடம் நடத்தும் முறை:** வாசகபாடம் நடத்துவதில் அடியில் குறிக்கப்படும் முறைகளை ஞாபகத்தில் வைத்துக் கையாளலாம்.

i. **முன்னுரை:** படிக்கப்போகும் விஷய சம்பந்தமாகப் பிள்ளைகளுக்கு ஏற்கனவே அனுபவத்தில் தெரிந்துள்ள விஷயங்களைப்பற்றிப் பேசியும், அல்லது படங்களைக் காட்டியும், அல்லது ஆசிரியர் வாய்மொழியாகக் கதைச் சுருக்கத்தைக் கூறியும், முதன் முதலில் பிள்ளைகளின் மனத்தைத் தயாரிக்கவேண்டும். அவ்வாறு செய்கையில், பாடத்தில் வரும் சில புதிய கடின பதங்களைக் கரும்பலகையில் எழுதி விளக்குவதுடன், அவைகளின் திருத்தமான உச்சரிப்பையும் பயிற்சிக்கவேண்டும்.

ii. **பாடவிஷயம் கிரகித்தலும், மௌன வாசிப்பும்:-** சில கேள்விகளை முன்னதாகக் கரும்பலகையில் எழுதி, பிள்ளைகளைக் குறித்த காலத்தில் பாடப்பகுதியை மௌனமாக வாசித்து அவைகளின் விடையைக் கண்டறியச் செய்யலாம். இதனால், பிரதி மாணவனின் சுய

முயற்சி தூண்டப்படும். விஷயத்தின் சாராம்சத்தைச் சுருக்கிக் கூறவும் செய்யலாம். கதையாகில், பேருக்கொரு வாக்கியமாகச் சொல்லிக் கதையை முடிக்கலாம். சிறிய பாடமாகில் முழுப்பாடத்தையும் ஒரே தடவையாகப் படிக்கச் செய்யவேண்டும்; நீண்ட பாடமாகில், பாராக்கள் அல்லது பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியையும் ஒரே தடவையாகப் படிக்கச் செய்யலாம்.

iii. உரக்க வாசித்தல் :—மௌனமாக வாசித்த பிறகே உரக்க வாசித்தல் நடைபெறவேண்டும். கீழ் வகுப்புகளில் உபாத்தியாயர் மாதிரி வாசிப்பு வாசித்துக் காட்டலாம். பிறகு சில பிள்ளைகளை ஒருவர்பின் ஒருவராக வாசிக்கச் செய்யலாம். அவர்கள் வாசிக்கும் பொழுது ஏற்படும் பிழைகளை, [அவ்வப்பொழுது திருத்தாமல்] முடிவில் இதர பிள்ளைகளைக்கொண்டு திருத்தச் செய்யவேண்டும். மேல் வகுப்புக்களில் பாடத்தை உரக்க வாசித்தலுக்கு அதிக அவசியமிராது.

iv. விளக்குதலும் வினவுதலும் :—படித்த விஷயங்களைத் தெளிவுபடுத்த, விளக்குதலும் வினவுதலும் ஓரளவு தேவையாகும். கருத்துக்களைப் பிள்ளைகள் தாமாகக் கண்டறிவதே சாலச் சிறந்தது. ஆதலால் ஆசிரியரது விளக்கம் மிகக் குறைவாகவே இருக்க வேண்டும். 1. தெரிந்ததைக்கொண்டு தெரியாததை விளக்குதல், 2. பொருள்களை நேரிலும் படங்கள் மூலமும் காட்டி நிதரிசன முறையில் விளக்குதல், 3. செய்து காட்டல், 4. உதாரணங்களால் விளக்குதல் முதலிய முறைகளை ஆசிரியர் பின்பற்றலாம்.

விஷயங்களைத் தெளிவுப்படுத்தவும், பிள்ளைகள் அவற்றைக் கிரகித்தார்களா என்று அறியவும், போதனையில் வினவுதலும் தாராளமாக இடம் பெறவேண்டும்.

கரும்பலகை விளக்கம் :—முக்கிய தலைப்புக்களையும் விஷயச் சுருக்கத்தையும் கரும்பலகையில் எழுதிக் காட்டலாம்.

v. மொழிப் பயிற்சி (Language Study) :—கடின பதங்களின் கருத்தைப் பிற சொற்கள் மூலம் போர்டில் எழுதி விளக்கலாம். அப்பதங்களைப் பிள்ளைகள் தமது சொந்த வாக்கியத்தில் அமைத்துக் கூறவேண்டும். இலகுவான இலக்கண விஷயங்களையும், வகுப்புக்குத் தக்கவாறு எடுத்துரைக்கலாம்.

vi. முடிவுப் பயிற்சி:—படித்த பாட சம்பந்தமாகப் பிள்ளைகள் சம்பாஷித்தல், நடித்துக் காட்டுதல், சொல்வ

தெழுதல், வியாசம் எழுதுதல் முதலிய பயிற்சிகள் அளிக்கலாம்.

**மௌன வாசிப்பின் திறமைகளைப் பரிசோதித்தல் :—** 1. கிராஹ்ய சக்தி, 2. படிப்பின் வேகம் என்ற இரு விதத் திறமைகளைப் பிள்ளைகளிடம் பரிசோதித்து, மார்க்கு ரிஜிஸ்டர் வைக்கலாம்: அந்த மார்க்குகளைப் பிரதி பிள்ளைகளும் வரிப் படங்கள் (graphs) மூலமாகவும் குறித்துவைக்கலாம். பரிசோதிக்கும் முறைகள் ஏற்கனவே விவரிக்கப்பட்டுள்ளன.

**வினவுதல் :—** தமிழ்ப் போதனையில் கேள்வி கேட்பது அல்லது வினவுதல் ஒரு முக்கியமான அம்சமாகும். ஆசிரியர்களுக்கு அமையவேண்டிய திறமைகளுள் கேள்விகேட்கும் திறமை இன்றியமையாதது. 1. கேள்வி கேட்பதன் மூலமாக ஆசிரியருக்கும் மாணவருக்கும் தொடர்பு ஏற்படுகிறது.

2. பொருத்தமான கேள்விகள் குழந்தைகளை உற்சாகப் படுத்துவதோடு, அவர்களின் யோசிக்கும் சக்தியைத் தூண்டவும் செய்யும்.

3. படித்த விஷயங்களைக் கோர்வைப்படுத்தவும், ஒழுங்கு செய்யவும், தெளிவுபடுத்தவும் கேள்விகள் துணைசெய்கின்றன.

4. போதித்தவற்றைப் பிள்ளைகள் புரிந்துகொண்டார்களா என்று அறியவும், அவர்களது திறமையையும் தேர்ச்சியையும் நிர்ணயிக்கவும் கேள்விகள் மூலம்தான் சாத்தியமாகும்.

5. முன்னறிவு பரிசோதிக்கும் பகுதியிலும், புதிய பாடம் கற்பிக்கையிலும், கற்பித்த பகுதியில் சோதனை செய்கையிலும் கேள்விகள் பெரும்பாலும் உதவுகின்றன.

**வினுக்களின் தன்மை :** எளிய நடையில் சுலபமான பதங்களை யமைத்துச் சுருக்கமாகவும் நேராகவும் கேள்விகள் கேட்கவேண்டும். ஒருவிதமாகக் கேட்டு விடை கிடைக்காவிடில், கேள்வியை மாற்றிக் கேட்கவும் வேண்டும்.

குழந்தைகளுடைய அறிவுக்குத் தக்கபடி கேள்விகள் அமையவேண்டும். அதிகச் சுலபமான கேள்விகளும், அதிகக் கடினமான கேள்விகளும் கேடகக்கூடாதன. "ஆம்," "இல்லை" என்ற பதங்கள் மாத்திரம் விடையாக வரும் கேள்விகளை அடிக்கடி கேட்டால், குழந்தைகளுக்கு கவனக் குறைவு ஏற்படும். தவிர,

இவ்விதக் கேள்விகளால் நேரமும் வீணாகும். கேள்விகள் அதிகக் கடினமாயிருந்தாலும் பாடத்தின் நோக்கம் ஈடேறாது. ஏனெனில், ஆசிரியர் ஒரு கேள்வியைக் கேட்கும்பொழுது, அதற்கு விடை தெரியாமல் மாணவர்கள் பேசாதிருப்பரேல், ஆசிரியர் உடனே கேள்வியை மாற்றிக் கேட்டு விடையை வருவிக்காவிடில், குழந்தைகள் அவரிடம் நம்பிக்கை யிழந்துவிடுவார்கள். ஆகவே, விடைகளைப் பிள்ளைகள் சொல்லத் தவறினால், ஆசிரியர் கூறிவிடுவது நல்லது. அவ்விதம் செய்யாவிடில் குழந்தைகள் ஏதாவது ஒரு விஷயத்தைத் தப்பிதமாக நினைத்து, அனுமானத்தின் பேரில் விடைகொடுக்க நேரிடும்.

பாட ஆரம்பக் கேள்விகள் மிகவும் முக்கியமானவை. இக் கேள்விகளுக்குக் குழந்தைகள் கொடுக்கும் விடைகள் புதிய பாடத்திலுள்ள விஷயத் தொடர்ச்சிக்கு அஸ்திவாரமாக இருத்தல்வேண்டும். புதிய பாடத்தின் கருத்தைப் பிள்ளைகள் தாமாகவே தெரிந்துகொள்ளும்படி கேள்விகள் குழந்தைகளின் கவனத்தை யிழுக்க உதவியாயிருக்கும்.

பாட முடிவில் சோதனைக் கேள்விகள், பிள்ளைகளின் முன்னறிவையும் புதிய பாட விஷயங்களையும் ஒன்றுசேர்ப்பனவாயிருத்தல் அவசியம். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் எத்தனை கேள்விகள் கேட்கிறாரென்பது முக்கியமல்ல. ஆனால் முக்கிய விஷயங்களை வருவிக்கும் கேள்விகளாகக் கேட்பதுதான் முக்கியம்; விடையைத் தெரிவிக்கும் முறையில் வினாக்கள் (leading questions) கொடுக்கக்கூடாது. (உ-ம்.) இராமரின் மனைவி சீதைதானே?

**மாணாக்கர் வினவுதல்:** ஆசிரியர் கேள்விகள் தொடுப்பதுடன் மாணாக்கர் வினவுதலும் போதனையில் அவசியமாகும். உபாத்தியாயரையும் பிற மாணவரையும் வினவுதலால் மாணவர் தமது ஐயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள இயலும்.

கேள்வி கேட்பதில் மற்றொரு முக்கியமான பகுதி குழந்தைகளின் கேள்விகள். சிறுவர்கள் எப்பொழுதும் "ஏன்?" "எப்படி?" "என்ன?" என்ற கேள்விகளைச் சதா கேட்பார்கள். இவ்விதம் அவர்கள் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் விடையளிக்கச் சித்தமாயிருக்க வேண்டும். ஏனெனில், கேள்விகள், யோசனா சக்தியும், ஆராயும் வன்மையும் பொருந்தியிருக்கும் குழந்தையால்

தான் அடிக்கடி கேட்க முடியும். இவ்விதத் திறமைகளை வளர்ப்பது ஆசிரியரின் கடமையாகும். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடை சொல்லாவிடில், பிள்ளைகள் இத்தகைய திறமைகளில் தேர்ச்சிபெற இயலாது; அவர்கள் உள்ளத்தில் அச்சத்தை யுண்டுபண்ணிக் கேள்வி கேட்பது தப்பிதமென்ற எண்ணத்தையும் உதிக்கச் செய்யும்.

**விடைகள் :** விடைகளை வருவிக்கும் திறமையும் கேள்வி கேட்பதைப்போல் ஓராசிரியருக்கு இன்றியமையாதது. ஒவ்வொரு மாணவனும் தான் எந்தச் சமயத்திலும் வினவப்படலாமென்று உணரும்படி செய்ய வேண்டும். பிள்ளைகள் விடை கொடுக்கும் ஒவ்வொரு பொழுதும், "நல்ல பிள்ளை," "கெட்டிக்காரன்" என்று சொல்லுவது ஒரு பயனையும் கொடாது. எப்பொழுதாவது இப்பதங்களை உபயோகித்தால் மாணவர்கள் பொருத்தமான விடைகள் சொல்ல உற்சாகம் பெறுவார்கள்.

குழந்தைகள் கொடுக்கும் விடைகளின் பாஷை திருத்தமாயிருக்கிறதாவென்று ஆசிரியர் கவனிக்க வேண்டும். விடை முழுவதையும் குழந்தைகளே சொல்லும்படி தூண்டவேண்டும். சில சமயங்களில் பிள்ளைகள், விடையின் முதல் வார்த்தையைச் சொன்னவுடன் ஆசிரியர் தாமாகவே விடையைப் பூர்த்திசெய்துவிடுவர். இவ்விதம் செய்வது மாணவர்களின் உற்சாகத்தையும் முயற்சியையும் குறைவுபடுத்தும். ஆரம்ப வகுப்புகளில் முழு வாக்கியங்களாகவே விடை சொல்லத் தூண்டுவது நலம். சரியான வாய்மொழிப் பயிற்சிக்கும், பாஷை நடை கற்பதற்கும், இயற்கையாகப் பேசுவதற்கும் இது உதவும்.

சில தருணங்களில் ஆசிரியர், குழந்தைகள் கொடுக்கும் விடைகளைத் திரும்பச் சொல்வார்கள். அடிக்கடி இவ்விதம் செய்வது ஓர் அநாகரிகப் பழக்கம் (Mannerism) ஆகும். அவ்விதஞ் செய்தல் கூடாது. ஏனெனில் முதலாவது, ஆசிரியர் உடல் நலத்திற்கு ஓயாமல் பேசுவது தீமையானது. இரண்டாவதாக, விடையளிக்கும் குழந்தை, தான் ஒரு முக்கியமான வேலை செய்வதாக நினைக்க இடமில்லாமல் போகின்றது. ஆசிரியருடன் குழந்தைகளும் ஒத்துழைக்கிறார்கள் என்ற எண்ணமும் குறைகின்றது. மூன்றாவதாக, ஒவ்வொரு முறையும் ஆசிரியர் சொல்வதையே மற்ற பிள்ளைகள் எதிர்பார்ப்பதால் கவனக் குறைவு ஏற்பட்டு, பாடத்தில் உற்சாகம் குன்றும்.

விடைவருவிப்பதில் மற்றொரு விசேஷமான அம்சம் பிள்ளைகள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து விடையளித்தல். இவ்விதம் செய்வதில் பின் வரும் குறைகள் ஏற்படும்.

1. ஒரு கேள்விக்கு விடை எல்லாப் பிள்ளைகளுக்கும் தெரிந்திருந்தபோதிலும், ஒரே விதமாக விடையை அமைப்பது கடினமாகையால் ஆசிரியர், "ஆம்", "இல்லை" என்னும் விடைகள் வருவிக்கக்கூடிய கேள்விகளாகவே அடிக்கடி கேட்க வேண்டியிருக்கும். இத்தகைய கேள்விகளாலும் விடைகளாலும் பிள்ளைகளுக்கு அறிவு வளர்ச்சி ஏற்படாதாதலால் அவற்றால் யாதொரு பயனுமில்லை.

2. எல்லோருமாகச் சேர்ந்து விடையளிப்பதில், வகுப்பிலுள்ள மாணவர்கள் யாவருக்கும் அவ்விடை தெரியுமென்று நினைக்க முடியாது. மேலும், இப்பழக்கம் தனித்தனியாக யோசிக்கும் தன்மைக்கும், குழந்தைகளின் பயமின்மைக்கும் தடையாயிருப்பதோடு, சோம்பல், கவனக்குறைவு, ஏமாற்றுதல் ஆகிய தீமைகளுக்கு உதவிபுரியும்.

3. இந்தமுறையால் பிற்போக்கான குழந்தைகளைக் கண்டுகொள்ளுவது கடினம். விடை தெரியாத குழந்தைகளும் அர்த்தமில்லாமல் உதடசைப்பதோடு நின்றுவிடுவார்கள்.

4. எல்லோரும் சேர்ந்து கூச்சலிடுவது பாடசாலையின் ஒழுங்கு முறைக்கு இடையூறாகும்.

அடுத்தபடியாக, தப்பிதமான விடைகளைத் திருத்துவதில் ஆசிரியர் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். தவறான விடை சொல்லும் பிள்ளையைப் பார்த்து ஆசிரியர் சிரிக்கவோ, கோபிக்கவோ, பரிகாசம் செய்யவோ கூடாது. பல கேள்விகளின் மூலம் சிறுவர்களை விடை பகரச்செய்து, அவர்களுடைய பிழைகளைத் தாமே திருத்திக்கொள்ளும்படி செய்யலாம்.

### பயிற்சி வினாக்கள்

1. முதல் வகுப்பில் சேரும் புதியபிள்ளைகளுக்கு வாசிப்பில் ஆசையுண்டுபண்ண ஆரம்பத்தில் என்ன உபாயங்களைக் கைக்கொள்வீர்?

2. முதல் வகுப்பில் வாசிப்புக் கற்பிப்பதற்கான 1. எழுத்து முறை, 2. முழுச் சொற்கள் முறை, 3. வாக்கிய முறை.—இவற்றில் நீர் எதைக் கையாளுவீர்?

3. அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள பாடதிட்டப்படி 1 முதல் 5 வகுப்புக்களில் பிரதி வகுப்பிலும் முறையே கற்பிக்கவேண்டிய புதிய சொற்களின் எண்ணிக்கை யாது?

4. முதல் மூன்று வகுப்புகளுக்கான பாட புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் ஆசிரியர் கவனிக்கவேண்டியன யாவை?

5. வாசிப்புப் பயிற்சியளிக்க நீர் தயாரிக்கக்கூடிய உபகரணங்கள் ஆறு வகைகள் கூறுக.

6. உரக்கப் படித்தலில் எந்தெந்த உடலுறுப்புக்கள் உதவி செய்கின்றன? உரக்கப் படித்தலினால் ஏற்படும் நன்மைகள் யாவை?

7. இக்காலத்தில் மௌன வாசிப்பு ஏன் அதிகம் வற்புறுத்தப்படுகிறது?

8. 1 முதல் 5 வகுப்புக்களில் மௌன வாசிப்பின் விகிதம் யாது?

9. ஆழ்ந்து படிப்பதற்கான வாசக பகுதியில் மௌனமாகப் படித்துக் கருத்தறிவதற்காக அளிக்கக்கூடிய ஐந்து விதப் பயிற்சிகளை விளக்குக (62-ம் பக்கம் பார்க்க).

10. 60, 61, 62-ம் பக்கங்களில் காணும் 1 முதல் VI வகைத் தனிப் பயிற்சி அட்டைகளைப்போல் ஒவ்வொரு வகைக்கும் வேறு கேள்விகள் தயாரிக்கவும்.

11. மாணவரின் சொல்தொகுதியை விருத்திசெய்ய என்ன முறைகளைக் கையாளுவீர்?

12. ஒரு பையனின் படிப்பின் வேகத்தை எவ்வாறு நிர்ணயிக்கலாம்? அதை அதிகப்படுத்த யாது செய்வீர்?

13. குரல் போட்டுப் படிப்பதைக் குறைப்பதற்கான வழிகள் நான்கு கூறுக.

14. வாசக பாடம் நடத்துவதில் நீர் அநுசரிக்கக்கூடிய பல படிகள் (Steps) யாவை?

15. வாசக பாடத்தில் ஆரம்பக் கேள்விகள்; இறுதிக் கேள்விகள், —இவைகள் எத்தன்மையனவாக இருக்கவேண்டும்?

## 6. வாசித்தலின் நோக்கம்

தடுமாற்றமின்றி வாசிக்கக் கீழ் வகுப்புக்களில் பழகிய பின்னர் மேல் வகுப்புக்களில் பிள்ளைகள் தாமாகப் படிக்கப் பழகவேண்டும். தாமாகப் படிப்பதன் பொது வான நோக்கங்களாவன (Purpose of reading): **1. விஷயங்களைத் தெரிந்துகொள்வது. 2. இரசித்து இன்புறுவது. 3. கற்பனைசக்தியைத் தூண்டிப் புதிய எண்ணங்களை உதிக்கச்செய்வது. 4. பாஷா ஞானத்தை விருத்திசெய்வது.**

1. **விஷயங்களைத் தெரிந்துகொள்வது:** (a) செயல் முறைக்கான (Project) பிரச்னையைப் பற்றிய, (b) கை வேலை (Hand-work) சம்பந்தமான, (c) ஓய்வு நேர இஷ்ட வேலை (Hobbies) சம்பந்தமான தகவல்களைப் புத்தகங்களில் மாணவர் தாமாகப் படித்தறிதல் வேண்டும். அவர்களுடைய தினசரி வாழ்க்கையைப் பற்றியும்,

சுற்றுப்புற சம்பவங்களைப் பற்றியும், நவீன இயந்திரங்களைப்பற்றியும் அறியப் பிள்ளைகளுக்கு அவா உண்டு. அவைகளை விவரிக்கும் புத்தகங்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்டு மலிவாகக் கிடைக்க வேண்டியது அவசியம். பத்திரிகைகளிலும், மாத சஞ்சிகைகளிலும், துண்டுப் பிரசுரங்களிலும் பலதரப்பட்ட விஷயங்கள் பொதிந்து கிடக்கும். அவைகளைப் படிக்கத் தூண்டுவதால் பிள்ளைகளுடைய உலக அறிவு பெருகும். அகராதிகள், நூல்களின் பொருளடக்கம், பொருள் அட்டவணை, பஞ்சாங்கம் முதலியவைகளில் காணப்பெறும் தகவல்களைத் தேடிக் கண்டறியவும் பழக்கலாம். கட்டுரைகள் எழுதுவதற்கும், சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்கும், சமாசாரங்கள் சேகரிக்கவும் சுயமாகப் படிக்கத்தூண்டலாம்.

2. **இரஸித்து இன்புறுவது:** பிள்ளைகள் இரஸித்து இன்புறுவதற்கான புத்தகங்கள் பலதரப்பட்டனவாக இருக்கவேண்டும். ஏனென்றால், பல் வேறு பிள்ளைகளுக்கும் பல் வேறு விஷயங்களில் விருப்பம் இருக்கும். பிள்ளைகளின் தனி விருப்பங்களை ஆசிரியர் தெரிந்து, அவற்றிற்கான புத்தகங்களை நூல் நிலையங்களில் வாங்கி வைக்கவேண்டும். வீரம், துணிகரம், ஆச்சரியம் போன்ற உயர்ந்த உணர்ச்சிகளை எழுப்பக்கூடிய கர்ண பரம்பரைக் கதைகள், கற்பனைக் கதைகள், உண்மை வரலாறுகள் இவை இரஸித்து இன்புறுவதற்குரியன. படித்து அனுபவிப்பதற்கான புத்தகங்கள் பிள்ளைகளுக்குப் புரியக்கூடிய எளியநடையில் எழுதப்பட்டிருக்க வேண்டும். கருத்துக்களும் சொற்களும் கடினமாக இருந்தால் படிப்பில் அருவருப்பு உண்டாகும். இப் புத்தகங்களில் பிள்ளைகளுக்கு முன்னமே தெரியாத புதிய சொற்கள் இருக்கக்கூடாதென்று சொல்வதற்கில்லை. ஆனால், அப் புதிய சொற்களின் பொருள், சந்தர்ப்பம் பற்றி விளங்கக்கூடியதாக இருக்கவேண்டும். அப்பொழுது கடின பதங்களால் படிப்பு தடைப்படாது. கண்ணையும் மனதையும் கவரும்படியான பல படங்கள் இருக்கவேண்டும். பிள்ளைகள் மௌனமாகப் படிக்கும்போது, ஆசிரியர் தனித்தனியே அவர்களிடம் சென்று, கூடப்படித்து ரஸிப்பதால் ரஸிப்பு உணர்ச்சி பிள்ளைகளுக்குப் பரவும்.

3. **கற்பனு சக்தியைத் தூண்டிப் புதிய எண்ணங்களை உதிக்கச் செய்வது:** பல புத்தகங்களைப் படிக்கும்

பொழுது பிள்ளைகளுக்குப் புதிய எண்ணங்கள் உதித்தல் கூடும். அவ் எண்ணங்கள் வியாசங்கள் எழுதவும், சொற்பொழிவுகள் நிகழ்த்தவும், கேள்விகளுக்கு விடையளிக்கவும், பாடசாலைப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளும், கதைகளும் நாடகங்களும் சிருஷ்டித்து எழுதவும் பயன்படும்.

4. **பாஷா ஞானத்தை விருத்திசெய்வது:** தாய் மொழியில் பல நூல்களைப் படிப்பதால் பேசுவதிலும், எழுதுவதிலும் செந்தமிழ் நடை படியும்; பிள்ளைகளின் சொற்களஞ்சியமும் பெருகும். இந்நோக்கம் நிறைவேறும்பொருட்டு, பண்டை நூல்களிலிருந்தும் நவீன நூல்களிலிருந்தும் உயர்தர வசனங்களையும், செய்யுட்களையும் படிக்கச்செய்யலாம்.

இங்கு தனித்து விவரிக்கப்பட்டபோதிலும், மேற்கூறிய நான்கு பயன்களும் எல்லாப் புத்தகங்களிலும் தொடர்ந்து நிற்கும்; கலந்தே பயிற்சிக்கப்படலாம்.

**பயிற்சி வினாக்கள்**

1. முதல் மூன்று வகுப்புக்களில் வாசிப்பின் நோக்கம் யாது? மேல் வகுப்புக்களில் யாது?

2. மாணவர் தாமாகப் படிப்பதால் எய்தக்கூடிய பயன்கள் நான்கு யாவை?

3. எந்தெந்தப் பாடங்கள் சம்பந்தமாகப் பிள்ளைகள் தாமாகப் படித்து, விஷயங்களைக் கண்டறியச் செய்யலாம்?

4. தாமாகப் படிப்பதால் பாஷா ஞானம் எவ்விதங்களில் விருத்தியாகும்?

## 7. செய்யுட் பாடம்

பாடல்களைப் பாடுவதும், செய்யுள்களைப் படிப்பதும் தாய்மொழிப் போதனையில் ஒரு பெரும் பகுதியாகும். மனிதருடைய வாழ்க்கை அனுபவங்களிலிருந்து எழும் உணர்ச்சிகளை ஓசை, இனிமை, சொல் நயம், பொருளழகு இவற்றுடன் வெளிப்படுத்துவது செய்யுளாகும். செய்யுளைச் 'சொல் சித்திரம்', அல்லது 'சொல் ஓவியம்' எனலாம். இது அழகுக் கலைகளில் ஒன்றாகும். வசன நடையில் இவ்வித நயங்கள் அரிதாகவே காணப்படும்.

**செய்யுட் பாடம் கற்பிப்பதன் நோக்கம்:** புதிய சொற்களை யறிதல், பொருள் கூறுதல் முதலிய மொழிப் பயிற்சி, செய்யுட் போதனையின் பிரதான நோக்கமன்று. செய்யுள் கற்பிக்கும்போது கவியின் கருத்துக்

கள், அவரது உணர்ச்சிகள், இயற்கை அன்னையிடம் அன்பு, அழகிய பொருள்கள் பால் ஆவல் ஆகியவற்றைப் பிள்ளைகள் உணரும்படி செய்வதே செய்யுள் போதனையின் நோக்கமாகும். இந் நோக்கம் கைகூடுவதற்கு ஆசிரியர் செய்யுளைத் தெளிவுடனும் உணர்ச்சியுடனும் படிப்பதோடு, சம்பாஷணைகள், வருணனைகள், பாடல்கள் மூலமாகக் கவிதையின் கருவூலங்களை விளக்கக்கூடிய சூழ்வு ஒன்று ஏற்படுத்திப் பிள்ளைகளைக் கவியின் உணர்ச்சிகளை உணரும்படி செய்யவேண்டும். திருத்தமான உச்சரிப்புடன் தெளிவாகச் செய்யுளை ஆசிரியர் வாசிக்கும்போது தமது குரலினாலும், தொனி மாற்றத்தாலும் கவியின் கருத்தை வெளிப்படுத்த முயற்சித்தல் அவசியமாகும். சிறந்த இலக்கியங்களைப் படிப்பதற்குச் செய்யுட் பாடம் அடிப்படையாயிருக்கவேண்டும். செய்யுள் ஒரு தனிப் பாடம் என்ற உணர்ச்சியைச் சிறுவரது உள்ளத்தில் புகுத்தல் கூடாது.

**பலவகைப் பாடல்களும் செய்யுட்களும்** : செய்யுட்கள் பலவகைப்படும்; பாப்பா பாட்டுக்கள், தாலாட்டுப் பாட்டுக்கள், அபிநயப் பாட்டுக்கள், நாட்டுப் பாட்டுக்கள், சிந்துகள், விடுகவிகள், கதைச் செய்யுட்கள், வருணனைச் செய்யுட்கள், நீதிச் செய்யுட்கள், துதிப் பாக்கள், தேசீய கீதங்கள் இவைகளில் வகைக்கு இரண்டுக்குக் குறையாமல் பிரதி வருஷமும் ஒவ்வொரு வகுப்பிலும் போதிக்கவேண்டும். இச் செய்யுட்களையும் பாட்டுக்களையும் அந்தந்த வகுப்புக்குத் தக்கவாறு தெரிந்தெடுத்து எழுதி வைக்கவேண்டும்.

செய்யுட் கருத்துக்களையும், நயங்களையும் மாணவர் உணர்ந்து அநுபவிப்பதே செய்யுட் போதனையின் நோக்கம் என்று முன்பு கூறப்பட்டது. பாலர்களது அனுபவத்திலிராதனவும், புரியாதனவுமான நிகழ்ச்சிகளும் உணர்ச்சிகளும் அவர்களுக்குச் சுவையளிக்கமாட்டா. ஆதலால், கீழ் வகுப்புக்களுக்குரிய செய்யுட்களும் பாடல்களும் பாலரது அநுபவங்களைப் பிரதிபிம்பிக்கக் கூடியனவாக இருக்கவேண்டும்; அவர்களது இயற்கை விருப்பங்களுக்கு ஒத்தனவாகவும் இருக்கவேண்டும். உற்சாகத்தைத் தூண்டுமாறு உயிர் ததும்பும் சந்தமும், சொற்கள் திரும்பத் திரும்ப வந்து பிரதிபலிக்கும் ஓசையும், கிலுங்கல் ஒலியும் உள்ள பாடல்களே பிள்ளைகளின் மனதையும் செவியையும் கவரும்.

மேலும், நமது ஆரம்ப பாடசாலைகளில் செய்யுட் பாடத்தில் உலகநீதி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நீதி நூல்கள் மட்டுமே சாதாரணமாகக் கற்பிக்கப்படுகின்றன. உயர்ந்த நீதிகளை இளம்பிள்ளைகளின் மனத்தில் பதியவைக்க வேண்டுவது அவசியமெனினும், அவைகளில் அடங்கிய கருத்துக்கள் முழுவதும் அவர்களுக்குப் புரியக்கூடியன அல்ல. மேலும், ஒரே வகையான நீதி வாக்கியங்களாக இருந்தால் அவர்களுக்கு அருவருப்பு உண்டாகும். ஆதலால், பாலர்களது விளையாட்டுத் தன்மைக்கும், மன உல்லாசத்திற்கும் பொருந்துமாறு, பலவிதச் சுவை பொருந்திய இதர இனிய பாட்டுகளும் நவீன பாடதிட்டத்தில் அத்தியாவசியமாகின்றன. பாலர்கள் விரும்பிக் கற்கத்தக்க தாலாட்டு, விளையாட்டுப்பாட்டு முதலிய குழந்தைப் பாட்டுக்கள், கடவுள் துதிப்பாக்கள், நானாவித இதர பாடல்கள், அபிநயப்பாட்டுககள் முதலியவற்றையும் போதிக்க வேண்டும். அவர்கள் இலகுவாக வாசிக்கக்கூடிய விதம் இப் பாட்டுக்கள் சொற்பிரிவு செய்யப்பட்டிருப்பது நலம். பிரத்தியேகமான ஒரு நோட்டுப் புத்தகத்தில் அவர் விரும்பும் பலவகைப் பாட்டுக்களை எழுதிவைத்துக்கொள்ளச் செய்யலாம்.

நடுத்தர அல்லது உயர் வகுப்புக்களில் தேவாரம், திருவாய்மொழி, திருப்புகழ் முதலிய துதிப்பாக்களும், அரிச்சந்திர புராணம், நளவெண்பா முதலிய கதைப் பகுதிகளும், வருணனைச் செய்யுட்களும், நீதிச் செய்யுட்களும், காவியப் பகுதிகளும், தனிப்பாடல்களும் போதிக்கப்படலாம், பண்டைக்கால பிரபல செய்யுட்களும், இக்காலத்துக் கவிஞர்களுடைய உயர்தரப் பாடல்களும், போதிக்கப்படவேண்டும்.

**செய்யுள் போதிக்கும் முறை:** வசன பாடம் நடத்தும் முறையில் விவரிக்கப்பட்ட முக்கிய அம்சங்களைச் செய்யுட்போதனையிலும் கைக்கொள்ளலாம். ஆனால், செய்யுட்களை இராகத்துடன் வாசிப்பதே சிறந்தது. மேலும், இனிய ஓசையும், ஆழ்ந்த கருத்துமுள்ள பாடல்களைப் பிள்ளைகள் மனப்பாடஞ் செய்து உணர்ச்சியுடனும் உருக்கத்துடனும் ஒப்பிக்குமாறு பழகவேண்டும். எல்லாச் செய்யுட்களுக்கும் பழைய முறைப்படி பதவுரை, பொழிப்புரை, கருத்துரை என்ற விளக்கம் தேவையில்லை. பாட்டை, ஆசிரியர் பதம் பிரித்துச் சரிவர வாசிப்பதிலிருந்தே, பிள்ளைகள் அதன் கருத்தை யறிதல் கூடும்.

எம்முறையை அனுசரித்தாலும், போதிக்கப்படும் பாட்டின் கருத்தைப் பிள்ளைகள் கிரகிப்பதே முக்கியமென்பதை ஆசிரியர் உணரவேண்டும்.

நேராகப் புரியக்கூடிய விஷயங்களைப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை என்ற அனாவசியச் சொல் விளக்கத்தினால் குழப்பம் உண்டாக்குவதை முற்றிலும் விலக்கவேண்டும். சாதாரணமாகச் சில அரும்பதங்களுக்குமட்டும் அர்த்தம் போதித்தால் போதும். ஆரம்ப வகுப்புக்களில் நீதிவாக்கியங்களைக் கற்பிக்குமுன், அவைகளை விளக்கும் கதைகளை பீடிகையாகக் கூறி, நீதியை வருவித்துப் பிறகு செய்யுள் வாக்கியத்தைப் போதிக்க வேண்டும். பிள்ளைகள் கதைப்பாட்டுகளை அபிநயத்துடன் நடித்துக்காட்டலாம்.

ஒரு ரோஜா மலரைக் கண்டு மகிழ்ச்சியடைபவன் அதன் வனப்பு, அமைப்பு, நிறம், மணம் இவற்றில் மனத்தை ஈடுபடுத்துகிறான். அதை இதழ் இதழாகப் பிய்த்து அழகு பார்ப்பதில்லை. அதுபோல, ஓர் அழகிய பாடலை முதலில் படிப்பது, அந்வயம் கொடுப்பது, பதம் பிரிப்பது, அர்த்தம் கற்பிப்பது, பொழிப்புரை கேட்பது, கருத்து வருவிப்பது, உபமான உபமேயம் விளக்குவது முதலிய பழைய முறைப்படி கற்பிப்பது செய்யுட் போதனையைச் சாரமற்றதாக்கிவிடும். கவிதையின் கருத்தையும் உணர்ச்சியையும் அறிய அம்முறை பிரதிகூலமாகுமேயொழிய அனுகூலமாகாது. ஆதலால், இப்பண்டை முறை இக்காலத்தில் பெரிதும் நிராகரிக்கப்படுகிறது.

மேல் வகுப்புக்களில் உபமான உபமேயம், பிறவுமுள்ள அணிகள், சொல் அழகு, பொருள் அழகு, ஓசை இனிமை, இலக்கண விசேஷம் முதலியவைகளையும் எடுத்துக்கூறலாம். நூலாசிரியர் வரலாறு, மேற்கோள் முதலியவைகளையும் கூறுவது நூல்நயத்தை விளங்கச் செய்து, தமிழ்மொழியில் பற்றுதலை யுண்டாக்கும்; மேலும், அவ்வாசிரியரது இதர நூல்களைப் படிக்கவும் அவா எழுப்பும்.

செய்யுள் அல்லது பாடல் முழுவதையும் மௌனமாக வாசித்துக் கருத்தறியச்செய்வதே புதிய முறையாகும். நீண்ட பாடலாக இருந்தால்தான் சிறு பகுதிகளாகப் பிரித்துப் படிக்கச் செய்யவேண்டும்; முழுப் பகுதியாகப் படித்தால்தான் இரஸித்துணர்தல்கூடும்.

முழுப்பாட்டையும் உணர்ச்சியுடனும் உருக்கத்துடனும் பதம்பிரித்து இராகத்துடன் உபாத்தியாயர் வாசித்துக் காட்டலாம். அவ்விதம் வாசிப்பதிலிருந்தே பிள்ளைகள் அதன் கருத்தை யறிதல் கூடும்.

**மனப்பாடம் செய்வித்தல் :** நிர்ப்பந்தத்தின் பேரில் மனப்பாடம் செய்யச் சொல்வதால் ஒரு பயனுமில்லை. சிறுவர்கள் செய்யுளின் அழகைத் தாமாகவே உணர்ந்து மனப்பாடம் செய்யவேண்டும். பல குழந்தைகள் சேர்ந்து பாடலைப் பாடுவதற்கு இடங் கொடுக்கவேண்டும். ஆனால் அவரவர் தனித்தனியாகச் சொல்லுவதற்கே அடிக்கடி அவர்களைப் பழக்கவேண்டும். வகுப்பில் கற்பிக்கப்படும் பாடல்கள் எல்லாவற்றையும் பாராமல் படிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்துவதால், சிறுவர்களுக்குச் செய்யுட் பாடத்தின்மேல் வெறுப்பு ஏற்படலாம். ஆதலால், அவர்கள் விரும்பும் செய்யுட்களை அல்லது சிற்சில பகுதிகளை மட்டும் மனப்பாடஞ் செய்தல் போதுமானது.

**செய்யுள் பாட சம்பந்தமாக ஆசிரியர் கவனிக்க வேண்டிய பொது அம்சங்கள் :** 1. அளவுக்கு மீறிச் செய்யுளைப் பிரித்துப் பொருள் கூறவேண்டாம். 2. மனப்பாடம் செய்யக் கட்டாயப்படுத்துதல் கூடாது. 3. குழந்தைகளுக்கு இயற்கையாகவுள்ள விருப்பங்களையும், தெரிந்தெடுக்கும் திறனையும் தடைசெய்ய வேண்டாம். 4. வயதிற்கு மீறிய உணர்ச்சிகள் ததும்பும் செய்யுட்களைச் சிறு பிள்ளைகளுக்கு போதிக்கவேண்டாம். 5. நல்ல அழகிய கருத்துக்கள் அடங்கிய பாடல்களைச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது வாசித்துக் காட்டலாம். 6. சுலபமான கவிதைகள் இயற்றப் பிள்ளைகளைத் தூண்டலாம். 7. துண்டுச் செய்யுட்களும் பாடல்களும் சேகரிக்கச் செய்யலாம். 8. செய்யுளுக்கு ஏற்ற படங்கள் வரைய உற்சாகப்படுத்தலாம். 9. செய்யுட்களைத் தொகுத்து வகுப்புச் செய்யுள் புத்தகமொன்று தயார் செய்யத் தூண்டலாம்.

**செய்யுட் பாட முடிவில் கொடுக்கக்கூடிய சில அப்பியாசங்கள் :** 1. படித்த செய்யுளைப் படங்கள் மூலம் விவரித்தல். 2. கருத்தை வசன நடையில் எழுதுதல். 3. கதைச் செய்யுட்களை நடித்தல், 4. விரும்பிய செய்யுளை மனப்பாடம் செய்தல். 5. கவிதை இயற்றப் பழகுதல். 6. செய்யுளை இராகத்துடன் பாடச்செய்தல்.

### பயிற்சி வினாக்கள்

1. செய்யுள், வசனம்—வேற்றுமை விளக்குக.

2. செய்யுட் பாடம் கற்பிப்பதன் முக்கிய நோக்கம் யாது?

3. முதல் வகுப்பில் ஒரு வருஷத்தில் போதிக்கக்கூடிய பலவகைப் பாடல்களின் (மொத்தம் 16) ஜாபிதா தயாரிக்கவும். அதே விதம் II, III வகுப்புக்களுக்கும் தனித்தனி தயாரிக்கவும்.

4. செய்யுள் போதிப்பதில் பழைய முறை யாது? புதியமுறை யாது?

5. முதல் இரண்டு வகுப்புக்களில் உலகநீதி, ஆத்திசூடி போன்ற செய்யுட்களைக் கற்பிக்கத் தேவையில்லையென்று தற்காலத்தில் கூறுகின்றனர். ஏன்?

---

## 8. வசன பாடம்

**வசன பாடப் பகுதிகள்:** தமிழ் மொழியிலுள்ள வசனம், செய்யுள் என்னும் இரு பகுதிகளில் செய்யுட் போதனையைப்பற்றி முந்திய பக்கங்களில் விவரித்துள்ளோம். இங்கு வசனப்பகுதியைப் பற்றிக் கவனிப்போம்.

மேலும், பண்டைக் காலத்தில் தமிழ் மொழியில் வசனப்பகுதி மிகக் குறைவு; சென்ற சில ஆண்டுகளாகத்தான் தமிழறிஞர் சிறந்த வசன நூல்கள் எழுதியுள்ளனர்.

வகுப்புக்களுக்கு வேண்டிய வசனப்பகுதிகளை ஆசிரியர் தாமாகவே தேர்ந்தெடுப்பதில்லை. வகுப்புக்குரிய வாசகபுத்தகம் ஒன்றை வாங்கிக் கொடுத்து, அதன்படி பாடம் நடத்துகிறார்கள். எத்தகைய வாசக புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வகுப்புக்குரிய பாடபுத்தகமாக நிர்ணயிக்கவேண்டுமென்பதைப்பற்றி விரிவாக முன்னமேயே (47—51 பக்கங்களில்) விவரிக்கப்பட்டுளது. பொதுவாக வாசக புத்தகங்கள்,

1. அந்தந்த வகுப்புப் பிள்ளைகளின் வயதுக்கும், மன வளர்ச்சிக்கும், அநுபவத்துக்கும் ஒத்தவையாக இருக்கவேண்டும்.

2. மேல் வகுப்புப் புத்தகங்களில் நகைச்சுவை, வீரம், துணிகரம், அன்பு முதலிய உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய பாடங்கள் அடங்கியிருக்கவேண்டும்.

3. கதைகள், நாடகப்பகுதிகள், சம்பாஷணைகள், பிரயாண வரலாறுகள், வாழ்க்கை வரலாறுகள், சுய சரிதை, வருணனைப் பகுதிகள், சரித்திரம், விஞ்ஞானம் முதலிய விஷயங்களைப்பற்றிய பாடங்கள் கலந்திருக்க

வேண்டும். பல்வகைச் சுவையுள்ள பகுதிகளும் சேர்க்கப்பட்டிருப்பது நலம்.

4. வசீகரமான சிறந்த நடையில் எழுதப்பட்டிருக்க வேண்டும். விஷயங்களும், பாஷா நடையும் படிப்படியாக உயர்ந்து (graded), கடினம் பெற்றிருக்கவேண்டும்.

5. தகுந்த விளக்கப் படங்கள் தாராளமாகச் சேர்த்திருக்கவேண்டும்.

6. புத்தகங்கள் வகுப்புக்குத் தக்க பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கவேண்டும். கட்டமைப்பு (binding) கண்கவர் வனப்பும், வலுவும் உள்ளதாக இருக்கவேண்டும்.

7. ஒவ்வொரு பாடத்திலும் சில புதிய சொற்களும் கருத்துக்களும் அமைந்திருக்கவேண்டும்.

8. பழையமுறையில் தயாரிக்கப்பட்ட வாசக புத்தகங்களின் பாடப்பகுதிகள் பெரும்பாலும் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டு ஒரேவித பாஷாநடையை உடையனவாக இருந்தன. இவ்விதப் புத்தகங்கள் அதிக நன்மை பயக்கமாட்டா.

சிறந்த பல ஆசிரியர்களால் எழுதப்பட்டு, பலவித நடைக்கு உதாரணங்களாகவுள்ள பகுதிகள் இக்கால வாசகங்களில் தொகுக்கப்படுகின்றன. மேலும், எல்லாப்பாடங்களும் உயரிய கடினமான செந்தமிழ் நடையிலேயே இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. தற்காலத்தில் நவீன நடையில் எழுதப்படும் சாதாரண வசனப் பகுதிகளும் வாசக பாடங்களில் சேர்க்கப்படவேண்டுமென்பது இப்போதைய கருத்து.

சிறந்த வசன புத்தகங்களில்கூட தாய்மொழிப் போதனைக்கு வேண்டிய எல்லா அம்சங்களும் பொருந்தியிருப்பதில்லை. ஆதலால், வாசக புத்தகமென்பது 'ஓர் ஊழியனே ஒழிய எஜமானன் அல்ல' என்பதைத் தமிழாசிரியர் உணரவேண்டும். பத்திரிகைத் துண்டுகள், கையெழுத்துப் பிரதிகள், வேறு பல நூல்களிலிருந்து ஆசிரியர் தாமே சேர்ந்தெடுத்த வசனப்பகுதிகள் இவைகளையும் போதிக்கவேண்டும். மேலும், பாடபுத்தகமாக நிர்ணயித்த வாசகபுத்தகத்தை உபயோகிக்கு முன்பு ஆசிரியர் அதைக் கவனமாக வாசித்து அந்தப் பள்ளிக்கூடத்தின் நிலைமைக்குப் பொருத்தமாகப் பாட வரிசையை மாற்றிக் கொள்ளலாம்.

**ஆழ்ந்து படித்தலும் மேலாகப் படித்தலும்:** சில நூல்களை ஆழ்ந்து படிக்கவேண்டும்; சிலவற்றை ஆழ்ந்து

படிக்காமல் மேலாகப் படித்தால் போதும். வாசக புத்தகங்கள் ஆழ்ந்து படித்தற்குரியன. அவற்றிலுள்ள பகுதிகள் சிறந்த வசனங்களிலிருந்தும், செய்யுட்களி லின்றும் பொறுக்கியெடுக்கப்பட்டவை. ஒவ்வொரு பாடத்திலுமுள்ள கருத்துக்களின் நுட்பங்களை ஊன்றிக் கவனித்து அறிவதே ஆழ்ந்த படிப்பு (detailed study) ஆகும். மேலும் சொல்லழகு,பொருளழகுகளை யுணர்ந்து அநுபவிப்பதும், கதா பாத்திரங்களின் குணங்களையும் தன்மைகளையும் அறிதலும், பாட அமைப்பின் ஒழுங் கையும் நேர்மையையும் ஆராய்வதும் ஆழ்ந்து படித் தலின்பாற்படும். நுனிப்புல் மேயாமல் இவ்விதம் ஆழ்ந்து படித்தலே சீக்கிரத்தில் அதிகத் தேர்ச்சியை விளைவிக்கும்; சிரமப்பட்டு அதிக விஷயங்களைக் கிரகிக் கும் திறமையையும் உண்டுபண்ணும்.

**ஆழ்ந்து படிக்கவேண்டாத உப வாசகங்கள்:** ஆழ்ந்து படிக்கும் சாதாரண வாசக புத்தகத்துடன், ஆழ்ந்து படிக்க வேண்டாத (Non-detailed study) சில தொடர் கதைப் (Continuous story books) புத்தகங்களையும், வேறு நூல்களையும் IV-வது வகுப்பு முதலான மேல் வகுப்புக்களில் உபவாசகமாகவைத்து நடத்துவது மொழியறிவைச் சீக்கிரத்தில் விருத்திசெய்யும். பிள்ளை களை வகுப்பில் மௌன வாசிப்பு மூலம் படிக்கச்செய்ய லாம், அல்லது பிறருதவியில்லாமலே வீட்டில் படித்து வரச் செய்யலாம். இவைகளின் விஷயச் சுருக்கத்தை வாய்மொழியாகவும் கூறலாம்; வியாசமாகவும் எழுதலாம். இப்புத்தகங்களில் வரும் கடின பதங்களின் பொருளைச் சந்தர்ப்பத்தை யொட்டிப் பிள்ளைகள் தாமாகவே அறிந்துகொள்ளுதல் கூடும். இதில் எல்லாக் கடின பதங்களுக்கும் அர்த்தம் தெரியவேண்டுமென்பது அவ சியமில்லை; வாக்கியந்தவறாமல் படிக்கவேண்டுமென்ற நியதியுமில்லை; தொடர்ந்த கருத்தைப் பின்பற்றி இரஸித்தால் போதும்.

இவ்விதம் மேலாகப் படிப்பதால், குறைந்த நேரத் தில் அதிகப் புத்தகங்களைப் படிக்கலாம். அதுபற்றி உலக அறிவும் மொழியறிவும் விசாலிக்கும். மேலும், பிள்ளை கள் தாங்கள் இஷ்டப்படும் புத்தகங்களைப் படிப்பதால் இவ்வித வாசிப்பு, தாமாகப் படிப்பதைத் தூண்டும்; ஓய்வு நேரங்களை நல்வழியிற் செலவிடக்கூடிய சிறந்த பொழுதுபோக்காகும்.

• **பள்ளிக்கூடப் புத்தகசாலை** (School library) : மேல் வகுப்புக்களில் நிர்ணயிக்கப்பட்ட வாசகம், உபவாசகம் இவற்றோடு பள்ளிக்கூடப் புத்தகசாலையிலுள்ள வேறு புத்தகங்களையும் பிள்ளைகளைப் படிக்கச் செய்யவேண்டும். சில பாடசாலைகளில் 'நூல் நிலைய வேளை' (Library period) என்று கால அட்டவணையில் ஒதுக்கிவைக்கிறார்கள். மேலும், வீட்டிற்குக் கொண்டுபோய்ப் படிக்கவும் அநுமதி வழங்குகிறார்கள்.

புத்தகசாலையை நூல் நிலையம் என்றும் கூறுவதுண்டு. பாடசாலைப் புத்தகசாலைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்: **1. பொதுவான நூல் நிலையம்** (General library): எல்லா வகுப்பு மாணாக்கர்களும் ஆசிரியர்களும் உபயோகிக்கக்கூடிய பல கலைகள் சம்பந்தமான புத்தகங்களும், சமாசாரப் பத்திரிகைகளும் இதில் இருக்கவேண்டும். **2. வகுப்பு நூல் நிலையம்** (Class library); ஒவ்வொரு வகுப்பு அறையிலும் அவ்வகுப்புப்பிள்ளைகள் படிப்பதற்குப் பொருத்தமான புத்தகங்கள் அடங்கிய ஒரு சிறு புத்தக அலமாரி இருக்கவேண்டும். இப் புத்தகங்கள் இவ்வகுப்பு ஆசிரியரின் பொறுப்பில் இருக்கும். அவர் அவைகளைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து வாங்குவதுடன், அப்புத்தகங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மாணாக்கனும் படிக்குமாறு வற்புறுத்தவேண்டும். **3. ஆசிரியர்களுக்கான தகவல் புத்தகங்கள் அடங்கிய நூல் நிலையம்** (Reference library for Teachers): இதில் அகராதி, பல கம்பெனியாரது வகுப்புப் புத்தகங்கள், தேச படப் புத்தகம் (Atlas), பழைய நூல்களின் அர்த்தப் புத்தகங்கள், போதனாமுறைப் புத்தகங்கள் முதலியன இருக்கவேண்டும்.

**நூல் நிலையப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தல்** :—1. மாணாக்கர் படிப்பதற்கான புத்தகங்கள், அவர்கள் மனதைக் கவரக்கூடியனவாகவும், ஆசிரியர் வற்புறுத்தாமல் தாமே விரும்பி வாசிக்கக் கூடியனவாகவும் இருக்கவேண்டும். 2. அந்தந்த வகுப்புப் பிள்ளைகளின் வயதுக்கும், மனப்பான்மைக்கும், பாஷா ஞானத்திற்கும் ஏற்றனவாயிருக்கவேண்டும். 3. சிறுவர் சிறுமியரது ருசி வித்தியாசத்திற்குத் தக்கபடி இருபாலருக்கும் வெவ்வேறு வகைப் புத்தகங்கள் இருப்பது நலம். 4. பிறருதவியின்றித் தாமாகவே பிள்ளைகள் படித்தறியும் வண்ணம் இப்புத்தகங்கள் இலகுவான செந்தமிழ் நடையில் எழு

தப்பட்டிருக்கவேண்டும். 5. சிறந்த பல படங்கள் கொண்டவும், பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டும், இலகுவில் கிழியாதபடி பைண்டு செய்யப்பட்டுமுள்ள புத்தகங்களையே வாங்கவேண்டும்.

பின்வரும் புத்தகங்கள் ஆரம்பபாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமானவை. கதைப்புத்தகங்கள், மாயாவினோதக் கதைகள் (Fairy tales), கட்டுக் கதைகள், புராணக் கதைகள், சரித்திரக் கதைகள், சாகசக் கதைகள் (Tales of Adventure), நவீன இயந்திர அமைப்பு, பொது அறிவு இவை சம்பந்தமான சிறு புத்தகங்கள், பல நாட்டுச் சிறுவர்களைப்பற்றிய பூகோளக் கதைகள், பிரயாண வரலாறுகள் முதலியன.

**பயிற்சி வினாக்கள்**

1. ஆழ்ந்து படித்தல், மேலாகப் படித்தல்:-வேற்றுமை விளக்குக.

2. உமது பாடசாலையில் புத்தகசாலை இருக்கிறதா? பொதுவான நூல் நிலையம், வகுப்பு நூல் நிலையம் இவை ஒவ்வொன்றின் தேவை யாது?

3. நூல்நிலையப் புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் ஆசிரியர் கவனிக்க வேண்டியன யாவை?

---

## 9. இலக்கணம்

**இலக்கியம், இலக்கணம்:** வசன நூலும் செய்யுள் நூலும் பொதுவாக இலக்கியம் எனப்படும். ஒரு பாஷை தோன்றி நாளடைவில் வளர்ந்து அதிலுள்ள இலக்கியம் பெருகிய பின்னர் அவ்விலக்கியத்தை ஆராய்ந்து அம்மொழியின் இலட்சணங்களை எடுத்தெழுதலாயினர். இதனாலேயே "இலக்கியம் கண்டதற்கிலக்கணம் இயம்பலின்" என்று நன்னூல் ஆசிரியரும் கூறியுள்ளார்.

ஒரு மொழியைத் திருத்தமாகப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் சாதகமாக, அதன் இலட்சணங்களையும், விதி விலக்குகளையும் ஓர்ந்து உரைக்கும் நூல் இலக்கணம் எனப்படும். இலட்சணம் = இலக்கணம் = அழகு.

**இலக்கணம் கற்பிக்க வேண்டியது அவசியமா?** இலக்கண பாடம் பற்றி மும்முரமான விவாதங்கள் கல்வியுலகில் நிகழ்ந்து வருகின்றன. இலக்கணம் கற்பிப்பது சம்பந்தமாக மூன்று வேறுபட்ட அபிப்பிராயங்கள் உள்ளன:

தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும், எழுதவும் இலக்கணம் படியாமல் முடியாதென்றும், அதை யெல்லா வகுப்புக்களிலும் ஒரு தனிப் பாடமாகக் கற்பித்தே ஆகவேண்டுமென்றும் பழைய கட்சியினர் சாதிக்கின்றனர்.

பிறர் பிழையறப் பேசுவதைக் கேட்டும், நல்லமாதிரியான புத்தகங்களைப் படித்துமே பிள்ளைகள் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்றுக்கொள்ளுகிறார்கள் என்றும், இத்திறமைகளை உண்டாக்க இலக்கணஞானம் சக்தியற்றதென்றும், பாட திட்டத்தினின்றும் இலக்கண பாடத்தை அறவே ஒழித்துவிடவேண்டுமென்றும் நவீன ஆசிரியர்கள் வாதிக்கின்றனர்.

மிதவாதிகளாகிய பலர், பாஷையைத் திருத்தமாகப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் உபயோகப்படக்கூடிய இலக்கண அறிவு ஓரளவுமட்டும் தேவையென்றும், அவ்விலக்கண அறிவு அநுபவ முறையில் ஏற்படவேண்டுமென்றும் கருதுகின்றனர். இக் கொள்கையே இக்காலத்தில் அதிக ஆதரவு பெற்று, அநுஷ்டானத்திலும் வந்துளது.

**ஆரம்ப பாடசாலைகளுக்கான புதிய பாடதிட்டப்படி வகுப்புவாரி இலக்கண பாடதிட்டம் பின் வருமாறு ஆகும்:**

**I, II**-வது வகுப்புக்களில், இலக்கண விஷயங்கள் போதிக்க வேண்டியதில்லை.

**III**-வது வகுப்பு; (i) இலக்கணத்தின் முக்கிய முதற் பாடங்கள்,—பெயர்ச்சொல் வினைச்சொற்களைப் பிரித்து எடுத்துச் சொல்லவும், அவற்றின் ஒருமை பன்மை வேறுபாடுகளைக் காட்டவும் பழகுதல். முற்றுப் புள்ளியின் உபயோகம்;

(ii) கற்ற எழுத்துக்களின் நெடுங்கணக்கு வரிசை முறையைத் தெரிந்துகொள்ளுதல்.

**IV**-வது வகுப்பு: எழுவாய் பயனிலைகளின் பொருத்தம்; மூக்காலங்களும் அவற்றின் சரியான உபயோகமும்; மற்ற சொல் வகைகளைக் கண்டறிதல் போன்ற சில முக்கிய இலக்கண அம்சங்கள். கால் புள்ளி, முற்றுப்புள்ளி, மேற்கோள்குறி இவைகளை உபயோகிக்கத் தெரியவைத்தல்.

**V**-வது வகுப்பு: பேச்சிலும் எழுத்திலும் நிகழும் பிழைகளை நீக்கும் திறமை பிள்ளைகளுக்கு வாய்க்கும்பொருட்டு, முன்பே கற்றுள்ள ஆரம்ப இலக்கணப் பகுதிகளை நினைப்பூட்டலும் இன்றியமையாத இன்னும் சில விதிகளைக் கற்பித்தலும். திருத்தற் குறிகள்.

[குறிப்பு:—VI, VII, VIII வகுப்புகளுக்கான பின்வரும் இலக்கண பாடம் செகண்டரி கிரேடு மாணவருக்கு மட்டுமே.]

**VI-வது வகுப்பு:** இலக்கணமும் திருத்தல் அடையாளங்களும்,—இந்திய மொழிகளின் இலக்கணங்களில் எழுத்து, சொல் முதலியவற்றின் பயன் (function) எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு அவற்றின் அமைப்பும் (form) முக்கியம். ஆதலால், அமைப்பு, பயன் ஆகிய இரண்டையும் கற்கவேண்டும்.

திருத்தவேண்டிய இடங்களிலெல்லாம் திட்டமாய் திருத்திப் பொருளுணர்ச்சி தோன்ற இனிதாய் உரத்து வாசிக்கும் பாடப்பகுதிகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு, திருத்தக் குறிகளைக் கையாளும் பயிற்சிகள் தரவேண்டும். மாணவர்கள் தங்களுக்குத் தெளிவாக விளங்காத வாசகங்களில் திருத்தக் குறிகளை அமைக்கமுடியாது. அவர்களது படிப்பின் முடிவு வருஷத்தின் பிற்பகுதியில்தான், அவர்களுக்குச் சொல்லாற்றல், அறியும் உணர்ச்சி இவை வளர்ச்சி பெற்றிருக்கும் என்று எதிர்பார்க்கலாம். எனவே அதுவரையில் கொடுக்கப்படும் பயிற்சிகளின் பெரும் பாகம் முற்றுப்புள்ளி, காற்புள்ளி இவற்றைப் பற்றியதாக இருக்கவேண்டும். அச்சிடப்பட்ட தாள்களைப் பரிசோதனைக்காகக் கொடுப்பதானால், அவற்றில் திருத்தக்குறி இடவேண்டிய இடங்களையெல்லாம் செங்குத்துக் கோடுகளால் குறிக்கவேண்டும்.

சொல்வகைகளும் (Parts of speech) வடிவங்களும், தனிநிலை வாக்கியம், எழுவாய் பயனிலைகளுக்குள்ள அடிப்படையான வேறுபாடு, வாக்கியத்தின் பிற உறுப்புக்கள், இன்றியமையா முற்றுவினை, செயப்படுபொருள், வினையுரிச் சொல், பெயருரிச்சொல் முதலியன. தனி வாக்கியங்களில் சொற்கள் இயற்கை முறையில் அன்வயமாக அமைந்திருந்தாலும், அவ்வாறின்றி அமைந்திருந்தாலும், வாக்கிய அமைப்பை அறிந்துகொள்ளும் திறமை மாணவர்க்கு வாய்க்கவேண்டும். வாக்கிய வகைகள்.

**வாசக நிறுத்தக் குறியீடுகள்:** கருத்தைக் கருதி யிடும் குறிகள் முற்றுப்புள்ளியும் காற்புள்ளியும்.

சங்கேதக் குறிகள் :—

வினாக்குறி ?

வியப்புக்குறி !

மேற்கோட் குறி " "

**VII-வது வகுப்பு: இலக்கணமும் நிறுத்தற் குறிகளும்:** கலவை வாக்கியம் (Complex sentence) அதன் உறுப்புக்களைப் பிரித்தலும் சேர்த்தலும். **சொல் வகைகள்:** பெயர்ச்சொல், வினைச்சொல் முதலியவற்றின் பாகுபாடுகள், வினைச்சொற்களும், அவற்றின் பாகுபாடுகளும், வேற்றுமை, உருபுகள். **நிறுத்தற் குறிகள்:** அரைப் புள்ளியும் முக்காற் புள்ளியும்.

**VIII-வது வகுப்பு : இலக்கணமும் நிறுத்தற் குறிகளும் :** ஆறும் ஏழாம் வகுப்புக்களில் படித்த இலக்கணப் பகுதிகளை மீண்டும் படித்தல்.

புணர்ச்சி, செய்யுளிலும் வழக்கிலும் காணும் சாதாரண அணிகள், செய்யுளின் ஓசையமைதி (Rhythm) பற்றிய உண்மைகளைக் கற்றல்.

இலக்கண வழுவின்றிப் பேசவும் எழுதவும் பழகுதல், இதற்குக் கீழ்க்கண்ட பயிற்சிகள் பயன்படும் :

(அ) வாக்கியங்களைப் பொருள் மாறாது குறிப்பிட்ட வடிவில் பெயர்த்து அமைத்தல்.

(ஆ) வாக்கியக்கோவை யமைப்பை (Sentence sequence) மாற்றி எழுதுதல்.

(இ) கீழ்க் குறித்தவாறும் மாற்றி எழுதுதல் :—

1. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்குதல். 2. வினா வாக்கியத்தைச் சாதாரண வாக்கியமாக்குதல். 3. எதிர்மறையை உடன்பாடாக்குதல். 4. நேர்முகப் பேச்சைப் படர்க்கைப் பேச்சாக்குதல். 5. அலங்கார வினாவைச் (Rhetorical question) சாதாரண வாக்கியமாக்குதல். 6. குணத்தைக் குணியாக்குதல்.

**நிறுத்தற் குறிகள் :** ஆறும், ஏழாம் வகுப்புக்களில் கற்றுக் கொண்ட குறிகளை அறிதலும், இன்னும் அதிகப் பயிற்சி பெறுதலும். கருத்துக் குறிகள் ; கோடு—, இடைப் பிறவரற் குறிகள் ; இரட்டைக் கோடு — —, அரை வட்டக்குறி ( ).

---

**இலக்கணம் வெறுக்கப்படுவதேன்?:**—பாடசாலையில் போதிக்கப்படும் பல பாடங்களுள் மாணாக்கர் அதிகம் அருவருப்பும் அச்சமும் கொள்வது இலக்கண பாடமே யாகும். அதுபற்றி அவர்கள் இலக்கண பாடத்தை மிகவும் அலட்சியஞ் செய்கின்றனர். அவ்விதம் அவர்கள் இலக்கணத்தை வெறுப்பதற்கு இலக்கணம் காரணமன்று ; அதைப் போதிப்பதில் பழைய கால ஆசிரியர் கையாண்ட சுவையற்ற முறைகளே காரணமாகும்.

இயற்கையான அனுபவ முறையிலும், அனுமான முறையிலும் வாசக பாடத்தின் ஒரு பகுதியாக அதனுடன் இணைத்துத் தெளிவுற இலக்கணம் போதிக்கப் பெற்றால் ஏனைய பாடங்களைப்போல் இலக்கணமும் மாணவர் விரும்பும் ஒரு பாடமாக அமைவது திண்ணம்.

**பழைய முறையும் புதிய முறையும்:**

| பழைய முறை | புதிய முறை |
|---|---|
| 1. வாசக பாடத்துடன் சம்பந்தமில்லாமல், இலக்கணம் ஒரு தனிப் பாடமாகக்கற்பிக்கப்பட்டு வந்தது. அதற்கென பிரத்தியேகமாக ஒரு இலக்கண புத்தகமும் வாங்கிக் கொடுத்துப் போதிக்கப்பட்டது. | 1. இப்பொழுது இலக்கணம் வாசக பாடத்துடன் இணைத்துக் கற்பிக்கப்படுகிறது. கால அட்டவணையில், இலக்கணமென்று தனியாகக் காட்ட அவசியமில்லை. புது முறை வாசக புத்தகங்களில் ஒவ்வொரு பாடத்திலும் இலக்கணப் பகுதியும் சேர்ந்திருக்கும். |
| 2. விதிகளையும் சூத்திரங்களையும் முன்னதாகக் கூறி, பின்னர் உதாரணங்களால் விளக்குவது (Deductive method) வழக்கம். | 2. உதாரணங்கள் மூலம் விதிகளை வருவித்து (Inductive method), பிறகு அவைகளைப் பிரயோகிப்பது நவீன முறையாகும். |
| 3. அவசியம், அவசியமில்லாதன என்ற வித்தியாசமின்றி எல்லாப்பகுதிகளையும் குருட்டுப் பாடமாக மனப்பாடஞ் செய்வது வழக்கத்திலிருந்து வந்தது. | 3. அநுபவ முறையில் இலக்கணம் கற்பிக்கப்பட்டு, அடிப்படையான இலக்கண தத்துவங்கள் மட்டுமே போதிக்கப்படுகின்றன. |
| 4. எழுத்து, சொல், அணி, யாப்பு என்ற வரிசையில் இலக்கணம் கற்பிக்கப்பட்டது. இது யுக்தி வாத (Logical method) முறையாகும். இது சுவையற்ற முறை. | 4. பிள்ளைகள் கருத்துக்களை வாக்கியங்களாகவே வெளியிடுகின்றனர். ஆதலால் வாக்கியத்தின் இலக்கணத்தை முதலிலும், பின்னர் சொல் இலக்கணத்தையும், அதன் பின்னர் எழுத்திலக்கணத்தையும் போதிப்பதே இயற்கை முறையாகும். இம்முறையைப் பின்பற்றியே புதுமுறை இலக்கண புத்தகங்கள் எழுதப்படுகின்றன. |
| 5. ஆரம்ப வகுப்புக்களிலிருந்தே இலக்கணம் கற்பிப்பது பழைய வழக்கம். அதனால் இலக்கிய விஷயங்கள் பிள்ளைகளுக்குப் புரியாமல் இலக்கணத்தின் மேல் வெறுப்பு ஏற்படலாயிற்று. | 5. இலக்கியங்களில் ஓரளவு தேர்ச்சி பெற்ற பிறகே இலக்கண பாடம் ஆரம்பிக்கவேண்டும். அப்பொழுதுதான் இலக்கியத்திலிருந்து ஊகிக்கப்படும் இலக்கண விஷயங்கள் புரியும். |

சில சிறப்பான முறைகள்:—இலக்கணம் போதிப்பதில் (i) விதிகளிலிருந்து ஊகிக்கும் முறை (Deductive method), (ii) உதாரணங்களிலிருந்து அநுமானிக்கும் முறை (Inductive method), (iii) அநுபவ ஆராய்வு முறை (Applied grammar) என மும்முறைகளைக் கையாளலாம்.

அநுபவ முறை இலக்கணம்: இலக்கண அறிவை விதிகள் மூலமாகக் கற்பிப்பது (Formal grammar) பழைய முறை. இலக்கண அமைதிகளை வாசக பாடங்களில் ஆராய்ந்து அநுபவ முறையில் அறிவது (Applied grammar or functional grammar) நவீன முறை. இந்த ஆராய்வு முறையில் இலக்கணம் கற்பிக்கப்பட்டால் பிள்ளைகளுக்குப் பாடத்தில் உற்சாக முண்டாகும்; இலக்கண தத்துவங்களையும் நன்கு அறிவார்கள். வாசகங்களில் வாக்கியங்கள் அமைந்திருக்கும் முறையைப் பிள்ளைகள் கவனித்து, அவற்றின் ஒழுங்கை யுணர்ந்து, அவ்வாறே அவர்களும் எழுதப் பயிலுவதே இம்முறையின் நோக்கம்.

பல வாக்கியங்களை ஆராயச் செய்து, முடிந்த பொருள்களை உணர்த்தும் சொற்றொடர்களே வாக்கியங்களாகும் என்றும், அவ்விதக் கருத்து முடியாமல் சொற்கள் நின்றால் அவை எச்சச்சொற்றொடர் என்றும் அறிவிக்கலாம்.

வாக்கியத்தின் இன்றியமையாப் பகுதிகள் எழுவாயும் பயனிலையுமாகுமென்று பல வாக்கியங்களைக் கரும்பலகையில் எழுதி, அவைகளைப் பிரிக்கச் செய்வதால் உணரச் செய்யலாம். இந்த எழுவாய் பயனிலை பற்றிய அறிவைப் பிரயோகிக்குமாறு சில எழுவாய்களைக் கொடுத்துப் பயனிலை கூறவும், சில பயனிலைகளைச் சொல்லி எழுவாய்களைக் கூறவும் பயிற்சி யளிக்கலாம்.

வாசகத்தில் வரும் பல பெயர்ச் சொற்களை ஆராய்வதால் பெயர்களுக்கு எண், இடம், பால், வேற்றுமை என்ற பாகுபாடுகள் உண்டு என்பதை அறியச் செய்யலாம். பின்னர், அவை சம்பந்தமான பயிற்சிகளும் அளிக்கலாம்.

இதேவிதம் வினைச் சொற்களுக்கு மூன்று காலங்கள் இருப்பதை உதாரணங்களிலிருந்து ஊகிக்கலாம். மேலும் வசன பாடங்களிலிருந்தே பெயர்ச் சொற்களின் பலவகைகளையும், வினைச் சொற்களின் பல வகைகளையும், பெயரெச்சங்களையும், வினையெச்சங்களையும் அந்தந்த வகுப்புக்குத் தக்கவாறு போதிக்கலாம். அவை

களைத் தங்கள் பேச்சிலும், எழுத்திலும் பிரயோகிக்கவும் செய்யலாம். வாசக பாடங்களிலிருந்து திரட்டப்படும் இலக்கண அறிவு திடப்பட, பல பயிற்சிகள் கொடுக்க வேண்டும். அப்பயிற்சிகளும் வாசக பாடங்களை ஒட்டியே இருக்கவேண்டும். ஆனால், இலக்கண விஷயங்களை ஆசிரியர் முன்னதாக அறிந்திருந்தால்தான் அவைகளை வாசக பாடத்திலிருந்து பிள்ளைகளை ஊகிக்கச்செய்ய லாம். ஆதலால், ஆசிரியருக்கு இலக்கணத்தில் தனித் தேர்ச்சி இருக்கவேண்டும்.

விதிகளிலிருந்து ஊகிக்கும் முறையும், உதாரணங்களிலிருந்து அனுமானிக்கும் முறையும்: முதலில் இலக்கண சூத்திரங்களை அல்லது விதிகளைப் போதித்து, பின்னர் அவற்றிற்கான உதாரணங்களைக் கண்டறியச் செய்வது விதியினின்று உதாரணங்களை அறியும் முறை (Deductive method) ஆகும். முதலாவதாகச் சூத்திரத்தையும், பின்னர் அதன் பொருளையும், அதற்குப்பின் அதன் உதாரணங்களையும் கற்பிப்பது இம்முறையைப் பின்பற்றுவதாகும். இம்முறைப்படி இலக்கணம் போதிப்பது பிள்ளைகளுக்கு உற்சாகம் அளிக்காது.

உதாரணங்களிலிருந்து இலக்கண விதியை அனுமானமாகப் போதிப்பது (Inductive method) சரியான முறையாகும். பாஷையின் உபயோகத்தைக் கொண்டு இலக்கண விதிகள் ஏற்படுத்தப்பட்டனவேயன்றி இலக்கண விதிகளைச்சார்ந்து பாஷை ஏற்படவில்லை. ஆகவே, இலக்கண பாடம் கற்பிப்பதற்கு அனுமான முறையே (Inductive method) சிறந்தது எனலாம். பல உதாரணங்களைக் காட்டி விதிகளை உணர்த்துவோமாயின் மாணவரது சுய முயற்சி தூண்டப்படும், பிள்ளைகள் தாமாகவே ஊகித்தறிவதால் அவர்கள் கற்றவை மனத்தில் நன்றாகப்பதியும். உதாரணமாக, வினைச் சொல் என்னவென்று கற்பிக்க,

இராமன் கடிதம் எழுதினான்.
குழந்தை சிரித்தது.
கமலா நிற்கிறாள்.
செடிக்குத் தண்ணீர் ஊற்றுவோம்.

இவை போன்ற வாக்கியங்களை எழுதி, அவற்றிலுள்ள எழுதினான், சிரித்தது, நிற்கிறாள், ஊற்றுவோம் என்ற சொற்கள் தொழிலைக் காட்டுவனவென்று அவர்கள் அறியுமாறு செய்யவேண்டும். பிறகு, இவ்வாறு

தொழிலைக் காட்டும் சொற்கள் எல்லாம் வினைச் சொற்கள் (வினை = தொழில் = செய்கை) என்று வருவிக்கலாம்.

தமிழ் இலக்கணத்தை ஆங்கில இலக்கணத்துடன் ஒப்பிட்டு போதித்தல்: தமிழிலக்கணத்துக்கும் ஆங்கில இலக்கணத்துக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும், பதப் பிரயோகங்களையும் ஆங்காங்கு எடுத்துக் கூறுவது பெரிதும் பயனளிக்கும்.

பிரதிப் பெயர்ச் சொல் ,(pronoun), தழுவு சொற்கள் (adjectives and adverbs), சிறப்புப் பெயர்கள் (proper nouns) இவைகளைப் பற்றிய அறிவும் தமிழில் தேவையாகும். ஆங்கில இலக்கணத்தில் பயிற்சிகள் அளிப்பதுபோல் புதுமுறையான பயிற்சிகள் தமிழ் இலக்கணத்திலும் கொடுக்கலாம்.

இலக்கணப் பயிற்சிகள் :— அநுபவ முறையிலும், ஆகமான முறையிலும் கற்ற இலக்கண அறிவை வலுவுறுத்த புது முறையில் பல வகைப் பயிற்சிகள் அளிக்க வேண்டும். அவற்றுள் சில பின்வருவனவாகும்:

1. வரிசை மாறியுள்ள சொற்களை வாக்கியங்களாக அமைத்தல். 2. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கண்டுபிடித்தல், 3. பெயர்ச் சொல், வினைச்சொற்களைப் பொறுக்கி எழுதுதல். 4. திணை, பால், எண், இடம் இவற்றிற்கு ஏற்றவாறு எழுவாயைக் கொடுத்து பயனிலையையும், பயனிலையைக் கொடுத்து எழுவாயையும் அமைத்து எழுதச் செய்தல். 5. வினைச் சொற்களில் காலங்களை யறியச் செய்தல். 6. தழுவு சொற்களைக் கண்டறிதல். 7. வினா வாக்கியங்களைச் சாதாரண வாக்கியங்களாகவும், எதிர்மறை வாக்கியங்களை உடன் பாட்டு வாக்கியங்களாகவும், செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வாக்கியங்களாகவும் மாற்றும் அப்பியாசங்கள். 8. பிழையான வாக்கியங்களைத் திருத்தி யமைத்தல் 9. நிறுத்துக்குறிகள் இடுதல்.

மேற்சொன்னவை போன்ற பயிற்சிகளை வகுப்புக்குத் தக்கவாறு மாற்றியளிக்கலாம். அப்பியாசங்களுக்குரிய உதாரணங்களை அவரவர்கள் பாட புத்தகத்தினின்றும், அவரவர்கள் அனுபவத்தினின்றும் தெரிந்தெடுக்கவேண்டும். இவ்வித அப்பியாசங்களைப் பாரதி தமிழ் வாசகங்களில் விரிவாகக் காணலாம்.

பயிற்சி வினாக்கள்

1. இலக்கணம் கற்பிப்பதைப் பற்றி நிலவும் மூன்று அபிப்பிராயங்கள் எவை?

2. இலக்கணம் போதிப்பதில் (i) அநுபவ ஆராய்வு முறை, (ii) விதி முறை, (iii) உதாரண முறை.—இவற்றை விளக்குக.

3. பெயர்ச் சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் மூவிடம் உண்டு என்பதை உதாரணங்கள் மூலம் போதிக்க பாடக் குறிப்பு எழுதுக.

4. இலக்கணப் பயிற்சிகள் பிள்ளைகளுக்கு அளிப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

5. கீழ்க் குறித்தவாறு மாற்றி எழுத ஒவ்வொன்றுக்கும் பயிற்சி உதாரணங்கள் மூன்று குறிக்கவும்.

(i) செய் வினையைச் செயப்பாட்டு வினை யாக்குதல்.
(ii) விஞ வாக்கியத்தைச் சாதாரண வாக்கிய மாக்குதல்.
(iii) எதிர்மறையை உடன் பாடாக்குதல்.
(iv) நேர்முகப் பேச்சைப் படர்க்கைப் பேச்சாக்குதல்.

6. இவற்றில் எவை சரி? ஏன்?—

(i) முதல் வகுப்பிலேயே 247 தமிழ் எழுத்துக்களின் வரிசை முறையைக் கற்பிக்க வேண்டும்.

(ii) வாக்கியம், சொல், எழுத்து என்ற முறையில் இலக்கணம் கற்பிப்பதே அதிக நன்மை பயக்கும்.

(iii) iv-வது, v-வது வகுப்புக்களில் தனியாக ஒரு இலக்கண பாட புத்தகம் வாங்கிக் கொடுத்து இலக்கணம் கற்பிக்க வேண்டும்.

(iv) தமிழ் மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் இலக்கணம் படியாமல் முடியாது.

(v) இலக்கியங் கற்ற பிறகே இலக்கணம் ஆரம்பிக்க வேண்டும்.

## 10. எழுத்துப் பயிற்சி

மொழிப் போதனையில் முக்கிய அம்சங்களாகிய பேச்சு, படிப்பு, எழுத்து என்றவைகளுள் வாய்மொழிப் பயிற்சி, வாசிப்பு இவற்றைப்பற்றி முந்திய பாடங்களில் விரிவாக ஆராய்ந்தோம். இப்பொழுது மூன்றாவது திறமையாகிய எழுத்தைப்பற்றிக் கவனிப்போம்.

**எழுத்துப் பயிற்சியின் அவசியம்:** நேரில் இருப்பவருக்குப் பேசுவதன் மூலம் எண்ணங்களை வெளியிடுகிறோம். நேரில் இல்லாதவருக்கு எழுத்து மூலமாக நம் கருத்தைத் தெரிவிக்கிறோம்.

நாம் பிறருக்குக் கடிதங்கள் எழுதவும், நூல்கள் இயற்றவும் எழுத்துப் பயிற்சி அவசியமாகிறது. அறிஞர்கள் தமது அரிய எண்ணங்களை நூல்கள் மூலம் வெளியிட எழுத்து உதவுகிறது. ஆதலால் வாசிப்பைப் போல் எழுத்தும் கல்வி கற்பதற்கும், அறிவு வளர்வதற்கும் இன்றியமையாத கருவியாகும்.

ஒரு மொழியிலுள்ள ஒலிகளை வரிவடிவமாக அமைப்பது எழுத்தாகும். இந்த எழுத்து உருவங்களை அமைக

கப் பழகுதல் கையெழுத்து (Hand-writing) எனப்படும். எழுத்துப் பழக்கம் ஏற்பட்ட பிறகு கருத்துக்களை எழுதித் தெரிவித்தல் கட்டுரை (வியாசம்) எழுதுதல் (Composition) ஆகும். நாம் இப்பொழுது ஆரம்ப வகுப்புக்களில் கையெழுத்துப் பயிற்சிகள் எவ்வாறு அளிக்கலாமென்பதைப்பற்றி ஆராய்வோம்.

**எழுத்துப் பயிற்சி ஆரம்பிக்கக்கூடிய காலம்:**-சாதாரணமாக, பாலர் இரண்டாவது வயதிலிருந்தே பேச ஆரம்பித்துவிடுகின்றனர். ஆனால் 5-வது வயதே படிப்பு ஆரம்பிக்கக்கூடிய காலம். குழந்தை சிறிதளவு வாசிக்கக் கற்ற பின்னரே அதற்கு எழுதக் கற்றுக் கொடுக்க வேண்டும். கீழ் வகுப்புக்களில் முதலில் வாய்மொழிப் பயிற்சியும், அதன் பிறகு வாசிப்பும், கடைசியில் எழுத்தும் கற்பிப்பதே முறையாகும். எழுதக் கற்பித்து, அவ்வெழுத்தறிவைக் கொண்டு பின்னர் வாசிக்கப் பழகுவது பழைய முறையாகும். இது சுவையற்றது; படிப்பில் வெறுப்பு உண்டாக்கக் கூடியது; இது வண்டியை முன்புறம் வைத்து குதிரையைப் பின்புறம் கட்டுவது போலாகும்.

வாசிப்பு மூலம் சொற்களும் எண்ணங்களும் ஏற்பட்ட பிறகே, அச்சொற்களையும் எண்ணங்களையும் எழுதக் கற்பிக்கவேண்டும். ஆதலால், வாசிப்புக்குப் பிறகே எழுத்து என்பதை ஆசிரியர் ஞாபகத்தில் வைக்கவேண்டும் (writing to follow reading.)

எழுதும்பொழுது கைகளின் தசைகளும், எழுதும் கருவிகளும், கண்களும் மனதும் ஒருசேர உழைக்க வேண்டும். ஆதலால், சிறு குழந்தைகளுக்கு எழுதக் கற்பிக்குமுன் பலவிதப் புலன் பயிற்சி அளிக்கவேண்டும். இதற்காக ஆரம்பத்தில் குழந்தைகளிடம் எழுதுகோலும், காகிதம் அல்லது கரும்பலகையும் கொடுத்து அவர்களுக்குப் பிரியமான வடிவங்களை வரையத் தூண்டலாம். பாலர்கள் தங்கள் கைவிரல்களையும் தசைகளையும் அடக்கி இயக்கவும், எழுது கருவிகளைப் பிடிக்கவும் பழகிய பிறகே எழுத ஆரம்பிக்கவேண்டும். எழுத ஆரம்பிக்க ஆறுவது வயதே ஏற்ற பருவமென்று அறிஞர் கருதுகின்றனர்.

**எழுத்துப் பாட திட்டம்:**—கீழ் வகுப்புகளில் எழுத்துப் போதனை சம்பந்தமாக சர்க்கார் பாடதிட்டம் பின்வருமாறு ஆகும்:

**முதல் வகுப்பு** :—குழந்தைகள் தாங்கள் படித்த சொற்களையும் சிறு வாக்கியங்களையும் (கரும்பலகை, படம், மின்னட்டை, பிற உபகரணங்கள் இவற்றில் எழுதியிருப்பதைப் பார்த்து அதைப் போல் தாமும்) எழுதத் தாராளமாய்ப் பழகுதல்.

**இரண்டாம் வகுப்பு** :—எழுதுகோலைச் சரியான முறையிற் பிடிக்கவும், தெளிவாகவும் விரைவாகவும் எழுதவும் கற்பதை வற்புறுத்தல். படித்த பாடங்களிற் கேட்கும் வினாக்களுக்கு ஒவ்வொரு வாக்கியத்தில் விடை எழுதும் திறமையை வளர்த்தல்.

**மூன்றும் வகுப்பு** :—கையெழுத்தின் தெளிவைக் கெடுக்காமலே விரைவாய் எழுதப் பழகுதல், எழுத்து வேலையில் விரைவும் தெளிவும் தான் முக்கியமாகத் தேவை என்று வற்புறுத்திக்கொண்டே, திருத்தமும் அழகுங்கூடத் தேவை என்று நாடத் தலைப்படுதல்.

வாசக பாட புத்தகங்களிலிருந்தும், பாட திட்டத்திலுள்ள பிற பாடங்களிலிருந்தும் கேட்கும் கேள்விகளுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை யெழுதப் பயிலுதல்.

**எழுதலுக்கு முன் பயிற்சிகள்** :—பாடத்தில் வரும் தமிழ் எழுத்துக்களை எழுதக் கற்பிப்பதற்கு முன் அவ்வெழுத்துக்களின் உருவம் மனதில் அமையவும், விரல் தசைகள் பயிற்சி பெறவும் பின் வரும் பயிற்சிகளைப் பூர்வ பீடிகையாக நடத்தலாம்: 1. குச்சிகள், விதைகள், வளையங்கள் இவைகளைக் கொண்டு எழுத்துக்களையும் சொற்களையும் அமைக்கச் செய்யலாம். 2. தட்டுகளில் வைத்த மணலில் குச்சிகளைக்கொண்டு உருவங்கள் எழுதப் பழக்கலாம். 3. அட்டை அல்லது உப்புத்தாள்களில் வெட்டிய எழுத்துக்களின் உருவங்களை விரலால் தடவிப் பார்க்கலாம். 4. ஆகாயவெளியில் எழுத்துக்களின் உருவங்களை விரலால் எழுதிக் காட்டச் செய்யலாம் (writing in the air). 5. கரும்பலகையில் சாக்கட்டியினால் பல விதக் கோடுகளும், வளையங்களும் பிள்ளைகளின் மனம் போனவாறு முதலில் கிறுக்கச் செய்யலாம். பின்னர், நேர்கோடுகள், வளையங்கள், சித்திரங்கள் வரையச் செய்யலாம். இதே விதம் பலப்பத்தைக் கொண்டு கற்பலகையிலும், பென்சிலைக்கொண்டு காகிதத்தாள்களிலும் எழுதச் செய்யலாம்.

**கிரமமான எழுத்துப் பழக்கம்** :—மேற்கண்ட பீடிகைப் பயிற்சிகள் அளிப்பதனால் பிள்ளைகள் விரல் தசைகளை அடக்கியாளத் திறமையடைந்த பின்னரே, கிரமமான எழுத்துப் பயிற்சி ஆரம்பிக்கவேண்டும். மேலும், முதல் வகுப்பில் பிள்ளைகள் சேர்ந்த இரண்டொரு மாதங்கள் வரை அவர்களுக்குப் பேச்சுப் பழக்கம் அளித்து, பிறகு வாசிப்பு ஆரம்பித்து, அதற்குமேல்

இரண்டு மூன்று மாதங்கள் கழிந்தபின்னரே எழுதுதல் ஆரம்பிக்கவேண்டும். பிள்ளைகள் சேர்ந்த தினமுதலே எழுத்துப் பழககம் அளிக்கும் தற்கால வழக்கத்தை மாற்றிக்கொள்ளவேண்டும். முதலில் தனி எழுத்துக்களை எழுதக் கற்பித்தல் பழைய முறை; ஆனால், இப்பொழுதோ வாசிப்பில் முழுச் சொற்களாகப் படிக்கப் பழகுவதுபோல முழுச்சொற்களாகவே ஆரம்பத்திலிருந்தே எழுதவேண்டுமென்பது வற்புறுத்தப்படுகிறது. (உ-ம்.)

| பாப்பா | | டப்பா | | படம் | | பட்டம் |

எழுத்துக்களுக்குத் தனிக் கருத்து இல்லை; அவை சுவையற்றவை. ஆனால் சொற்கள் பொருள் உள்ளன; பிள்ளைகளின் மனத்திலுள்ள எண்ணங்களை வெளியிடுவன. ஆதலால் முழுச் சொற்களாக எழுதும் முறையே பாலர்க்கு ருசியுள்ளது.

ஒவ்வொரு சொல்லையும் எழுதப் பயின்ற பிறகு அதிலுள்ள தனி எழுத்துக்களைப் பிரித்துக்காட்டி, அவற்றின் உருவத்தைக் கவனித்து எழுதச் செய்யவேண்டும். (உ-ம்.) | பா | ப் | பா | ட | ப் | பா

படங்களின் கீழுள்ள சொற்களையும், மின்னட்டையில் காணும் சொற்களையும், கட்டளையட்டையிலுள்ள சொற்களையும், கரும்பலகையில் எழுதிய சொற்களையும், அச்சிட்ட விளம்பரங்கள் முதலியவற்றையும் பார்த்து அவற்றைப்போல் முழுச் சொற்களாகவே பிள்ளைகள் எழுதப் பழகவேண்டும். இதே விதம் வாசக பாடத்தில் கற்ற சொற்களையும், வாக்கியங்களையும் எழுதச் செய்யலாம்.

பார்த்தெழுதலில் தாராளமாசப் பழகிய பின்னர் சொல்வதெழுவதிலும் பயிற்சி கொடுக்கலாம். விட்ட எழுத்துக்களைப் பூர்த்திசெய்தல், விட்ட சொற்களைப் பூர்த்தி செய்தல் முதலியன எழுதுவதில் விளையாட்டு முறைப் பயிற்சிகளாகும்.

எழுத்துக்களின் உருவ அமைப்பு (Formation of letters) :—ஆரம்ப வகுப்புக்களில் எழுதக் கற்பிப்பதில் ஆசிரியர் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது எழுத்துக்களின் உருவங்களைப் பிள்ளைகள் சரியாக அமைத்துக் காட்டுகிறார்களா என்பது. எழுத்துக்களை அமைப்பதில் தவறுதலான பழக்கம் ஏற்பட்டுவிட்டால், பின்பு திருந்துவது அசாத்தியம். ஆதலால் எழுத்துக்களின்

உருவ அமைப்பைப் பயிலச் செய்வதில் ஆசிரியர் மிகுந்த கவனமும் எச்சரிக்கையும் காட்டவேண்டும்.

ஏற்கனவே விவரித்த பிரகாரம், அ, ஆ......வரிசையில் எழுத்துக்களைப் போதிக்காமல் ட, ப, ம முதலிய நேர்கோட்டு எழுத்துக்களை ஆரம்பிப்பதே, சீக்கிரத்திலும் சுலபத்திலும் எழுத்துப் பழக்கம் விளைவிக்கும். உபாத்தியாயர்கள் ட, ப, ம, ழ, ய—முதலிய எழுத்துக்கள், ஒன்றிலிருந்து மற்றொன்று அமையப்பெறும் விதத்தை வருவித்துக் காட்டலாம்.

தமிழ் எழுத்துக்களை வடிவம்பற்றிக் கீழே காட்டியுள்ள விதம் ஐந்து இனங்களாகப் பிரிக்கலாம் :

1. ட, ப, ய, ம, ழ.
2. ஈ, ர, ச, க, கூ, ந, ங, ற.
3. எ, ஏ, ஞ, ஒ, ஓ, ஔ.
4. ள, வ, ல, ன, ண.
5. அ, ஆ, இ, உ, ஊ, ஐ.

இவற்றைக் கற்றபின் உயிர்மெய் யெழுத்துக்களை எழுதுவது சுலபமாகும். உயிர்மெய்யெழுத்தின் அமைப்பில் கால் (ா) வெள்ளிக்கால் (ள), ஒற்றைக்கொம்பு (ெ), இரட்டைக்கொம்பு (ே) விசிறி (மேல் வளைவு ி ீ) விலங்கு (கீழ்வளைவு ு ூ) முதலிய உறுப்புக்களைத் திருத்தமாக எழுதப் பயிற்சிக்கவேண்டும்.

க, ச, த போன்ற எழுத்துக்களை மொட்டையாக எழுதாமல் மூக்கு வைத்து எழுத வற்புறுத்தவேண்டும்.

எழுது கருவிகள் :—மணலில் எழுதுவதைப் பலர் ஆட்சேபிக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம், பிள்ளைகள் அழுக்கு மணலில் உட்கார்ந்து அம்மணலில் எழுதுவதால், அவர்கள் அசுத்த மடைந்து சொறி சிரங்கு முதலிய வியாதிகளுக்கு உள்ளாகிறார்கள் என்பதே. என்றாலும், பிரத்தியேகமான மரத்தட்டுகளில் நல்ல மணலை வைத்து, அதில் எழுதச் செய்வது சில விதங்களில் சௌகரியமே. தட்டுகளிலுள்ள மணலை வாரத்துக்கு ஒரு தடவை கொட்டிவிட்டுப் புதிய மணலை நிரப்ப வேண்டும். சிலேட்டில் எழுதுவதைப்பற்றியும் அபிப்பிராய பேதங்கள் உள. மெல்லிய சிலேட்டுக் குச்சியைப் பிடித்து எழுதுவது பாலர்களின் விரல் நரம்புகளுக்குக் கெடுதல் என்றும், எழுத்தின் நிறம் மங்கலாக இருப்பதால் கண்ணுக்குக் கெடுதல் என்றும் கூறுகிறார்

கள். இக்காரணங்கள்பற்றித் தடித்த வெள்ளைச் சாக்கட்டியினால் சிலேட்டிலாவது, சாணித் தாளிலாவது, சுவர்க்கரும்பலகை (Wall Black-board)யிலாவது மூன்று அங்குல உயரத்துக்குக் குறையாத எழுத்துக்களால் எழுதப் பயிற்சிப்பது மிகவும் சிலாக்கியமானது. வகுப்பறையில் நான்கு சுவர்களிலும் பிள்ளைகள் எட்டக்கூடிய உயரத்தில் கரும்பலகைகள் அமைப்பது நலம். சில இடங்களில் எழுத்தாணியால் ஓலையில் எழுதும் பழக்கம் இன்னும் இருப்பது கண்டிக்கத்தக்கது. ஏழு வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் பென்சில்களால் காகிதத்தில் எழுதலாம்.

எழுதும்போது சரியான உடல் நிலை :—பிள்ளைகள் எழுதும்போது உடலைக் கோணலாகச் சாய்த்துக் கொண்டு உட்காருவதைக் கண்டிக்கவேண்டும். இவ்விதத் தீப்பழக்கம் ஆரம்பத்திலேயே திருத்தப்படாவிடில் பிள்ளைகளின் உடலில் நிரந்தரமான விகார அமைப்பு ஏற்படும். ஆகையால் மாணாக்கர்கள் நேராக உட்காரவேண்டும், அவர்கள் உட்காருவது அவர்களுக்குச் சுகமாக இருக்கவேண்டும். முன்புறமாய் அதிகம் சாயக்கூடாது. பென்சில் அல்லது பேனாவைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளலாகாது; மிகக் கிட்டப் பிடித்தல் கூடாது. கர்ணம் டெஸ்கு போன்ற சாய்வு மேஜையின்மீது வைத்து எழுதப் பழகுவதே சாலச் சிறந்தது.

எழுத்துக்களின் தெளிவு வேகம் அழகு:-கையெழுத்தில், எழுத்துக்களின் தெளிவு (legibility), எழுதும் வேகம் (Speed), எழுத்துக்களின் அழகு (Proportion and beauty) என்ற மூன்று அம்சங்கள் கவனம் பெற வேண்டும். இவற்றில், எழுத்துக்கள் படிப்பதற்கு இலகுவில் புரியும்படி எழுதப்படுவதே தெளிவு ஆகும். எழுத்துப் பழக்கத்தில் இதுவே அதி முக்கியமானது. ஏற்கனவே விவரித்தவாறு, எழுத்துக்கள் கிறுக்கியது போல் இராமல் முத்து முத்தாக அச்சடித்தாற்போல் எழுதப்படவேண்டும். எழுத்துக்களை மொட்டையாக இராமல் 'மூக்கு', 'விலங்கு', 'விசிறி' இவைகளைச் சரியாக அமைத்து எழுதவேண்டும். எழுத்துக்களின் உருவங்கள் கோணலாக அல்லது தவறாக இருக்குமானால் ஆசிரியர் அப்பிழைகளைக் காட்டித் திருத்தச் செய்யவேண்டும். வேகமாக எழுதப் பழகியவர்கள் எழுதும்பொழுது எழுத்துக்களை ஒன்றோடொன்று சேர்த்து, தொடர்ச்சியாக எழுதுவது வழக்கம். அவ்விதஞ் செய்வது புரி

தலைப் பாதிக்கும். எழுத்துக்கள் புரியும்பொருட்டு தனித் தனி எழுத்துக்களாக எழுதுவதும், சொற்களுக் கிடையே இடம் விட்டு எழுதுவதும் அவசியமாகும். மேல் வகுப்புக்களில் நிறுத்தக் குறிகளை உபயோகிப்பதும் தெளிவுக்குச் சாதகமாகும்.

இரண்டாவதாக முக்கியமானது எழுதுவதில் வேகம். காலம் அருந்தன மாகையால், பிற்கால வாழ்க்கையில் பலவித எழுத்து வேலைகளை விரைவில் செய்துமுடிக்க வேண்டியிருக்கும். ஆதலால் ஆரம்பத்திலிருந்தே தெளிவாக எழுதுவதுடன் துரிதமாகவும் எழுதப் பழக்க வேண்டும். எழுத்தின் வேகத்தைச் சோதிக்க வேகப் பரீட்சைகள் பின்வருமாறு நடத்தலாம்.

ஆசிரியர் 'எழுது' என்றதும் மாணவர் ஒரு பகுதியைப் பார்த்து எழுத ஆரம்பித்து, கடிகாரத்தில் மூன்று நிமிஷம் ஆனவுடன் அவர் 'நிறுத்து' என்றதும் எழுதுவதை நிறுத்திவிட வேண்டும். எழுதிய எழுத்துக்களை எண்ணி ஒரு நிமிஷத்தில் ஒவ்வொருவரும் எழுதியுள்ள சராசரி எழுத்துக்கள் எத்தனை என்று கணக்கிடலாம். இம்முறையால் பல மாணவரின் எழுத்து வேகத்தை ஒப்பிடலாம். மேலும், மாதம் ஒரு முறையாவது இவ்விதம் பரீட்சை செய்வதால் பிள்ளைகளின் எழுத்தின் வேகம் முன்னேறுகிறதா என்று அறியலாம். வகுப்பு மேலே ஏற ஏற எழுத்தின் வேகமும் அதிகரிக்கவேண்டும். சாதாரணமாக மூன்றாம் வகுப்பில் ஒரு நிமிஷத்திற்கு 35-40 எழுத்துக்களையும், நான்காவது ஐந்தாவது வகுப்புக்களில் 50-60 எழுத்துக்களையும் எழுதுவதாக எதிர்பார்க்கலாம்.

எழுத்துக்கள் அழகாக இருந்தால்தான் அவைகளைப் படிப்பதில் மகிழ்ச்சி ஏற்படும். ஆதலால் தெளிவுக்கும் வேகத்துக்கும் அடுத்தபடியாகக் கவனம்பெற வேண்டியது அழகாக எழுதுவது. எழுத்துக்கள் அழகாக அமைய அவைகள் ஒரே அளவினவாயும், சொற்களில் அவை ஒரே அளவு இடைவெளியுடையனவாயும், சொற்களுக்கிடையில் ஒரே அளவு இடம் விட்டும் இருத்தல் அவசியமாகும். வரிகள் கோணாமல் நேராகவும் அமையவேண்டும். எழுதும் வரி கோணாமல் இருப்பதற்காக, கோடிட்ட காகிதத்தில் ஆரம்பத்தில் எழுதிப் பயிலல் நன்மை பயக்கும்.

கையெழுத்துப் பாடத்தில் மட்டும் எழுதுவதில் தெளிவு, வேகம், அழகு என்ற மூன்றையும் கவனித்தல்

போதாது. இதர பாடங்களில் வரும் எழுத்து வேலையிலும் இவை வற்புறுத்தப்படவேண்டும். விடைத்தாள்களை மதிப்பிடுவதில் இவற்றிற்குத் தனியாக மார்க்குகள் அளிப்பது ஒரு தூண்டுகோலாகும்.

*பாடசாலைகளில் சாதாரணமாக, 1. பார்த்தெழுதுதல், 2. காப்பி எழுதுதல், 3. சொல்வதெழுதுதல் என மூன்று விதங்களில் கையெழுத்துப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

1. பார்த்தெழுதுதல்: எழுதுவதில் சாதாரணமாக அளிக்கப்படும் பயிற்சி புத்தகத்திலுள்ள சொற்களை அல்லது பிறர் எழுதிய சொற்களைப் பார்த்தெழுதுதலேயாகும். இது முதல் வகுப்பிலிருந்தே நடைபெறவேண்டும். இரண்டாம் வகுப்பு முதல் தினந்தோறும் நான்கு வரிகளாவது விட்டில் (Transcription) எழுதி, வகுப்பில் காட்டும்படி வற்புறுத்தவேண்டும். இரண்டு அல்லது மூன்று கோடுகள் அமைத்து, அவைகளில் எழுதச் செய்யலாம். சொற்களுக்கு இடையிலும், வரிகளுக்கு இடையிலும் சிறிது இடம் விட்டு எழுதும் பழக்கத்தை ஆரம்ப முதலே வற்புறுத்தவேண்டும். எழுத்துக்களுக்கு மூக்கு விடாமல் மொட்டையாக எழுதும் அவலட்சண முறையை அவ்வப்பொழுதே கண்டிக்கவேண்டும்.

ஒவ்வொரு வாக்கியத்திலும் காணும் நிறுத்துக் குறிகளை விடாமல் குறிக்கப் பழகவேண்டும். முக்கியமாக ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் முற்றுப் புள்ளியைக் குறிக்க மறக்கக்கூடாது.

குறிப்பு: சாதாரணமாகக் கீழ் வகுப்புக்களில் எவ்வித எழுத்துப் பயிற்சியும் 10 நிமிஷத்துக்கு மேற்படக்கூடாது. எழுத்துவேலை சீக்கிரத்தில் மனக் களைப்பையும், விரல் சோர்வையும் உண்டுபண்ணும். இதனால் அதிக நேரம் எழுதச்செய்தால் பிள்ளைகளுக்கு எழுத்தில் வெறுப்பு உண்டாகிவிடும். தண்டனையாகப் பல முறை எழுதச் செய்வது (Imposition) அறவே கூடாது.

2. காப்பி எழுதல் (Copy writing): மூன்றும் வகுப்பு முதல் அச்சிட்ட காப்பிப் புத்தகங்களில் எழுதப் பயிற்சிப்பது நலமே. ஒவ்வொரு பக்கத்திலும் அடியிலிருக்கும் வரியை முதலில் எழுதியபிறகே மேல் வரிகளை எழுத வேண்டும். இவ்விதஞ் செய்யாவிட்டால் முதல் வரியில் பையன் எழுதிய எழுத்துக்களைப் பார்த்துப் பின் வரிகளில் சரிவர இடம் விடாமலும், அவலட்சணமாகவும் எழுதுவான். ஒவ்வொரு வரியிலும் எழுதப்படும் சொற்களுக்குச் சம இடம் விடப்படவேண்டும்.

மூன்றாவது வகுப்புக் காப்பி புத்தகங்களில் எழுத்துக்களின் உடல், விசிறி, விலங்கு இவற்றின் உயரங்களைக் காட்ட நான்கு கோடுகள் இடுவதுண்டு; ஆனால் மேல் வகுப்புக்களில் இரட்டைக் கோடுகள் மட்டுமே இட்டிருக்கும். கீழ் வகுப்புக்களில் பெரிய எழுத்துக்களாகவும், IV, V வகுப்புக்களில் வரவரச் சிறியனவாகவும் காப்பிப் புத்தகங்களில் அச்சிட்டிருக்கவேண்டும்.

சில காப்பிப் புத்தகங்களில் எழுத்துக்களைச் செங்குத்து வடிவமாகவும் (Upright), சிலவற்றில் சாய்ந்த வடிவமாகவும் (Slanting) அமைத்திருப்பார்கள். செங்குத்து வடிவ எழுத்துக்கள் அழகாகக் காணப்படும்; ஆனால் சாய்ந்த வடிவமாக எழுதப்படுவதே துரிதமாக எழுத உதவும்.

3. சொல்வதெழுதல் (Dictation): ஆசிரியர் சொல்வதைக் கேட்டுப் பாராமல் எழுதுதல் சொல்வதெழுதலாகும். சொற்களிலுள்ள எழுத்துக்களைப் பிழையற மாணவர்கள் எழுதுகிறார்களாவென்று சோதிக்கவும், பிழையின்றி எழுதப் பயிற்சிக்கவும் சொல்வதெழுதல் ஒவ்வொரு வகுப்பிலும் நடைபெறுவது அவசியமாகும். ஆனால் கால அட்டவணையில் அதற்காகத் தனி நேரம் அளிப்பது இக்காலத்தில் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. சொல்வதெழுதுவதற்கு அதிக நேரம் செலவழிப்பது சோம்பேறி ஆசிரியர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு என்று பரீட்சாதிகாரிகள் கருதுகிறார்கள்.

ஒரு சொல்லைப் பிழையின்றி எழுதுவதற்கு அதைச் சரியாய் உச்சரித்தலும், உற்றுப் பார்த்தலும், பன்முறை எழுதலும் சாதனங்களாகும். சிற்சில சொற்களைப் பிழையாக உச்சரித்துவருபவர் அவற்றை எழுதும்பொழுது பிழைபடுவர். பழத்தைப் பளமென்றும், சர்க்கரையைச் சக்கரை என்றும் சொல்லிப் பழகியவர்கள் அச்சொற்களைப் பிழையாய் எழுதுவதுண்டு. சொல்வதெழுதலுக்கான பகுதி பிள்ளைகள் படித்த பாடத்திலிருந்தே சாதாரணமாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். எவ்வகுப்பிலும், சொல்வதை ஆசிரியர் இரண்டாம் முறை திருப்பிச் சொல்லுதல் கூடாது.

எழுத்துக் கூட்டும் விளையாட்டுக்கள் (Spelling games): சொல்வதெழுதல் பிள்ளைகளுக்குச் சாதாரணமாக அருவருப்பைத் தரும் ஒரு பாடமாகும். ஆதலால் எழுத்துப் பிழையில்லாமல் எழுதப் பழக்குவதற்கு, சொல்வதெழுதலைக் குறைத்து விளையாட்டு முறையில்

பலவிதப் பயிற்சிகள் அளிக்கவேண்டுமென்று கூறப்படுகிறது. (உ-ம்.) விட்ட எழுத்துக்களையும் சொற்களையும் பூர்த்திசெய்தல், சொற்கள் கட்டுதல், ஒத்த ஓசையுள்ள சொற்களைக் கண்டறிதல், எதிர்ப்பதம் அறிதல், சொல் ஏணி அமைத்தல், எழுவாய்க்குத் தக்க பயனிலையும், பயனிலைக்கேற்ற எழுவாயும் கண்டறிதல், ஆண்பால், பெண்பால், ஒருமை பன்மை எழுதுதல், புதிய சொற்களை அகராதி முறையில் நோட்டுப் புத்தகத்தில் குறித்துக்கொள்ளுதல் முதலியன.

நிறுத்துக் குறிகள்:—வாக்கியங்களில் எங்கெங்கு எவ்வளவு நேரம் நிறுத்தவேண்டுமென்பதை அறிந்து வாசித்தால்தான் பொருள் விளங்கும். அவ்வாறு நிறுத்தவேண்டிய இடங்களை உணர்த்தும்பொருட்டு வாக்கியங்களில் சில குறிகளை உபயோகிக்கிறோம். அவைகள் நிறுத்துக் குறிகள் எனப்படும். அவையாவன:

| | |
|---|---|
| . முற்றுப்புள்ளி | , கமா அல்லது கால்புள்ளி |
| ; செமிகோலன் அல்லது அரைப்புள்ளி | : கோலன் அல்லது முக்கால்புள்ளி |
| ? வினைக்குறி | ! வியப்புக் குறி |
| " " மேற்கோள் குறி | |

இந்த நிறுத்துக் குறிகளின் உபயோகத்தை வகுப்புகளுக்குத் தக்கவாறு கற்பிக்கவேண்டும். எழுதுவதில் அவைகளை உபயோகிக்கவும் பழக்கவேண்டும்.

### பயிற்சி வினாக்கள்

1. பாலர்கள் சாதாரணமாக எந்த வயதில் பேச ஆரம்பிக்கிறார்கள்? படிக்க ஆரம்பிக்கிறார்கள்? எழுத ஆரம்பிக்கலாம்?

2. 'வாசிப்புக்குப் பின்னரே எழுதுதல்'',—விளக்குக.

3. கிரமமாக எழுத ஆரம்பிக்குமுன் அளிக்கக்கூடிய ஆயத்தப் பயிற்சிகளை விவரிக்கவும்.

4. ஆரம்பத்திலிருந்தே முழுச் சொற்களாக எழுதப் பழக்குவதே சாலச் சிறந்தது. ஏன்?

5. அ, ஆ, இ, ஈ—என்ற வரிசையில் எழுதக் கற்பிப்பதைவிட ட, ப, ம, ய, ழ என்ற வரிசையில் ஆரம்பத்திலே எழுதக் கற்பிப்பது இக்காலத்தில் வழக்கத்தில் வந்துளது. ஏன்?

6. எழுத்துக்களின் உருவ அமைப்புத் திருத்தமாக அமையும் பொருட்டு நாம் எச்சரிக்கையாகக் கவனிக்கவேண்டியன யாவை?

7. கையெழுத்துப் பயிற்சியில் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள் மூன்று எவை?

8. என்ன உபாயங்களை அனுசரிப்பதால் கையெழுத்தின் தெளிவு (புரிதல்), அழகு இவற்றை முறையே விருத்திசெய்யலாம்?

9. முதல் வகுப்பில் எவைகளைப் பார்த்தெழுதச் செய்யலாம்?

10. ஒருவரது கையெழுத்தின் வேகத்தை எவ்விதம் நிர்ணயிக்கலாம்? ஒரு நிமிஷத்தில் சாதாரணமாக எத்தனை எழுத்துக்கள் நீர் எழுதுகிறீர்?

11. எழுத்துப் பிழையின்றி எழுதப் பயிற்றுவிக்க, என்ன என்ன பயிற்சிகள் அளிப்பீர்?

12. எழுத்துக் கூட்டும் விளையாட்டுகளில் (Spelling games) எழுவகை விவரிக்கவும்.

13. காப்பி யெழுதுதல் எந்த வகுப்புக்களில் பயிற்சிக்கலாம்? காப்பி எழுதல் பற்றிக் கவனத்தில் வைக்கவேண்டியன யாவை?

14. பார்த்தெழுதல் பற்றிக் கவனிக்கவேண்டியன யாவை?

15. கோடுள்ள இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகள் அமைக்க:

(a) நரி | சிங்கத்தை நோக்கிப் பின்வருமாறு கூறியது | மிருகேந்திரனே | ஆடு | மாடு | முயல் | மான் இவைகள் தினம் ஒன்றாக உம்மிடம் வரும் | நீர் அவைகளைத் தின்று பசியாறலாம் |

(b) திருடன் பாலனை அணுகி | பாலா | நீ ஏன் தனியாக உட்கார்ந்திருக்கிறாய் | என்று கேட்டான் |

## கட்டுரை எழுதுதல்

எழுத்துப் பழக்கம் ஏற்பட்ட பிறகு, கட்டுரை எழுதப் பழகுதல் மொழிப் பயிற்சியின் ஒரு முக்கிய அம்சம். இப்பொழுது கட்டுரைப் பயிற்சி முறைகளைப்பற்றி விவரிப்போம்.

கட்டுரை எழுதப் பழகுவதின் அவசியம்: உள்ளக் கருத்துக்களைச் சுயமாக வெளியிடக் கட்டுரை எழுதுதல் ஒரு வழியாகும். மேலும் கட்டுரை எழுதல், பரீட்சையில் எழுதுவதற்குமட்டுமன்றி, பிற்காலத்தில் சொற்பொழிவுகள் நிகழ்த்தவும், பத்திரிகைகளுக்கு எழுதவும், நூல்கள் இயற்றவும் பயன்படும்.

வாய்மொழிக் கட்டுரையும் எழுத்துக் கட்டுரையும்: ஒரு விஷயத்தைப்பற்றிய கருத்துக்களை முறைப்படுத்திப் பேச்சு மூலமாக வெளியிடுவது வாய்மொழிக் கட்டுரையாகும்; எழுத்து மூலமாக வெளியிடுவது எழுத்துக் கட்டுரையாகும். நான்காவது அதிகாரத்தில் பேச்சுப் பயிற்சியைப்பற்றியும், வாய்மொழிக் கட்டுரைகளைப் பற்றியும் விவரமாகக் கூறியுள்ளோம்.

பேச்சு நடைக்கும் (Spoken Tamil) எழுத்து நடைக்கும் (Written Tamil) சில வித்தியாசங்கள் உண்டென்பதை ஆசிரியர் ஞாபகத்திலிருத்தவேண்டும். பேச்சு நடை அதிகக் கட்டுப்பாடு இன்றி இயல்பாக இருக்கும்; பல சொற்கள் தொக்கி நிற்கலாம்; முழு

வாக்கியங்களாக இருக்க அவசியமில்லை; வற்புறுத்தல் நிமித்தம் சில சொற்றொடர்களையும் கருத்துக்களையும் திரும்பக் கூற நேரிடலாம்; கருத்தை வெளிப்படுத்த, குரலின் ஏற்றத் தாழ்வும், முகக்குறியும், கைஜாடையும் பேச்சில் உதவும். ஆனால் எழுத்து அல்லது இலக்கிய நடையில் ஒழுங்கும் கிரமமும் இலக்கண வரையறுப்பும் அதிகம்; கருத்துக்கள் முறையாக அமைந்து முன்பின் தொடர்புள்ளவாய் இருக்கும்; வழக்கில்லாத சொற்களும் விரவி வரலாம்; வாக்கிய ஒழுங்கைப் பின்பற்றி யிருக்கும். பேச்சு மொழி இலக்கிய மொழியைவிடத் தாழ்வானதென்றும், பாடசாலைகளில் தினசரி வழக்கத்திலுள்ள மொழியைப் புறக்கணிக்கவேண்டுமென்றும் சிலர் கூறுவர். இது ஒரு தவறான எண்ணம். பேச்சு மொழியில் ஜீவனும் ஆவேசமும் அதிகம். ஆதலால், இக்காலத்தில் இலக்கிய நடை, கற்றார்க்கு மட்டும் பயன்படுமாறு இராமல் மற்றவரும் இரசித்துணரும்படி வழக்கு நடையைப் பின்பற்றியே இருக்கவேண்டுமென்று தற்காலத் தமிழறிஞர் கருதுகின்றனர்.

**வாய்மொழிக் கட்டுரைக்குப் பிறகே கட்டுரை எழுதுதல் நடைபெறவேண்டும்:**—ஆரம்ப வகுப்புக்களில் வாய்மொழிக் கட்டுரையே பிரதானமாகப் பயிற்சிக்கப்படும். வகுப்புக்கள் உயர உயர எழுத்துக் கட்டுரை அதிக இடம் பெறும். மேலும், எந்த வகுப்பிலும், எழுதப் புகும் விஷயத்தைப்பற்றி வாய்மொழியாக ஆசிரியரும் மாணாக்கரும் கலந்து விரிவாகப் பேசி, கட்டுரைகளின் பல பகுதிகளையும் தெளிவு செய்துகொண்ட பிறகே மாணவர் எழுத ஆரம்பிக்கவேண்டும். ஆதலால், எந்த எழுத்துக் கட்டுரைக்கும் பூர்வபீடிகையாக வாய்மொழிக் கட்டுரை அமையும்.

### வாய்மொழிக் கட்டுரைபற்றிய தவறான எண்ணங்கள்

பாடசாலைப் பாடங்களில் பேச்சுப் பயிற்சி ஒரு பாடமாகப் பரம்பரை முறையில் இடம்பெறவில்லை என்றும், வாய்மொழிக் கட்டுரை என்று ஒரு பாடமுண்டென்று முற்கால ஆசிரியர்கள் நினைக்கவில்லையென்றும் முன்னமேயே கூறினோம். இக்காலத்தில்கூட பேச்சுப் பயிற்சியைப்பற்றிப் பல தவறான எண்ணங்கள் நிலவுகின்றன. (1) அது தனிப்பட்ட ஒரு பாடமில்லை யென்றும், (2) எழுத்துக் கட்டுரைக்கு வாய்மொழி பூர்வபீடிகை மட்டுமே யென்றும், (3) ஆதலால் வாய்மொழிப் பயிற்சியளிப்பது

கீழ் வகுப்புக்களில் மட்டுந்தான் கவனம்பெறவேண்டுமென்றும், (4) நாளடைவில் மேல் வகுப்புக்களில் வாய்மொழி எழுத்து மொழிக்கு இடங்கொடுத்துவிட வேண்டுமென்றும் கருதுகிறார்கள். மேலும், (5) வாய்மொழிக் கட்டுரைகள் சுலபமானவை யென்றும், அவைகளுக்குப் பிரத்தியேகமான முன் தயாரிப்புத் தேவையில்லையென்றும் பலர் தவறாக எண்ணுகிறார்கள்.

இந்த எண்ணங்கள் எல்லாம் தவறு என்று அனைவரும் ஒப்புக்கொண்டு திருத்தமான உச்சரிப்புடன் தெளிவாகவும், கருத்துக்கள் தொடர்புறவும் பேசப் பழக்குவது பாடசாலையின் ஒரு முக்கிய அலுவல் என்று வற்புறுத்துகிறார்கள். தினசரி வாழ்க்கையிலோ கற்றவரும் மற்றவரும் எழுத்து மொழியைவிட வாய்மொழியையே முக்கால் பங்குக்குமேல் உபயோகிக்கிறார்கள். ஆதலால் இந்த விதாசாரத்தைத் தலைகீழாக மாற்றி முக்கால் பங்கு எழுத்துப் பயிற்சியும், கால் பங்கு வாய்மொழிப் பயிற்சியுமாகப் பாடசாலைகளில் அளிப்பது தகாது. மேல் வகுப்புக்களில், தொடர்ந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தவும், விஷயங்களைத் தர்க்கித்து வாதங்கள் நடத்தவும் பயிற்றுவித்தல் சமூக வாழ்க்கைக்கும் அரசியல் வாழ்க்கைக்கும் இன்றியமையாததாகும்.

சம்பாஷணைகளும், சிறு சொற்பொழிவுகளும் :— கேட்டறிந்தவையும், படித்தறிந்தவையும், கற்பனா சக்தியால் சிருஷ்டித்தவையுமான எண்ணங்களைச் சுயமாக வெளியிடக் கட்டுரைப் பயிற்சி உதவுகிறது என்று அறிந்தோம். சாதாரணமாகப் பிள்ளைகள் ஒருவரோடொருவர் உரையாடுவதும், தனிப்பட்ட சம்பாஷணைகள் நடத்துவதும், தாங்கள் பொருட்காட்சிசாலை கண்டு வந்தது, படக்காட்சிக்குப் போய்வந்தது, மழைநாள் அநுபவம் இவைபோன்ற அநுபவங்களைப்பற்றிச் சிற்றுரைகள் நிகழ்த்துவதும் வாய்மொழிக் கட்டுரைப் பயிற்சிகளாகும். உயர் வகுப்புக்களில் மாணவர் கழகம் அமைத்து, வாரக் கூட்டங்களில் விரிவான சொற்பொழிவுகள் நிகழ்த்த சந்தர்ப்பங்கள் அளிக்கலாம்.

சொற்றொடராக்கப் பயிற்சிகள் :—கட்டுரை எழுதுதலைக் கீழ் வகுப்புக்களில் சொற்றொடராக்கம் என்பார்கள். இரண்டொரு வாக்கியங்களில் கேள்விகளுக்கு விடை எழுதலே ஆரம்பப் பயிற்சியாகும். பின்னர், ஒரு பொருளைப்பற்றி அல்லது அநுபவத்தைப்

பற்றித் தொடர்ந்த சில வாக்கியங்களில் விவரித்து எழுதலாம். புதிய சொற்களையும், சொற்றொடர்களையும் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுதலும் கட்டுரைப் பயிற்சியாகும். எழுவாய்க்குப் பயனிலையும், பயனிலைக்கு எழுவாயும் தெரிந்தெடுத்து எழுதலாம். ஒருமை-பன்மை, ஆண்பால்-பெண்பால், இடம், காலம் இவைகளை மாற்றி வாக்கியங்களை அமைத்தலிலும் பயிற்சிகள் அளிக்கலாம். தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாகச் சேர்த்து எழுதலும், வினா வாக்கியங்களைச் சாதாரண வாக்கியங்களாகவும், சாதாரண வாக்கியங்களை வினா வாக்கியங்களாகவும், எதிர்மறையை உடன்பாடாகவும், உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாகவும், செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வாக்கியங்களாகவும், செயப்பாட்டு வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாகவும், நேர்கூற்றுக்களை அயல் கூற்றுக்களாகவும் அயல் கூற்றுக்களை நேர் கூற்றுக்களாகவும் மாற்றி எழுதுதல் முதலிய பயிற்சிகள் அளிக்கலாம்.

கட்டுரை எழுதப் பழகுதல்:—விரிவான கட்டுரைகளை VI, VII, VIII வகுப்புகளில் முறைப்படி எழுதப் பழக வேண்டும். சிறந்த கட்டுரைகள் எழுதுவதற்கு உலக அறிவும், நூலறிவும், எழுதும் பழக்கமும் வேண்டும்.

ஆண்டுக்கு இத்தனை கட்டுரைகள் என்றும், எவ் விஷயங்களைப்பற்றி என்றும் ஒரு ஜாப்தா தயாரித்துக் கொள்ளவேண்டும். கட்டுரை விஷயங்கள் வாசக பாடங்களை ஒட்டியனவாக இருப்பது நலம். சாதாரண மாக ஒவ்வொரு கட்டுரையும் 100 முதல் 200 வார்த்தைகள் வரை இருக்கலாம். அதாவது வகுப்புக்குத் தக்க வாறு 1 பக்கம் முதல் 3 பக்கம் வரை இருக்கலாம் (பக்கத்துக்கு [illegible] வரிசைகள் மட்டுமே). கட்டுரை எழுது வதற்கு வாரத்தில் இரண்டு 'பீரியடுகள்' (Periods) கால அட்டவணையில் ஒதுக்கி வைக்கப்படலாம். ஒரு பீரியடில் கட்டுரை விஷயத்தைப்பற்றிப் பேசி, குறிப்புக்களும் தலைப்புக்களும் எழுதவேண்டும். மற்றொரு பீரியடில் திருத்தமாக வியாசம் எழுதலாம்.

கட்டுரை விஷயம் சேகரித்தல்:—வியாசம் எழுது வதற்கு முதன்முதலாக விஷயத்தைப்பற்றிய அறிவு தேவை. வியாசம் எழுதுதல் அவரவர் தேர்ச்சியையும் மனோபாவத்தையும் ஒட்டி இருக்கும். கல்வி பயிலும் பொழுதே கட்டுரைகளுக்குப் பொருத்தமான விஷயங்

களைப் பல நூல்களிலிருந்தும், பத்திரிகைகளிலிருந்தும் தனி நோட்டுப் புத்தகம் ஒன்றில் சிற்சில தலைப்புக்களின் கீழ் எழுதிவைத்துக்கொள்வது நலம். அறிஞர்கள் எழுதியுள்ள மாதிரிக் கட்டுரைகளையும் படித்தறிவது உதவியாகும்.

சிந்தித்தலும் முறைப்படுத்தலும்:—எழுதத் தொடங்கு முன் வியாசத் தலைப்பை நன்றாக மனத்தில் வாங்கிக் கொள்ளவேண்டும். பின்பு வியாசத்தில் கூறவேண்டிய விஷயங்களை மனத்தில் சிந்திக்கவேண்டும். ஆலோசித்த கருத்துக்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து, உள்ளத்தில் அமைத்துக்கொண்டு அப்பிரிவுகளின் தலைப்புப் பெயர்களைத் தனியாக ஒரு காகிதத்தில் குறித்துக்கொள்வது நலம். அவைகளின் முன் பின் முறையை நிர்ணயித்து வரிசைப்படுத்திக்கொள்ளவேண்டும். கருத்துக்களை விளக்குவதற்கான உபமானங்களையும், பழமொழிகளையும், மேற்கோள்களையும் குறித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு விஷயப் பிரிவையும் ஒவ்வொரு பாரா அல்லது பந்தியாக எழுதவேண்டும்.

வாக்கிய அமைப்பு:—கட்டுரை எழுதுவதில் கருத்துக்களை வாக்கியங்களாகவே வெளியிடவேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஒரு முழுக் கருத்தை வெளியிடுவதாக இருக்கவேண்டும். பல கருத்துக்களை ஒரே வாக்கியத்தில் அமைத்துக் கூறக்கூடாது. மேலும், பால், எண், இடம் இவற்றில் எழுவாயும் பயனிலையும் ஒருமைப்பட்டிருப்பது அவசியமாகும்.

பந்தி பிரித்தல்:—பல வாக்கியங்கள் தொடர்ந்து நின்று ஒரு பந்தி அல்லது பாரா ஆகும். ஒவ்வொரு வியாசத்தையும் 1. ஆரம்பம் அல்லது முகவுரை, 2. இடைப் பந்திகள் 3. முடிவு - என மூன்று அங்கங்களாக வகுத்துக்கொள்ளலாம். முதல் பந்தி விஷய நோக்கத்தை விளக்கும் முகவுரையாகவும், இடைப்பந்திகள் எடுத்துக்கொண்ட விஷயத்தைப் படிப்படியாக ஆராய்வனவாகவும், கடைசிப் பந்தி முடிவுரையாகவும் அமையவேண்டும்.

ஆரம்பம் சுருக்கமாகவும், முடிவு முன் கூறிய விஷயங்களைச் சுருக்கி வற்புறுத்துவதாகவும் இருத்தல் நலம். ஒவ்வொரு பந்தியும் ஒரு குறித்த கருத்தை விவரிப்பதாக இருக்கவேண்டும். ஒன்றுக்கொன்று பொருந்தாமல் பல கருத்துக்களை ஒரே பந்தியில் கூறுதல் தகாது. ஒரு பந்தியின் முடிவு வாக்கியம் அடுத்த பந்தி

யின் தொடக்கத்திற்கு உதவியாக இருக்குமாறு அமைவது பொருத்தமாகும்.

**திருத்தமான நடை:**—ஒவ்வொரு கட்டுரைக்கும் விஷயம் பிரதானமாவது போலவே, திருத்தமும் தெளிவுமுள்ள செந்தமிழ் நடையும் இன்றியமையாததாகும். இலகுவான வார்த்தைகளை உபயோகித்துச் சிறு வாக்கியங்களாக எழுதுவது அழகு தரும். மேலும், வசன நடை இனிமையாகவும், அழகாகவும் இருத்தற்பொருட்டு, சொல் அணிகளையும், பழமொழிகளையும், மேற்கோள்களையும் உபயோகிக்கலாம்.

பிறருடைய பாஷை நடையைப் பின்பற்றிய போதிலும், ஒவ்வொருவரும் தத்தமக்கென்று ஒரு தனி பாஷை நடை (Individual Style)யில் எழுதுகிறார்களென்பதை ஆசிரியர் கவனிக்கவேண்டும்.

முக்கியமாகச் சொற்பிழை, எழுத்துப் பிழை, இலக்கணப் பிழை முதலிய குற்றங்களைத் தவிர்க்கவேண்டும். கூடியவரை பிறமொழிச் சொற்களை விலக்குதல் நலம். கையெழுத்து அழகாகவும், இலகுவாகப் பிறருக்குப் புரியும்படியும் இருத்தல் அவசியம். நிறுத்தக் குறிகளைப் பொருத்தமான இடங்களில் அமைக்கவேண்டும்.

**மரபுத் தொடர்களும், அவைகளைக் கட்டுரைகளில் உபயோகித்தலும்:** நமது முன்னோர் பொருள் நிரம்பிய சில சொற்களையும், சொற்றொடர்களையும் தனிப்பட்ட கருத்துக்களில் பேச்சிலும், நூலிலும் உபயோகித்து வந்திருக்கிறார்கள். அவர்கள் உபயோகித்த மரபிலேயே (முறை) நாமும் அவற்றை உபயோகிக்கவேண்டும். இவற்றுக்கு மரபுச் சொற்களும் (Idioms), மரபுத் தொடர்களும் (Phrases) என்று பெயர். அம் மரபு தவறி வழங்கினால் அது பிழையாகும். (உ-ம்.) அடங்காப் பிடாரி—எவருக்கும் அடங்காதவன், ஆசாரக் கள்ளன்—ஒழுக்கமுள்ளவன் போல் நடிப்பவன், நுனிப் புல் மேய்தல்—மேலெழுந்தவாரியாகப் படித்தல், கை நீளம்—திருடுதல். கை நனைத்தல்—பிறர் வீட்டில் விருந்துண்ணல். கைச் சரக்கு—கற்பனையாகக் கூறுதல்.

**கட்டுரை வகைகள்:** வியாசங்கள், அவைகளில் விவரிக்கப்படும் விஷயத்திற்குத் தக்கபடி பலவகைப்படும். பின் வரும் வகைகள் முக்கியமானவை:—

* **1. கதை எழுதுதல் (Story writing):** வாய்மொழிப் பயிற்சியில் கதைகள் எவ்வளவு அவசியமோ அது போலக் கட்டுரை எழுதும் பயிற்சியிலும் கதை எழுது

தல் இன்றியமையாததாகும். சுருக்கி எழுதுதல், பெருக்கி எழுதுதல், மனோதர்மப்படி கற்பனையாக இயற்றுதல் எனக் கதை யெழுதுதலை மூவகையாகப் பிரிக்கலாம்.

விரிவான ஒரு கதையை அல்லது வியாசத்தைச் சுருக்கி, முக்கியமான அம்சங்களை விடாமல் எழுதுதல் சுருக்கி எழுதலாம். இவ்விதப் பழக்கம் உப பாடப் புத்தக விஷயங்களைச் சுருக்கமாக எழுதுவதில் பிரயோசனப்படும். கதையை இரண்டு மூன்று தடவை ஊன்றிப் படித்து, அனாவசியமான விஷயங்களை விட்டுவிட்டு, அவசியமான விஷயங்களைக் கதைப் புத்தகத்திலேயே குறிப்பிட்டுக் கொள்ளவும். அவைகளின் சாராம்சத்தைச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் முறையாகும்.

உதவியாகக் கொடுக்கப்படும் சிறு குறிப்புக்களைக் கொண்டு சிறுகதைகளை யமைப்பதும், பாதியில் விடப்பட்ட குறைக் கதைகளைத் தமது மனோபாவத்தால் பூர்த்திசெய்வதும் ஒரு சிறந்த பயிற்சியாகும். இவ்விதம் பெருக்கி எழுதல் சுருக்கி எழுதலுக்கு நேர் மாறாகும்.

நீதிக் கதைகள், ஹாஸ்யக் கதைகள், கட்டுக் கதைகள், நாவல்கள் (நவீனப் புனைகதைகள்) முதலிய பல வகைக் கதைகளைத் தாமாகச் சிருஷ்டித்து எழுதலாம். ஆசிரியர்கள் கதை எழுதப் பயிலுவதுடன், மாணாக்கர்களையும் சிறு கதைகள் எழுதுவதில் பயிற்றுவிக்க வேண்டும். இனிய கதைகளை ஓய்வு நேரங்களில் எழுதி, பத்திரிகைகளில் வெளிவர அனுப்பலாம்.

*2. **குறிப்புக்கள் தயாரித்தல்:** குறிப்புக்கள் தயாரித்தலும் ஒருவகைக் கட்டுரைப் பயிற்சியாகும். படித்த ஒரு பாடத்தின் முக்கிய கருத்துக்களைக் குறித்துக் கொள்வது விஷயக் குறிப்புக்கள் தயாரித்தலாகும். இவ்விதக் குறிப்புக்கள் தயாரித்தலால் படித்த பாடம் மனத்திற் பதிந்து ஞாபகத்திலிருக்கும். மேலும், பிறர் பேசும்பொழுது குறிப்புக்கள் எடுப்பது, பின்னர் அவைகளை விரிவாக எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்ப உதவும். ரேடியோ பேச்சுக்களின் குறிப்புக்கள் எழுதிவைத்தல் ஒரு நல்ல பயிற்சியாகும். இப்பேச்சுக்கள் வேகமாக நிகழ்த்தப்படுவதால் முழுவதையும் எழுதிக்கொள்ள இயலாது. குறிப்பு நோட்டு (டயரி)ப் புத்தகத்தில் ஒவ்வொருவரும் தினசரி தமது வாழ்க்கையில் நேரிடும் நிகழ்ச்சிகளில் முக்கியமானவற்றைக் குறித்துவைப்பது ஓர் உபயோகமுள்ள பழக்கமாகும்.

*3. **வருணனைக் கட்டுரைகள்(Descriptive Essays):** —இவ்வகைக் கட்டுரைகளில் ஒரு காட்சி, பொருள், அல்லது இடத்தின் தோற்றம், உருவம், அளவு, குண குணங்களை முதலியன விவரமாக வருணிக்கப்படும். அவைகளைப் படிப்பவர்கள், அப்பொருள் அல்லது இடத்தை நேரில் காண்பது போன்ற அறிவைப் பெற உதவுமாறு வருணனை தெளிவாக இருக்கவேண்டும். காட்சிகளையும் படங்களையும் விவரிக்கும் கட்டுரைகள் எழுதலாம்.

இவ்வித அப்பியாசம் யோசனை சக்தியையும், உற்று நோக்கும் சக்தியையும், கவன சக்தியையும் வளரச் செய்யும். பண்டிகைகள், இயற்கைத் தோற்றங்கள், கட்டடங்கள், மிருகக் காட்சி, சந்தை நாள், கடை, விளையாட்டுக்கள், திருவிழாக்கள், மழை நாள் இவைபோன்ற விஷயங்கள் வருணனைக்குப் பொருத்தமானவை.

*4. **வரலாறு அல்லது விருத்தாந்தக் கட்டுரைகள் (Narrative Essays):** சரித்திரத்தில் வரும் அரசர்கள், அறிஞர்கள், தற்காலத்தில் வசிக்கும் பெரியோர்கள் முதலியவர்களுடைய ஜீவிய சரித்திரங்களை எழுதச் செய்தலும், பிரயாணங்கள், சம்பவங்கள், தினசரி வாழ்க்கை அனுபவங்கள் முதலியவற்றைப்பற்றி எழுதச் செய்தலும், கோர்வையாக ஒரு விஷயத்தை விவரித்துச் சொல்லும் திறமையை விருத்தியடையச் செய்யும்.

இவ்வித விருத்தாந்தங்களை விவரிப்பதில் முன் பின்னான செய்திகளைக் காலமுறைப்படி கூறவேண்டும். ஒருவர் தமது ஜீவிய சரித்திரத்தைத் தாமாகவே எழுதும் வரலாறு, சுய சரிதை (Autobiography) எனப்படும்.

*5. **சிந்தனைக் கட்டுரைகள் (Reflective Essays):** தத்வ சம்பந்தமான உண்மைகளை விளக்கும் வியாசங்கள் இவைகளாம்.

(உ-ம்.) சுத்தம், வாய்மை, கூட்டுறவு, ஆரோக்கியம் இவைகளைப்பற்றி எழுதலாம்.

6. **மனோதர்மக் கட்டுரைகள் (Imaginative Essays):**—மானசீகமாக ஒரு நிலைமையை அமைத்து, புத்தி சாதுரியத்தினால் கற்பித்துக் கூறுவது மனோதர்மக் கட்டுரையாகும்.

**(உ-ம்.) 1. பத்திரிகைப் போட்டிப் பந்தயத்தில் நூறு ரூபாய் இனாமாகக் கிடைத்தால், அத்தொகையை எவ்விதம் செலவு செய்வீர்?**

2. உமது கிராமத்தில் உம்மைச் சர்வாதிகாரியாக நியமித்தால், ஊருக்கு என்ன நன்மைகள் செய்வீர்?

3. ரோஜாப்பூவின் சுயசரிதை.

7. விவாதக் கட்டுரைகள் (Argumentative Essays):- இவ்விதக் கட்டுரைகளில் ஒரு விஷயத்தின் குணதோஷம், லாப நஷ்டம், சாதக பாதகம் முதலியவைகளைத் தர்க்கித்து இரு கட்சிகளின் நியாயங்கள் எடுத்துக் கூறப்படும். இவை எழுதுவதற்கு ஆட்சேப சமாதானங்களை வரிசைப்படுத்தி ஒழுங்காகக் கூறுவதில் பயிற்சி வேண்டும். இதில் புள்ளி விவரங்களையும், மேற்கோள்களையும் கையாளுவது ஒருவரது கூற்றை உறுதிப்படுத்தும்.

(உ-ம்.) 1. போர் செய்வதால் நன்மையா தீமையா?

2. பேசும் படக்காட்சிகளின் நன்மை, தீமைகள்.

3. ஆண் மக்கள் சமையல் செய்யக் கற்றுக் கொள்வது அவசியமா?

4. பாடசாலைகளில் பிள்ளைகளையும் பெண்களையும் சேர்த்துவைத்துப் போதிப்பது சரியாகுமா?

8. சம்பாஷணைக் கட்டுரைகள் (Conversations and dialogues): இருவர் அல்லது பலர் ஒருவரோடொருவர் பேசுவதுபோல் எழுதப்படும் கட்டுரைகள் சம்பாஷணைக் கட்டுரைகளாம். இம்முறையில் பேசுவோரது இயற்கைக்குத் தக்கவாறு சுலபமான சொற்களையும் வாக்கியங்களையுமே உபயோகிக்கவேண்டும். நீண்ட வாக்கியங்களையும், கடின பதங்களையும் பிரயோகிப்பது சம்பாஷணைக்கு அழகல்ல. முழு வாக்கியங்களாக இருக்கவேண்டுமென்ற நியதியில்லை. இடையே வாய்ப் பேச்சுக்களும் கலந்து வரலாம்.

(உ-ம்.) 1. கடை முதலாளியும், கணக்கெழுதும் வேலை பெறவந்துள்ள சிறுவனும் சம்பாஷித்தல்.

2. தென்னையும், வாழையும் தமது பெருமையைப் பற்றிப் பேசுவதாக எழுதுக.

*9. சிறுநாடகங்கள் எழுதுதல் (Writing playlets):- பாடசாலைச் சிறுவர்கள் நடித்தற்கான சிறு நாடகங்கள் எழுதும் திறமை ஆசிரியர்களுக்கு அவசியமாகும்.

நாடகமென்பது, உலக வாழ்க்கையை அபிநயம், பாட்டு, சம்பாஷணை இவைகளால் நடித்துக் காட்டுவது. களம், இடம், காட்சி, காலம், பாத்திரங்கள் (நடிகர்கள்) முதலியவற்றை முன்னால் ஆலோசித்து நாடகத்தை அமைக்கவேண்டும்.

ஒற்றையங்க நாடகங்கள் (one act plays) எழுதுவதும் இக்காலத்தில் வழக்கத்தில் வந்துள்ளது.

கடிதங்கள் வரைதல் :— தொலைவிலுள்ளவருக்குச் சமாசாரங்களைச் சாதாரணமாகக் கடிதங்கள் மூலம் அறிவிக்கிறோம். கடிதங்கள் கட்டுரையினத்தைச் சேர்ந்தனவே. ஆதலால், இவைகளை எழுதுவதிலும் கருத்துக்களை முறைப்படுத்தி, செவ்விய நடையில் தெளிவாக எழுதுவது இன்றியமையாததாகும். மேலும், கடிதங்களை எழுத நேர்த்தியான காகிதம், நல்ல எழுதுகோல், நல்ல மை இவைகளை உபயோகித்தல் நலம். ஒருவர் எழுதும் எழுத்தின் அழகும், தெளிவும் அவரது குணவியல்புக்கு அறிகுறிகளாகும். எழுதப்படுவோர் எதிரிலிருந்தால் எவ்வாறு உரையாடுவோமோ அவ்வித நடையில் கடிதங்களை எழுதுவது சிறந்த முறையாகும்.

கடிதம் எழுதுவதில் பின்வரும் அம்சங்களைக் கவனிக்கவேண்டும் : 1. எழுதுவோர் விலாசம், 2. தேதி, 3. தலைப்பில் மரியாதை முறை, 4. சமாசாரம் (உள்ளுறை), 5. முடிவில் மரியாதை முறை, 6. கையொப்பம், 7. கடிதம் போய்ச்சேரவேண்டிய விலாசம்.

தலைப்பிலும் முடிவிலும் இருக்கவேண்டிய மரியாதை அடைமொழிகள், எழுதுவோர்க்கும் எழுதப்படுவோர்க்கும் உள்ள சம்பந்தத்தைப் பொறுத்திருக்கும். மகா-ா-ா-ஸ்ரீ, நமஸ்காரம், க்ஷேமம், ஸ்ரீமதி, சிரஞ்சீவி முதலிய வடமொழிப் பதங்களுக்கு மாறாகவே திருவாளர், வணக்கம், நலம், திருநிறை செல்வி, திருநிறை செல்வன் முதலிய தமிழ்ப்பதங்களை உபயோகித்தால் எழுத்துப் பிழைகள் நேரிடா. மேலும், இக்காலத்தில் தனித் தமிழ்ச் சொற்களை உபயோகிப்பதே முறை. இருபாலருக்கும் பொதுவாக ‘ஸ்ரீ’ அல்லது ‘திரு’ என்னும் அடைமொழியை அரசாங்கக் கடிதங்களில் உபயோகிக்க வேண்டுமென்பது துரைத்தனத்தாரது தற்போதைய உத்தரவு.

கடிதங்கள், அவற்றின் உள்ளுறைக்குத்தக்கவாறு பல வகைப்படும். ஆயினும், அவற்றைப் பொதுவில, பின்வரும் நான்கு வகைகளாகப் பிரித்துக் கூறலாம்:

1. உறவினருக்கேனும், நண்பருக்கேனும் வீட்டுச் செய்திகளைப்பற்றி அந்நியோந்நிய முறையில் எழுதப்படும் கடிதங்கள் சொந்தக் கடிதங்கள் எனப்படும். அழைப்புத் தாள்களும் இவ்வினத்தினவே.

2. வியாபார நிமித்தமும், அதுபோன்ற மற்ற வெளிக்காரியங்களின் பொருட்டும் எழுதப்படுவன வியாபாரக் கடிதங்களாகும்.

3. உத்தியோகம் பெற விரும்புவோர் தம் தகுதிகளைத் தெரிவித்து அதிகாரிகளுக்கு எழுதும் கடிதங்கள் போல்வன விண்ணப்பக் கடிதங்களாம். இவ்விதக் கடிதங்களின் மரியாதை முறை நன்கு கவனம்பெறுதல் வேண்டும்.

4. பொதுநல விஷயங்களைப்பற்றிப் பத்திரிகைக்கு எழுதுங்கடிதங்கள் போன்றன பொதுநலக் கடிதங்கள் ஆகும்.

மேற்கண்ட ஒவ்வொரு வகைக்கும் மாதிரிக் கடிதங்கள் எழுதிப் பயிலவும்.

எழுத்து அப்பியாசங்களைத் திருத்துதல் :—ஆசிரியரது பல வேலைகளில் அலுப்பும், அருவருப்பும், அதிகங் கொடுக்கக்கூடியது மாணாக்கரது எழுத்து அப்பியாசங்களையும், வியாச நோட்டுப் புத்தகங்களையும் திருத்துவதே யாகும். என்றாலும், இது ஆசிரியரது முக்கிய வேலையாகும். பிள்ளைகள் எழுதிய விடைகளையும், கட்டுரைகளையும் ஆசிரியர் திருத்தாவிடில், அவைகள் பயனற்றவையாகும். அவ் வப்பியாசங்களைச் செய்வதில் அலட்சிய புத்தி கொள்வார்கள்; தேர்ச்சியும் முன்னேற்றமும் பெறார். ஆதலால், மாணாக்கர் எழுதும் ஒவ்வொரு வியாசத்தையும் திருத்தியே தீரவேண்டும்.

திருத்துவதற்கான காலம் :—எழுத்து அப்பியாசங்கள் அதிகம் திருத்தவேண்டியிருக்கும். ஆசிரியருக்குப் போதனையில்லாத ஓய்வுநேரம் அதிகமாக இருத்தல் வேண்டும். கால அட்டவணையில் இது ஞாபகத்தில் வைக்கப்படவேண்டும். கீழ் வகுப்புக்களில் வினாக்களுக்குச் சிறு சிறு விடையே எழுதவேண்டியிருக்கும். பிள்ளைகள் அவற்றை எழுதி முடிந்ததும் ஆசிரியர் ஒவ்வொரு வசனத்தையும் திருத்திக்கொண்டு வகுப்பைச் சுற்றிப் போகலாம். பாடவேளையிலேயே திருத்த நேரிடில், இதர மாணாக்கர்கள் சும்மா இராமலிருக்கும்பொருட்டு உரிய வேலைகள் கொடுக்கவேண்டும். பொதுவாக, வியாசங்களை ஆசிரியர் ஓய்வு நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் திருத்துவதே முறை. இது சம்பந்தமாக ஆசிரியர் தமது வேலையைக் குறைத்துக்கொள்ள, மேல் வகுப்புக்களிலே ஒருவர் எழுதியதை மற்ற ஒரு மாணவரிடம்

மாற்றிக் கொடுத்துத் திருத்தச் செய்யலாம். பிறருடைய வியாசத்தில் பிழை காணும் பயிற்சி, தங்களுடைய வியாசத்திலே பிழை காண்பதற்குப் பெருந்துணையாகும். வியாசங்கள் இவ்வாறு பிற மாணாக்கர்களால் பார்வையிடப்பட்ட பின்பு அவற்றை, ஆசிரியர் தாமும் பார்வையிடுவது தேவையாகும்.

திருத்தும் முறை:—மாணாக்கர்கள், பிரத்தியேகமான ஒரு கோட்டுப் புத்தகத்தில் வியாசத்தை எழுதிவர வேண்டும். ஏட்டின் ஒரு பக்கத்தில் வியாசங்களை எழுதுவதும், அதற்கு எதிர்ப்புறத்தில் பிழைகளைத் திருத்தி எழுதுவதும் நலம். சில ஆசிரியர்கள் திருத்தப்பட்ட வியாசம் முழுவதையும் எதிர்ப்புறத்தில் மற்றொரு முறை எழுதும்படி செய்கிறார்கள். இது வீண் காலப்போக்கு ஆகும்; பிள்ளைகட்கும் அலுப்பு விளைவிக்கும். இம்முறை தகாது. பிழைபட்ட வாக்கியங்களை மட்டும் எதிர்ப்புறத்தில் திருத்தி எழுதுவது போதும்.

ஒவ்வொரு மாணவரின் ஒவ்வொரு எழுத்து அப்பியாசத்தையும் அவனை அருகில் வைத்துக்கொண்டு ஆசிரியர் அவன் முன்னிலையில் தனித்தனியாகத் திருத்துவதே விரும்பத்தக்க சிறந்த முறையாகும். அப்பொழுது தான் பிள்ளைகள் பிழைகளை நன்கு உணருவார்கள். இவ்விதம் செய்வதால் ஆசிரியருக்கும் மாணவருக்கும் சிநேகத் தொடர்பு ஏற்படுவதுடன், மாணவர்களுக்கு ஆசிரியரிடம் நம்பிக்கையும் ஏற்பட்டுத் தம் பிழைகளைத் தாமே திருத்த முற்படுவார்கள். ஆனால், பல காரணங்கள்பற்றி இது சாத்தியப்படுவதில்லை.

பிழைகளை மாணாக்கர் தாமாகவே உணர்ந்து திருத்தங்களை அமைப்பதே அவர்கட்கு அதிகத்தேர்ச்சி விளைவிக்கும். இதுபற்றி, வியாச நோட்டுகளைத் திருத்தும் பொழுது பலவிதப் பிழைகளுக்குப் பலவித அடையாளங்கள் [(உ-ம்.) எழுத்துப் பிழையைக் காட்ட, சொற்களின் கீழே ஒற்றைக் கோடிட்டும், இலக்கணப் பிழையுள்ள சொற்களின்கீழ் இரட்டைக் கோடிட்டும், விஷயப் பிழையை × இக் குறியிட்டும்.] அமைத்துக்கொண்டு அவ் வடையாளங்களை மட்டும் குறித்தால் போதும். இவ்வாறு செய்தால் பிள்ளைகள் பிழைகளை ஊகித்தறிவார்கள். எவ்விதத்திலும் அறியமாட்டாத பிழைகளை மட்டும் ஆசிரியர் திருத்தி எழுதலாம். மேலும், ஒரே விதப் பிழைகள் பலராலும் செய்யப்பட்டிருப்பின்

அவற்றைப் பொறுக்கி யெடுத்துத் தமது குறிப்பு நோட்டில் எழுதிக்கொண்டு யாவருக்கும் பொதுவாக வகுப்பில் விளக்குதல் வேண்டும்.

**எழுத்து அப்பியாசத்தில் சாதாரணமாகக் காணப்படும் பிழைகள்:** 1. பக்கக் கோடு (margin) தேதி, அப்பியாச எண், தலைப்பு முதலியன குறிக்கப்படாம லிருத்தல், 2. விஷயப் பிழைகள்; (i) அறியாமையால் தவறான கருத்துக்கள் காணப்படுதல், (ii) விஷயத் தொடர்ச்சி இல்லாதிருத்தல், (iii) எழுதும் விஷயத்துக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களைப் புகுத்துதல், (iv) காரண காரிய சம்பந்தமின்மை. 3. பாஷைப் பிழைகள்: (i) வாக்கியங்களின் தெளிவின்மை, (ii) பாராக்களின் அமைப்பைக் கவனியாமை, (iii) சொற்களைப் பிழைபட உபயோகித்தல், (iv) திட்டமான தொடக்கம், நடை, முடிவு இல்லாதிருத்தல். 4. எழுத்துப் பிழைகள். 5. இலக்கணப் பிழைகள். 6. நிறுத்துக் குறிகள் இல்லா திருத்தல்.

மேலே கூறிய பிழைகளை (i) மாணுக்கர்களின் அறியாமையால் வருவன, (ii) மாணுக்கரின் கவனக்குறைவினுல் வருவன—என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அறியாமையால் நேரிடும் பிழைகளை ஆசிரியரே பெரும்பாலும் எடுத்துக் காட்டித் திருத்தவேண்டும். ஆனுல் அவதானக்குறைவினுல் ஏற்படும் பிழைகளை மேலே விளக்கியவாறு குறியீடுகள் இட்டுக் காட்டுவதால் மாணுக்கரை உணரச் செய்து, அவர்களாலேயே திருத்தச் செய்யலாம். ஆசிரியரிடம் கொடுப்பதற்குமுன், எழுதிய வியாசத்தை மாணுக்கர் திரும்ப வாசிப்பார்களாகில் எழுத்துப் பிழை, சொற்பிழை, இலக்கணப் பிழை போன்ற கவனக்குறைவால் ஏற்படும் குற்றங்களைத் தாமாகவே உணர்ந்து திருத்துதல் கூடும். ஆதலால் எழுதியதைத் திரும்ப வாசித்தல் வற்புறுத்தப்பட வேண்டும்.

**தமிழன்னை:** 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்குங் காணும்' என்றும், 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே — அதைத் தொழுது படித்திடடி பாப்பா' என்றும் நமது தாய் மொழியாகிய தமிழ் மொழியைப் பாராட்டிப் பாடியுள்ளார் கவி சுப்பிரமணிய பாரதியார். தமிழ் என்னும்

சொல்லுக்கு 'இனிமை' என்பது பொருள். இம்மொழி இனிமையுடையதுபற்றி இதற்குத் தமிழ் என்னும் பெயர் வந்ததாகக் கூறுவர். 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்றபடி, தமிழராய்ப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் அதைப் பிழையின்றிப் பேசவும், படிக்கவும் எழுதவும் பழகி, அதனிடத்து அன்பு பாராட்டி அதை ஓங்கச்செய்வது நமது கடமையாகும்.

வாழ்க தமிழன்னை!

## பயிற்சி வினாக்கள்

1. பேச்சு நடைக்கும் எழுத்து நடைக்கும் முக்கிய வித்தியாசங்கள் யாவை?

2. வாய்மொழிக் கட்டளையைப்பற்றி நிலவும் தவறான எண்ணங்கள் யாவை?

3. 'சொற்பெருக்கம்' என்றால் என்ன? சொற்பெருக்கப் பயிற்சிகளின் பத்து வகை கூறி, ஒவ்வொரு வகைக்கும் இரண்டு பயிற்சி வினாக்கள் எழுதுக.

4. பின் வரும் மரபுத் தொடர்களை உபயோகித்து வாக்கியங்கள் அமைக்க: சந்தியில் இழுத்தல், கண்டுமுதல், கம்பி நீட்டுதல், கரை ஏறுதல், கிள்ளுக்கீரை, குத்து மதிப்பாக, தலைப்பா மாறி, தூக்கிப் போடுதல், பந்து வைத்தல், வேர் காணுதல்.

5. மாணாக்கரது வியாச நோட்டுகளைத் திருத்துவதில் எம்முறைகளை அனுசரிப்பீர்கள்?

6. எழுத்து அப்பியாசத்தில் சாதாரணமாகக் காணப்படும் பிழைகள் யாவை? அவதானக் குறைவினால் ஏற்படும் பிழைகளை எதனால் குறைக்கலாம்? எவ்விதம் திருத்தவேண்டும்?

7. "குறிப்புக்கள் தயாரித்தல்" என்றால் என்ன? நீர் தினசரிக் குறிப்பு (diary) எழுதிவருகிறீரா?

8. கட்டுரை எழுதுவதில் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள் யாவை? கட்டுரை வகைகள் பத்து கூறுக.

9. கடிதமெழுதுவதில் முக்கிய தலைப்புக்கள் யாவை? கடித வகைகள் நான்கு கூறுக.

10. 'தமிழ்'—பொருள் கூறுக. நம் தமிழன்னை வளர்ந்து ஓங்க நீவிர் செய்யக்கூடிய தொண்டு யாது?

# 12. அநுபந்தங்கள்

## (i) ஆரம்ப வகுப்புகளில் வாசிப்புக் கற்பிக்க உதவும் சில விளையாட்டுக்கள்

1. பல பொருள்களைக் காட்டும் படங்களிலிருந்து ஒரே எழுத்தால் தொடங்கும் வார்த்தைகளைச் சொல்லவோ எழுதவோ செய்தல்.

2. இணைக்கும் அட்டை விளையாட்டு : ஒரு அட்டையில் பல எழுத்துக்களோ, பதங்களோ படுக்கை வரிசையாக எழுதியிருக்கும். ஒவ்வொரு பதத்திற்கும் அடியில் காலியிடம் இருக்கும். குழந்தைகளிடம் அதே அதிகமான பல எழுத்துக்களும் பதங்களுமிருக்கும். முதல் பதத்திற்குச் சமமான பதத்தைப் பிள்ளைகள் எடுத்து அதனடியில் வைக்கவேண்டும். இதேபோல் அட்டையில் எல்லாப் பதங்களையும் இணைக்கவும். (உ-ம்.)

| கட்டடம் | மரம் | பந்து |
|---|---|---|
| க ட் ட ட ம் | ம ர ம் | ப ந் து |

3. இது என்ன : ஒரு பிள்ளை மத்தியிலும், மற்ற பிள்ளைகள் அவனைச் சுற்றி வட்டமாகவும் உட்காரவேண்டும். வட்டத்திலுள்ளவர்கள் மத்தியிலிருக்கும் பிள்ளையிடம் ஒவ்வொரு வார்த்தை எழுதிக்காட்டிப் படிக்கச் செய்யவேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்குள் படிக்காவிடில் அல்லது தப்பிதமாகப் படித்தால் இருவரும் இடம் மாற்றிக்கொள்ளவேண்டும். இதே போல, வினைச் சொற்களை [(உ-ம்.) நில், நட, ஓடு.] எழுதிக் காட்டி, செய்கைகளை நடத்திக் காட்டச்செய்யலாம். பதங்களுக்கு எதிர்ப்பதம் கொடுக்கலாம்; கேள்வி எழுதி விடையெழுதச் செய்யலாம். இப்படி விளையாட்டை மாற்றி நடத்தலாம்.

4. ஒளிந்து விளையாடல் : ஒரு மாணவனை வெளியில் அனுப்பி வகுப்பறையின் பல பாகங்களிலும் பல வார்த்தைகளையும் வாக்கியங்களையும் வைக்கவும். வெளியே அனுப்பிய மாணவனை அழைத்துக் குறிப்பிட்ட ஒரு வார்த்தை அல்லது வாக்கியத்தைக் கண்டுபிடிக்கச் செய்யலாம். பாதி வாக்கியத்தைச் சொல்லி, மறு பாதியைத் தேடச் செய்யலாம்.

5. **"என் பை" விளையாட்டு:** முதல் பிள்ளை.—என்னிடம் ஒரு பை இருக்கிறது. இரண்டாம் பிள்ளை.—பையில் என்ன இருக்கிறது? முதல் பிள்ளை.—அதில் ஒரு மாம்பழம் இருக்கிறது. இரண்டாம் பிள்ளை.—(மூன்றும் பிள்ளையைப் பார்த்துப்) என்னிடம் ஒரு பை இருக்கிறது. மூன்றும் பிள்ளை.—பையில் என்ன இருக்கிறது? இரண்டாம் பிள்ளை.—அதில் ஒரு கொய்யாப்பழம் இருக்கிறது. இது போலவே வரிசையாக விளையாடவேண்டும். பையிலிருக்கும் பொருள்களைச் சொல்லும்போது, ஆசிரியர், ஒவ்வொரு முறை விளையாட்டிலும் காய்கள், பழங்கள் போன்ற வெவ்வேறு வகைப் பொருள்களின் பெயர்களைச் சொல்லும்படி குறிப்பிடலாம்; அல்லது ஒரு எழுத்தால் ஆரம்பிக்கும் வார்த்தைகளையே சொல்லச் சொல்லலாம். (உ-ம்.) பம்பரம், படம், பட்டம், பந்து, பசு.

6. **கரும்பலகைப் பந்தயம்:** கரும்பலகையில் சில வாக்கியங்களை எழுதி, சிறிது நேரம் காட்டி மறைத்து விடவும். பிள்ளைகள் வரிசைக்கிரமப்படி அவ்வாக்கியங்களை ஞாபகத்திலிருந்து எழுதவேண்டும். அதிக வாக்கியங்களை எழுதும் பிள்ளை ஜயித்தவனாவான். இதே விதம் பல பொருள்களுள்ள படத்தைக் காட்டி, பிறகு மறைத்து, அப்பொருள்களின் பெயர்களை எழுதச் செய்யலாம்.

7. **ஒற்றுமையைக் கண்டறிதல்:**—(61-ம் பக்கம் 7 பயிற்சியைப் பார்க்க.)

8. **வருணனை விளையாட்டு:**—பெயர் சொல்லாதபடி பொருளை வருணிக்கவேண்டும். மற்றவர்கள் பெயர் கண்டுபிடிக்கவேண்டும். (60-ம் பக்கம் 1-வது பயிற்சியைப் பார்க்க.)

9. **நான் பிரயாணம் போகிறேன்:**—வட்டமாகப் பிள்ளைகளை உட்காரவேண்டும்.

ஆசிரியர்:—நான் பிரயாணம் போகிறேன். என்னோடு மாம்பழம் கொண்டுபோவேன்.

முதல் பிள்ளை:—நான் பிரயாணம் போகிறேன். நான் நாற்காலி கொண்டுபோவேன்.

2-ம் பிள்ளை:—நான் காற்றாடி கொண்டுபோவேன்.

3-ம் பிள்ளை:—நான் விளக்குக் கொண்டுபோவேன்.

இப்படி ஒவ்வொரு பிள்ளையும் விருப்பமானதைச் சொல்லலாம். பிறகு,

ஆசிரியர்:—நான் மாம்பழத்தைத் தின்னப்போகிறேன்.

மூன்றாம் பிள்ளை :—நான் நாற்காலியில் உட்காரப் போகிறேன்.

இதே போல் அவரவர்கள் சொல்லவேண்டும்.

10. கதை கட்டுதல் :—ஆசிரியர் ஒரு கதையின் ஆரம்பவாக்கியத்தைச் சொல்லவும். அதைத்தொடர்ந்து ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு வாக்கியமாகச் சொல்லிக் கதையை முடிக்கவேண்டும்.

11. வாக்கியத்தில் வார்த்தைகளை ஒழுங்கீனமாகக் கொடுத்து, சரியாக அமைக்கச்செய்தல். (13-ம் பக்கம் 6-வது பயிற்சி பார்க்க.)

12. படங்களையும் அவற்றின் பெயர்களையும் இணைத்தல். (12-ம் பக்கம் 1-ம் பயிற்சி.)

13. தபால் விளையாட்டு:(14-ம் பக்கம் 11-ம் பயிற்சி.)

14. கேள்விகளுக்குப் பொருத்தமான விடைகளையும், விடைகளுக்குப் பொருத்தமான வினாக்களையும் கண்டறிதல். (பக்கம் 61.—11, 17 பயிற்சிகள்.)

15. வார்த்தைகளில் ஒளிந்துகொண்டிருக்கும் சொற்களைக் கண்டுபிடித்தல்; (உ-ம்.) மல்லிகை, - கை. பூச்சிகள், - பூ-கள்.

சாம்பல் வைத்தியர், குரும்பை, மரப்பாய்ச்சி, சகுந்தலை, சாமான், திருவாவடுதுறை.

## (i) பாடக் குறிப்பு எழுதுதல்

பாட ஆயத்தம் :—ஆசிரியர் எவ்வளவு திறமையும் அநுபவமும் வாய்ந்தவராயிருப்பினும், போதிக்கவேண்டிய பாடவிஷயங்களை முன்னதாகப் படித்தறிதலும், அவற்றைத் தெளிவுறப் போதிக்கும் முறைகளைச் சிந்தித்துத் திட்டஞ்செய்து கொள்ளுதலும் அவசியமாகும். நியமித்த நேரத்திற்குள் நிறைவேற்றவேண்டிய பாடப் பகுதிக்கு ஏற்ப, பாடக்கிரமத்தை அமைத்துக்கொள்ளுதலும் முக்கியமாகும். போதனைக்குச் சாதகமான உபகரணங்களையும் முன்னரே தீர்மானித்து, ஆயத்தஞ் செய்துகொள்ளல்வேண்டும்.

பாடக் குறிப்பு :—கற்பிப்பதற்குரிய விஷயத்தையும் முறையையும் மனத்தில் முடிவு செய்த பிறகு, பாடக் குறிப்பு எழுதலும் அவசியமாகும். பாடக்குறிப்பு எழுதும் முறையையும் விவரத்தையும் பற்றி இக்காலத்தில் அபிப்பிராய பேதங்கள் பல உள. பாடக் குறிப்புக்களெல்லாம் ஒரேவிதமாக இருத்தல் அவசியமன்று என்பதும், விஷயத்திற்கும் வகுப்பிற்கும் ஏற்ப அவற்றை

விகற்பித்தல் வேண்டுமென்பதும் யாவர்க்கும் ஒத்த துணிபாகும். என்றாலும், எப்பாடக் குறிப்பிற்கும் பொதுவான அம்சங்கள் சில உண்டு. 1. வகுப்பு, காலம், பாடம், பாகம், பொது நோக்கம், சிறப்புநோக்கம், உபகரணங்கள் இவற்றைப்பற்றிய குறிப்புக்கள். 2. முன்னறிவுச் சோதனையும் பீடிகையும். 3. பாடவிஷயத்தின் பல பகுதிகள். 4. போதிக்கும் முறை 5. கரும்பலகைச் சுருக்கம். 6. கருதிய கல்விப் பயனைப் பிள்ளைகள் அடைந்தார்களா வென்பதை யறிய முடிவுப் பரீட்சை.

மேற்கூறிய அம்சங்களை ஒவ்வொருவரும் தத்தம் சௌகரியத்துக்கும், திறமைக்கும் ஏற்ப விரித்தும் சுருக்கியும் எழுதலாம். பாடக் குறிப்புக்களை மிக விரிவாகவும், அலங்காரமாகவும் எழுதும் ஆசிரியர், கற்பிக்கும் பொழுது குறைபாடுள்ளவரா யிருப்பதுண்டு. எவ்வகையான பாடக் குறிப்பும் எழுதாமல் மிகச் சிறப்பாகக் கற்பிக்கும் ஆசிரியரும் பலர் உளர். ஆதலால் கற்பிக்கும்பொழுது பாடக் குறிப்பு எழுதுவதை ஒரு முக்கிய சாதனமாக்கிக் கொள்ளவேண்டுமாயினும், இன்றியமையாத தாக்கிக்கொள்ளல் பொருந்தாது.

## (iii) மாதிரிப் பாடக் குறிப்பு :

**வகுப்பு :** II **நேரம் :** 40 நிமிஷம் **பாடம் :** வசனம்

**நோக்கம் :** பேச, படிக்க, எழுத என்று முப்பயிற்சி யளித்தல்.

**உபகரணம் :** வாசக புத்தகம்.

| விஷயம் | முறை |
|---|---|
| 1. **வகுப்பை ஒழுங்கு செய்தல் :** நில். வலது புறம் திரும்பு. நேரே திரும்பு. இடது புறம் திரும்பு. நேரே திரும்பு. உட்கார். 2. **பேச்சுப் பயிற்சி :** அல்லது **வாய்மொழிப் பயிற்சி :** பிள்ளைகளின் பெயர், ஊர், உறவினர், வயது இவைகளைப் பற்றிப் பேசுதல். அன்னான் முதலிய சொற்களைத் திருத்தமாக உச்சரிக்கச் செய்தல். | 1. இக்கட்டளைகளைக் கரும்பலகையில் எழுதுதல். பிள்ளைகள் அவைகளை மௌனமாகப் படித்துச் செய்தல். 2. கேள்வி கேட்டுப் பதில் வருவித்தல். மாதிரிக் கேள்விகள். உன் பெயர் என்ன? உன் தாயார் பெயர் என்ன? உனக்கு என்ன வயது? உனக்கு அண்ணன் இருக்கிறானா? தங்கை இருக்கிறாளா? முதலியன. |

3. **படிக்கப் பயிற்சி :**—குறிப்பிட்ட பிள்ளைகளை **உரக்க வாசிக்கச் செய்தல்.**

## சுந்தரம்



இந்தப் படத்தைப் பார்.
இந்தப் பையன் பெயர் சுந்தரம்.
இவன் தாயார் பெயர் மங்களம்.
இவன் தகப்பன் பெயர் வேலுப்பிள்ளை.
சுந்தரம் பிறந்த ஊர் சிதம்பரம்.
இவனுக்கு ஒரு அண்ணன் இருக்கிறான்.
இவனுக்கு ஒரு தங்கையும் இருக்கிறாள்.
இவன் வயது ஆறு.
சுந்தரம் படிப்பது இரண்டாம் வகுப்பு.
சுந்தரம் சுறுசுறுப்பு உள்ளவன்.
சுத்தமாக இருப்பான்.

4. **கருத்தைப் பற்றிய கேள்விகள் :** புத்தகத்தை மூடிவிட்டுப் பதிலளிக்கவேண்டும்.

5. **எழுத்துப் பயிற்சி :**
என் பெயர் ——.
நான் படிப்பது —— வகுப்பு.
நான் பிறந்த ஊர் ——.
என் தாயார் பெயர் ——;
அண்ணன் பெயர்.

4. **மாதிரிக் கேள்விகள் :** சுந்தரத்தின் வயது என்ன? அவன் பிறந்த ஊர் எது? மங்களம் யார்?

5. இவைகளைக் கரும்பலகையில் எழுதிவைக்கவும். ஒவ்வொரு பிள்ளையும் சிலேட்டில் தன்னைப்பற்றிப் பூர்த்தி செய்து எழுதவேண்டும்.

6. **நடித்தல் :** பையன்களை வகுப்புமுன் வரச் செய்து, தன்னுடைய ஊர், பெயர், பெற்றோர் பெயர் முதலிய விவரங்களைப் பற்றி இருவர் இருவராகச் சம்பாஷிக்கச் செய்தல்.

## மாதிரிப் பாடக் குறிப்பு 1

**வகுப்பு :**
**பாடம் :** செய்யுள்

**நேரம் :** [illegible]0 நிமிஷம்
**பாகம் :** 'காகமும் பாம்பும்' என்னும் பஞ்சதந்திரக் கதைச்செய்யுள்.

**பொது நோக்கம்:** விஷய அறிவையும் மொழி அறிவையும் விருத்திசெய்தல்.

**சிறப்பு நோக்கம் :** பேச, படிக்க, எழுத என்ற மூப்பயிற்சியளித்தல். செய்யுளின் நயத்தை உணரச் செய்தல்.

**உபகரணம் :** இக்கதை யடங்கிய பாட புத்தகமும், கதையை விளக்கும் படமும்.

# காகமும் பாம்பும்



கோடுறு கிளையிற் காகம் கூடுவைத்து அநேக காலம்
பேடொடு கூடி வாழும் பெருமரப் பொந்தில் வந்தே [ம்
ஆடிய கரும்பாம்பு ஒன்று அங்கு அதுபெறும் முட்டையெலா
நாடியே குடித்துப்போக, நலிந்து உளம் மெலிந்து வாடி, 1

தன்னுயிர்ப் பாங்கனான சம்புகன் அருகு போய் "இங்கு
என்ன செய்குவன் நான்" என்ன, "இதைக்கொல்லல்
[அரிதோ? நீ போய்
மன்னவன் தேவி ஆடும் மஞ்சனச் சாலை புக்குப்
பொன் அணிகொண்டுவந்து போடுக பொந்தில்" என்ன 2

காகம் அப்படியே செய்யக் காவலன் ஏவலாளர்
ஏகியா மரத்தின் பொந்தை சார்ந்தனர். சேரும் போதில்
நாகம் அங்கிருந்து சீற, நறுக்கினர் இரு துண்டாக,
ஆகையால் உபாயம் தன்னால் ஆகாததில்லை கண்டீர். 3

| விஷயம் | முறை |
|---|---|
| 1. படம் படித்தல் : | 1. படத்தைச் சிறிது நேரம் கவனிக்கச் செய்து, படத்தில் காண்பனவற்றைப் பற்றிக் கேள்விகளைக் கேட்டுத் தாராளமாகப் பேசப் பிள்ளைகளைத் தூண்டுதல். |

| விஷயம் | முறை |
|---|---|
| 2. செய்யுள் படித்தல்: செய்யுளைப் படித்துக் கதையை அறிதல். | 2. மூன்று செய்யுட்களையும் தொடர்ந்து மௌனமாகப் படிக்கச் செய்தல். |
| 3. கதைச் சுருக்கம் சொல்லுதல். | 3. சில பிள்ளைகளை ஒவ்வொருவராக வகுப்புக்கு முன் வந்து கதையைத் தொடர்ச்சியாகக் கூறச் செய்தல். |
| 4. இராகத்துடன் உரக்க வாசித்தல். செய்யுளை இராகத்துடன் பாடமுடியும்; வசனத்தைப் பாடமுடியாது. | 4. ஆசிரியர் மாதிரியாக வாசித்துக் காட்டலும், பிறபிள்ளைகளை வாசிக்கச் செய்தலும். |
| 5. சொல் விளக்கம்: கோட்டுறு - வளைந்த, கிளையில் - மரக்கிளையில், பேடொடு - பெண் காக்கையுடன், பாங்கன்-தோழன், சம்புகன்-நரி, மஞ்சனச் சாலை - நீராடும் அறை, அணி-ஆபரணம், காவலன் - அரசன், [illegible] - மகிழ்ந்தனர், மெலிந்து - மனம் வாடி, கொல்லல் - கொல்லுதல், செய்குவென் - செய்வேன். | 5. கரும்பலகையில் எழுதுதல். |
| 6. கட்டுரைப் பயிற்சி | 6. கதைச் சுருக்கத்தை வசனமாக எழுதச் செய்தல். |

## மாதிரிப் பாடக் குறிப்பு III

வகுப்பு: V | நேரம்: 40 நிமிஷம்

பாடம்: வாசக பாடத்தில் இலக்கணம் | பாகம்: வினைச்சொல்,—காலங்கள்

முன்னறிவு:—வினைச்சொற்கள் என்னவென்பது.

1. முன்னறிவுப் பரிசோதனை: வினைச் சொற்களுக்குச் சில உதாரணங்கள் கேட்டு வருவித்தல். பாட புத்தகத்தில் சில வினைச் சொற்களைக் கண்டறியச் செய்தல். வினைகள் தொழிலைக் காட்டும் சொற்கள் என்பதை வருவித்தல்.

2. புதிய பாடம்: நிதரிசன முறையில் சில தொழில்களைப் பின்வருமாறு செய்து காட்டல்.

குறிப்பு:—விஷயம், முறை என்ற இரண்டு கலன்களாகப் பிரித்து எழுதுவது இக்காலத்தில் வற்புறுத்தப் படுவதில்லை. அடியிற் கண்டவாறு பாடக் குறிப்பு எழுதுவது போதுமென்று கருதப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| (a) | இப்பொழுது | புத்தகத்தை | எடுக்கிறேன். |
| | காலையில் | புத்தகத்தை | எடுத்தேன். |
| | மாலையில் | புத்தகத்தை | எடுப்பேன். |
| (b) | இப்பொழுது | சீதை | சிரிக்கிறாள். |
| | சற்றுமுன் | சீதை | சிரித்தாள். |
| | நாளை | சீதை | சிரிப்பாள். |
| (c) | இன்று | மாடு | மேய்கிறது. |
| | நேற்று | மாடு | மேய்ந்தது. |
| | நாளை | மாடு | மேயும். |

இவற்றைப்போல் பல உதாரணங்கள் சொல்லச் செய்யலாம்

3. விளக்கமும், கரும்பலகைச் சுருக்கமும் :—
(i) எடுக்கிறேன், எடுத்தேன், எடுப்பேன் என்னும் வினைச் சொற்கள் தொழிலைத் தெரிவிப்பதோடு, தொழிலின் காலங்களையும் தெரிவிக்கின்றன. ஆதலால், வினைச்சொற்களுக்குக் காலம் உண்டு.

(ii மூன்று காலங்கள். ஆவன :
1. எடுத்தேன்—சென்ற காலம்—இறந்தகாலம்
2. எடுக்கிறேன்—நடக்கிற காலம்—நிகழ்காலம்
3. எடுப்பேன்—நடக்கப்போகும் அல்லது வருங் காலம்—எதிர்காலம்

4. பயிற்சி :
(i) கோடிட்ட இடத்தில் சரியான வினைச் சொற்கள் அமைக்கவும் :

நேற்று தச்சன் வெட்டினான்.
இப்பொழுது தச்சன் ———.
நாளை தச்சன் ———.

(ii) பின் வரும் வாக்கியங்களில் வினைச் சொற்களின் காலங்களை எதிரிற் குறித்தவாறு மாற்றி எழுதுக:

அவன் உண்டான். (நிகழ்காலமாக)
அவர்கள் படிக்கிறார்கள். (இறந்தகாலமாக)
சரோஜினி வந்தாளா? (எதிர்காலமாக)

(iii) பாடபுத்தகத்திலிருந்து ஆறு வினைச் சொற்கள் எடுத்தெழுதி அவற்றின் காலங்களைச் சொல்.

## மாதிரிப் பாடக் குறிப்பு IV

| | |
|---|---|
| **வகுப்பு:** IV | **நேரம்:** 40 நிமிஷம் |
| **பாடம்:** கட்டுரைப் பயிற்சி | **பாகம்:** கடிதம் எழுதுதல் |

**நோக்கம்:** கடிதம் எழுதும் முறையைக் கற்பித்தல்
**உபகரணம்:** மாதிரிக் கடிதம்

1. **பீடிகை:** நேரில் உள்ளவர்களுக்குப் பேச்சு மூலம் நமது எண்ணங்களைத் தெரிவிக்கிறோம்; தொலைவிலுள்ளவர்களுக்குச் சமாசாரங்களைக் கடிதங்கள் மூலம் அறிவிக்கிறோம். பல கேள்விகள் கேட்டு, கடித வரவு, தபால்காரன், கார்டு, கவர் இவைகளைப்பற்றிப் பேசி வருவித்தல். 'இன்று கடிதம் எழுதும் முறையை அறிவோம்' என்று நோக்கம் தெரிவித்தல்.

2. **மாதிரிக் கடிதம் படித்தல்:**

40, கீழ ஆண்டார் வீதி,
திருச்சி, 8—7—1944.

அன்பார்ந்த ஷண்முகம்,

இங்கு யாவரும் சுகம். அவ்விடத்திய க்ஷேமத்தைப் பற்றி எழுத வேண்டுகிறேன்.

இந்த மாதம் கட்டி முடிந்த எங்கள் புதிய வீட்டுக்கு ஞாயிற்றுக்கிழமை குடிபோகிறோம். அது சம்பந்தமாக அன்று பகல் 11 மணிக்கு நடைபெறும் விருந்துக்கு நீ வந்து சேரவும். வரும்போது உன் தங்கை நீலாவையும் அழைத்து வா.

உனது அன்பார்ந்த நண்பன்,
**நி. நடேசன்.**

**விலாசம்:—**
**திரு. வி. ஷண்முகம்,**
**21,** சித்திரை வீதி,
ஸ்ரீரங்கம்.

3. மேற்கண்ட கடிதத்தைக் கரும்பலகையில் எழுதிவைக்கவேண்டும். பிள்ளைகளை மௌனமாகப் படிக்கச் செய்து, பின் வரும் கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்கச் சொல்லவும்.

(i) இந்தக் கடிதம் எழுதியவர் யார்? (ii) யாருக்கு எழுதியது? (iii) எதற்காக எழுதியது? (iv) எந்த ஊரிலிருந்து எழுதியது? நீலா யார்?

4. கடிதம் எழுதுவதில் (i) எழுதுபவனின் விலாசம், (ii) தேதி, (iii) ஆரம்பம், (iv) விஷயம், (v) முடிவு, (vi) கையெழுத்து, (vii) சேரவேண்டிய விலாசம் இவைகளை எங்கெங்கே எழுதவேண்டுமென்று மாதிரிக் கடிதத்திலிருந்து பிள்ளைகளை அறியச் செய்தல்.

5. **பயிற்சி:**—ஒவ்வொரு பிள்ளையும் (1) தன்னுடைய விலாசத்தைக் கட்டமிட்டு எழுதிக் காட்டவும். (2) தம்பியின் பிறந்த தின விருந்திற்குச் சிநேகிதனை அழைக்க இதேபோல் ஒரு கடிதம் எழுதவும்.

# T. S. L. C. EXAMINATION 1942.

## SECTION B :—Tamil Methods.

### (Elementary Grade.)

[குறிப்பு:—(1) மூன்று கேள்விகட்குமட்டும் விடை எழுதுக.
(2) ஒவ்வொரு கேள்விக்கும் மார்க்கு பன்னிரண்டு.
(3) 4 மார்க்கு வரையில் கையெழுத்தின் சுத்தத்திற்கென்று தரப்படும்.]

I. மாணவர்கள் ஆரம்ப வகுப்புக்களில் படிக்கும்போது பேசும் பேச்சில் சாதாரணமாய்க் காணக்கூடிய பிழைகளுள் நான்கைக் குறிக்க. அவற்றுள் ஒன்றை நீக்குவதற்காக நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதை உதாரண மூலகாக விளக்குக.

II. இரண்டாம் வகுப்பில் வாசிக்கும் குழந்தைகட்குப் புதிய சொற்களைக் கற்பிப்பதற்காகக் கையாளக்கூடிய ருசிகரமான உபாயங்கள் ஆறு கூறுக.

III. (a) மௌனவாசிப்பின் முக்கியம் என்ன?

(b) மாணவர்க்கு ஏற்ற புத்தகம் கிடைக்காத போது அவர்கள் படிப்பதற்கு என்ன தருவீர்கள்?

IV. கதை சொல்லுவதன் முக்கியத்தைக் கூறுக. முதல் வகுப்பு மாணவர்க்கு எவ்விதமான கதைகள் விருப்பமாயிருக்கும் என்பதைக் குறிப்பிடுக.

V. ஐந்தாம் வகுப்பிற்கு, "ஆறுகள்" என்பதைப்பற்றி ஒரு கட்டுரைப்பயிற்சி (Composition Exercise) தருவதாயிருந்தால், எழுதவேண்டிய விஷயத்தையும் முறையையும்பற்றி மாணவர்கள் தெரிந்துகொள்ளுவதற்கு நீங்கள் என்ன உதவி புரிவீர்கள்?

### (Secondary Grade)

I. சிறந்த செய்யுளின் நலத்தைப் பாராட்டி மகிழ்தற்கு மாணவர்களை எப்படிப் பயிற்றுவீர்கள்? Marks 12

II. மூன்றாம் வகுப்பு மாணவர்களது வாசிப்புத் திறமையை வளர்த்தற்கு உதவக்கூடிய உபகரணங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றைப் பயன்படுத்தும் விதத்தை விவரிக்க. 12

III. ஒரு இலக்கண விதியை, ஆகமன முறை (Inductive Method)ப்படி, எவ்வாறு கற்பிப்பீர்கள் என்பதை உதாரண வாயிலாக விளக்குக.

IV. கட்டுரை அப்பியாசங்களைத் (Composition Exercises) திருத்தும்போது கவனிக்கவேண்டிய விஷயங்களைக் குறிப்பிடுக. மாணவர் எழுதும்போது சாதாரணமாய்ச் செய்யும் பிழைகள் மீண்டும் வாராமல் தடுப்பதற்கு என்ன உபாயம் பண்ணுவீர்கள் என்பதைக் காட்டுக. 12

The Royal Printing Works, Mount Road, Madras. P. I. C. MS. 175, for
V. S. V. & Co., KMU, Q.H. MS. 68. 27-10-'45—2,000 Copies.

## T. S. L. C. EXAMINATION—1944

### [Elementary Grade]

[குறிப்பு :— நான்கு கேள்விகட்குமட்டும் விடையெழுத வேண்டும்.]

1. வாசிக்கும் பழக்கத்தை உண்டாக்குவதற்குக் கையாளக் கூடிய முறைகளில் மூன்றைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றின் குணங்குறைகளை ஆராய்ந்து எழுதுக. 10

2. செய்யுட்பாடம் கற்பிக்க அநுசரிக்கப்படும் தற்கால முறையின் இயல்புகளில் நான்கினைக் குறிக்க. 10

3. 5-ம் வகுப்பிற்கென்று நீங்கள் தேர்ந்தெடுத்த ஒரு செய்யுளை அவ் வகுப்பில் கற்பித்தற்காகப் பாடக் குறிப்பு வரைக. 10

4. மாணவர் தம் சுயக்கருத்துக்களை வெளியிடும் ஆற்றலை வளர்க்க, அவர்களை எப்படி உற்சாகப்படுத்துவீர்கள் ? 10

5. 2-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரையில் வாசிக்கும் மாணவர் உபயோகத்திற்கான வகுப்புப் புத்தகசாலை ஒன்றை எப்படி வளர்த்து வருவீர்கள் ? அதனை முற்றிலும் பயன்படுத்தும்படி அவர்களை எப்படித் தூண்டுவீர்கள் 10

மொத்தம் 50

### [Secondary Grade]

1. மௌன வாசிப்பு எப்படி முக்கியமானது ? அதனை விருத்திசெய்ய என்ன வசதிகளை ஏற்படுத்தித் தருவீர்கள் ? $12\frac{1}{2}$

2. மோசமான எழுத்துப் பிழைகள் சாதாரணமாய் எக்காரணங்களால் உண்டாகின்றன ? அவற்றைத் தவிர்க்க என்ன செய்வீர்கள் ? $12\frac{1}{2}$

3. முதல் மூன்று பாரங்களில் ஏதாவது ஒன்றிற்குக் கற்பிக்கப்படும் உரைநடைப் பாடத்தின் பல்வேறு படிகளை வருணிக்க. $12\frac{1}{2}$

4. முதல் வகுப்பில் படிக்கத் தொடங்கும் பிள்ளைகளுடன் சம்பாஷிப்பதற்கும், அவர்கட்கு வாய்மொழி வேலை தருவதற்கும் ஏற்ற சில விஷயங்களைக் குறிப்பிடுக. $12\frac{1}{2}$

மொத்தம் 50

# தமிழ் கற்பிக்கும் முறை

363
2-61.

வித்துவான்
S. சோமசுந்தரம், M. A., L. T.
சின்னாள் தலைவர் (Principal) தமிழ்க்கல்லூரி, மைலம்
முன்னாள் தலைமை ஆசிரியர்,
நேரு பயிற்சிப்பள்ளி, புத்தனாம்பட்டி
இன்னாள் தலைமை ஆசிரியர்,
நேரு உயர்நிலைப்பள்ளி, புத்தனாம்பட்டி.

Approved by the Madras Text-Book Committee
fos Class Use vide R.C. No. 9/TBC/61
dated 15-3-1961

SCANNED

ஜயம் கம்பனியார்
...ாக்கம் :: சென்னை-6

T:3(P31)
N66
112064

[விலை ரூ. 3